தம்பிக்கு அண்ணா

தமிழ்
கலை
இலக்கியம்



T.27087

பதிப்பாசிரியர்

முனைவர் பெ. இராமலிங்கம்

தம்பிக்கு அண்ணா

தமிழ்

கலை

இலக்கியம்

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா வெளியீடு

பதிப்பாசிரியர்

முனைவர் பெ.இராமலிங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

பதிப்புத்துறை

தஞ்சாவூர்-10.

நூல் விவரக் குறிப்பு

நூல்	:	தம்பிக்கு அண்ணா தமிழ் கலை இலக்கியம்
முதற்பதிப்பு	:	செப்டம்பர் - 2008
தாள் வகை	:	NS மேப்லித்தோ
பிரதிகள்	:	1200
உரிமை	:	தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்
பக்கம்	:	220 + xviii
விலை	:	ரூ.150/-

புத்தக வடிவம் : அருள் ஆப்செட்,
அச்சாக்கம் 8/37, பி.ஏ.ஒய். நகர்,
குழந்தை இயேசு கோவில் அருகில்
புதுக்கோட்டை சாலை,
தஞ்சாவூர் -5
போன் : 04362 - 236594
செல் : 9442346504

இதயத்தைத் தந்திடு அண்ணா

- முத்தமிழறிஞர் கலைஞர். மு. கருணாநிதி

*(9.2.69 அன்று சென்னை வானொலியில்
பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக்
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்
அளித்த கண்ணீர்க் கவிதாஞ்சலி.)*

பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம் - அன்பு உள்ளம் -
அரவணைக்கும் அன்னை உள்ளம்! அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும் -
மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும் -
விழிமலர்கள் வேலாகும், வாளாகும்
தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்!

கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும் பயணம் நிற்காது;
கை மலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழத்தை!
அம்மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலை நாணச் செய்துவிடும்!
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப்பூ மணக்க
தாய்மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்,
நாடிவரும் பூமுடியே! புகழ் முடியே! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே - தினம்
பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்
உனக்காக எனைத் துறப்பேன்; என -
ஒரு கோடித் தமிழ் இளைஞர்
பாடி நின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்..

முருகிற் செறிந்த தமிழார்வம்
முதிரா இளைஞர் ஆருயிராய்ப்
பெருகச் செய்த செயல் மறவர்
சிறப்பைப் பாடக் கேண்மினோ!
தங்கு சனி வேல் செய்த புண்களை
அன்பெனும் வேது கொண்டொற்றியும்

செங்கனி வாய் மருந்தூட்டுவார்
சீர்மையைப் பாடக் கேண்மினோ!
பொருதடக்கை வாளெங்கே; மணி மார்பெங்கே?
போர் முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே எங்கே யென்று
தம்பியரைக் கேட்டதனைக் கேண்மின்!
கேண்மின்!
காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் கழற் சென்னி
காஞ்சியிருக்கக் கலிங்கம்தொலைந்த
களப் போர் பாடத் திறமினோ என்று

மயல் கொண்ட மாதர்தமைத் துயில் எழுப்பச்
செயங் கொண்டார் பாடினார்,
களப்பரணி... கலிங்கத்துப் பரணி
அளப்பரிய வீரத்தின் புகழ்ப்பரணி - யான்
கவிப்பரணியேறி, காஞ்சிபுரப் பரணி
பாடி நின்றேன் இன்று
அவலப் பரணி பாடுகின்றேன்...!
கவியினில் பொருளெனக் கரும்பினில் சுவையெனக்
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமெனக்
குலவிடும் அருவி குழறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென

அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையெனக்
கலைமணங் கமழக் கூடிய கவிஞர்
தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட
நிலமகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ!
வெள்ளம்!
வெள்ளம்!
மாபெரும் வெள்ளம்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து எட்டாம்
தாயகத்தில் மொழிப் புரட்சி தோன்றுவதற்கு
வித்திட்டார் சிலபேர் என்றால்; ஈரோட்டு
நாயகத்தின் இணையில்லாத் தலைமை வீரர்
எங்களண்ணன் களம் புகுந்தார் காஞ்சி பூண்டு!

இரு மூன்று திங்கள் வரை சிறையில் வாடி,
தரும் ஊன்றுகோலாகத் தமிழைத் தந்து
அரு மூன்று எழுத்தாலே அண்ணாவானார்...
அன்றொரு நாள் ஐம்பத்திரண்டுதனில்
சென்னையிலே சொன்னேனே
நினைவுண்டா உங்களுக்கு?
மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு
முத்தமிழ் மணமுண்டு..
மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முரசார்த்தவர் தமிழர் - அவர் வாழ்ந்த
தமிழ் வாழ்வுக்கு மூன்றெழுத்து - அந்த
வாழ்வுக்கு அடிப்படையாம் அன்புக்கு மூன்றெழுத்து...
அன்புக்குத் துணை நிற்கும் அறிவுக்கு மூன்றெழுத்து
அறிவார்ந்தோர் இடையிலெழும் காதலுக்கு மூன்றெழுத்து...
காதலர்கள் போற்றி நின்ற கடும் வீரமோ மூன்றெழுத்து...
வீரம் விளைக்கின்ற களம் மூன்றெழுத்து...
களம் சென்ற காணுகின்ற வெற்றி மூன்றெழுத்து
அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும்
அமைதி மிகு அண்ணா மூன்றெழுத்து
அறிந்திடுவீர் எனச் சொன்னேன்!
திக்கெட்டும் தமிழ் முழக்கம்
திசையெங்கும் சொன்மாரி
வக்கற்றோர் வகையற்றோர்
வாழ்வதற்குத் திட்டம் கோரி
வண்டாகச் சுற்றுகின்றார் மேடையேறி!
எழுதுகின்றார் அண்ணா எனில்,
ஏடெல்லாம் வீடெல்லாம் தமிழ்
நாடெல்லாம்... புதுமை மணக்குதங்கே...
எடா தம்பி எடடா பேனா...!
கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு
கருத்துப்பேழை கற்பூரப் பெட்டகம்!
மரக்கிளையிலே பிணம்;
வெந்த புண்ணிலே வேல்!
மறந்திடப் போமோ; மனங்கவர் வாசகம்?
சாலை யோரத்திலே வேலையற்றதுகள் -
வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள் -
வேந்தே! அதுதான் காலக்குறி!

அண்ணனுக்கன்றி யாருக்கு வரும் இந்த அழகு நடை?
அறிவு நடை!
கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது
தமிழகம் மறவாத் தலையங்கமன்றோ!
இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?
தம்பியுடையான் படைக்கஞ்சான்!
ஒப்பில்லா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனோன்மணீயம் எனினும் - நம்
மனத்தில் பதித்தவர் அண்ணாவன்றோ!
மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்
அரசியல் பண்பினைப் போதிக்கும் அழகே!
மறப்போம் - மன்னிப்போம்
மாற்றார் ஏசல் தாங்கிடும் மாண்பே!
எவர் கற்றுத் தந்தார் இதனை?
சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல் போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்றார் அண்ணா -
அதை மறுத்து
நாலைந்து பேர் குதித்திட்டார் என்றால்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ணா!
அனைவரையும் ஓர் அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனித்தாய் ஈன்றெடுத்த தம்பிகளே! என அழைத்துக்
கனிச் சுவையாய்க் கற்கண்டாய்த் தேன் பாகாய் அன்பு காட்டிப்
பனி மலர் வீழ் தும்பி யதாய்த் தழுவிக் கொண்டார்.
சொலல் வல்லார் சேதுப் பிள்ளைதனைச்
சோமசுந்தர பாரதியைச் சொற் போரில்
சொக்க வைத்தார் - பாவம்; சிக்க வைத்தார்!
நீதிக் கட்சியென்று நெடியமதில் சுவருக்குள்ளே - பணச்
சாதிக்குக் கட்சியாய் இருத்தலாகாதெனும்
கொள்கையாலே - அதனை
வீதிக்குக் கொண்டு வந்தார்!
வீசிடுக வெள்ளையர்கள் பட்டத்தையென்று
சேலத்து மாநாட்டில் தீர்மானம் போட்டுவிட்டார்
- அண்ணாவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்
கோலற்ற குருடர் போலக் கொள்கையற்றோர்
வீழ்ந்து போனார்!

தீரர் அண்ணா திராவிடர் கழகமெனும்
பெயர் மாற்றத் தீர்மானம்
வீரர் கூடிய மாநாட்டில் கொண்டு வந்தார்!
அண்ணல் காந்தியார் அறவழி கண்டு
ஆங்கில ஆட்சியை அகற்றியபோது
துன்ப நாளென்னும் பெரியார் அறிக்கையை மறுத்துத்
தொடங்கினார் போரை!

இன்ப நாளிது! இனிய நாளிது!
என்பு தோலாய் ஆன இந்தியர்
அன்புறு காந்தியின் அருளால் இன்று
எழுந்தனர் அடிமைத் தளையினை அறுத்து!
முழங்குவோம் விடுதலை முரசினை எடுத்து
என்றே அண்ணா, அன்றே சொன்னார்...

அன்று முதல் அண்ணன் - அய்யா - உறவினிலே
கீறல் விழ
அது நாற்பத்தொன்பதாம் ஆண்டினிலே பிரிவாய்மாறி
முகில் கிழித்து வெளிக் கிளம்பும் முழு மதியாய்
முன்னேற்றக் கழகத்தை முகிழ்க்கச் செய்தார்!

தலைவருடன் கூடி வாழ முடியாமல்
பெரும்பான்மைத் தோழருடன்
வெளியே வந்தவுடன்,
நிலைகுலையா நம் அண்ணன் அன்று சொன்னார்
அது,
நேற்றுச் சொன்னது போல் இருக்குதம்மா!
தலைவரில்லை முன்னேற்றக் கழகத்துக்கு - என்
தலைவர் இருந்த நாற்காலி, காலியாக இருக்கும்! அதில்
தலைவர் அவர் என்றேனும் வந்தமர்வார்..
அதுவரையில் காத்திருப்பேன் என்றார்.

பூத்திருக்கும் மலர்த் தோட்டம்
காலைப் பனிநீர் வடிப்பது போல்
காத்திருந்து கூட்டம் கேட்டோர்
கண்ணீர் வடித்தார்.
கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே! என அழைத்துச்

செந்நீர் சிந்துதற்கு அணிவகுத்தார்!
யாரேனும் கேட்டதுண்டா?
பாரேனும் பகர்ந்ததுண்டா?
பதினெட்டு ஆண்டுக்குள் ஓர் இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப் - பாராள வந்த கதை?

ஈராண்டு முடியவில்லை என் அண்ணா ஆட்சியேற்று
சீரார்ந்த செயல் பலவும் செய்கலுற்றார்!
ஏரார்ந்த உழவர்க்கெல்லாம் ஏற்றம் தந்து
எழில் வாழ்வு குவிப்பதற்கு எடுத்தார் முயற்சி
உலகத் தமிழ் மாநாடு துவக்க வந்த
ஓங்கு புகழ்க் குடியரசுத் தலைவரவர்
இணைற்ற காட்சி கண்டேன் மாட்சி கண்டேன்
இதுபோல வாழ்வில் என்றும் கண்டதில்லையென
ஊர் மெச்சப் புகழ்ந்துரைத்தார் அண்ணன் கீர்த்தி!
ஆந்திரத்துப் பிரம்மானந்த ரெட்டிகாரும்
ஆகா - நீர் தானே அசல் காந்தீய வாதியென்று
ஆராதனை செய்திட்டார் - ஆண்டொன்று கழியவில்லை!
மதுவிழக்கைத் தீவிரமாய் ஆக்குகின்றீர் பல
மாநிலத்தில் கை கழுவிக் கலயம் கட்டிவிட்டார்
மரங்களிலே!
மகாத்மாவின் தோன்றல் நீர்தான் என்று
கிரியென்றால் மலையன்றோ - அந்த
மலைதழுவும் முகிலானார் நம் அண்ணா!
வி.வி. கிரி தந்த வாழ்த்துக்கு விளக்கமிது.

பன்னாட்டுப் பேரறிஞர் வாழ்த்தி நின்றார் - அன்று
தென்னாட்டுச் சிகரமாக இருந்திட்டோர்
அண்ணன் பற்றி
என்ன சொன்னார்?
பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார் - அண்ணா,
பழத்தமிழ்ப் பேச்சால் மயங்கி நின்றார். அந்த
மறைமலை தந்த புகழ்மொழி ஆயிரம்
பசுமலை பாரதி - பாண்டியன் தோற்றம் - அவரை
நாவலர் என்று நாடே அழைக்கும் - அவர்
சழக்கரால் வீழ்ந்த தமிழ் நிலம் காக்க - மன

அழுக்கில்லாத் தலைவன் கிடைத்தான் என்றே
அண்ணன் பெருமை சொன்னார் அன்று!

ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடி என ஆண்டுபல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள் எனினும்;
கலைமகளாம் நம் அன்னை வள்ளுவனைத்
தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்.

மலர் என்றால் தாமரைதான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக்குறளே
எனப்போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான்; மாந்தரெல்லாம் களித்திட்டார்!
விண்முட்டும் மலையோரம் - நம்
கண்பட்டும் படாமலும் எழுகின்ற நச்சுமரம் போலப்
பண்பட்ட தமிழர் வாழ்வில் - முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ!
சாதிகளைக் காணாது குறள் ஒலித்த தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவு மணங்கமழ்கின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள் கண்டுவிட்டார்.
மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள் - தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திட்டார்
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட பெருநிலத்தில்
பிறநெறிகள் பயிர் செய்தார்; பிழை குவித்தார்
மழையற்றுப்போன வயல்போல மாறிற்றுத் தமிழர் மனம்
அழுக்காறு - அவா - வெகுளி - இன்னாச் சொல் நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்!
பொருளிலார்க்கு இவ்வுலகமில்லையென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில் - இன்று
இருள் கவிந்து வாட்டம் கொடி போட்டதங்கே.
வாடினாள் தமிழன்னை - சோகப் பாட்டுப்
பாடினாள் தமிழன்னை; சுடுநெருப்பில்
ஆடினாள் தமிழன்னை...
ஓடினாள்... ஓடினாள் ... ஒரு வழியும் கிடைக்கவில்லை!
புலியூர் விட்டுப் புகலூரில் வாழுகின்றான்

கவியூரின் பெருவேந்தன் குறளாசான்!
ஆண்டு சென்று, அருமை மகனே!
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன் என்றாள்.
என்னம்மா? என்றான் குறளோன்.
தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும் தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டுமென்றாள்.
தங்கம் எடுக்கவா? என்றான்
தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க என்றாள்.
இன்றென்ன ஆயிற் றென்றான்.
குன்றனைய மொழிக்கு ஆபத்தென்றாள்;
சென்றமையக் குடில் இல்லை ஏழைக்கென்றான்;
கடிதோச்சி மெல்ல எறியகத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற்றென்றாள்; அறிவில்
கன்றனையோர் வீணில் கதைக்கின்ற கதையும் சொன்னாள்

அழுத கண்ணைத் துடைத்தவாறு
அமுத மொழி வள்ளுவனும்
அம்மா நான் எங்கே பிறப்பதென்றான்;
தொழுத மகன் உச்சிமோந்து ஆல
விழுதனைய கைகளாலே... அணைத்துக் கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது.
இனிமேலே என எண்ணி
மனமகிழும்
உழவன் போல் உள்ளமெல்லாம் பூரிப்புத் துள்ளி எழ
காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக! என்றாள்.
பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக.
பொதிகை மலைத் தென்றலாய்ப்
போதாகி மலர்கின்ற
தமிழ் உணர்வின் புதுமணமாய்ப்
பதிகத்துப் பொருளாய்ப்
பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன் - கீழ்
வானுதித்த கதிர்போல -
அவன் புகழைப் பாடுதற்கு

அவன் வளர்த்த தம்பி நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தேன் இதுதான் உண்மை -
தலைவரென்பார், தத்துவமேதை என்பார்
நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார்
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார்.
மனிதரென்பார், மாணிக்கமென்பார், மாநிலத்து
அமைச்சரென்பார்,
அன்னையென்பார், அருமொழிக் காவல் என்பார்,
அரசியல்வாதி என்பார் - அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் - நெஞ்சத்து
அன்பாலே
அண்ணா என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே - அவர் அன்னை
பெயரும் தந்தார்
அந்த அன்னை குலம் போற்றுதற்கு
ஔவைக்கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்,
வணங்காமுடிப் பாரதிதாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை
கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்பத் திருவள்ளுவர்க்கும் சிலை
பத்து சிலை வைத்ததனால் - அண்ணன் தமிழின் பால்
வைத்துள்ள
பற்றுதலை உலகறிய; அந்த
அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்த போது...
ஆள்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்..
ஆணையிடுகின்றார் எம் அண்ணா என்றிருந்தோம்
அய்யகோ, இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்
ஒரு விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம் அண்ணா... இதயமன்னா...

படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும்பயணம் ஏன் தொடர்ந்தாய்...?
உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே!
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்; நியாயந்தானா?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல;
நான்தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ?
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்,
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்... இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கு முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்;
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்!
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா!
எழுந்து வா எம்மண்ணா!
வரமாட்டாய்; வரமாட்டாய்!
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா... நீ
இருக்குமிடந் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா..
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா...
....

- மாண்புமிகு முனைவர் ம. இராசேந்திரன்
துணைவேந்தர்,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-10.

தம்பிக்கு அண்ணா!

ஆண் பெண் வேறுபாடில்லாமல்
சாதி மதம் பார்க்காமல்
வயதைக்கூட, பொருட்படுத்தாமல்
தமிழர்களைத் தம்பி என்று அழைத்தவர் அண்ணா!
அருளுரை வழங்கியும்
ஆணையிட்டும்
நீதி நெறி காட்டியும்
அண்ணனாய்த் தமிழருக்கு
அடையாளம் தெரிந்தவர் அறிஞர் அண்ணா.
கூடங்களில் மூச்சு முட்டிய பிரசங்கங்களை
மன்றங்களுக்குக் கொண்டு வந்தவர்;
பல்வேறு நிலைகளில் தன்நிலை குலைக்கப்பட்டு
தகுதிக்குரிய உரிமை மறுக்கப்பட்டிருந்த காலத்தில்
யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம் என்று
தமிழையும் தன்னையும் தகுதிப் படுத்திக்கொண்ட
பாரதியின் மொழியுணர்வு
தன்மானம் தனிமனிதருக்கு மட்டுமின்றி
மொழிக்கும் உண்டு -
தமிழர்களின் தன்மானம்; தமிழின் தன்மானம்.
தமிழர்களின் தன்மானத்தைக் காக்கத்
தமிழின் தன்மானமும் காக்கப்பட வேண்டும் என்ற
பெரியாரின் சுயமரியாதை உணர்வு
கலந்து உருவான கண்ணீர்த்துளி
அறிஞர் அண்ணா!
கண்ணீர்த் துளிகள்
வரலாற்றில் திருப்புமுனைகளை
உருவாக்கின.
வரலாறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டது.

பெர்னாட்ஷா தனது படைப்பிற்கு (My Fair Lady) என்று பெயரிட்டார்
அறிஞர் அண்ணா வேலைக்காரி என்று படைத்தார்
கற்றவர்களின் சிந்தனைத் தினவுகளுக்கும்
மற்றவர்களுக்கும் அன்றாடம் காய்ச்சிக்கும்
பயன்பட்டு வந்த மொழியைக்
கற்றவர் மற்றவர் என
இரண்டு துருவத்திற்கும் எடுத்துச் சென்றவர் அண்ணா!
அண்ணாவின் எளிமை தமிழுக்கு வளம் சேர்த்தது
தம்பிக்கு எழுதிய கடிதங்களில்
உலக வரலாறும் நடப்பியல் கூறுகளும் பிறமொழி இலக்கியங்களும் தமிழுக்கு அறிமுகமாயின.
அறிஞர் அண்ணாவின் கடிதங்களில் தமிழ், கலை, இலக்கியம் குறித்த கருத்து மணிகளைத் தொகுத்துத் தருகிறது தமிழ்ப்பல்கலைக்கழகம்.
தொகுக்கும் பணியைக் குறுகிய காலத்தில் சிறப்புடன் நிறைவேற்றிய
பேராசிரியர்கள் மாணவர்கள் ஆகியோருக்குப் பாராட்டுகள்.
ஈடுபாடு காட்டிப் பதிப்பித்துள்ள
பேராசிரியர் இராமலிங்கம் அவர்களும் நூலை வெளிக்கொணர பாடுபட்ட பதிவாளர் அவர்களும்
நன்றிக்கும் உரியவர்களாவார்கள்.

அவரது எழுதுகோல் தமிழர் தலைநிமிரவே...

முனைவர் பெ. இராமலிங்கம்
விரிவுரையாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-10.

பதிப்புரை

"தமிழினத்தின் மூச்சை
சரியாக மொழி பெயர்த்தால்
எமைக் கவர்ந்த அண்ணா உன்
எழில் பெயரே கிடைக்கும்"

- பாவலர். ஈரோடு தமிழன்பன்

அன்புடை நல்லீர்!

வணக்கம்

அண்ணா நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாட, தமிழ்ப் பல்கலைக்கழகம் முடிவு செய்தது. அதன் தொடக்க விழாவையே அண்ணன் பிறந்த செப்டம்பர் 15.2008 முதல் ஐந்து நாட்கள் முப்பெரும் விழாவாகத் தொடங்குகிறது எம் பல்கலைக்கழகம். முதல் இரண்டு நாட்கள் (15.16.9.08) தஞ்சையிலும் மூன்றாம் நாள் (17.9.08) முத்தமிழ் வளர்த்த மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்திலும், பின்னிரண்டு நாட்கள் (18-19.9.08) மீண்டும் தஞ்சையிலும் விழா. தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் 28ஆம் ஆண்டுத் தொடக்கவிழா, அண்ணா பிறந்த நூற்றாண்டுத் தொடக்கவிழா, உலகத் தமிழ்ச்சங்க நற்றமிழ் விழா இவையே முப்பெரும் விழாவாயின.

உலகத் தமிழர்கள் தங்களின் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் நிலைக்களனாக, அவற்றின் குறியீடாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைக் கருதுகிறார்கள்.

தமிழர்தம் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, அரசியல் ஆகிய அனைத்து வாழ்வியல் துறைகளிலும் தம் மரபை, அடையாளங்களை, இழந்து, இமை திறவாது இருந்த நிலையில், அவர்களைத் தட்டி எழுப்பி அனைத்துத் துறைகளிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி மீட்டுருவாக்கம் செய்ய முயன்ற ஒரு பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா. அந்த அண்ணன் பிறந்த நாளில் தான் எம் பல்கலைக் கழகம் பிறப்பெடுத்தது. அவர் ஒரு சமுதாய சீர்திருத்தகர்; அரசியல் தலைவர்; படைப்பாளி இன்னும் எத்தனையோ முகங்கள் அவர்க்கு. இருபதாம் நூற்றாண்டுத் தமிழை, சீர்திருத்தத் தமிழ் இயக்கமாகக் கட்டி எழுப்பியவர். அவரின் எழுதுகோல் பொருளுக்கோ, புகழுக்கோ, பொழுது போக்கவோ தலை சாய்க்க வில்லை. அது தமிழர் தலை நிமிரவே தலைசாய்த்துக் கிடந்தது. அண்ணன் மட்டுமா? அவர் வழிநின்ற தம்பியரும் அப்படித்தான். ஒரு சமுதாய சீர்திருத்த இயக்கத்தை, அரசியல் இயக்கத்தைக் குடும்பமாகக் கண்டவர். அப்படியே நடத்தியவர், தம்பி! என அழைத்து அவர் நா அசைந்தது. எழுதுகோல் சுழன்றது. காதில் கடல் முழக்கத்தைக் கேட்டார் அண்ணா. ஆயிரமாயிரம் தம்பியர் அணி வகுத்து நின்றனர். அவர் பாதம் தொடர்ந்தனர்.. "ஏடா! தம்பி! எடடா பேனா" என்றார். எழுதிக் காட்டினார். ஒன்று; இரண்டு; பத்து; நூறாக; ஆயிரமாயிரம் சீர்திருத்தப் படைப்புகளைத் தம்பியர் படைத்தனர். புதுமைப் படைப்புகள் அவரால் தோற்றம் பெற்றன. அவை இருபதமாம் நூற்றாண்டுத் தமிழின் மறுமலர்ச்சி விடியல்கள் ஆயின.

அவர் திராவிடநாடு இதழ் மூலம் தம்பியரோடு உறவாடினார். தம்பி! என அழைத்து மறுமலர்ச்சி விதைகளை விதைத்து வந்தார். விடியல் விளக்குகளை அன்றாடம் ஏற்றி வைத்து சந்தத் தமிழில் விந்தைகளைச் செய்தார்; 1955 ஆம் ஆண்டு மே திங்கள் எட்டாம் நாள் எழுதிய "காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி..." என்ற கடிதம் முதல் 1963ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3ஆம் நாள் எழுதிய "இராச்சிய சபை" என்ற கடிதம் ஈறாக, திராவிட நாட்டில் தம்பியர்க்கு அவர் எழுதிய மடல்களின் எண்ணிக்கை 171...

1963இல் நடந்த விலைவாசி உயர்வுப் போரில் அண்ணா சிறைப்பட்டார். தம்பியர்க்கு மடல் கொண்டு வந்த திராவிட நாடு இதழ் நின்று போனது. விடுதலையாகி அண்ணா வெளிவந்த போது, திராவிட நாடு இதழைப் புதுப்பிக்க முடியாத சூழலைக் கண்டார். கொள்கைப் போர் மறவர் அண்ணா காஞ்சித் தலைவர் அல்லவா. அதனால், காஞ்சி எனும் இதழைக் கண்டார். மீண்டும் தம்பியர்க்கு மலர்ந்தன மடல்கள். "நீண்ட இடைவெளிக்குப் பிறகு.." என்று தொடங்கி, தம்பியரோடு உறவாடி மகிழ்ந்தார் அண்ணா! அதுமுதல் 14.1.1968ல் எழுதிய தமிழர் திருநாள் என்ற கடிதம் வரை தொடர்ந்து எழுதினார் பின்னர் உடல் நலம் குன்றியது. அண்ணாவுக்கு அமெரிக்க நாட்டில் அறுவை மருத்துவம் நிகழ்ந்து அவர் தமிழகம் வந்தார். நோய் உடலை வருத்திய பேராட்டதில் ஓராண்டு கழிந்தது. அந்தப் போராட்ட உச்சத்தில் தான் அவர் 12.1.1969இல் கடைசியாக "பொங்கல் வாழ்த்துமடல்" எனும் மடலை வரைந்தார். அம்மடல்வரை காஞ்சி தந்த மடல்களின் எண்ணிக்கை 119. ஆக அண்ணாவின் மடல்கள் மொத்தம் 290. இம்மடல்களை முதலில் பாரி நிலையம் சிறுசிறு பகுதிகளாக நூல் வடிவம் தந்து வெளியிட்டது. பின்னர் அதில் விடுபட்ட கடிதங்களையும் சேர்த்து பூம்புகார் பதிப்பகம் 7 மடலங்களாக வெளியிட்டது. பாரி நிலையப் பதிப்பிற்கு நாவலர் தந்த அணிந்துரையுடன், அண்ணாவின் கடிதங்களை 10 மடலங்களாகத் தமிழரிசிப் பதிப்பகம் தந்துள்ளது. ஆக, இன்று வரை அண்ணாவின் கடிதங்கள் மூன்று பதிப்புகளாக வெளிவந்துள்ளன.

அண்ணாவின் மடல் அவரின் உள்ளத்தைத் தெற்றெனக் காட்டும் காலக் கண்ணாடி.

இம்மடல்களில்காணும் மொழி, இலக்கியம், கலை பற்றிய அண்ணாவின் சிந்தனைகளை அவர் மொழியிலேயே, அப்படியே தருவது இந்நூல். எவற்றைத் தமிழ் கூறும் உலகம் தமிழ்ப்பல்கலைக் கழகத்திடமிருந்து எதிர்ப்பார்க்கிறதோ, அதைத் தருவதே எம்பணி. மொழி, இலக்கியம், கலை இவற்றின் குறியீடான எம்பல்கலைக்கழகம், அண்ணாவின் கடிதங்களில் காணும் அச்சிந்தனைகளை, செய்திகளை, தொகுத்து நூலாக்கி, அவரின் நூற்றாண்டு விழாவில் வெளியிட எம் துணைவேந்தர் பெருந்தகை எம்மிடம் பணித்தார். எம்மை விரைந்து பணி கொண்டார். அது எனக்குக்கரும்பு தின்னும் வாய்ப்பாக சிந்தையில் இனித்தது. நெஞ்சம் மகிழ்ந்தது. அதன் வெளிப்பாடே இந்நூல்.

நாங்கள் விரும்பிய வண்ணம் நூலின் முகப்போவியம் அமையப் பயன்பட்ட முரசொலி இதழுக்கும் அதைக் காற்சட்டைப் பருவத்திலேயே கண்டெடுத்துத் தன் தலைப்பிள்ளையாகக் கருதி இயக்கிவரும், அண்ணாவின் மறுபக்கமாக விளங்கும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்க்கு முதல் நன்றி!

இப்பணியை என்னிடம் தந்து அண்ணாவின் புகழ் பாடி மண் சுமக்கும் அணில்களில் ஒருவனாக என்னையும் ஆக்கிய எம் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் ம. இராசேந்திரனார்க்கு என் நெஞ்சுவக்கும் நன்றி.

அவருக்குது தோள் கொடுக்கும் துணைவராக நின்று, விரைந்து செயலாற்றும் அவரின் திறம் தெரிந்து, இயங்கி வரும் எம் பதிவாளர் மதிப்புயர் பேராசிரியர் முனைவர் க. பாஸ்கரன் அவர்களுக்கும் நெஞ்சுவக்கும் நன்றி.

துணைவேந்தர் இப்பணியைத் தந்தார் என்றதும், எனக்குத் துணைநின்று, தம்பங்களிப்பைத் தந்து உதவிய எம் பல்கலைக்கழகப் பேராசிரிய உடன் பிறப்புக்கள், இலக்கியத்துறை சார்ந்த பேராசிரியர் முனைவர் தா. ஈசுவரனார், நாட்டுப்புறவியல், முனைவர் சி.சுந்தரேசன், பாவலர் முனைவர் சா. உதயசூரியன், நாடகத்துறை முனைவர் பெ. கோவிந்தசாமி, பாவலர் முனைவர் இரா. காமராசு அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை சார்ந்த முனைவர் பிரபாகரன், பாவலர் முனைவர் வெற்றிச்செல்வன், தத்துவத்துறை சார்ந்த பண்சுமந்த தமிழ்பாடும் அன்பு இளவல் முனைவர் கோ. ப. நல்லசிவம், என்போல் திரைத்தமிழை ஆய்ந்த என் துறை சார்ந்த அன்பு இளவல் முனைவர் இரவிச்சந்திரன் ஆகிய அனைவர்க்கும் நன்றி.

தொலைபேசியில் சொன்னவுடனேயே மடல் தொகுதிகளை வாங்கி மறுநாளே கிடைக்கச் செய்த பொறியாளர் கிருட்டிணபிரசாத் - இரா.தென்றல் இணையருக்கும் நன்றி.

விரைந்து முடித்திடலாம் எனக் எனக்கு நம்பிக்கை தந்து, விருப்போடு செயலாற்றி நூலை அழகுற அச்சிட்டு உதவிய என் இனிய நண்பர் அனன்யா பதிப்பகம், அருள் அச்சக உரிமையாளர், அருள் அவர்களுக்கும், இரவு பகல் பாராது மெய்ப்புத்திருத்தி உதவிய என் மாணவக் கண்மணிகளுக்கும் நெஞ்சுவக்கும் நன்றி.

தமிழ்

மொழி வளமுள்ளதாகவும் நெடுங்காலமாகப் புலவர் பெருமக்களால் வளர்க்கப்பட்ட தாகவும் இருந்தால் மட்டுமே, சுவையும் பொருளும் ஒருசேரத் தரவல்ல ஓசை நயம் - அடுக்குத் தொடர்ஆகியவை கிடைக்கும். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள நமக்கு அந்தச் செல்வம் நிரம்ப இருக்கிறது. கண்டறிவதும் கொள்வதும் எளிது; கொண்டதைப் பொருள் உணர்ந்து தருவது கடினம்; எனினும் இயலாததன்று. எப்படியும் ஓசை நயம் தந்தாக வேண்டும் என்ற 'மன அரிப்பை' ச் சிறிதளவு அடக்கிக் கொண்டால் போதும், உயர்தரமான, 'ஓசை நயம்' கிடைக்கும்.

ஓசை நயம் தேடுவதும் தருவதும் குற்றமல்ல, இசைக் கலையே ஓசை நயத்தைத் தரப்படுத்தித் தரப்படுவதுதானே! ஆனால் சிலர், ஓசை நயம் என்பது ஏதோ ஓர் இழுக்கான செயல் போலவும், அதன் பயனாக மாபெருங் கேடு மனித இனத்துக்கு ஏற்படுவது போலவும் பேசுவர். ஆராய்ந்து பார்த்தால், அவர்தம் போக்குக்குக் காரணம் கோபம் என்பதும், அந்தக் கோபத்துக்குக் காரணம் கவலை என்பதும், கவலைக்குக் காரணம் அவர்கள் ஓசை நயம் காட்ட முயன்று ஏற்பட்ட தோல்வி என்பதும் விளங்கிவிடும்.

வீட்டிலே, சின்னத்தம்பி இருந்தால், அவன் எதிரில், குழல் கொண்டு இசை எழுப்பிப் பார்-சிறுவன் சிரித்து மகிழ்வான், சிட்டுப் போலே பறப்பான், எனக்கு எனக்கு என்று கொஞ்சுவான், கொடுத்தால் ஊதிப் பார்ப்பான், ஓசை நயம் கிடைக்காது, தோல்வி கண்டு துயருற்று, கோபமுற்று, ஊதுகுழலை ஓங்கிப் பூமியில் அறைவான்.

மொழியில் ஓசை நயம் பெறவும் காட்டவும் முயன்று, முடியாததால் கவலை கொள்பவர்கள், கோபம் கொண்டு, தமக்குத் துணைவர மறுக்கும் ஓசை நயம், பிறரிடம் பேரன்பு காட்டுவது கண்டு பெருங்கோபம் கொண்டு, ஓசை நயம் என்பதே தவறானது, தீதானது என்று தூற்றத் தொடங்குவர்.

காதல் கை கூடாவிடத்துத் தென்றல் தேள்கடியாகும், நிலவு தீயாகச் சுடும், மலரே முள்போல் தைக்கும் என்கிறார்களல்லவா! காதல் மட்டுமல்ல, எது கைகூடாவிட்டாலும் கடுப்பு ஏற்படுவதும், அந்தக் கடுப்புக்குக் காரணமாகக் கடுங்கோபம் மூள்வதும், அதன் விளைவாகக் கடுஞ்சொற்கள் கிளம்புவதும் நிரம்பக் காண்கிறோம். அந்த முறையில்தான், தமிழின் இனிமையை ஓசை நயத்தின்

வழியாகக் காட்ட முயன்று தோற்பவர்கள், அந்த முறையில் வெற்றி கண்டோரைக் காணும்போது கொதிப்புற்றுச் சுடுசொல் வீசுகின்றனர்.

ஓசை நயம் குறித்து நம்மீது குறை கூறுவோர், நம்மைக் குறை கூற இதுவரையில் ஓராயிரம் காரணங்களைச் சிரமப்பட்டுத் தேடித் தேடி அலுத்தவர்கள் - ஒவ்வொன்றும் கிளம்பும் வேகத்தைவிட அதிக வேகமாக மடிந்தொழியக் கண்டு மன வேதனையுற்றவர்கள். எனவே அவர்கள், மொழியை நாம் கையாளும் வகைபற்றிக் குறைகூறிப் பேசுவது குறித்து நாம் கவலைகொள்வதற்கில்லை. குழலும் யாழும் குழந்தையின் மழலையின் இனிமைக்கு ஈடா என்று கூறினவர் வள்ளுவர், அடா! அடா? காது குடைகிறது, ஏன்தான், இதுகள் கழுதை போலக் கத்துகின்றன. கோட்டான் போலக் கூவுகின்றன என்று குழந்தைகளைப் பேணி வளர்ப்பதில் பொறுமையும் திறமையும் அறியாதவர்கள் அலறக் கேட்கிறோம்; கவலையா கொள்கிறோம்; இல்லை, இல்லை, கைகொட்டிச் சிரிக்கிறோம்.

ஓசை நயம் தமிழில் நிரம்பக் கிடைக்கும் - ஆனால் அதை மட்டுமே நம்பி, ‘நடை’ காட்டினால், சிறிது நாட்களில், தமிழின் இனிமைபற்றி அனைவரும் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே, அதற்கேகூட ஊனம் வந்துவிடும்.

ஓசை நயம் - அடுக்குத்தொடர் - இரட்டைக்கிளவி - போன்றவைகள், பூங்காவிலுள்ள கவின் மலர்கள் போன்றவை!

தாமாக மலரவேண்டும் - மணமுள்ளவைகளைப் பதமாகப் பறித்துப் பக்குவமாக மாலை தொடுக்க வேண்டும் - அப்போது தான் கவர்ச்சி கிடைக்கும்.

ஓசை நயத்தை எப்படியும் பெற்றுத் தீரவேண்டும் என்று முயற்சித்தாலோ, காது குடைச்சல் ஏற்படுவது மட்டுமல்ல, மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருமதிப்பும் குன்றும், குறையும்.

ஓசை நயத்தில் இயல்பாகவே அமைந்து, பொருள் செறிந்து, பொலிவு தருபவையே தேவை, பொருளற்று, பொலிவற்று வலிந்து கொண்டு வருவது, மொழிக்கு நாமே நம்மையும் அறியாமல் செய்து விடும் தீங்காகும்.

ஓசை நயம் உயர்தரமாகவும், இயற்கைக்கு முற்றிலும் பொருந்திய தன்மையிலும் அமைந்துள்ள காப்பியங்களும் பாக்களும், தமிழ் மொழியில் உள்ள அளவு, பிற மொழிகளிலே உண்டா என்பது சந்தேகமே.

மொழி வளமுள்ளதாகவும் நெடுங்காலமாகப் புலவர் பெருமக்களால் வளர்க்கப்பட்டதாகவும் இருந்தால் மட்டுமே, சுவையும் பொருளும் ஒருசேரத் தரவல்ல ஓசை நயம் - அடுக்குத் தொடர் ஆகியவை கிடைக்கும். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள நமக்கு அந்தச் செல்வம் நிரம்ப இருக்கிறது. கண்டறிவதும் கொள்வதும் எளிது; கொண்டதைப் பொருள் உணர்ந்து தருவது கடினம்; எனினும் இயலாததன்று. எப்படியும் ஓசை நயம் தந்தாக வேண்டும் என்ற 'மன அரிப்பை'ச் சிறிதளவு அடக்கிக் கொண்டால் போதும், உயர்தரமான, 'ஓசை நயம்' கிடைக்கும்.

❀ ❀ ❀

நாம், ஓசைநயம் காட்டி, அடுக்கு மொழி பேசி, மயக்கி விடுகிறோம், என்று குறை கூறுவோரில் பலர், ஓசை நயமும் அடுக்கு மொழியும் இவர்களுக்குத்தானா, எமக்கும் எளிதுதான் என்று கூறி, வேட்டையாடி, நான் இப்போது காட்டிய தொடர் போன்றவைகளைச் சுட்டிக் காட்டுகிறார்கள்; விலைபோகாதது கண்டு கோபமும் கொள்கிறார்கள்.

துடுக்குத்தனமாக
அடுக்கு மொழி பேசுவோரை
மடக்குவதற்கு
வெடுக்கு மொழி பேசி

முடுக்குடன் நான் வந்தால்
தடுக்கும் பேர்வழி யார்?

நமது ‘அடுக்கு மொழி’ யைக் கண்டிக்கத் துடுக்கும் அடுக்கும், மடக்கும் வெடுக்கும், முடுக்கும் தடுக்கும் சரமாரியாகக் கிளம்புகின்றன. எல்லாம் குறி தவறி விடுகின்றன, கூரும் மழுங்கிப் போகின்றன.

‘அடுக்கு மொழி’ ஆகாது என்பதாலோ, அது தவறு என்பதாலோ அல்ல, பிறர் அது குறித்து, நம்மைக் கண்டித்துப் பேசுவது. அடுக்கு மொழி பேசவேண்டும் என்பதுதான் அவர்கட்கும் உள்ள ஆவல்; ஆனால் அது சுவைபடவும் பொருள் தரவுமான முறையில் நம்மிடம் இருப்பது கண்டு, இது இவர்களிடம் இருக்கிறதே என்று எரிச்சலில் பழம் புளிக்கிறது என்கிறார்கள்! வேறொன்றுமில்லை.

அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காகவும், நாம் மொழியின் அழகு விளங்கிடும் வகையான அடுக்கு மொழியின் ஓசை நயத்தினை விட்டு விடவும் தேவையில்லை; ஓசை நயமும் அடுக்கு மொழியும் இருந்தால் மொழி அழகுபெறும் என்பதற்காகவே, தேடித் திரிந்து கூட்டில் அடைத்து வைத்து அழகு பார்க்கவுந் தேவையில்லை.

இருளைக் கீறிக் கொண்டு செல்லும் போதுதான், மின்மினியே அழகளிக்கிறது; மின்மினி ஒளி தருவது கண்டு, அதனைக் கண்ணாடிப் பெட்டிக்குள் அடைத்து வைத்து, அழகு காண முயற்சித்தல் சரியல்ல.

ஓசை நயம் தமிழ் மொழிக்கு மட்டுமே நிரம்பவும் நேர்த்தியுடனும் இருக்கிறது என்பதற்காகவே, அம்மொழி வேறெல்லா மொழிகளையும்விட உயர்ந்தது என்று மார்தட்டத் தேவையுமில்லை; அது அழகுமாகாது. இருபத்து ஆறு எழுத்துக்களை மட்டுமே கொண்ட ஆங்கில மொழி இன்று, உலக அரங்கம் எங்கணும் உயர்வு பெற்றுத் திகழ்கிறது; மறப்பது கூடாது.

கா
மா
வா
தா
போ
பா
பூ
தை
வை
கை
தீ
ஈ
நீ
சீ
தூ

இப்படி ஒரே எழுத்துக்கூடத் தமிழ் மொழியில் பொருளளிக்கும் திறம் பெற்றுத் திகழக் காண்கிறோம்; எனினும் இதனை வேண்டுமென்றே ஒரு கூட்டுக்குள் பிடித்திழுத்துப் போட்டுக் காட்ட நடை தேடுவது நல்லதல்ல; அதாவது அளவும் முறையும், தேவையும் அறிந்து பயன் படுத்தினால், எழிலும் சுவையும் நிரம்பக் கிடைக்கும்; தவறினால் எரிச்சல் கிளம்பும். ஏளனம் பிறக்கும்.

❀ ❀ ❀

தமிழ் மொழியிலும், தம்பி, அதற்கென்று இயற்கையாக அமைந்துள்ள, எழில் முறைகளைக் களைந்தெறிந்துவிட்டு, பிறமொழிச் சொற்களையும் முறைகளையும் கலந்து புதிய எழில் காட்டுகிறோம் என்று கூறுவாருளர்.

சினிமாக்களுக்குச் சிதைத்தலும், சேர்த்தலும், கூட்டலும் குறைத்தலும், மறைத்தலும் மிகுத்தளித்தலும் தேவைப்படுகிறது; அந்த உலகத்து இலக்கணம் அது; குறை கூறுவதற்கில்லை; ஆனால், மொழித் துறையில் இந்த முறையைப் புகுத்தி, உள்ள எழிலை உருக்குலையச்செய்து, பாழ்படுத்துவது அடாத செயலாகும். ஆனால்

'மேதை'கள் பலர், பிறமொழிச் சேர்க்கையும், பிற முறைகளின் சேர்க்கையும், தமிழ் மொழியை வளமாக்கும் என்று காரணம் காட்டி, இந்தத் தீய செயலைச் செய்து வருகின்றனர்.

தம்பி! தமிழ் மொழியில் காணக் கிடைக்கும், 'ஓசை நயம்' போன்ற எந்த எழிலையும் இழந்துவிடக் கூடாது என்று கூறி வருகிறோம்; அதேபோது, அந்த எழில் வேண்டும் என்பதற்காகவே, 'இட்டுக் கட்டியும்', 'இழுத்துக் குழைத்தும்' தரக்குறைவு ஏற்பட்டு விடும்படியும் செய்துவிடக்கூடாது என்கிறோம். தமிழ், எழிலும் பயனும் அளித்திடும் இன்மொழியாகத் திகழ்வதன் பொருட்டு முந்தை நாளில் புலவர் பெருமக்கள் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகள் பலப்பல.

கருத்தினை விளக்கிட எழுத்து ஒன்று போதும், ஈரெழுத்து மட்டும் போதும் பொருளளிக்க, சிறுசிறு எழுத்து மாற்றங்கள் மூலமே, பொருள் மாற்றம் பெரிதும் காட்டிட இயலும். அதனையும் அழகுபட, ஓசை நயத்துடன் எடுத்துக்கூற முடியும் என்ற இத்துணைச் சிறப்புடன் தமிழ்மொழி இருந்திடக் காண்கிறோம். எனினும் அதற்கென்று ஓர் தனி இடம், உயரிய இடம், உரிமையான இடம், பெற்றளிக்கும் திறனுமற்றுக் கிடக்கிறோம்.

மொழி, வரி வடிவத்தால் மட்டுமல்ல, மொழி மூலம் தரப்படும் கருத்துக்களின் வகைமூலம், ஒன்றுக்கொண்டு எவ்வளவு மாறுபட்டன என்பது, குறிஞ்சியைக் காட்டிய நந்தமிழ்ப் புலவர் தரும் பாவுடன், இராமனின் வீரத்தை விளக்கிடப் புராணீகன் தரும் ஆரியத்தினை ஒப்பிட்டுப் பார்த்தாலே விளங்கிவிடும்.

நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம், குற்றமே!

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், மான் மழுவேந்திய மகேசன், மாலும் அயனும் தேடிப் தேடிப் பார்த்தும் அடியும் முடியும் கண்டறிய வொண்ணாதபடி அண்ட சராசரமனைத்துமாய் நின்ற அரன், உமையொரு பாகன், சிறுபொறி கிளப்பிச் சிதறினாலே எதிர்ப்பட்டதனைத்தையும் சாம்பலாக்கிடத் தக்கதான 'சம்ஹார சக்தி' படைத்த நெற்றிக் கண்ணைக் காட்டினார் - ஏடும் எழுத்தாணியுமின்றி பிறிதோர் பலமற்ற நக்கீரன் எனும் பெரும் புலவர், ஐயனே! யார் நீவிர் என்பதனை அறிந்தேன், எனினும் அச்சம்காரணமாகவோ, பக்திக்குக் கட்டுப்பட்டோ, என் நெஞ்சார உணர்ந்ததை எடுத்துரைப்பதை விட்டுவிடுவேன் என்று மட்டும் எண்ணாதீர், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே! என்று எடுத்துரைத்தாராம்.

தமிழர் பங்கமுறாமல் சங்கம் வளர்த்து, சான்றோராய் ஒழுகி வந்த நாட்களில், தமிழ்ப் பெரும்புலவர்களின் மனவலிவு எத்துணை ஏற்றமுடையதாக இருந்தது என்பதனை எடுத்துக்காட்ட, நக்கீரன் நெற்றிக் கண்ணைக்காட்டினாலும் குற்றம் குற்றமே என்று அஞ்சாது எடுத்துரைத்த காதையைக் கூறுவது, இப்போது, ஏறத்தாழ மேடை மரபு ஆகிவிட்டது.

தமிழன் எதற்கும் அஞ்சமாட்டான், மனதிற்குச் சரியெனப் பட்டதை, எவர் குறுக்கிட்டாலும், உருட்டி மிரட்டினாலும் எடுத்துரைக்கத் தயங்க மாட்டான், என்பதற்கான எடுத்துக்காட்டாக, நக்கீரன் விளங்குவது போல், பிறமொழியாளர்ளிடம் காதைகள் உள்ளனவா என்பதுகூட ஐயப்பாடுதான்.

❀ ❀ ❀

தம்பி! மொழிக் கிளர்ச்சியின்போது மூண்டுவிட்ட விரும்பத்தகாத நிலைமையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனைப் பெற்றெடுத்த தாய், சேதி, கேட்டு, துடியாத் துடித்து, எங்கே! எங்கே! என்று அலறி ஓடிடும் காட்சி போதாதா!! அனுமதி கிடைக்குமா? ஒரு ஐம்பது அடி; இந்தக் காட்சி!!



தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!
இந்தி ஆதிக்கம் ஒழிக!
இந்தியை எதிர்த்துச் செந்தீயில் சாகிறேன்!

இந்த முழக்கம்! ஒரு தீக்குளிப்புக் காட்சி! கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் இயலாமல் மக்கள் திகைத்து நிற்பது! எடுத்துக்காட்ட விடுவார்களா!

படம் எடுக்கிறார்களாம், படம்! சாதனைகளை விளக்கிட!

அதோ அந்தத் தோழர் சிறைதனில் ஓராண்டு! இளைத்த உடல், காண்கின்றாய்; ஆனால் உள்ளம்? எஃகு! ஆமாம்! அவரே கரம் கூப்பி நிற்கின்றார் மாதெதிரில்! ஏனென்று அறிந்துகொள் ஆரணங்கே! மாத்தமிழ் காத்திடவே புறப்பட்டான் ஓர் காளை! இந்தி தமிழர்க்குச் செந்தீ என்றான், காரணம் பலகாட்டி! எப்பக்கம் வந்து புகுந்து விடும்? இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும்? என்ற பண் எழுப்பிப் புறப்பட்டான். பதைக்கச் சுட்டு வீழத்தினர் அத்திருமகனை! அந்த மாது அவன் மாதா? நாடு வாழ மகனைப் பறிகொடுத்தாள் மாதா! அவள் கால்பட்ட மண், மணம் பெற்றிடும் என்றிடலாம். மகனை இழந்திட்டேன், மாத்தமிழுக்கு அறித்துவிட்டேன், ஒருவனை நான் கொடுத்து இதோ இத்தனைப் பிள்ளைகளை நான் பெற்றேன்! இவர்களோடு கலந்துவிட்டான், மடியவில்லை! மலரினின்று கிளம்பும் மணம் கலந்திடும் காற்றில் என்பர். என் மகன் நறுமணமானான்; பிணமானான் என்று எண்ணிடுதல் பேதைமை! என்று எண்ணித்தானோ அந்த மாது நடக்கின்றாள் எழுச்சியூட்டி! - இதுதானடி தேனே! என் கழகம்!

நாம் - இவர்களால் என்ன ஆகும்? என்ற ஏளனக் கணைகளால் தாக்கப்பட்ட நாம் - நாம் ஆட்சிப் பொறுப்பினை பெற்றதன் விளைவாக இந்தப் பொங்கற் புதுநாளிலிருந்து, நாம்

உலகுக்கு அறிவிக்க முடிகிறது, இது தமிழ்நாடு என்பதாக. பெயரில் என்ன இருக்கிறது என்று பேசிடும் பெரியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்- ஆனால் பாடினாரே பாரதியார்,

செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே!

என்று. அந்த ‘கவிதா வாக்கியம்’ பெரிய இடத்தில் அமர்ந்து கொண்டு ‘சின்னத்தனம்’ பேசிடும் பலருடைய ஏளனத்தைப் பொருட்படுத்த வேண்டாம். உயர்ந்த எண்ணம் கொள்! என்றன்றோ கட்டளையிடுகிறது. ‘நாம்’ தமிழ்நாடு என்ற பெயர் பெற்றிடக் காரணமாக இருந்தோம் என்ற தித்திப்புக் கழந்திடும் பொங்கற் புதுநாள், இந்த ஆண்டு.

போதும் என்று நான் கூறவில்லை; அத்துணைப் பேதைமை என்னைப் பிடித்தாட்டவில்லை.

* * *

‘தமிழ்நாடு’ - என்ற பெயர் கிடைப்பதால் கிடைத்திடும் பெருமிதம் காலமெல்லாம் நிலைத்து நிற்கும்; நமது வழிவழி வருவோருக்கெல்லாம் நம்மைப் பற்றி அறிவிக்கும்; வரலாற்றில் இடம் பெறும்.

* * *

இயற்கையே சிரித்தபடி இருக்கின்ற திருநாடு, நம்நாடு; நெருப்புக் கக்கும் எரிமலைகள் இல்லை இங்கு, இன்னல் கண்டு நடுக்கமில்லை, இல்லை இங்கு நிலநடுக்கம்; எல்லாம் சீராய் அமைந்துள்ளது; புன்னகையைப் பூண்ட தளிர்மேனியாள்போல் பூமியது இருக்கக் காண்பாய். எங்கும் சிரிப்பொலிதான்! எங்கும் மகிழ்ச்சி மயம்! பாளையே தென்னை காட்டும் பாங்கான சிரிப்புமாகும்! பற்பல சிரிப்புப் பற்றி படித்த ஓர் பாட்டை (மதி ஒளி என்பாருடையது) உன் பார்வைக்கு வைக்கும் எண்ணம் அடக்கிட இயலவில்லை; ஆகவே அதனைக் கேளாய்;

"மொட்டுமுதல் இதழ்விரித்து
முல்லை சிரித்ததாம்! - அதில்
மொண்டுமொண்டு தேன்குடித்து
வண்டு சிரித்ததாம்!

சொட்டுச்சொட்டு மழைத்துளியைச்
சொந்தம் என்றதாம் - அந்தச்
சொந்தம் கொண்ட இந்தமண்ணும்
துவண்டு நின்றதாம்!

நீல வானில் வந்தநிலவு
நீந்திச் சிரித்ததாம்! - அதை
நின்றுபார்த்து விண்ணின் மீனும்
நெகிழ்ந்து சிரித்ததாம்!
பாலை அள்ளித் தெளித்ததனால்
பாரும் சிரித்ததாம்! - இதைப்
பார்த்து மகிழ்ந்து சோற்றை யுண்டு
பிள்ளை சிரித்ததாம்.

வளமிக்க நாடு, திறமிக்க உழைப்பு, பொறுப்புணர்ந்த ஆட்சி, அறமறிந்த சான்றோர், அஞ்சா நெஞ்சுடைப் புலவோர், விளைபொருளின் மிகுதி, செய்பொருளின் நேர்த்தி, வாணிபத் திறம் யாவும் மிகுந்திருந்த நாட்கள் - புன்னகை பூத்தபடிதானே இருந்திருக்கும்.

கவிஞர் முடியரசன் - அன்று இங்கு இருந்துவந்த வாணிப வளம் பற்றி அழகுபடக் கூறியுள்ளார்;

முத்திருக்கும் தண்கடலில் முத்தெ டுத்து
முகில் முட்டும் மலையகத்துச் சந்த னத்தின்
எத்திசையும் மணக்கின்ற மரமெ டுத்து
மிளகெடுத்து மயில்தோகை இறகெ டுத்துப்
பத்திபத்தி யாய்க்கலங்கள் விற்கச் சென்ற"

அருமையினைக் காட்டியுள்ளார். அத்தகைய எழில் உள்ள தமிழகம் தமிழ்மொழி அழிந்துபடாதிருந்தால் மட்டுமே காண இயலும்.

தமிழ்மொழி பாதுகாப்புப் பிரச்சினையில் காட்டிய அளவு அக்கறை வேறெந்தப் பிரச்சினையிலும் தொடர்ந்து வேகத்துடனும், உள்ளக் கொதிப்போடும் கட்சிக் கட்டுகளைக் கடந்திடும் போக்குடனும், தமிழர்கள் காட்டியதில்லை. எத்தனையோ பிரச்சினைகள் சிற்சில கட்சிகட்கே உரித்தானவை என்ற நிலை காண்கிறோம். தமிழ்மொழி பற்றிய பிரச்சினை ஒன்றே, நாட்டுப் பிரச்சினை எனும் மேலிடம் பெற முடிந்தது. ஏனோவெனில், தமிழ்மொழி காக்கப்படுவதனைப் பொறுத்தே, தமிழரில் பல்வேறு கட்சியினரும் தத்தமது கொள்கை வெற்றி பெற, இன்றில்லாவிட்டால் ஓர் நாள் வாய்ப்புக் கிடைக்க முடியும் என்பதிலே உள்ள அழுத்தமான நம்பிக்கையேயாகும்.

ஆட்சியாளர்கட்கு அறிவு கொளுத்த அவ்வப்போது கிளர்ச்சிகள் நடாத்துகின்றன. பல்வேறு அரசியல் கட்சிகள்; ஆனால், ஒரு கட்சி துவக்கிடும் கிளர்ச்சியில் மற்றக் கட்சிகள் பெரிதும் பங்கேற்பதில்லை; பகை காட்டாமலும் இருப்பதில்லை. ஆனால், தமிழ்மொழி குறித்த பிரச்சினையிலே மட்டும் கட்சிகளைக் கடந்ததோர் ஒன்றுபட்ட உணர்ச்சி மேலெழுந்திடக் காண்கிறோம். காரணம் இஃதே! தமிழர்க்குத் தமிழ்மொழி, அவர் விரும்பும் ஓர் தனிச் சிறப்புள்ள வாழ்க்கை முறைக்கு வழிகாட்டி நிற்கிறது - எண்ணத்தை வெளியிடும் வெறும் கருவியாக மட்டும் இல்லை.

கிளர்ச்சிகள் பலவும், நெஞ்சத்து அடிவாரத்தில் ஆழப்பதிந்துள்ள அடிப்படைக் கொள்கைக்கு உடனடியான வெற்றியைத் தந்திடுவதில்லை - பெரும்பாலும். ஆனால், அவை யாவும் நாட்டு மக்களை, கிளர்ச்சி நடத்துவோர் காட்டிடும் அடிப்படைக் கொள்கையிடம் ஈர்த்திடும் வெற்றியை - மறைமுக வெற்றியைப் பெற்றளிக்கிறது.

மேய்ச்சல் வரி எதிர்ப்புக் கிளர்ச்சி, உப்பு வரி ஒழிப்புக் கிளர்ச்சி, மேனாட்டுப் பொருள் ஒழிப்புக் கிளர்ச்சி, மது ஒழிப்புக்



கிளர்ச்சி, வரிகொடா இயக்கம், சட்ட மறுப்புக் கிளர்ச்சி, ஒத்துழையாமைக் கிளர்ச்சி, ஆங்கிலப் படிப்பு அகற்றும் கிளர்ச்சி என்பன போன்ற கிளர்ச்சிகள், நடத்தப்பட்டவர்களால், நடத்தப்பட்ட நேரத்தில், உடனடி வெற்றி பெறும் என்று வாக்களிக்கப்பட்டதென்றாலும், கிடைத்தது உடனடி வெற்றி அல்ல; இத்தனை கிளர்ச்சிகளும், கிளர்ச்சி நடத்தியோர் கொண்டிருந்த அடிப்படை நோக்கத்துக்கு - நாட்டு விடுதலைக்கு - வழிகோலின் - மக்களை அதற்குத் தக்க பக்குவ நிலை பெறச் செய்தன.

ஆனால், எந்த ஒரு கிளர்ச்சிக்கான காரணத்துக்காகவும், தொடர்ந்து, விடாமூச்சாக, இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்ற முறையில் கிளர்ச்சிகளை நடத்தினார் இல்லை.

எடுத்துக்காட்டுக்குக் கூறுவதென்றால், அந்நியத்துணி எரிப்புக் கிளர்ச்சி அந்நியத் துணி அறவே தடுக்கப்பட்டுவிடும் வரையில், தொடர்ந்து நடந்து வரவில்லை. ஒரு குறிப்பிட்ட கட்டம் சென்ற பின்னர், தாம் விரும்பும் அடிப்படைக் கொள்கை வெற்றிக்கான ஆக்கமும் ஊக்கமும் கிடைத்திருக்கின்றன என்று தெரிந்த பிறகு, கிளர்ச்சியை நிறுத்திக் கொண்டனர்.

பிரச்சினை வடிவிலேயும் கிளர்ச்சி வடிவிலேயும் தமிழ்ப் பெருங்குடி மக்களிடம் தொடர்ந்து முப்பது ஆண்டுகளாகவும், விறுவிறுப்புடன் கடந்த பதினைந்து ஆண்டுகளாகவும், இருந்து வருவது, தமிழ்மொழி பற்றிய பிரச்சினையேயாகும்.

இதிலே, வேறு எதிலும் கிடைத்திடாத அளவிலும் முறையிலும் நேரடியான பலன்கள் கிடைத்துள்ளன.

இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கிய கொடுமையையும் கண்டோம்; இது மடமை என்று கூறித் தமிழர் எதிர்த்து நின்று கிளர்ச்சி நடத்தியதும் கண்டோம். இன்று? கொட்டு முழக்குடனும், கொடி கோலமுடனும், எனைத் தடுக்க எவருக்கும் ஆற்றல் இல்லை. உரிமை இல்லை! என்ற ஆர்ப்பரிப்புடன் படை எடுத்த வந்த இந்திமொழி, அடங்கி ஒடுங்கி ஒருபுறம் ஒதுங்கி நின்று,

வெள்ளாட்டியாகி நான் வேலை பல செய்யவல்லேன்! என்று நயந்து பேசி, நுழைவிடம் பெறக் காண்கிறோம்.

அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி ஈராண்டு முடிந்ததும் இந்தியே எல்லாம், இந்தியே எங்கும், ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடித்து நிற்க இயலாது.

இது கண்டு வெகுண்டு, மனம் குமுறி, கட்சிகளை, முன்பின் தொடர்புகளை, நிலைகளை, நினைப்புகளை எல்லாம் கடந்து, தமிழகத் தலைவரெலாம் ஒன்றுகூடி, ஒரு பெரும் முயற்சி செய்ததாலே, அரசியல் சட்டத்தில் தக்கதோர் திருத்தம் செய்து, இந்தி ஆதிக்கம் தடுத்திட, வழி கிடைத்துளது.

பகைவன் உள்ளே நுழைந்ததும் கொள்கை வேறுபாடு மறந்து ஒன்றுதிரண்டு வாரீர், பகை முடிப்போம்! பழி துடைப்போம்! என்று பண்டித ஜவஹர்லால் நேரு, கனிவுரையாற்றினார் - அத்துடன், ஓர் அறிக்கை மூலம்,

இந்தி திணிக்கப்பட மாட்டாது
ஆங்கிலம் நீடித்து வரும்.

இந்தியினைத் தாய்மொழியாகக் கொண்டிராத மக்கள், எவ்வளவு காலத்துக்கு ஆங்கில மொழி இருத்தல் வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவ்வளவு காலம் ஆங்கில மொழி இருக்கும் என உறுதி அளிக்கிறேன் என்று தெளிவளித்தார், தேன் பெய்தார்.

இதுபோல, வேறெந்தக் கிளர்ச்சிக்கும் நேரடி வெற்றி உருப்படியாகக் கிடைத்ததில்லை.

எனினும், இதுவும் கூட நிலைத்து நிற்கும் வெற்றி எனக் கொள்வதற்கில்லை, மாயமானாகிப் போகலாம். எதற்கும் விழிப்புணர்ச்சியுடன் இருத்தல் வேண்டும் என்ற நிலை தமிழரிடம் காண்கிறோம்.

இன்று இந்திமொழி ஆதிக்கம் செயக்கண்டு திரண்டெழுந்து நின்றுள்ள தமிழர், பின்னர் ஓர் நாள் அயர்ந்து விடக்கூடும், அணிகலையக்கூடும், அதுபோது, இது தக்க சமயம் என, ஆதிக்கம் தனைச் செலுத்த இந்தி அம்பாரிமீதமர்ந்து வரக்கூடும். இன்னும் ஓர் ஈராண்டில் இந்த நிலை வந்திடாதபடி தடுக்க, அரசியல் சட்டத்தைத் திருந்திடவும் ஒருப்படுகின்றனர், தமிழரிடை இதுபற்றி மலர்ந்து காணப்படும், பெருமைமிகு எழுச்சி காரணமாக. சில ஆண்டுகள் கழித்து, தமிழர் சிந்தை திரிந்து, செயல் மறந்து போவரேல், அரசியல் சட்டத்திலே புகுத்தப்படும் திருத்தம் நீக்கப்பட்டு விடக்கூடும்.

அரசியல் சட்டம், திருத்தப்படக் கூடியது.

எனவே, எதையும் நீக்கவும் எதனையும் நுழைக்கவும், குறைக்கவும், வாய்ப்பு உளது.

எனவே, என்றென்றும், எந்நிலையிலும், தமிழ்மொழிக்கு ஊறு நேரிடா வழி காணவேண்டும், எனும் எண்ணம் எழுகிறது. தமிழ் மொழிக்குக் கேடு செய்திடும் நிலையில் ஓரிடம் இருத்தல் எற்றுக்கு என்ற கேள்வி எழுகிறது! அரசியலில் மிகப்பெரிய அடிப்படைப் பிரச்சினை பிறந்து விடுகிறது.

இந்த விந்தைமிகு உண்மையினை உணர்ந்தனையா, தம்பி! அரசியல் கட்சிகள் தமக்கு ஆளும் வாய்ப்பு கிடைத்திடக் கிளர்ச்சிகள் நடத்துக்கின்றன அறிகின்றோம்; ஆனால், தமிழ் மொழி பாதுகாப்புக்கான உணர்ச்சியும், அந்த உணர்ச்சியின் காரணமாக எழும் கிளர்ச்சியும், ஒரு புதிய அரசியல் கருத்தையும், அந்த கருத்து வெற்றி பெறுதற்காக ஓர் அமைப்பையும் பிறப்பிக்கச் செய்திருக்கிறது!

தம்பி! சந்தன மரம், பயிரிட்டு வளர்க்கப்படுவதல்ல. காட்டிடைக் கவினுற விளங்கிடும் மணம்தரு சந்தன மரங்களிலிருந்து உதிர்ந்திடும் விதைகளைப் பறவைகள் ஏந்திச் சென்று தூவிடும் இடங்கள் தன்னில் செடிகள் முளைத்து, செழுமையாய் வளர்ந்து, புலவோர் பாடி மகிழ்ந்திடும் தென்றலெனும் பெண்ணாள் பெற்றிட மணமளிக்கும் சந்தன மரமாகிறது!

அஃதே போன்றே, ஏற்புடையதாக மட்டுமல்ல, உயிர்ப்புச் சக்தியுள்ளதாகவும் ஓர் கருத்து இருக்குமானால், அக்கருத்துக்காக ஆயிரம் அமைப்புகள் ஏற்பட்டுவிடும், அழிக்கப்பட்டது போக மற்றது கருத்தைத் தாங்கி நிற்கும், எல்லாம் அழிந்து போயினும், எங்கோ ஓரிடத்தில், ஏதோ ஓர் பறவை, எப்போதோ தூவிய விதை முளைவிட்டுச் செடியாகி நிற்கும்.

தமிழ்மொழி, வித்து முளைத்திடும் செடி கொடியும், மலர்ந்திடும் பூக்களும், குலுங்கிடும் கனிகளும், பலப்பல.

எனவேதான் தம்பி! வித்து அழியாது பாதுகாக்கும் கடமையின்னைத் தமிழர் என்றென்றும் செய்திட முனைந்தபடி உள்ளனர்.

சந்தனத்தருவிலுள்ள நறுமணம் எடுத்துப் புதுமணம் பெற்றிடப் பல பொருள் உண்டு, கண்டோம்; ஆனால், எம்மணம் பூசி மற்றோர் தருவினைச் சந்தனத் தருவாக்கிக் கொள்ள இயலும்?

மணம் தரச் சந்தனமும், சுவைதர மாவும், வலிவளிக்கத் தேக்கும், வண்ணப் பூக்கள் அளிக்கச் செடி கொடியும், நெல்லளிக்கப் பயிரும், காய்கறி அளிக்கச் சிலவும் உண்டு! ஒன்றை மற்றொன்று ஆக்கல், இயலாத ஒன்று ஆகும்! ஒன்று தருவதை மற்றொன்று தர இயலாது - இயற்கை அது.

விருப்பம் எழலாம் அதுபோல! விந்தை புரிந்திட எண்ணம்கூட முளைத்திடும், சிற்சிலர்க்கு!

மரம் குலுக்கி நெல் உதிர்க்கச் செய்வோம்!

பயிர்பறித்துச் சந்தன மணம் பெற்று மகிழ்வோம்! தேக்கினில் வண்ணப்பூவும், மாவினிலு வாழை பலாவும் பெற்றிட விந்தை முறை காண்போம் என்று பேசலாம்; மகிழ்ச்சி பெற! ஆனால், இயற்கையை அடியோடு மாற்றிட இயலாதன்றோ?

எனவேதான், தமிழ் தந்திடுவன, பிறமொழி தந்திடா! தமிழர் கொண்டிடும் பண்பு, பிறரிடம் புகுத்தலாம், பூத்திடாது! எனவேதான், தனித்தன்மை கொண்டோர் நாங்கள் எனக் கூறுகின்றோம்.

எரிபொருள் ஆகத்தக்க தருக்களே, யாவும்; ஆனால், நறுமணம் தரவல்லது சந்தனம் ஒன்றே ஆகும்; அஃதே போலப் பயன்தர மொழிகள் உண்டு, மனம் பெறத் தமிழே வேண்டும் என்கின்றோம்.

பிற மொழி ஆதிக்கத்தால், பொருளாதாரத் தாழ்நிலையால், எதையும் உரிமையுடன் செய்திடும் அரசியல் உரிமை பெறாதாராய் இருக்குமட்டும், தமிழர் கண்ட மணம்கமழ் உயர் தனிப்பண்பு தன்னை உலகுக்கு ஈந்து, உலகிலே குவிந்துள்ள கருத்துச் செல்வத்தை மேலும் பெருக்கிடும் சீரிய செயலில் வெற்றி கிடைத்திடாது.

❀ ❀ ❀

மக்களாட்சியின் மாண்பும் பயனும் மிகுதியும் மொழிவழி அரசு மூலமே கிட்டும் என்று அரை நூற்றாண்டாகப் பேசிவந்தனர் பேரறிவாளர், போரிட்டனர் ஆற்றல்மிக்கோர், அந்த உயரிய குறிக்கோளை அழித்துவிட முனைந்தனர் ஆணவக்காரர், எனினும், எல்லா இடையூறுகளையும் காலச் சம்மட்டி நொறுக்கித் தூளாக்கிற்று. கருத்துக்கு விருந்தாய் அமைகிறது தமிழகம்.

வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்
வாழிய பாரதமணித் திருநாடு!

என்று அவர்கள் கீதம் இசைப்பது அனைவரும் வாழவேண்டும் என்ற நல்லறத்தைக் கூறுவதற்காக மட்டுமல்ல - தமிழர்காள் தமிழகம் பெறுகிறீர்கள்! புதிய அமைப்பு! விழாக் கொண்டாடுகிறீர்கள்! உற்சாகம் பெறுகிறீர்கள்! அதுவரையில் சரி - ஆனால் இந்த உற்சாகத்தை உறுதுணையாக்கிக் கொண்டு தனி அரசு என்று பேச ஆரம்பித்து விடாதீர்க்ள - பாரதமணித் திருநாட்டை வாழ்த்துங்கள்! -

என்று கூறி, கட்டிவிடப் பட்டிருக்கும் அந்தப் போலித் தேசியத்தைக் காப்பாற்றும் நோக்கத்துடனும்தான், பாடுகின்றனர்.

பாரதமணித் திருநாடு என்று பாடுவதும், சொந்தம் கொண்டாடுவதும், பரந்த மனப்பான்மை, பண்புக்கு அறிகுறி; தமிழ்நாடு என்று மட்டும் கூறிக் கிடப்பது குறுகிய மனப்பான்மை; கிணற்றுத் தவளைப்போக்கு, அறிவீரா? என்று வாதாடுவோர் உளர்! தம்பி! விரிந்து பரந்த மனப்பான்மையைத் தமிழருக்கு எவரும் புதிதாகக் கற்றுத்தர வேண்டியதில்லை! பாரில் இந்தப் பண்பு பேச்சளவுக்கேனும் வளருவதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே 'யாதும் ஊரே', 'யாவரும் கேளிர்' என்று பாட்டு மொழியிற் கூறிய பண்பாளர் தமிழர்! எனவே, பரந்த மனப்பான்மையைத் தமிழர்க்கு அளித்திட ஆசான்கள் தேவைஇல்லை - தமிழருக்கு அந்தப் பாடத்தைக் காட்டி, ஓர் பேரரசுக்குக் குற்றேவல் புரியும் எடுபிடியாக்கிடவே முனைகின்றனர் என்று ஐயப்பாட்டுக் கிடமின்றித் தெரிகின்றபோது, எங்ஙனம் அதனை நீதிநெறி விளக்கமென்று கொள்ள முடியும்.

இந்தியா - இந்தியர் - என்பன போன்ற கற்பனைகளைக் கவர்ச்சிக்கரமானதாக்கிக் காட்டி, போலித் தேசீய போதையை ஊட்டி, தமிழர் போன்ற தேசீய இனத்தவர்களை, தாசர்களாக்கிடப் பார்க்கிறார். மொழி, கலை ஆகியவற்றால் தனித் தன்மை பெற்றிருப்பதை அழித்திட இந்தியை ஏவுகிறார்... சல்லாபி வடிவத்தில்!! இந்தியை, அஞ்சல்நிலையத்திலும், அங்காடி அலுவலுக்கும், அரசாங்க காரியத்துக்கும், புகுத்தும் நேரத்திலேயும், தமிழ் என்ன சாமான்யமானதா, உயர் தனிச் செம்மொழி என்று மொழி வல்லுநர் பலர் கூறக் கேட்டுள்ளேன், இந்தி மொழி தமிழ் கொலுவிருக்கும் இடத்தருகேயும் வரத் தகுதியற்றது, என்றாலும், வசதிக்காக, நிர்வாக ஏற்பாட்டுக்காக, பாரதத்தின் ஐக்யத்துக்காக இந்தியைத் தேசீய மொழியாகக் கொள்ளத்தான் வேண்டும் என்று பேசுகிறார்.

மொழிவழி அரசு எனும் திட்டம், மெத்தச் சிரமப்பட்டுத் தாம் தயாரிக்கும் போலித் தேசியத்தை நாளா வட்டத்லே நைந்து போகச் செய்துவிடும் என்று அவருக்குப் புரிகிறது. எனவே தான்



அவர், மொழிவழி அரசு என்ற பிற்போக்குத் திட்டம் கூடாது, ஆகாது என்று அடிக்கடி பேசுகிறார்.

* * *

தமிழ்நாடு தவிர, பிற எல்லா இடங்களிலும், மக்கள் தத்தமது மொழி, பண்பாடு இவற்றின் அடிப்படையில் அமையும் உரிமை ஆகிய வற்றுக்காகச் சிறிது வரம்புமீறிக் கூடக் காரியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

* * *

தமிழ் (இலக்கியம்)

சுவைபடப் பேசுகின்றனர். மக்களை மயக்க! அதுவும் ஆரணங்குகள் பற்றி அழகுறப் பேசுகின்றனர், இளைஞர் சொக்கிடும்படி - என்று கூறுகின்றனர். இது எற்றுக்கோ எனில், பிறர் கேட்டுக் காய்வராம், கசக்கிறது என்பராம்! என்ன பேதைமை! எத்துணை தமிழறியாத் தன்மை இருப்பின் இவர் கட்கு இந்த எண்ணம் தோன்றும்!

வள்ளுவர், காமத்துப்பால் இயற்றியதே தவறு, தேவையற்றது, தீதும் பயப்பதாகும் என்று கூறி வருவதையும், பேரறிவின் சான்று என்று கருதிக் கதைக்கின்றனர்.

மறைந்த தமிழ்ப்பெரியார், திரு.வி.க. அத்தகையோருக்கு அறிவு கொளுத்திப்பார்த்தார். அழுக்கு மட்டுமல்ல, அழுக்காறு நிரம்ப உள்ளத்தில் அவர்கட்கு இருப்பதால், அந்த முயற்சி முழுவெற்றி அளிக்கவில்லை.

* * *

தம்பி! தமிழ் கற்றால், தமிழ் வரலாறு பேசினால், தமிழர் வாழ்ந்த வகைகுறித்துப் பெருமைப்பட்டுக்கொண்டால், வருகிறது கோபம் இவர்கட்கு. காரணம், இதற்கு இரண்டுண்டு, ஒன்று,

விடுதலை வேட்கை வளருகிறதே என்ற அச்சம்; பிறிதொன்று, இவர்கள் அறிய மாட்டார்கள்; தமிழக வரலாற்றினை, அறிந்தோர் பெறக்கூடிய எழுச்சி எத்தகையது என்பதை.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு, தம்பி, புலவர் பெருமக்கள், இயற்றியது அகம் - புறம் - எனும் இரண்டினை! அறிந்து இயற்றினர், அஃது மக்கட்குத் தேவை என்பதால். கட்டற்ற களியாட்டத்துக்கு அல்ல, இல்லற இன்பம் குறைவற்றதாக இருத்தல்வேண்டும், வாழ்க்கை ஒருகலை, அதனை மக்கள் உய்த்து உணரவேண்டும் என்ற பெரு நோக்குடன் இயற்றினர். நுண்ணறிவும், நோக்கிடும் திறனும், பொருள் கொண்டிடும் நேர்த்தியும் செறிந்த முறையில் இயற்றினர். காணும் பொருளுக்குக் காணாப் பொருளை உவமை காட்டி, குருடனைக் கொண்டு குருடனை அழைத்துச் செல்லச் சொன்னாரில்லை.

அழகிலே அவள் அரம்பை என்றல்ல, ஆடும் மயில் அந்த ஆரணங்கு என்றனர்! வீரத்திலே அவன் வில்விஜயன் என்றல்ல, மலையைப் பிளந்திடும் மதகரி என்றனர்! ‘அவனும் அவளும்’, பொழிலில் உலவியதை, தேவேந்திரனும் இந்திராணியும் கற்பகத் தருவடியில் சல்லாபித்தது போன்றது என்று அல்ல, பெடையுடன் ஆடிடும் புள்ளினம், மடப்பிடியுடன் களிறு களித்தாடுவது, இவைகளைக் கூறினர். “காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்” என்கிறார், கடவுள் திருப்பாதத்தைக் காணப்பாடியவரும் கூட!

தம்பி! ஒரு யானை! அது ஒரு நாள், தன் பிடி முன்வர வெட்கப் பட்டுக்கொண்டு புறக்கடைப்பக்கம் போய் நின்றதாம்! ஈதென்ன வேடிக்கை, யானை வெட்கப்படுவதா, ஏன்? என்பீர்!

காதலி எதிரில், அலங்கோலமான நிலையில், வந்து நிற்க வெட்கமாக இராதோ உங்கட்கு. ஆள்வோரைத் தள்ளி விடுங்கள், அவர்கள் விரைவில் ‘ஜடாமுடி’ தாரிகளாகி, காவி கட்டிக் கமண்டல மேந்தி, கடுந்தவம் செய்யப் புறப்படுவார்கள்! அப்படிப் புறப்பட்டால் தானே, பேரழகி மேனகை வருகிறாள்!! போகட்டும்! தவத்தை நடத்தட்டும். நான் கேட்பது இல்லறம் நடத்துவோரை!

யாம் கூறுவதன்றிப் பிறிதேதும் அறமாகாது என்று அறைந்திடுவோரை அல்ல!

பல்லிரண்டு ஒடிந்துபோய், உதடு கிழிந்து, ஆடை கலைந்து இருக்குமு நிலையில் காதலி எதிரே வந்து நிற்கத் துணிவீர்களோ? முடியாது, என்கிறீர்கள். அதேதான் அந்தக் களிறு இருந்த நிலை. தந்தம் உடைந்துவிட்டது! நகங்கள் தேய்த்து போய்விட்டன! அந்தத் தந்தத்தைக் கண்டு கண்டு எத்தனை முறை பெண்யானை களிப்புற்றிருக்கும்; உரிமையுடன் உவகையுடன், தன் துதிக்கையால் எத்தனை முறை தந்தத்தை வருடிற்றோ, நீ கண்டாயோ! என்ன ஒரு விதமான புன்னகை!! அன்றொருநாள், தோளின்மீது சாய்ந்து, ஓஹோ! அதை எண்ணிக் கொண்டாயா! யானை மட்டம் என்னவாம்! களிறு, கவலைப் படுகிறது! செ! இந்த நிலையில், மடப்பிடி என்ன எண்ணுவாளோ! எப்படி போவது! வெட்கமாக இருக்கிறதே என்று. எனவே, புறக்கடைப் பக்கம் சென்று நிற்கிறது.

தந்தம் ஒடிந்தது ஏன் தெரிகிறதா?

கொடி மதில் பாய்ந்தது - போரில்! கோட்டைச் சுவரினைக் கோடுகொண்டு - தந்தத்தைக்கொண்டு, தாக்கிற்று! கோட்டைச் சுவரும் இடிந்தது, தந்தமும் உடைந்தது. போரின் காரணமாகத்தான் நகமும் தேய்ந்தது! இதைப் பெண் யானை பிறகு, தானே தெரிந்து கொள்ளும் பார்த்ததும்! என்ன அலங்கோலம் இது! கோடு உடைந்து கிடக்கிறதே! என்று கேட்டுக் கேலி செய்யுமே! அந்த எண்ணம், ஆண் யானைக்கு!

வெறும் காதல் மட்டுமா, தம்பி. இதிலே காணக் கிடக்கிறது! தமிழர் போர்முறை விளக்கப் படுகிறது! மனப்போக்குத் தெரிவிக்கப் படுகிறது. அரிய நகைச்சுவை ததும்புகிறது! இத்தனையும் தமிழ்! அந்தத் தமிழ், நமது மொழி! அந்தக் களிறு, பிடி, நம்முடையவை! ‘அந்த நாட்கள்’ நம்மவர், ‘நமது அரசு’ அமைத்து ஆண்ட நாட்கள்!

❀ ❀ ❀

தம்பி! ஒரு நாரையைக் காண்போமா!

துயில்கின்றது! எவ்வளவு இன்பமாக; கவனித்தாயா! உன் மார்பின் மீது, மதலையின் சிறுகால்! உன் முகத்திலே, ஓர் மலர்ச்சி! பக்கமுள்ள பாவைக்கு உன்னை அம்மகவு படுத்தும் பாடு கண்டு, பெருமை, பூரிப்பு! உனக்கு அடங்க மறுக்கிறது, உன் ஆற்றலின் விளைவு!

"நானே, அடங்க! உங்கள் 'வீரம்' என் கண்ணிடம் பலிக்காது!" என்று கூறிக் கெக்கலி செய்கிறார்கள், முக்கனிச் சாற்றைப் பேச்சிலே பெய்தளிக்கும் பாவை.

உனக்கும் உன்போன்றோர்க்கும் அது.

இதோ நாரையைப் பார், நிம்மதியாகத் தூங்குகிறது! இளம் காற்று வருடினால், தூக்கம் ஏன் வாராது?

அதுவும், மாமரத்தின் இளந்தளிர், தடவிக் கொடுக்கிறது. இனிமையான தூக்கம் நாரைக்கு.

மாத்தின் இளந்தளிர் வருட
வார்குருகு உறங்கும்.

ஆமாம், தம்பி! புலவர், ஏன் நாரையைக் காட்டினார்? நாரையை அல்லது அதன் தூக்கத்தைக் காண்பதிலே, என்ன இன்பம்! துரைத்தனம் நடத்துபவர்களிலேகூட, அவையில் அமர்ந்து, கண்மூடிக் கிடப்பவர்கள் உண்டே! இது சாதாரண நாரைதானே. இதை ஏன், புலவர் காட்டினார் என்பார். காரணத்தோடு தம்பி, தகுந்த காரணத்தோடு நாட்டிலே இருந்த இயற்கை வளத்தைக் காட்டுகிறார், வெறும் நாரையை மட்டும் அல்ல.

கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து
பழன யாமை பசுவெயில் கொள்ளும்.

நன்செய் நிலத்தில் வளர்ந்துள்ளது கரும்பு. ஆமைக்கு இளவெயிலில் காய்ந்து இன்புறும் எண்ணம். கரும்பின் வழியாக ஏறிக் காலை இளம் வெயிலில் காய்கிறது.

சேச்சே! இதென்ன ஆமைக்கு ஒரு பாடலா என்று கேட்பர், ஆள வாய்ப்பு கிடைத்தாலேயே; அறிவின் முதிர்ச்சி தமது சொத்து என்று அதிகாரத்தைக் காட்டி மக்களை நம்பச் சொல்வோர். நாட்டு வளம் மட்டுமா? புலவர்கள், இயற்கைக் காட்சிகளை எவ்வளவு அழகுறப் படமெடுத்திருக்கிறார்கள் என்பதல்லவா முக்கியம்.

ஆமையைக் கண்டு கூர்மாவாதாரக் கதை கட்டினாரிலை; வளம் எப்படி இருந்தது என்று உணர்த்தினர்.

இயற்கை வளம் காட்டுவதுடன் நின்றாரில்லை, அரசர்கள் முறை தவறி நடந்தகாலை இடித்துரைத்தனர், கோல் கோணாதிருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

சுவைபடக் கூறுவது ஆகாது என்று பேசுவோர், குறிப்பாக 'அகத்துறை' யை ஒதுக்கித் தள்ளிவிடுகின்றனர். உனக்கென்ன, என்று கேட்பாயானால் தம்பி, எனக்கொன்றும் இல்லை; ஆனால், அங்ஙனம் கூறுவோர், 'புறம்' பற்றிய, புல்வருரையையேனும், போற்றினரா, பாடம் பெற்றனரா? இல்லையே! ஏன்? ஆரணங்கு பற்றிய பேச்சு அவர்கட்கு எட்டி. சரி! அப்படியே இருக்கட்டும். மற்ற அறநெறிபற்றி, என்ன கருதுகின்றனர்? எவ்வாறு நடந்துகொள்கின்றனர்?

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மானிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே.

என்று பாடியுள்ளனரே. இதிலே கடை இல்லை; இடை இல்லை. பிறகேன், இதனைக் கூர்ந்து பார்த்து, அவ்வழி நல்வழி என்று கண்டு, கேடு களைய முற்படக்கூடாது!

நீண்ட காலமாக இருந்து வரும் 'பூஜா' முறையை எவரும் குறைகூறக்கூடாது என்றல்லவா, பேசுகின்றனர், அமைச்சரானோர்.

சிறப்பும் சீலமும் அல்லாது
பிறப்பு நலந்தருமோ பேதையீரே!

என்று கேட்கிறாரே, புலவர்! எங்ஙனம் விடை இறுக்க இயலும்?

இந்தத் தேவாலயத்திலே, இன்னார்தான், இன்ன முறைப்படி தான், பூஜை செய்வர்; அதற்கு உட்பட்டுத்தான் பக்தர் செல்ல வேண்டும் - என்று பேசும் போக்குக்கும், பழந்தமிழர் கொள்கைக்கும் ஏதாகிலும் பொருத்தம் இருக்கிறதா? இல்லையே! ஆலயத்துக்குப் 'பூஜாரிகள்' ஆக, இன்னின்ன தகுதி வேண்டும், ஜாதி அடிப்படையில் அல்ல என்று சட்டம் இயற்றச்சொல் பார்ப்போம்! அந்த முயற்சியில் ஈடுபட்டால், எமது செல்வாக்குச் "சடசடெனச் சரியும்" என்பார்கள்.

எனவேதான், தம்பி, தமிழரின் வரலாறு குறித்து நாடு அறிந்தால் மட்டுமே, நெஞ்சுரம் ஏற்படும் என்று கூறுகிறது, நம் கழகம்.

சிறைப்பட்ட மன்னனுக்குத் தாங்கமுடியாத தாகம் ஏற்பட்டது. காவலாளியோ பருக நீர் கொடுக்கும்போது மரியாதைக் குறைவாகக் கொடுத்தானாம். மானம் பெரிது, உயிரல்ல என்று எண்ணிய அந்த மறத்தமிழன், நீர் பருகாதிருந்து உயிர் நீத்தான் என்று பாடல் இருக்கிறது.

அந்தப் பாடலும் பழம் கதையும் எற்றுக்கு என்று ஏசுவோரின் ஆளுகையில், "எட்டிநில்! கிட்டே வராதே! வீசுவேன் பிரசாதம், வாங்கிக் கொள்!" என்று ஆலயத்தில் உள்ளவன் ஆரியம் பேசுகிறான், அது நியாயந்தான் என்று 'ஐதீகம்' பேசுகிறார் ஒரு அமைச்சர்! ஊரே கிளம்பி, இந்தச் சுழியில் சிக்கிய துணைஅமைச்சரைத் துளைத் தெடுக்கிறது. தமிழ் அறம் அரசோச்சுமானால் நிலைமை இதுவாகவா இருக்கும்?

அந்த அறம், அமைச்சர்களின் துணையால் வாராது; தம்பி! உன்போன்ற தூயஉள்ளமும் துயர்கண்டு துவளாப் போக்கும் கொண்டோர், தொடர்ந்து பணியாற்றினால் மட்டுமேமுடியும். தொடர்ந்து பணியாற்ற வேண்டும், தம்பி, தொடர்ந்து! இன்று கூடவா, அண்ணா! என்று, ஏக்கத்துடன், கேட்கத் தோன்றும். நான் அவ்வளவு கடினமனம் கொண்டவன் அல்ல.

இன்று இல்லத்தில் இன்புற்று இரு! உன்னைப் பெற்றோர் உளமகிழ்ந்து ‘எமது குடிசிறக்க வந்துற்றான் இவன்’ என்று கூறிடத் தக்க விதமாகச் செயலாற்று.

மஞ்சளும் இஞ்சியும், அவைதமை நறுக்கிடும் மாம்பழக் கன்னத்தாளும், பால் பெய்த பொங்கலும், பருப்பும் பாகும், எதிருக்க உன்னை ஏடு எடு! நாடாள வந்தவர்கட்கு அறிவுச் சுடர் வரத்தக்க விதத்தில் எடுத்துக் கூறு! எதிர்ப்புக்கு அஞ்சாதே! என்று கூறி, அழைப்பேனா! அண்ணன் கூறுவதை எப்படித் தட்டி நடக்க முடியும் என்று கூறிப்பார், வேல் இரண்டு பாயும் உன் நெஞ்சில்! எடுத்தெறியத் தேவை இல்லை வேலை! ஏறெடுத்துப் பார்த்து, என்ன? என்று கேட்டாலே போதும், நானறிவேன்.

பொங்கலெனும் நன்னாளைப் பூரிப்போடு போற்றுதற்கு, ஊரெல்லாம் திரண்டிடும்போது, உனக்கு மட்டும் வேறு பணியா? இல்லை, தம்பி, இல்லை, செங்கரும்பும் சீனியும் செவ்வாழைச் சீப்பும், சுவைக்க! முல்லையும் மல்லியும் சூட!

பூ இரண்டு போதாதோ, புதுப்பூக்கள் தேடுவதோ, என்று மலர்க்கண்ணாள் கேட்டிடுவாள் இதழ் விரித்து.

அந்த இன்பக் காட்சியிலே, உன்னை மறந்து, ஒரு நாள் இருப்பது, பிறகு தன்னை மறந்து, தமிழுக்குப் பணிபுரியும் உற்சாகம் பெறுவதற்கே என்பதை மட்டும் மறவாதே!

காடதிர, நாடதிர, கயவர் கூட்டம் சிதற, வீரம் விளைவித்து வெற்றி கண்ட இனத்தில் உதித்தோம்.

வேழம் உராயும் சந்தனமும், வெற்பில் விளையும் பல பொருளும், பழமுதிர் சோலைகளும், பாங்குநிறை கழனிகளும், பலவும் பெற்றோம்.

தீயன நினைக்கா நெஞ்சும், தேனென இனிக்கும் மொழியும், வையகம் போற்றும் நெறியும், நமக்கு.

முப்புறம் கடலுண்டு; எப்புறமும் அந்நாளே கண்டு வியந்ததுண்டு. பலப்பல இலக்கியம் உண்டு, கலை பல உண்டு, காண்பாய்!

அலைகடல் அடக்கும் ஆற்றல், ஆணவம் முறிக்கும் அடுபோர்த் திறன், வாணிபம் நடாத்தும் நேர்த்தி, செய்பொருள் ஆக்கும் செம்மை, யாவும் உண்டு இங்கே.

முத்து அளிக்கும் கடல்! அகில்போல் பல தருக்கள் அளிக்கும் நம் காடு, வாழ்வுக்கு வகை அளிக்கும் நம் கழனி! வல்லமை அளிக்கும், மரபின் இயல்பு! வாய்மையும் தூய்மையும் அளித்துச் சென்றார், நம் ஆன்றோர்.

❀ ❀ ❀

கனி பறிக்கச் சென்றவனைக் கருந்தேள் கொட்டிடக் கால் இடறிக் கீழே வீழ்ந்து பாறையிலே மண்டை மோதி, மனம் குழம்பிப் போய்த், தாயைக்கூட அடையாளம் தெரிந்து கொள்ளாதிருந்த மகன்போலப் புகழேணியின் உச்சி சென்ற தமிழ் இனம், நச்சரவம் போன்ற பிற இனத்தொடர்பினால் தாக்கப்பட்டுத் தடுமாறிக் குப்புறக் கீழே வீழ்ந்து, அதிர்ச்சியினால், தன் மரபு குறித்த நினைவும் கெட்டு,தாயகம் எது என்பதனையும் மறந்து, மனம் குழம்பி, வேறோர் பூமியினைத் தாயகம் என்று குளறிட நேரிட்டது.

பரணிபாடித் தரணி ஆண்ட தமிழ் இனமல்லவோ, நீ? என்று கேட்ட காலை, "தாசன் நான்! தமிழில் பேசுகிறேன். எனினும் நான் வணங்கும் தெய்வங்களுக்கு உகந்த மொழி சமஸ்கிருதம், அந்த வடமொழியே, தேவபாஷை! என் நாடு, பாரதம், இமயம் முதல்

குமரி வரை உள்ளதோர் புண்யபூமி!" என்று கூறலானான், தடுமாறித் தவித்த தமிழன். விந்தியம் மறந்தான், இமயம் நோக்கித் தொழுதான். காவிரியின் புகழ்பாடத் தயங்கினான் - கரம்புகளைக் கழனிகளாக்கி வாழ்க்கையை வளமாக்கிய பொன்னியை மறந்தான், கண்காணாத் தொலைவினிலே ஓடிடும் கங்கையினைப் புகழ்ந்து, கர்மம் யாவும் நீக்கிடும் புனித கங்கை என்று போற்றிடலானான். சேரனையும் சோழனையும் செந்தமிழ்ப் பாண்டியனையும் தன் முன்னோர் என்று கூறக் கூசினான், இக்ஷ்வாகு பரம்பரை, ரவிகுலச் சோமன், என்று பேசிடத் தலைப்பட்டான். தொல்காப்பியம் என்றால் என்ன? என்று கேட்டிடவும், பாகவதம் படித்திடவும் முற்பட்டான்!

❀ ❀ ❀

எதிர்பாராத வகையில் தீமை ஒன்று வந்துற்றது; தமிழன், தன் இனம், மரபு, நாடு, மறந்ததே, அந்தத் தீமை.

அந்தத் தீமையின் விளைவாக ஏற்பட்டதே தடுமாற்றம், அந்தத் தடுமாற்றத்தினால், தமிழன் தமிழ்நாடு என்பதனை மறந்து, பாரத நாடு, இந்தியா, என்ற கற்பனைக்கு ஆட்பட்டு, நிலைகெட்டு நிற்கலானான். தம்பி! நமது இயக்கம், இந்த நிலையினை மாற்றிட வெகுபாடு படவேண்டியதாயிற்று. மருத்துவனாகி, மனக் குழப்பதை நீக்கவேண்டிய வேலையில் ஈடுபட வேண்டிவந்தது. அதிலே ஓரளவு வெற்றி கிடைத்துள்ளது. தாயே! தாயே! என்று, நினைவு திரும்பப் பெற்ற மகன் பாசத்தோடு பேசிடுவதுபோல, இப்போது, எவரும், தமிழ்! தமிழ் இனம்! தமிழ்நாடு! என்று பற்றுக் கொண்டு பேசிடக் கேட்கிறோம். பாசத்தைக் காட்டிக்கொள்ள முன்வருவது காண்கிறோம். தெளிவு பிறந்திடக் கண்டு மகிழ்ச்சி கொள்கிறோம்.

தமிழ் இனம்! மரபு! தமிழ் மன்னர்கள்! - என்றெல்லாம் பேசுவது! பத்தாம்பசலிப் பேச்சு என்று செப்பினார், கல்வித்துறை அமைச்சர் சுப்பிரமணியனார், சென்ற ஆண்டுகூட. அத்துணைமுற்போக்காளரோ அமைச்சர் பெருமகனார் என்று கேட்டிடத் தோன்றும், சேர சோழ பாண்டியர் குறித்துப் பேசப்படுவது கேட்டுமட்டுந்தான், இந்தக் கற்றறிவாளர், "செச்சே!

ஈதென்ன, பத்தாம்பசலிப் பேச்சாக இருக்கிறதே'' என்று ஏளனம் செய்கிறார். அனுமார், மாகாளி, இராமாயணம், பாரதம் போன்றவை குறித்துப் பேசப்படும்போது அல்ல!! அப்போது, அவர் நெஞ்சு நெக்குருகிக் கண்ணீர் மல்கி நிற்கும் காட்சி அளிக்கிறார்.

❀ ❀ ❀

எமது நாடு, எமது மொழி, எமது கலை, எமது அரசு, எமது செல்வம் என்று இங்கு, எழுச்சி பொங்கிடும் நிலையில், பேசிடக் கேட்கிறோம்; இந்த ஆர்வம், எழுச்சி, பற்று, என் நாட்டிலே, இல்லையே! ஏன்? ஏன்?-என்றுதான், எண்ணத் தலைப்பட்டனர்; எழுச்சியின் தூதுவராயினர்; தாயகம் திரும்பினர், தளைகளை நொறுக்கிட; ஒவ்வொன்றாக இன்று, விடுதலைபெற்று வருகின்றன. ஆப்பிரிக்க பூபாகத்து, நாடுகள்! புத்தம் புது அரசுகள்!!

❀ ❀ ❀

இன்று விடுதலைக் கொடியைப் பறக்கவிடும், இந்த நாடுகளை எல்லாம் விட, வரலாற்றுச் சிறப்புள்ள நாட்டிலே, நாம் பிறந்தோம்; எனினும் நமது இனம், அதற்குரிய மொழி, அதனால் கிடைத்திடும் வாழ்க்கை முறை எனும் எல்லாவற்றையும் அழித்து வருகின்றனர்; எதிர்த்து அல்ல, தம்பி! அணைத்து!! வைதீகர்கள், 'எலும்பை'ப் பெண்ணாக்கிய மொழி, எம்மான் கழகத்தில் அமர்ந்து 'வளர்த்த மொழி' என்று கூறிக் களிப்பூட்டுகிறார்கள்.

வரலாற்றுப் பேராசிரியர்களோ, 'இம்மொழி செம்மொழி; இயல் இசை நாடகமெனும் மூன்று வகையினதாக அமைந்த மொழி', என்று கூறுகின்றனர்.

எனினும், அந்தத் தனிமொழி, தத்தளிக்கிறது; தாதிவேலை பார்த்திடச் சொல்கிறார்கள், தருக்கர்கள்.

வேற்று நாட்டவரெல்லாம் கண்டு வியந்துரைக்கின்றனர், நம் மொழியின் தனிச்சிறப்புப் பற்றி;

❀ ❀ ❀

தம்பி! செப்பேடுகளில், கல்வெட்டுகளில், காண்கிறோம் தமிழ் மொழியை! என்ன பொருள் என்கிறாய்? சீரும் சிறப்பும் மிகுந்திருந்தது, 'பேரும் புகழும்' பெற்றிருந்தது, நம்நாடு என்பதற்றோ பொருள்!

வெற்றிகளைக் குறித்திட, விருதுகளைத் தந்திட, செப்பேடுகள், கல்வெட்டுகள்!

இமயத்தில் கொடி நாட்டினான், கனகவிசயர் தலைமீது கல் ஏற்றினான், கங்கை கொண்டான், கடாரம் வென்றான். கலிங்கத்தை கதிகலங்கச் செய்தான், வாதாபி வென்றான், சிங்களம் சென்றான், வென்றான் - காவிரிக்குக் கரை அமைத்தான் - என்றெல்லாம், நமது இனத்தின் முன்னாள் ஏற்றத்தைக் குறித்திருக்கிறார்கள் - தமிழ் மொழியில்.

செப்பேட்டுக்கும் கல்வெட்டுக்கும் தகுதிபெற்றுத் திகழ்ந்த தமிழ் மொழிக்கு இன்று அஞ்சல் அட்டையிலேகூட இடம் இல்லை தம்பி! ஆமாம்! என்று ஆச்சரியத்துடன் சிலரும், ஆமாம்! என்று ஆயாசத்துடன் பலரும், கூறிக் கேட்கிறோமேயன்றி, அப்படியா! ஏன்? என்று கேட்டுச் சீறி எழுந்து, கேட்டினை எதிர்த்து ஒழித்திட யார்உ ளர்? எங்கே உளர்?

நெடுஞ்சாலைகளிலே உள்ள கற்களிலே, இந்தி! நெடுநல் வாடையின் சிறப்புப்பற்றி உரையாற்றிட, ஆசிரியர் உளர், கல்லூரிகளில்!!

'கன்னித் தமிழ்!' என்று புகழ்பாடுகின்றனர், புலவோர் எனினும் "கற்றிடுக இந்தியினை, பிழைத்திட அதுதான் வழி" என்கின்றனர் அமைச்சர்கள். அவர்கள் தமிழரே! ஐயமில்லை! ஆயின் அமைச்சராகி உள்ளனர்! அந்த நிலை கெடாதிருக்க, ஆட்டி வைக்கிறபடி ஆடிடும் போக்கினராகிவிட்டனர்!!

❀ ❀ ❀

இந்திமொழி கட்டாயம் இல்லை; திணிக்கப்போவதில்லை; ஆட்சி மொழியாக அவசரப்பட்டு ஆக்கிடப் போவதில்லை; ஆங்கிலத்தை உடனடியாக அறவே நீக்கிடப் போவதுமில்லை; என்று ஆணவத்தைப் பதுங்க வைத்துக்கொண்டு, பேசிடக் கேட்கிறோம். எனினும், மெள்ள மெள்ளப் படரும் நோய்போல, இந்தி, எல்லாச் சந்து பொந்துகளிலும் நுழைகிறது, குழைகிறது, நம் தன்மானம் அழிக்கிறது.

தமிழகத்தில் மட்டுமே, இந்தி எதிர்ப்பு என்பது, பட்டுப் போகாத நிலையில், நீறுபூத்த நெருப்பு நிலையில் இருந்துவருகிறது.

வங்கம் போன்ற வேறு சில இடங்களில், வாதாட வல்லுநர்கள் உள்ளனர், வரலாற்றுச் சான்று காட்டிச் சாடுவோர், பட்டுப் போகாத நிலையில் நீறுபூத்த நெருப்பு நிலையில் இருந்து வருகிறது.

வங்கம் போன்ற வேறு சில இடங்களில், வாதாட வல்லுநர்கள் உள்ளனர், வரலாற்றுச் சான்று காட்டிச் சாடுவோர் உள்ளனர், மொழி வளம் பற்றிய விளக்க உரையாற்றி, இந்தி மொழிக்குப் பொதுமொழியாகிடும் தகுதி இல்லை என்று எடுத்துக் காட்டுவோர் உளர் - ஆனால், எமக்கு ஏன் இந்தி? எமக்கு ஏன் ஒரு பொதுமொழி? என்று கேட்டடிடத் துணிவு எழவில்லை.

சுவிட்சர்லாந்து நாட்டினைக் காட்டி, பல மொழிகள் அங்கு, தேசிய மொழிகளாக உள்ளனவே, அதுபோல, இங்கும், பலமொழிகள் இருக்கட்டுமே, இந்தி மொழிக்கென, ஏன் ஓர் தனித்தகுதி தேடித் தருகிறீர்கள், என்று கேட்டு அறிவு கொளுத்தப் பார்க்கின்றனர்.

இவை அவ்வளவுக்கும், இந்தி புகுத்துவோர். ஒரே வரியில் சமாதானம் கூறுகின்றனர்; "உமது மொழி அழிக்கப்பட மாட்டாது; இந்தி மொழி, உங்கள் தாய்மொழிக்கென உள்ள இடத்தைப் பிடித்துக் கொள்ளாது; இந்தி, அகில - இந்திய உறவுக்காக, அகில - இந்திய ஆட்சியின் வசதிக்காக, அகில - இந்திய உறவுக்காக, அகில-இந்திய ஆட்சியின் வசதிக்காக, அகில - இந்திய அலுவலகங்களுக்குத்

துணையாக, இருக்கிறது, வேறொன்றுமில்லை; மிரண்டுவிட வேண்டாம்; வெகுண்டு எழவேண்டாம்" என்று கூறுகின்றனர்; அதுபோது, பாஞ்சாலத்தாராகட்டும், மராட்டியராகட்டும், வங்கத் தாராகட்டும், அந்த வாதம் சரியா, என்பது பற்றித்தான் ஆராய்கின்றனரேயன்றி, போதுமான பாதுகாப்பு தமது ராஜ்ய மொழிகளுக்கு உள்ளனவா, என்றுதான் கேட்கின்றனரேயன்றி, அகில- இந்திய அலுவலகங்களிலே, இந்தி பேசாதார்களுக்கு ஊறு விளைவிக்கப்படுமா என்று உசாவுகின்றனரேயன்றி! எமக்கு ஏன் அகில - இந்திய ஆட்சி? என்று கேட்கிறார்களில்லை!!

தமிழர், மட்டுமே கேட்கிறோம், அதனை!

❀ ❀ ❀

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே ஏற்றம் பெற்றது. எமது மொழி! அம்மொழி போதும் எமக்கு, எமது அரசுக்கு! எனினும், தமிழர், தரணி எங்கணும் தொடர்பு கொண்டிட, அறிவு திரட்டிட, வாணிபம் நடாத்திட, உறுதுணையாக, தமிழுடன் உலகப்பொது மொழியாம் ஆங்கிலம் போதும்! என்று உரைக்கிறோம்.

தொல்காப்பியம் முதற்கொண்டு, தூதுவரை உள்ள இலக்கியச் செல்வம், தமிழில் உளது!

இனி, ஆங்கில மொழியின் துணைபெறின், அகில உலகப் பேச்சுத் தொடர்புக்கு மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும், இன்றுவரை மலர்ந்துள்ள கருத்துக்களை அறிந்து தொடர்புகொள்ள வழி கிடைக்கிறது.

பண்டைய நாட்களில் பாங்குடன் விளங்கிய பாபிலோன், கிரீஸ், ரோம், சீனம் - காணலாம் ஆங்கில மொழி மூலம்!

கன்பூஷியஸ், சாக்ரடீஸ், பிளேடோ, அரிஸ்டாடில், கான்ட், மில் - போன்ற மெய்ஞ்ஞானிகளுடன் உரையாடி, உள்ளத்துக்கு உவகை தேடிடலாம், நெறிகளில் நேர்த்தி பெறலாம், ஆங்கில மொழியின் துணையால்.



உமார்கயாம் பாடலின் இனிமை, டாண்டே கவிதையின் கெம்பீரம், மில்டன் கவிதை காட்டிடும் உருக்கம், ஷெல்லி தந்திடும் எழுச்சி, யாவும் பெறலாம், இன்புறலாம், பயன் பெறலாம், ஆங்கில மொழியின் அருந்துணைகொண்டு.

ஆர்க்கிமிடிஸ், கலிலியோ, நியூடன், ஈன்ஸ்டின் போன்ற விஞ்ஞானிகளின் விளக்கவுரைகளைப் பெறலாம். ஆங்கில மொழியின் துணைகொண்டு.

செனகா, மார்லோ, ஷேக்ஸ்பியர், பென்ஜான்சன், மாலியர், பெர்னார்டுஷா - எனும் உலகப் பெரும்புகழ்பெற்ற நாடகாசிரியர்களின் நல்லுரையாவும், ஆங்கிலம் அளித்திடும்.

ஸ்காட், டிக்கன்ஸ், பால்சாக், மாபாசான்ட், ஜோலா, டால்ஸ்டாய், ஹெமிங்வே, மாகாம், பெர்ல்பக் - என்பவர் போன்றாரின் சுவைமிகு கருத்தூட்டும் கதைகளை ஆங்கிலம் அளிக்கிறது!

மாக்கியவல்லியின் நரிக்குணமானாலும், மார்க்க அரேலியரின் வேதாந்தமானாலும், ராபஸ்பயரியின் முறையானாலும், ரூசோ தரும் அரசியல் முறையானாலும், வால்டேர் தந்திட்ட புரட்சிக் கருத்தானாலும், லெனின் நடாத்திய புரட்சிப் பெருங்காதையாயினும், எல்லாம் அறிந்திட, அவரவர், எந்தெந்த மொழியினில், எழுதினரோ, அத்தனை மொழிகளையும் கற்றுத் தீரவேண்டும் என்றில்லை - ஆங்கிலம் அறிந்திடின் அவை அனைத்தையும் அறியலாம்.

அலெக்ஸாண்டரின் படையெடுப்பிலிருந்து, அட்லியின் ஓய்வு வரையில், செங்கிஸ்கானின் வெறிச் செயலிலிருந்து நாசரின் வெற்றி வரையில், ஹுவான் சுவாங் நடத்திய பயணத்திலிருந்து தலாய்லாமாவின் 'விஜயம்' வரையில், ஆங்கிலம் அறிவிக்கிறது.

நெப்போலியனுடன் நடமாடலாம், நெல்சனுடன் உரையாடலாம், கிளாஸ்டனைக் காணலாம், கிராம்வேலிடம் பேசலாம், மாஜினியைக் கண்டு விடுதலையின் மேன்மை பற்றிய

விளக்கம் பெறலாம், கரிபால்டியைக் கண்டு வீரச் செயலுக்குத் தேவையான உணர்ச்சியைப் பெறலாம், சிசிரோவின் முழக்கம் டெமாஸ்தனிசின் பேராற்றல், கேட்கலாம், ஆங்கிலத்தின் துணையுடன்.

ஆங்கிலத்தின் துணையுடன் ஆக்ராவில் நடமாடலாம், ஆக்ராவிலும் உரையாடலாம், பீகிங்கில் பேசலாம், பாரிசில் உலவலாம், மாட்ரிட்டானாலும் மாஸ்கோவானாலும், ஆட்டவானாலும் அங்காரா ஆனாலும், நேபிள்ஸ் நகரானாலும் ரோம்நகர் எனினும், வாஷிங்டனானாலும் டப்ளினானாலும், கற்றோர் உலாவும் எந்த இடமும் சென்று உறவாடலாம், உரையாடலாம், ஆங்கிலம் தெரிந்தால்!

தொல்லையை நீக்கிக் கொள்ளப் பயன்படவில்லை. எனினும் சென்ற திங்கள் நேரு பண்டிதர், சீனத்துப் பிரதமர் சோ - என்-லாயுடன் உரையாட, ஆங்கிலம் உதவி செய்தது! பிரிட்டிஷ் மகாராணியுடனும், டாக்டர் நிக்ருமாவுடனும், துங்குரஹிமானுடனும் ஆங்கிலத்தில்தான் பேசினார். பழைய மாணவரே வருக! என்று, அவரை அவர் படித்த கல்லூரியில், ஆங்கில மொழியில்தான், இன்றைய மாணவரும் ஆசிரியரும், வரவேற்று உபசரித்தனர்.

அவர், தம்முடைய பேரப்பிள்ளைகளுடன் பேசுவதானாலும் ஆங்கிலம்தான் - ஏனெனில், அவர்கள், ‘ஐரோப்பிய நாடு’ சென்று, கல்விபயின்ற வாய்ப்பினர்!

நிலை இங்ஙனமிருக்க, இந்தியை, நேரு துரைத்தனத்தார், ஏன் தூக்கித் தலைமீது வைத்து சுமந்திடச் சொல்கின்றனர்? அகில இந்தியா எனும், ஏகாதிபத்தியதுக்கு அது முத்திரை மொழி! அந்த முத்திரை பொறிக்கப்பட்டவர்களெல்லாம் டில்லியின் அடிமைகள் என்பது பொருள். அதற்காகவே இந்தியை ஏற்றுக்கொண்டாட வேண்டும் என்கின்றனர்.

'இந்தி மொழி படித்தால்தான், அகில இந்திய அரசியலில், ஆட்சி இடத்தில், நிர்வாக அலுவலங்களில், உலாவ, உறவாட, உரிமைபெற முடியும்' என்று இங்குள்ள காங்கிரஸ் அமைச்சர்கள் செப்புகின்றனர்.

❀ ❀ ❀

தமிழ் (இலக்கியம்)

மொழிப் பிரச்சினையில் இயல்பாகவே அமைந்துவிட்டிருக்கிற சிக்கல்களையோ, இந்திக்கு ஆதரவான அணியினர், ஒரு சாதகமான, சமரசச் சூழ்நிலை எழவிடாதபடி தடுக்க, வன்முறைக் கிளர்ச்சிகளையும், அமளிகளையும் தென்னகம் மேற்கொண்டு விட்டிருக்கிறது என்பதைக் காட்டி வாதாடி, சிக்கலை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதனையோ, மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண. மிக மிகப் பொறுப்புணர்ச்சியும் பொறுமை உணர்ச்சியும் தேவைப்படுகிறது என்பதனையோ உணர மறுத்து மாணவர்கள் இவ்விதமான போக்கினை மேற்கொண்டிருப்பது, தாங்கிக் கொள்ள முடியாத வேதனை தருகிறது.

உங்கள் அண்ணாதுரை இந்திக்குச் சம்மதம் தெரிவித்துக் கையெழுத்துப் போட்டு விட்டான், தெரியுமா! என்று முன்பு ஒருமுறை காங்கிரஸ் தலைவர்கள் மேடை தவறாமல் பேசியது எனக்கு நினைவிலிருக்கிறது. சட்ட சபையிலே நான் திட்டவட்டமாக, நான் அவ்விதம் கையெழுத்துப் போட்டேனா? என்று கேட்டபோதுதான், அப்போது அங்கு அமைச்சராக இருந்த சுப்பிரமணியம், இல்லை! கையெழுத்துப் போடவில்லை என்று தெரிவித்தார். அதுவரையில் ஒரு பத்துநாள், விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதிலே அவர்களுக்கு ஒரு தனிச்சுவை! அனுபவித்துவிட்டுப் போகட்டும்.

மொழிப் பிரச்சினையிலே உள்ள சிக்கலைப் பற்றியும், தமிழகம் கொந்தளித்துக் கொண்டிருப்பதையும், அது குறித்துத் தக்கவிதமான கவனம் செலுத்தாமல், மேல் மட்டதில் உள்ளவர்கள் இருப்பதையும் எண்ணி எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும்



எனக்கு, காங்கிரஸ் தலைவர்கள் செய்வதுபோன்ற விளையாட்டிலே ஈடுபட நேரமுமில்லை, நினைப்பும் எழவில்லை.

ஆனால், முன்பு நான் புதிய திருப்பம் என்ற கட்டுரையில், குறிப்பிட்டுக் காட்டிய 'சூழ்நிலை' பொதுவாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்களில் தெரிகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு உள்துறை அமைச்சர் நந்தாவைக் கண்டு, மொழிப் பிரச்சினையில் ஒரு நல்ல தீர்வு கண்டாக வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறார்கள். இரண்டொருவர் அதுபற்றி என்னிடமும் பேசினார்கள் நம்பிக்கையுடன்.

❀ ❀ ❀

மொழி (இலக்கியம்)

நிருபர்கள் மாநாட்டில், மடக்குவது, குறுக்கிடுவது போன்ற முறைகளில் தேர்ச்சி பெற்ற நிருபர்களிடம், மிகத் தெளிவாகவும், அதிகமானப் பரபரப்புக் காட்டாமலும் பேசவேண்டும். அன்று நான் நடந்துகொண்ட முறை குறித்து விவரமறிந்தவர்கள் பாராட்டியது கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால், நான் அப்போதே, திருமதி செழியனிடம் சொன்னேன். "எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தமிழ்நாட்டில் சில இதழ்கள், அண்ணாத்துரை இந்தியைப் பரப்ப ஒத்துக்கொண்டான் என்ற செய்தியை மற்றும் வெளியிடும்" என்று சொன்னேன்.

இந்த இதழிலே மட்டும் அண்ணாதுரை, இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதை சர்க்கார் விட்டுவிட்டு, சர்க்கார் முன்னின்று இந்தி பரப்புவதை விட்டு விட்டு, மக்களின் அமைப்பே இந்தியைப் பரப்ப முனைந்து, என் உதவியை நாடினால், செய்கிறேன் என்று கூறினார் என்று வெளியிட்டிருக்கிறது.

இந்து வெளியிட்டிருக்கிற முறையிலிருந்து, (1) சர்க்கார் இந்தியை ஆட்சி மொழியாக்குவதை விட்டுவிட வேண்டும் (2) இந்தியைப் பரப்ப சர்க்கார் முனையக் கூடாது என்பவைகளை நான் வலியுறுத்தி இருப்பது நன்கு விளங்கும்.

நமக்குத் தேவை 1. இந்தியை ஆட்சிமொழி ஆக்கும் முயற்சியை சர்க்கார் கைவிட்டுவிட வேண்டும் என்பது 2. இந்தியைப் பரப்ப சர்க்கார் தனி அக்கறை காட்டும் போக்கும் நிறுத்தப்பட வேண்டும் என்பது. இந்த இரண்டும் சர்க்காரால் கைவிடப் பட வேண்டும்; ஐயா! இதனைச் செய்ய உம்மால் முடிந்து, செய்துவிட்டு வந்தால், பிறகு இந்தி பரப்புவதற்கு உதவி கேளும், செய்கிறேன் என்று நான் கூறியிருக்கிறேன்.

சாஸ்திரி சர்க்காரிடம் பேசி, இந்தி ஆட்சிமொழி ஆக்கும் திட்டத்தைக் கைவிட்டு விடச் செய்ய வேண்டும். முதலில்! செய்கிறாரா பார்ப்போமே!! அந்த முறையில், (I will take up the challenge) நான் அந்த அறைகூவலை ஏற்றுக் கொள்கிறேன் என்ற முன்னுரையுடன் நான் பேசினேன். இதை விடத் தெளிவாகப் பேசியிருக்க முடியாது என்றும் நம்புகிறேன். இதனை வைத்துக்கொண்டு முதலமைச்சராகட்டும், மற்றவர்களாகட்டும், வேடிக்கை பேச என்ன காரணம் இருக்கிறது என்று எனக்குப் புரிய வில்லை. போகட்டும். எத்தனையோ விதமான கலக்கத்தில் சிக்கிக் கிடப்பவர்களுக்கு, என் பேச்சு, சிலவிநாடி வேடிக்கைக்குப் பயன்படுவது பற்றி, மனக்குறை கொள்வானேன்? நடந்தது முழுவதையும் அறிந்து கொள்ளும் வாய்ப்புப் பெறுபவர்கள், உண்மையை அறிந்து கொள்வார்கள்.

இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்திடத் தொடங்கிய நாள்தொட்டு, நாம் தெளிவாக, ஒன்று கூறி வருகிறோம்; எங்களுக்கு எந்த மொழி மீதும் வெறுப்பு இல்லை; இந்தியை நாங்கள் அந்த விதத்தில் எதிர்க்க வில்லை; அது இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக்கப்படுவதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம் என்பதனைத் திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கிறோம்.

நமது கழகத்தின் தீர்மானம் தேசீய மொழிகளெல்லாம் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்பதாகும். அந்தப் பதினான்கு மொழிகளில் இந்தியும் ஒன்று.

இந்தியை அந்தப் பதினான்கு மொழிகளில் ஒன்று என்று கொள்ளமாட்டோம், கொள்ளக்கூடாது என்று நாம்

சொன்னதுமில்லை; சொல்லப் போவதுமில்லை; சொல்லுவதில் நியாயமுமில்லை.

நாம் சொல்லி வருவதெல்லாம், இந்தி, இந்தியாவின் ஒரு பகுதியினரின் தாய்மொழி, அதனை இந்தியாவின் ஆட்சிமொழி என்று ஆக்குவது அடாது, ஆகாது, பெரும் தீது; அது இந்தி பேசாத மக்களை அநீதிக்கு ஆட்படுத்தும், இரண்டாந்தரக் குடிமக்களாக்கும். ஆகவே, அதனை ஒப்பமாட்டோம், எதிர்க்கிறோம் என்பதாகும்.

இந்த அடிப்படை மாறாது என்பது மட்டுமல்ல, நாம் மட்டுமே கூறிக்கொண்டு வருகிற இந்த அடிப்படையை இன்று வேறு பலரும் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

நான், மாநிலங்கள் அவையில் பேசியானதும், பிற்பகல், இந்தியின் தீவிரக் கட்சியான ஜனசங்கத்தைச் சார்ந்த வாஜ்பாய் பேசினார். அவர் என்னையும் நான் சொன்ன கருத்துக்களையும் பலமாகத் தாக்குவார் என்ற நப்பாசை பலருக்கு இருந்தது.

அவரோ, அண்ணாதுரை சொல்லுகிற பதினான்கு தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற திட்டத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று பேசினார்.

வாஜ்பாய், மாறுபட்டது எதிலே என்றால், 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாகக் காலம் பிடிக்கும்; அதுவரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கட்டும் என்பதிலேதான் அவருடைய கருத்து இப்போதே 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாகி விடட்டும், ஆங்கிலம் அகற்றப் படட்டும் என்பது.

இதிலே நமக்கு என்ன ஆட்சேபம்! நாளைக்கே நமது தமிழ் மொழி, இந்தியாவின் ஆட்சி மொழியாகி அரியணை ஏறினால், ஆங்கிலம் நமக்கு ஆட்சிமொழியாக இருக்க வேண்டிய தேவை என்ன இருக்கிறது!

இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்கப்படவேண்டும் என்ற சர்க்கார் கொள்கை விடப்பட்டு, இந்திக்காகச் சர்க்கார் பணம்

செலவிட்டுப் பரப்பும் முயற்சியை நிறுத்திக் கொண்டு, பதினான்கு மொழிகளும் இந்தியாவின் ஆட்சிமொழிகள் என்று சட்டமாக்கப் பட்டு, அதன்படி நமது தமிழ்மொழி ஆட்சிமொழி என்ற நிலைபெற்று, பிறகு இந்தியைப் பரப்ப, மக்கள் அமைப்பு முயற்சி எடுத்துக் கொள்ளும்போது என் உதவி கிடைக்குமா என்று என்னை ஒருவர் கேட்கும்போது, கிடைக்கும் என்று கூறுவதிலே என்ன தவறு காண்கிறாரோ முதலமைச்சர், எனக்குப் புரியவில்லை.

அந்த நாள் வருகிறபோது, இந்தியை இங்குப் பரப்பும் முயற்சி மட்டுமல்ல, தமிழ்மொழியைப் பிற இடங்களில் பரப்பும் முயற்சியும் நடந்துவரும்.

இப்போதே, தென்னக மொழிகளில் ஒன்றை, இந்தி மாநிலத்தவர் படித்துக் கொள்ள வேண்டும் என்ற பேச்சு எழவில்லையா! நானேகூடச் சொன்னேனே, மாநிலங்கள் அவையில் பேசும்போது, தமிழ் கற்று, அம்மொழியில் உள்ள இலக்கியச் சுவையைப் பருகினால், வாஜ்பாயே கூட, தமிழ்தான் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளுவார் என்று. உடனே அவர் என்ன துள்ளிக் குதித்தெழுந்து, "முடியாது! முடியாது!! அப்போதும் தமிழ் மொழியைத் தொடர்பு மொழியாக ஏற்றுக் கொள்ள முடியாது" என்றா பேசினார்? இல்லை! ஏன்? வாதங்களின் பொருத்தத்தையும் நிலைமை விளக்கத்துக்கான பேச்சின் பொருளையும் உணருபவர்கள், முதலமைச்சர் காட்டும் போக்கினைக் காட்டமாட்டார்கள். ஆனால், முதலமைச்சர் இப்போது உள்ள நிலைமையில் நான் அவரிடம் அதிக அளவு நிதானத்தன்மையை எதிர்ப்பார்ப்பதற்கில்லை.

நிருபர்கள் மாநாட்டிலேகூட ஒரு நிருபர், பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழிகளாக்கப்பட்டு, பிறகு காலப் போக்கில் மக்களின் முயற்சியால், சர்க்காரின் பலமின்றி, ஒரு மொழி தொடர்பு மொழியாகட்டும் என்று கூறுகிறீர்களே, அந்தக் காலம் வரும்போது, மக்கள் வளமுள்ள மொழியாகப் பார்த்துத்தானே தொடர்பு மொழியாகக் கொள்வார்கள் என்று கேட்டபோது நான், "ஆமாம்! வளமுள்ள மொழியைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அதனால்தான் சொல்கிறேன், தமிழ் மொழியைத் தொடர்பு மொழியாகக்

கொள்ளுங்கள் என்று. அது தொன்மையான மொழி-வளமான மொழி" என்று கூறினேன். வேறோர் நிருபர் குறுக்கிட்டு, "சமஸ்கிருதத்தைக் கொண்டால் என்ன?" என்று கேட்டார்; "அது பேச்சு வழக்கு அற்றமொழி" என்று பதிலளித்தேன்.

ஒரு நிருபர் கேட்டார், "இந்தி ஆதரவாளர்களாக உள்ள சில தலைவர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பிக்கும் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்களா? உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

லால்பகதூர் அவர்களின் பேரப்பிள்ளை, டில்லியில் அவ்விதமான பள்ளிக்கூடத்தில் படிப்பதாகக் கேள்விப்பட்டேன் என்று கூறினேன்.

உண்மையில், இங்கு நான் இதுபோலக் கேள்விப்பட்டேன்.

நான் கூறினதை எந்த நிருபரும் அன்றும் மறுக்கவில்லை; இன்றும் மறுக்கவில்லை.

தெரியுமா! தெரியுமா! உங்கள் அண்ணாதுரை என்ன சொன்னான் தெரியுமா! என்று சிலம்புபோடும் சீலர்கள், இந்தி ஆதரவாளர் லால்பகதூர் தமது பேரப்பிள்ளையை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி இருக்கிறார் என்பதனைக் கூறவா செய்வார்கள், எப்படி எதிர்பார்க்க முடியும்? சிலர் பசுவிடமிருந்து பால் பெறுகிறார்கள்; சிலர் 'கோமயம்' மட்டும் சிரமப்பட்டுச் செம்புப் பாத்திரத்தில் பிடித்து வைத்துக்கொள்கிறார்கள், அது அவரவர்களின் விருப்பம், தேவையைப் பொருத்தது.

"மொழி விஷயமாக உமது கொள்கை என்ன?" என்ற பொதுப் பிரச்சினையை ஒருவர் எழுப்பினார்.

தேசீய மொழிகளெல்லாம் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப் படவேண்டும். அந்தக் கட்டம் வரையில்

ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்த வரவேண்டும். இதற்கு நாமாக ஒரு காலக்கெடு வைத்துக்கொள்ளக் கூடாது.

பிறகு, ஒரு தொடர்பு மொழி வேண்டுமே, அது எது?

அது எது என்பது மக்களாகப் பார்த்து, காலப்போக்கில், இயற்கையான சூழ்நிலையில், தீர்மானித்துக் கொள்ள வேண்டும். சர்க்கார் இன்ன மொழிதான் தொடர்பு மொழி என்று ஆணையிடக் கூடாது; ஆதரவு தரக்கூடாது; மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பதினான்கு மொழிகளில், எது தொடர்பு மொழியாகும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? என்று கேட்டார் நிருபர்.

பதினான்கு மொழிகளில் ஏதாவது ஒன்று. தமிழுக்கு என்ன! வளமான மொழி! தொன்மையான மொழி! இலக்கியச் செறிவுள்ளது! தொடர்பு மொழியாகத் தமிழ் இருக்கலாமே என்று நான் கூறினேன்.

"தொடர்பு மொழியாக சமஸ்கிருதம் இருக்கலாமல்லவா?" என்று கேட்டார் மற்றொருவர். 'சமஸ்கிருதமா, அது பேச்சு வழக்கு அற்ற மொழியாயிற்றே!' என்றேன். மேலால் அவர் அந்தப் பிரச்சினையைத் தொடரவில்லை.

இந்தி ஆட்சிமொழி என்ற திட்டத்தைச் சர்க்கார் விட்டு விட்டால், பிறகு இந்தி பரப்பப்படுவது பற்றி உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே? என்று ஒருவர் கேட்டார்.

இல்லை! ஆனால், அந்தப் பரப்பும் காரியத்தைச் சரக்கார் செய்யக் கூடாது. மக்களின் அமைப்பு (அதிகார பூர்வமல்லாதது) செய்ய வேண்டும் என்று கூறினேன்.

அப்போதுதான் அந்த நிருபர், கேட்டார், "நீங்கள் உதவி செய்வீர்களா?" என்று. நான் உடனே கூறினேன்.

"நான் அந்த அறைகூவலை ஏற்றுக்கொள்கிறேன். இந்தி ஆட்சி மொழி அல்ல என்று சர்க்கார் அறிவிக்கட்டும்; இந்தியைப்

பரப்பும் காரியத்தில் சர்க்கார் ஈடுபடாமல் இருக்கட்டும்" என்று கூறினேன்.

❀ ❀ ❀

இந்தியைப் பரப்பும் வேலையில் சர்க்கார் ஈடுபடக்கூடாது என்றேனே, அது?

பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்றேனே, அது?

தொடர்பு மொழி என்று எதனையும் சர்க்கார் அறிவிக்கக்கூடாது என்றேனே, அது?

தொடர்பு மொழியாக, தொன்மையும் வளமையும் மிக்க தமிழ் ஏன் கொள்ளப்படக்கூடாது என்று கேட்டேனே, அது?

அவை ஒன்றுகூட முதலமைச்சருக்கு, முக்கியமானவையாகப் படவில்லை!! ஏன் என்று கேட்க நான் யார்!! அவரோ முதலமைச்சர்!! நானோ கருணாநிதிக்கு அண்ணன்? நான் போய்க் கேட்கலாமா அவ்வளவு பெரியவரை, இந்தச் சங்கடமான கேள்வியை!!

ஒரு நிருபர் கேட்டார், "ஆங்கிலத்தை வெள்ளைக்காரன் புகுத்திய போது ஏற்றுக்கொண்டீர்களே, இந்தியை, அதுபோல ஏற்றுக்கொண்டால் என்ன?" என்று.

உம்முடைய கேள்வியின் தோரணையே அச்சமூட்டுகிறதே ஐயா! வெள்ளைக்காரன் எப்படி ஆங்கிலத்தைக் கற்கச் சொன்னானோ அதுபோல இந்தியை ஏற்கச் சொல்கிறோம் என்றால் என்ன பொருள்? வெள்ளைக்காரன் போல இந்திக்காரர் ஆட்சி செய்யத் திட்டமிடுகிறார்கள் என்பதல்லவா? இதைத்தான் இந்தி ஏகாதிபத்தியம் என்பது. மற்றொன்று, ஆங்கிலத்தை வெள்ளைக்காரன் திணிக்கவில்லை. நான் அறிந்த அளவில் ராஜாராம் மோகன்ராய் போன்ற சான்றோர்கள் ஆங்கிலக் கல்வி வேண்டும் என்று முறையிட்டு, பிறகே ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது என்றேன்.

“பன்மொழிகள் ஆட்சி மொழிகளாகவது நடைமுறைக்கு ஒத்து வராது என்கிறேன்” என்றார் ஒருவர்.

கடினம் - சங்கடம் என்றெல்லாம் சொல்லுங்கள்; நடைமுறைக்கு ஒத்துவராது என்று கூறிவிட முடியாது. பல மொழிகள் உள்ள இடத்தில், வேறு மார்க்கம் இல்லையே! என்று கூறினேன்.

மறுபடியும் ஒருவர் அடிப்படைக் கேள்வியைத் துவக்கினார். “என்ன காரணத்துக்காக இந்தியை வேண்டாமென்கிறீர்கள்” என்றார்.

பலமுறை பல காரணங்களைக் கூறியாகிவிட்டது. ஒன்று மட்டும் மறுபடியும் வற்புறுத்துகிறேன். இந்தி சிலருக்கு, தாய்மொழி - தன்னாலே வருவது - பரம்பரைச் சொத்து - அந்த மொழியை நாங்கள் கற்றுத்தேறி இந்திக்காரருடன் போட்டியில் வென்று இடம்பிடிப்பது. நிரந்தரமான இடையூறு - இது அநீதி என்றேன்.

“இயற்கையான சக்திகளால் மொழிகள் வளரவேண்டும், பிறகு அவைகளிலிருந்து தொடர்புமொழி கிடைக்க வேண்டும் என்கின்றீர்? இயற்கையான சக்தியை என்ன செய்து பெறுவது?” என்று கேட்டார்.

சக்தி இன்னவிதம் பெறக்கூடியது என்று திட்டமிட்டுக் கூற முடியாது. பொதுவான சில யோசனைகள் கூறுகிறேன். சகிப்புத் தன்மை வேண்டும். மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் இயல்பு வளர வேண்டும், ஆதிக்க நோக்கம் அகலவேண்டும், வெறித்தனம் என்கிறார்களே அது ஒழிய வேண்டும். ஒரு உதாரணம் தருகிறேன். நான் நண்பர்களுடன் மோட்டாரில் வட இந்தியப் பகுதிகள் சென்றிருக்கிறேன் - மத்தியப் பிரதேசம் போன்ற இடங்கள். அங்கு வடஇந்தியர்கள், ஆங்கிலம் தெரிந்தவர்கள், எங்களுக்கு இந்தி தெரியாது என்று தெரிந்த பிறகும், வேண்டுமென்றே பிடிவாதமாக, நாங்கள் கேட்பவைகளுக்கு, இந்தியில் தான் பதில் அளித்தார்கள். இது என்ன மனோபாவம் என்றேன். அவர் புரிந்துகொண்டார் என்று எண்ணுகிறேன்.

“மும்மொழித் திட்டப்படி இந்தி கட்டாய பாடமாக்கப் பட்டால், உமது போக்கு எப்படி இருக்கும்?” என்று ஒரு நிருபர் கேட்டார்.

நான் என் எதிர்ப்பைத் தெரிவிப்பேன். இப்போதே அங்கு இந்தி கற்றுத் தரப்படுகிறது. இந்தி தவிர வேறு எந்த இந்திய மொழி கற்பதற்கும் வகை செய்யப்படாததால் மறைமுகமாக இந்தி கட்டாயப் படுத்தப்பட்டு வருகிறது வடக்கே உள்ளவர்களோ, தென்னக மொழியைக் கற்க முன்வரவில்லை. மூன்றாவது மொழியாக சமஸ்கிருதம் படிக்கிறார்கள். இந்தியைக் கட்டாய பாடமாக்கினால் எங்கள் மக்கள் வேதனைப் படுவார்கள்; எதிர்ப்பார்கள், என்று தெரிவித்தேன்.

“தொடர்பு மொழி இயற்கையான சூழ்நிலையில் வரவேண்டும் என்கிறீரே, மக்கள் ஒரு சிறுபான்மை மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு விடக் கூடுமல்லவா?” என்று ஒருவர் கேட்டார்.

அப்படியும் நடக்கலாம் மற்றும் ஒன்று. வளமானதாக இருக்கிறதா என்று பார்த்து அத்தகைய மொழியை மக்கள் தொடர்பு மொழியாகக் கொள்ளக் கூடும் அதற்காகத்தான் நான் தமிழுக்காக வாதாடுகிறேன். தமிழ் அத்தனை வளமான மொழி! - என்று கூறினேன்.

ஒருவர், ‘வங்காள மொழியும்தான்’ என்றார், சரி! தமிழ் போன்றே வங்காள மொழியும்; இருக்கட்டும் என்றேன். அவருடைய வங்காள மொழி ஆர்வம், பாராட்டத்தக்கது என உணர்ந்தேன்.

இந்தி ஒழிக! என்று முழக்கமிடுகிறீர்களே, இந்தி ஆதிக்கம் ஒழிக என்பதுதானே முழக்கமாக இருக்கவேண்டும்? என்று ஒருவர் கேட்டார்.

இலட்சிய முழக்கங்கள் எடுப்பாக, சுருக்கமாக அமையவேண்டும். சர்க்காரின் இந்தி ஆட்சி மொழி ஆக்கும் திணிப்பு ஒழிக! - என்று நீட்டி முழக்கிக் கொண்டிருக்க முடியாது. அதன் காரணமாகத்தான் இந்தி ஒழிக என்று சுருக்கமான முழக்கம் இருக்கிறது. மகாத்மா காந்தி வெள்ளையனே வெளியேறு! என்ற இலட்சிய முழக்கம் தந்தார். அவர் விரும்பியது வெள்ளைக்காரர்கள் வெளியேற வேண்டும் என்பது அல்ல; வெள்ளையர் நடத்தும் ஆட்சி ஒழியவேண்டும் என்பது. வெள்ளையர் இந்தியாவை ஆட்சி செய்வது வெளியேற வேண்டும் என்று விரித்துக் கூறவில்லை. சுருக்கமாக வெள்ளையனே வெளியேறு! என்றார். செய் அல்லது செத்துமடி என்பது அவர் தந்த மற்றொரு சுலோகம். என்ன செய்ய வேண்டும், எப்போது, எப்படி, ஏன் சாகவேண்டும் என்றெல்லாம் விளக்கமாக்கி, விரிவாகக் கூறவில்லை. சுருக்கமாக, செய் அல்லது செத்துமடி என்றார். இலட்சிய முழக்கங்கள் அவ்விதந்தான் சுருக்கமாக அமையும் என்று கூறினேன்.

“இந்தி எதிர்ப்பு உணர்ச்சி காரணமாகக் கழகத்துக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே உள்ள வேற்றுமை ஓரளவு குறைந்துவிட்டது உண்மையா?” என்று ஒருவர் கேட்டார்.

உண்மைதான். பல காங்கிரஸ்காரர்கள் நாங்கள் கூறும் கருத்துக்களைப் பேசுகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை சட்ட சபையில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அரசியல் கட்சிகள் அமைத்துக் கொண்டுள்ள அரண்களை உடைத்துக் கொண்டு இந்தி எதிர்ப்புணர்ச்சி பீறிட்டுக் கிளம்பிவிட்டது என்று கூறினேன்.

வேறொரு நிருபர், “பல ஆட்சிமொழித் திட்டமும் கூறுகிறீர், தொடர்புமொழித் திட்டம் பற்றியும் கூறுகிறீர்; இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண் அல்லவா?” என்று கேட்டார்.

எப்படி முரண்? முரண் அல்லவே! பல மொழிகள் இருப்பதனால் தான் ஒரு தொடர்பு மொழிப் பிரச்சினை எழுகிறது.

இரண்டு திட்டமும் ஒன்றுக்கொன்று முரண் அல்ல; துணை என்று கூறினேன்.

இந்தவிதமாக ஒரு மணி நேரம் நடந்தது அந்த மாநாடு. பயனுள்ளதாகவே எனக்குத் தோன்றுகிறது.

❀ ❀ ❀

இன்று நம்மை எல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிக்கலான பிரச்சினைபற்றிப் புதிய தெளிவு பெற்றுக்கொள்ள, கனடா, பயணம் பயன்பட வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்; மொழிப் பிரச்சினை பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

ஒருமைப்பாடு, ஒன்றுபட்ட உணர்வு, நாட்டுப் பற்று, விரிந்த மனப்பான்மை; அடிப்படையில் கவனம் செலுத்துவது என்ற சொற்றொடர்கள், சுவைமிக்கன; பொருள் மிக்கன; மிகப் பெரியவர் களால் வழங்கப்படுவன! அவைகளை நான் மறுக்கவில்லை; குறைத்தும் மதிப்பிட்டு விடவில்லை. இன்னிசைஎழுப்பிடும் இந்தச் சொற்றொடர்களை, நடைமுறையில் கொண்டு வரும் முயற்சியை மேற்கொள்ளும் போது, இடர்ப்பாடுகள் என்னென்ன விளைகின்றன. பிரச்சினைகள் புதிதுபுதிதாக எவையெவை எழுகின்றன என்பதனைப் பார்க்கும் போது, சுவைமிக்க சொற்றொடர்கள் மட்டும் போதாது, பிரச்சினைகளைத் தீர்த்துவைத்திட இதயத்தின் அடித்தளத்தில் ஊடாடிக் கொண்டிருக்கும் எண்ணங்களைக் கண்டறிந்து, மதிப்பளித்தாக வேண்டும் என்பது புரியும். கனடாவில் இப்போது இந்தக் கட்டம் காணலாம், விரும்பினால், அக்கறை எடுத்துக்கொண்டால். லால்பகதூர் அக்கறை காட்டினாலும் காட்டாவிட்டாலும், அவர் செல்ல இருக்கும் இடம் அவர் மனத்தில் அந்த எண்ணத்தை நிச்சயமாகக் கிளறிவிடும். மான்ட்ரியல் நகருக்கும் அவர் செல்ல இருக்கிறார் என்று அறிகிறேன். கனடாவின் தலைநகர் ஆட்டவா; மான்ட்ரியல் ஒரு புதிய எழுச்சிக்கு இருப்பிடமான தலைநகராகி இருக்கிறது.

தம்பி! க்யூபெக், கனடாவில் ஒரு மாநிலம்; மத்திய அரசுக்கு உட்பட்ட ஒரு மாநில அரசு; மொத்தம் பத்து மாநில அரசுகளை

இணைத்துக் கொண்டுள்ள அமைப்பு கனடா நாட்டின் மத்திய சர்க்கார்-பேரரசு.....

பேரரசிலே இணைந்துள்ள பத்து மாநிலங்களிலே ஒன்றான க்யூபெக் மாநிலத்திலிருந்து கிளம்பியுள்ள பிரச்சினை - மொழி அடிப்படையிலே துவக்கப்பட்ட பிரச்சினை - இன்று கனடா நாட்டின் எதிர் காலத்தையே ஒரு பெரி கேள்விக் குறியாக்கி விட்டிருக்கிறது என்பதனைக் குறிப்பிடத்தான் இந்தத் தகவலைத் தந்தேன்.

❀ ❀ ❀

இந்தியப் பேரரசும் எந்தப் பிரச்சினையையும் - மொழிப் பிரச்சினை முதற்கொண்டு வாழ்க்கை வழிப் பிரச்சினை வரை எதனையும் இயற்கையானது என்றோ, நியாயமானது என்றோ ஒப்புக் கொள்வதில்லை.

வீணான பயம்; காரணமற்ற கலக்கம்; குழப்பம்; சந்தேகம் என்று பல பேசி, பிரச்சினைகளுக்காக வாதாடுபவர்களை விவரமறியாச் சிறுவர்களாகச் சித்தரித்துக் காட்டுகின்றனர்

கனடாவில், துவக்கத்திலே க்யூபெக் மாநிலத்திலிருந்து எழுந்த பிரச்சினையே, அலட்சியப்படுத்திப் பார்த்னர் என்றாலும், பிறகு அது இயற்கை வலிவுடன் உள்ளது என்பதனையும், வளர்ந்து வருகிறது என்பதனையும் உணர்ந்து பிரச்சினையைத் தீர்த்துவைக்கத் தீவிரமான முயற்சியினை மேற்கொண்டுள்ளனர்.

லால்பகதூர், கனடா செல்லும் இந்த நேரம், கனடியப் பேரரசு, பிரச்சினையை அலட்சியப்படுத்திய நேரம் அல்ல, பிரச்சினையை முழு அளவில் கண்டறிந்து, சிக்கலைப் போக்கிட வழி தேட முனைந்துள்ள நேரம் இது.

இங்கு பேசப்படுவது போலத்தான், ஒருமைப்பாடு, ஓரரசு என்பன பற்றிய பேச்சு கனடாவில் பேசப்பட்டது. இங்காவது 17 ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. அங்கு நெடுங்காலமாக.

❀ ❀ ❀

கனடாவில் உள்ள மக்களில், இருபெரும் பிரிவினர் உள்ளனர். ஆங்கிலர்கள், பிரெஞ்சுக்காரர்கள்.

கனடாவில் உள்ள ஆங்கிலர்கள், மொழி ஒன்றினால் மட்டுந்தான் ஆங்கிலர், மற்றப்படி அவர்களுக்கும் இங்கிலாந்துக்கும் வேறு தொடர்புகள் குறிப்பிடத்தக்க விதமாக இல்லை. அதுபோன்றே பிரஞ்சுக் கனடியர் நிலையும்.

இந்த இரு பெரும் மொழிப் பிரிவினரும், மொழியால் வேறு பட்டவர்கள் என்ற உணர்ச்சியை ஒதுக்கி வைத்துவிட்டு, கனடா சுயாட்சி பெறக் கிளர்ச்சி நடாத்தினர்.

ஆனால், சுயாட்சி நடத்திடும் கனடாவில், தங்கள் உரிமை தழைக்க வில்லை, வாழ்வு செழிக்கவில்லை என்றதும், மொழி உணர்ச்சி மீண்டும் ஏற்பட்டுவிட்டது. எப்படி முடிந்தது என்கிறாயா, தம்பி! பொது ஆபத்தை எதிர்த்து நிற்கும்போது ஒதுக்கி வைக்கப்படும் உணர்ச்சிகள், ஒதுக்கித் தான் வைக்கப்படுகின்றன. அவை மடிந்து போய் விடுவதில்லை. ஆகவேதான் அந்த உணர்ச்சிகள், தமது நலன் கெடுக்கப்படுகிறது, உரிமை பறிக்கப்படுகிறது என்ற நிலை கிளம்பும்போது மீண்டும் வெளிவந்து விடுகின்றன! அந்த உணர்ச்சி ஒடிந்த வாளாகி விடவில்லை; உறைக்குள் வாளாக இருந்திருக்கிறது என்று தோன்றுகிறது.

கனடாவில், பிரெஞ்சு மொழி பேசுவோரைவிட ஆங்கில மொழி பேசுவோரின் தொகை அதிகம்.

அதுமட்டுமின்றி, பிரஞ்சுமொழி பேசுபவர்கள், களத்தில் ஆங்கில அரசால் தோற்கடிக்கப்பட்டவர்கள். அவ்விதம் இருந்தும் ஆங்கிலந்தான் ஆட்சிமொழி, பிரஞ்சு பிராந்திய மொழியாக இருக்கட்டும், மத்திய அரசுக்கும், பேரரசுக்கு ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்கும் என்று சட்டம் இல்லை. மாறாக கனடாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 133-ம் விதியின்படி, பாராளுமன்றம், அரசாங்கப் பணிமனைகள், நீதிமன்றங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் எல்லா அலுவல்களுக்கும், ஆங்கிலம் பிரஞ்சு ஆகிய இருமொழிகளும் ஆட்சி மொழிகளாகப் பயன்படுத்தப்பட

வேண்டும்; சர்க்கார் வெளியிடும் எல்லாவிதமான அறிக்கைகள், உத்தரவுகள் கொண்ட ஏடுகளும், இரு மொழிகளிலும் வெளியிடப் படவேண்டும், இரு மொழிகளில் எதை வேண்டுமானாலும் எவரும் அவருடைய விருப்பப்படி உபயோகித்துக் கொள்ளலாம் என்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

களத்திலே தோற்றுப்போனவர்கள் என்பதைக் காரணம் காட்டி, ஒரு மொழித் திட்டத்தை அமுல் செய்திடலாம் என்ற ஆதிக்க நினைப்பு எழவில்லை. நாம்தான் களத்திலே தோற்றுவிட்டோமே, நம்முடைய பிரஞ்சு மொழிக்கு அரியணை எப்படி நாம் துணிந்து கேட்க முடியும் என்ற தயக்கம் பிரஞ்சுக் கனடியருக்கும் ஏற்படவில்லை.

மாறாக இருமொழிகளும் ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டன; அதற்கான சட்டம் 1867-ஆம் ஆண்டு மார்ச் 29-ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது.

கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகள் இருமொழிகள் ஆட்சிமொழிகளாக அமுலில் இருந்து வருகின்றன.

இருந்தும், மீண்டும் மாச்சரியமா? மறுபடியும் மொழித்தகராறா? என்று கேட்கத் தோன்றும்.

இப்போது, மொழி ஆதிக்கம் பற்றிய பிரச்சினை எழவில்லை; இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே, மிக்க அரசியல் நுண்ணறிவுடன் இருமொழிகளையும் ஆட்சிமொழிகள் என்று சட்டம் செய்துவிட்டதால், இந்த இருநூறு ஆண்டுகளாக, மொழி ஆதிக்கம் என்பதனால், தகராறு, மாச்சரியம், கிளர்ச்சி எழவில்லை.

இப்போது கிளம்பி இருப்பது, மொழி ஆதிக்கம் செய்கிறது, ஆட்சிமொழி என்ற நிலையில் என்பது அல்ல. ஆங்கிலம் மட்டுமல்ல ஆட்சிமொழி; பிரஞ்சு மொழியும் ஆட்சிமொழி; ஆகவே மொழி ஆதிக்கம் என்ற பேச்சுக்குப் பொருள் இல்லை. ஆனால் இப்போது எழுந்துள்ள பிரச்சினை, ஆங்கிலமொழியினரின் ஆதிக்கம் என்பதாகும். அதை விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆவல்

இருக்கும், நிச்சயமாக; ஆனால், முதலில், மொழி காரணமாக, மாச்சரியம் எழாதபடி இந்த 200ஆண்டுகளாக நடந்துகொள்ள முடிந்ததே, இருமொழிகளையும் ஆட்சி மொழிகள் என்று சட்டம் இயற்றியதன் மூலம், அந்த அரசியல் நுண்ணறிவுபற்றி, தம்பி! எண்ணிப்பார்! நீயும் நானும் எண்ணிப்பார்த்து மட்டும் என்ன பயன்? அங்கே போகிற லால்பகதூர் அல்லவா எண்ணிப் பார்க்க வேண்டும்.

இருநூறு ஆண்டுகள் எத்தனையோ இனிமையுடன், கனடியர் என்ற தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை ஊட்டி வளர்த்த பிறகும், இன்று கனடாவில் கிளம்பியுள்ள பிரஞ்சு உணர்ச்சி பற்றி லால்பகதூர் கூர்ந்து கவனித்துத் தமது கட்சியினர் கொண்டுள்ள நோக்கத்தையும் போக்கையும் மாற்றிக்கொண்டாக வேண்டும் என்ற தெளிவான கருத்தினைப் பெற வேண்டும். சென்றேன்! கண்டேன்! மெய்மறந்து நின்றேன்!! என்பதிலே என்ன பலன்? சென்றேன், கண்டேன், புதுக் கருத்துக் கிடைக்கப் பெற்றேன் என்றால் பயன் மெத்தவும் உண்டு.

ஆதிக்க மனப்பான்மையும் அதன் விளைவாக ஏற்பட்டுவிடும் அடிமைத்தனமும், அது வேதனையாக வளர்ந்த பிறகு எழுகிற குமுறல், கிளர்ச்சி, புரட்சி ஆகியவையும் எவ்வளவு நெடுந்தொலைவிலே நடந்தாலும், நாம் அக்கறை காட்டியாக வேண்டும். ஏனெனில், அவைகளின் வகை மாறுபட்டிருக்கலாமே யொழிய, அடிப்படை எங்கும் ஒரேவிதமானதாகத்தான் இருக்கும், சில இடத்திலே இனம், சில இடத்திலே மதம், இன்னும் சில இடத்திலே மொழி, பற்பல இடத்திலே பணம் என்பவை ஆதிகத்துக்கான கருவிகளாக உள்ளன. கருவியின் வகை வேண்டுமானால் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வோர் விதத்தில் இருக்குமேயொழிய, ஆதிக்கமுறை, நோக்கம், போக்கு, விளைவு இவை எங்கும் கொடுமை தருவனவாகவே அமையும், எவ்வளவு நெடுந்தொலைவிலே நடைபெறும் ஆதிக்கமாக இருப்பினும், அதனை ஆராய்ந்து பார்ப்பதிலே நிச்சயம் பயன் கிடைக்கும். அதனால்தான் கனடா நாட்டு நிகழ்ச்சி பற்றிச் சிறிதளவு விரிவாகவே விளக்க விரும்பினேன்.

பசி! பசி! பசி! என்று எப்போதும் இதே பல்லவிதானா என்று பணம் படைத்தவர் கேட்கிறார் அல்லவா, தன்னிடம் பாடுபட்டும்

பராரியாகக் கிடப்பவனைப் பார்த்து, அதுபோல, ஆதிக்கத்தினால் தாக்குண்டு தத்தளிக்கும் நிலைமையில் இல்லாதவர்களும், மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாக உள்ளவர்களும், வேதனைப் படுகிறவர்களிடம் ஒரு புன்னகையை உதிர்த்தபடி பேசுகிறார்கள்; இது என்ன குறுகிய மனப்பான்மை! என் மொழி! உன்மொழி! என்ற சிறுப்பிள்ளைத்தனமான பேச்சு! மொழி ஆதிக்கம், மொழி ஏகாதி பத்தியம் என்ற பேச்சு! இதிலே இனம், மதம், மொழி என்ற அற்பக் காரணங்களுக்காகப் பிளவுபட்டு நிற்பதா, பேதம் மூட்டிக்கொள்வதா!! என்று கேட்கிறார்கள். நான் அப்படியொன்றும் மேலே விழுந்து கடித்துக் குதறிச்சதையைப் பிய்த்துத் தின்றிடவில்லையே, இலேசாகப் பல்லால் தீண்டினேன், பாவிப்பயல் இதற்கே சுருண்டு கீழே விழுந்து செத்துத் தொலைந்தானே! என்று நல்லபாம்பு கூறுவதில்லை. ஆனால், சில நல்லவர்கள் கூறுகிறார்கள், என்ன கெடுதல் செய்துவிட்டோம் உங்களுக்கு எல்லோருக்கும் பொதுவாக ஒரு மொழி இருக்கட்டும் என்கிறோம். வேறு என்ன சொல்லுகிறோம்; அந்த மொழி ஏற்கனவே பலர்பேசும் மொழியாக இருப்பதால் அதனைப் பொதுமொழி என்று ஏற்கச் சொல்கிறோம். இதுவா கொடுமை! இதுவா அநீதி! இதற்கா இத்தனை எதிர்ப்பு, எரிச்சல், கிளர்ச்சி!! - என்றெல்லாம்.

கனடாவின் அரசியல் சட்டத்திட்டதை வகுத்தவர்கள் இதுபோல வாதாடவில்லை. கனடாவில் உள்ளவர்களில் பெரும்பான்மையினர் ஆங்கில மொழி பேசுபவர்கள். ஆகவே, கனடா நாடு முழுவதற்குமாக ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று விதி வகுத்திட வில்லை; மாறாக மிக நேர்த்தியான அரசியல் நுண்ணறிவுடன், சிறுபான்மையோரின் மொழி என்றாலும், அவர்கள் அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பதால், அவர்கள்மீது வேறு மொழியை ஆட்சி மொழியாகத் திணிக்கக்கூடாது என்று உணர்ந்து ஆங்கிலம் பிரஞ்சு எனும் இரு மொழிகளையும் ஆட்சிமொழிகள் என்ற திட்டம் மேற்கொண்டனர்.

இரு மொழிகளை ஆட்சி மொழிகளாகக் கொண்டதனால், எதிர்பாராத சிக்கல் பல ஏற்பட்டு, நிர்வாகம் சீர்குலைந்துபோய், புதிய ஆபத்து ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. இரு ஆட்சிமொழிகள் திட்டம் நடைமுறைச் சிக்கலின்றி அமுலில் இருந்து வருகிறது

என்றாலும் இப்போது க்யூபெக் அரசு போர்க்கொடி உயர்த்தியிருக்கிறது. அதற்குக்காரணம் இரு ஆட்சி மொழிகள் கொண்டிருப்பதால் ஏற்பட்ட குழப்பம் அல்ல. ஆங்கில மொழியினர், பிரஞ்சு மொழியினரின் மொழியைத் தாழ்நிலைக்குத் தள்ளிவிட வில்லை; சட்டம் இடம் கொடுக்கவில்லை; ஆனால், மற்றத் துறைகளில், பிரஞ்சு மொழியினரான க்யூபெக் மக்களைத் தாழ்த்தி விட்டுள்ளனர்.

இரண்டு கருத்துகளைப் பெறுகிறேன் தம்பி! நான் இந்தத் தகவலை ஆராய்வதில் ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் ஆட்சி மொழிகளாக இருப்பது முடியாது, சிக்கலும் குழப்பமும் ஏற்படும் என்று அச்சப்படத் தேவையில்லை; கனடாவில் இரு ஆட்சி மொழிகள் இயங்கி விருகின்றன; அதனால் சிக்கலோ, குழப்பமோ மூண்டுவிடவில்லை. இரண்டாவது, ஆதிக்கம் செலுத்துவதில் சுவை காண்பவர்கள், அதற்கு ஒரு கருவி பயன்படாமற் போய்விட்டால் வேறு கருவியைத் தேடிப் பெற்றுக் கொள்கிறார்கள்.

மொழிமூலம் தமது ஆதிகத்தைப் புகுத்துவது முடியாது என்பதை உணர்ந்து ஆங்கில மொழி பேசுவோர், பிரஞ்சுமொழி பேசுவோரைத் தாழ்த்தி அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்த மத்திய அரசு அமைப்பிலே தமக்குள்ள மெஜாரிட்டி பலத்தைக் கருவியாக்கிக் கொண்டனர்.

இதனை எதிர்த்து நிறகிறது க்யூபெக் கருவி எதுவாக இருந்தால் என்ன, ஆதிக்கம் ஆதிக்கந்தானே! ஆதிகத்தை எதிர்த்து நிற்கிறது - பொருளாதாரத் துறையில், அரசியல் அரங்கில், தொழில் துறையில், ஆங்கிலர் பெற்றுள்ள ஆதிகத்தை எதிர்க்கிறது.

இந்த எதிர்ப்பு வலுப்பெற்ற நிலையில் க்யூபெக் மக்கள், தங்கள் பிரஞ்சு மொழி, பிரஞ்சுக் கலாச்சாரம் ஆகியவற்றினைப் பாதுகாத்துக் கொள்ளவும், வளர்ச்சி பெறச்செய்யவும் தக்கவிதமான அரசியல் அமைப்பு தமக்குத் தேவை என்று கேட்டுக் கிளர்ச்சி செய்கின்றனர்.

1867-லேயே, இரு மொழிகளும் ஆட்சி மொழிகள் என்று சட்டம் வகுத்து, அதனைச் செயல்படுத்தி வந்ததனால் இப்போதைய மாச்சரியம், மொழிப் பிரச்சினையின் அடிப்படையிலே இல்லை.

ஆனால் இந்தியப் பேரரசோ, மொழியிலிருந்தே ஆதிக்க அரசைத் தொடங்க வேண்டும் என்று திட்டமிடுகிறது.

மொழி விஷயத்திலே மாச்சரியம் எழவிடாதபடி தடுத்த பிறகும் கூட, வேறு முறைகளிலும் துறைகளிலும் ஆதிக்கத்தைப் புகுத்திட ஆங்கிலர் முனைகின்றபோது. எதிர்ப்புக் கிளம்புகிறது கனடாவில்! இங்கோ மொழியிலிருந்து ஆதிக்கத்தைத் தொடங்குகிறார்கள்; ஏன் என்று கேட்பவர்களைக் கண்டிக்கிறார்கள்; பல்வேறு வகையில் அடக்கி ஒடுக்கப் பார்க்கிறார்கள்.

ஆதிக்கம் இருக்கிறதே தம்பி! அது மிக விந்தையானது. ஆதிக்கத்திலே சிக்கிச் சீரழிவோர் போக, அடிமைத்தனத்தைத் தாங்கித் தாங்கி உணர்ச்சியற்றுப் போனவர் போக, மீதமுள்ளவர்கள், ஏன் நாம் அடிமைப்படுத்தப் பட்டோம்? எந்தக் கருவி கொண்டு நம்மை அடிமைப்படுத்தினார்கள்? என்று எண்ணிப் பார்க்கத் தொடங்கி, நாம் யார்? நம்முடைய இயல்பு என்ன? மரபு என்ன? என்பன பற்றிச் சிந்திக்கத் தொடங்கி, நம்முடையன யாவை? என்று ஆராய்ந்து கண்டறிந்து, அவைகளைப் பேணி வளர்த்திடவும், அவற்றிலே பெருமை காணவும் முற்படுகின்றனர். ஆதிக்கம் துவக்கத்திலே தொல்லையையும் துயரத்தையும் தருகிறது. இறுதியில், நம்மை நாம் உணர்ந்து கொள்ளும் நல்லுணர்ச்சியை, உள்ளுணர்ச்சியைத் தருகிறது. எழுச்சி பிறக்கிறது!!

❀ ❀ ❀

தம்பி க்யுபெக்கிலே தோன்றியுள்ள எதிர்ப்பு எந்த அளவுக்குச் சென்றது தெரியுமா! பிரிட்டிஷ் பேரரசியார் கனடா சென்றபோது, இங்கு வராதீர்! உயிருக்கே ஆபத்து உண்டாகும்!! என்று அவர்களை மிரட்டும் அளவுக்கு! அந்த மிரட்டலையோ, முறையையோ நான் சரி என்று கூறவில்லை. எனக்குப் பிடிக்காத முறை அது; நமது கழகம் வெறுத்தொதுக்கிடும் முறை அது. ஆனால் க்யுபெக் மக்கள் அந்த

முறையிலே தமது எதிர்ப்பைக் காட்டினர்; அங்கு எந்தக் கருணாநிதியையும் பாளையங்கோட்டைக்கு அனுப்பியதாகத் தெரியவில்லை; எந்த இலக்குவனார் மீதும் பாதுகாப்புச் சட்டம் பாயவில்லை. மாறாக, இந்த மனக்குறையை வளரவிடக் கூடாது, க்யுபெக் மக்களைச் சாந்திப்படுத்த வேண்டும், சமாதானம் கூறவேண்டும் என்ற பெருநோக்குடன்.

மொழி
பண்பாடு
பொதுநிலை

ஆகியவை குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து, கனடா உடைபட்டுப் போகாமலிருக்கத்தக்க வழி வகைகளைக் கூறும்படி கனடா அரசு ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்தது - மத்தியப் பிரதேசத்திலிருந்து போலீசையும், மற்ற இடத்திலிருந்து பட்டாளத்தையும் அழைத்தார்களே, அகிம்சையின் அடிப்படையில் அரசு அமைத்துக் கொண்டுள்ள அறநெறி, மறவாத அண்ணல்கள், அவர்கள் அறிந்து கொள்வதற்காகக் கூறுகிறேன், குமுறி எழுந்து க்யுபெக் கிளர்ச்சி செய்யக் கண்ட கனடா அரசு சீறிப்பாயவில்லை, மாறாக கமிஷன் அமைத்து கிளர்ச்சி எழக் காரணம் என்ன என்று கண்டறிகிறது. அது ஜனநாயகம்!!

ஆண்ட்ரிலாரண்டாவ் என்பவரும், டேவிட்சன்டன் என்பவரும், இந்தக் கமிஷனுக்குக் கூட்டுத் தலைவர்கள்.

இந்தக் குழுவில் 10-பேர் உறுப்பினர்கள்.

1963ஜூலை மாதம் முதற்கொண்டு இந்தக்குழு பணியாற்றி, இப்போது, கருத்து அளித்திருக்கிறது. பிரச்சினையை தீர்த்து வைக்க என்னனென்ன வழிகள் என்று கமிஷன் கூறவில்லை. பிரச்சினை என்ன என்பதனை விளக்கி இருக்கிறது.

இந்தியப் பேரரசு, பிரச்சினை இருப்பதாகவே இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை என்பதைத் தம்பி! இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.



கனடாவில், பிரச்சினை இருக்கிறது, அதனை அடக்குமுறையினால் ஒழித்துவிட முடியாது. கூடாது, தேவையில்லை என்ற நுண்ணறிவு அரசோச்சுகிறது! இங்கு? என்று கேட்கிறாயா தம்பி! இது என்ன கேள்வி! இங்குப் பக்தவத்சலம் அரசாள்கிறார்- காமராஜரின் ஆசீர்வாத பலத்துடன்!!

212-பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கையை அந்தக் குழு வெளியிட்டிருக்கிறது; அந்த அறிக்கை எனக்குக் கிடைக்கவில்லை; அதனுடைய சுருக்கம் மட்டும் கிடைத்தது; அதிலேயே குழு எத்தனை அக்கறையுடன் பிரச்சினையை ஆராய்ந்திருக்கிறது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

மிகப் பெரிய வகையான மாறுதல்களைக் காலத்திற்கேற்பச் செய்தாலொழிய நிலைமை பலர் எதிர்ப்பார்ப்பதை விட விரைவில் மோசமாகிப் போய்விடும்.

என்று குழு எச்சரித்தருகிறது.

இந்தி ஆட்சிமொழி ஆகலாமா என்பது பற்றி அறிந்து கொள்ள இங்கு அமைக்கப்பட்ட மொழிப் பிரச்சினைப் பற்றிய ஆய்வுக்குழுவில் அறிவாளர்கள் பலர், சிலர் காங்கிரசார் . எச்சரித்திருந்தனர், இந்தியை ஆட்சி மொழியாக்குவதால் ஆபத்தான நிலைமை மூண்டுவிடும், நிர்வாகம் சீர்குலைந்துவிடும், ஓரவசஞ்சனை தலைவிரித்தாடும், மொழி ஏகாதிபத்யம் கொக்கரிக்கும், இந்திய ஒற்றுமை குலைந்துபோகும் என்றெல்லாம் இந்தியப் பேரரசும் அதன் நடுநாயகர்களும் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. பிரச்சினை சிக்கலற்றது; வேண்டுமென்றே சிலர் இதுபற்றி எதிர்ப்புக் காட்டுகிறார்கள்; நாடு பிரச்சினையை ஒப்புக்கொண்டுவிட்டது என்று பேரரசினர் வாதாடி வருகின்றனர்.

மொழிப் பிரச்சினை குறித்து இங்கு இந்தியப் பேரரசினர் ஒரு தவறான கருத்தை விடாப்பிடியாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்திமொழி பேசுவோர் மிகப்பெரிய அளவினராக - மெஜாரட்டியாக - உள்ளனர்; மற்றமொழி பேசுவோர் சிறுபான்மையினராக உள்ளனர்; ஒரு நாடு ஆட்சிமொழியாக,

பெரும்பான்மையினரின் மொழியைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அதுதான் ஜனநாயக முறை; சிறுபான்மை சிறுபான்மையோரின் மொழி அழியாதிருக்கப் பாதுகாப்புக் கேட்டுப் பெறலாம். ஆனால், பெரும்பான்மையினரின் மொழியைத் தான் ஆட்சி மொழியாகக் கொள்ளவேண்டும் என்று கூறுகின்றனர்.

இந்த வாதம் ஜனநாயகப் பண்புக்கு உகந்தது அல்ல என்பதை 1867-லேயே கனடா அரசு உணர்ந்து சிறுபான்மையோரின் மொழியான பிரஞ்சு மொழியையும் ஆட்சிமொழி என்று சட்டமூலம் அறிவித்தது.

நடைமுறையில், ஆங்கில மொழி பேசும் கனடியர்கள், பல்வேறு துறைகளிலும் தமது ஆதிக்கத்தைப் புகுத்தி, பிரஞ்சு மொழி பேசும் கனடியர்களை ஆத்திரம் கொண்டிடச் செய்துவிட்டனர். புதிய பிரச்சினையும் புகைச்சலும் புகையும் கிளம்பிவிட்டிருப்பதற்கு இதுதான் காரணம்.

நாம் அனைவரும் கனடியர்கள் அல்லவா! என்ற பேச்சு, அழகானது, பொது எதிரியைச் சந்திக்க வேண்டிய நேரத்தில், அந்தப் பேச்சு எழுச்சி! யூட்டக்கூடியது. ஆனால் ஒரு பகுதியனிர் மற்றோர் பகுதியினர் மீது ஆதிக்கம்செ சலத்திக்கொண்டு அந்த ஆதிக்கத்தை எதிர்க்கும் மக்களிடம், நாம் அனைவரும் கனடியர்கள் அல்லவா? என்று பேசும்போது, எழுச்சி எப்படி ஏற்படும்? எரிச்சல் அல்லவா உண்டாகும்!!

க்யுபெக்கில் மிகப் பெரும்பான்மையினர் பிரஞ்சு மொழியினர்; அவர்களுக்கும் பிரான்சுக்கும் மொழி தவிர வேறு எந்தவிதமான பந்தமும் பாசமும் இல்லை, கனடா அரசியலில் க்யுபெக் தனது பங்கினைச் செலுத்தி வந்தது; பிரான்சு நாட்டு நடவடிக்கைகளிலே க்யுபெக் எந்தவிதமான பங்கும் கொள்ளவில்லை.

இவ்விதமாக க்யுபெக் இருந்துவந்த போதிலும், கன்டாவில் உள்ள ஆங்கிலமொழி பேசுபவர், இங்கிலாந்து நாட்டு

நடவடிக்கைகளிலே அக்கறை காட்டவும், சொந்தம் கொண்டாடவும் தவறவில்லை. அதேபோது எமது மொழி, எமது பண்பாடு, எமது பாரம்பரியம் என்று க்யுபெக் மக்களும், கனடாவில் இதர பகுதிகளில் உள்ள பிரஞ்சு மொழி பேசுபவர்களும் பேசிட முன்வந்தபோது, "இது என்ன குறுகிய மன்பான்மை! நாம் அனைவரும் கனடியர் அல்லவா!!" என்று பழைய பல்லவியைப் பாடி வந்தது.

ஆதிக்கம் செலுத்துபவர் நாம் அனைவரும் கனடியர் அல்லவா என்று பேசி, சொந்தம் கொண்டாடியது,க்யுபெக் மக்களுக்குக் கோபத்தைத் தான் கிளறிவிட்டது. அவர்கள் சீறி எழுந்து, "நாங்கள் கனடியர்கள் அல்ல! பிரஞ்சுக்காரர்கள்! எமது நாடு தனி! பண்பாடு தனி! என்று பேசத் தலைப்பட்டனர்".

கனடா ஒரே அரசு என்று சட்டம் ஏற்பட்ட நாளிலிருந்து, அதற்கு உட்பட்டு இருந்துவந்த க்யுபெக் இப்போது அந்த ஓரரசு ஏற்பாட்டினையே உடைத்துவிடப் பார்க்கிறது. இது மிகப் பெரிய ஆபத்து என்று (கமிஷன்) குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பிளவு மனப்பான்மை தோன்றிவிட்டது கண்டிக்கத்தக்கது என்று கூறுவதோடு அந்தக் குழு தன் வேலை முடிந்துவிட்டதாகக் கருதவில்லை மாறாக க்யுபெக் மக்களிடம் இந்த எண்ணம் எழுந்ததற்குக் காரணம், ஆங்கில மொழியினர் மேற்கொண்டுள்ள போக்குத்தான் என்று கண்டிக்கத் தயங்கவில்லை.

கனடா ஆங்கில மொழியினரின் நாடு, அதிலே பிரஞ்சுமொழி பேசுவோர் சிறுபான்மையினர் என்று ஓர் கருத்து நிலவுகிறது. இது மிகத்தவறான கருத்து. கனடா, ஆங்கிலமொழி பேசுவோர், பிரஞ்சு மொழி பேசுவோர் எனும் இரு சமூகங்களுக்கும் சொந்தமான நாடு; இதிலே பெருவாரியாக உள்ளவர்கள் என்ற காரணம் காட்டி, எஜமானார்களாகப் பார்த்திடும் ஆங்கில மொழியினரின் போக்கு, நியாயமுமல்ல, உண்மை ஜனநாயகமு மாகாது என்று குழு குறிப்பிட்டு, இப்போது க்யுபெக் மக்கள் கேட்பது, சலுகைஅல்ல; உரிமையைக் கேட்கிறார்கள்; கனடா ஒரே நாடாக எதிர்காலத்தில் இருக்க வேண்டுமானால், இந்த இரு சமூகங்களும் சரிசமமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கத்தக்க

விதமான ஏற்பாட்டினை விரைவில் மேற்கொண்டாக வேண்டும் என்றும் குழு குறிப்பிட்டிருக்கிறது.

யார் பேசுவது நியாயம்? பிரஞ்சுமொழி பேசுவோர் கூறுவது நியாயமா? ஆங்கில மொழியினர் கூறுவது நியாயமா? இரண்டிலே எது நியாயம் என்பது அல்ல பிரச்சினை இருவேறு 'நியாயங்கள்' உள்ளன; இவை இரண்டும் நியாயங்களே! இவை இரண்டும் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொள்ளாமல், இணைந்து இருக்க வழி கண்டுபிடித்தாக வேண்டும் என்று அந்தக் குழு கூறுகிறது.

தம்பி! இங்கு இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்பதற்கு இந்தி ஆதரவாளர் கூறிடும் காரணம், இந்தியாவில் மிகப்பெரும்பாலோர் பேசும் மொழி இந்தி என்பதாகும்.

மிகப் பெரும்பாலோர் இந்தி பேசுகின்றனர் என்ற வாதமே தவறு; அந்தக் கணக்கே தவறு என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியிலேயே பல்வேறு வகையான இந்தி உண்டு. ஒரு இந்திக்காரர் பேசுவது மற்றோர் இந்திக்காரருக்குப் புரியாது என்பதை, மறுத்திட முடியாது இந்தி ஆதரவளார்களால்.

மைதிலி என்ற மொழி தனிமொழி என்று வாதாடுகிறார்கள்... விற்பன்னர்கள்; அந்த மொழி பேசுவோர்களின் எண்ணிக்கையையும் சேர்த்துக் கொண்டு, இத்தனை கோடி பேர் இந்தி பேசுகிறார்கள் என்று இந்தி ஆதிக்கத்தார் கணக்குக் காட்டுகிறார்கள். மைதிலி தனிமொழி, அதையும் இந்தி என்று கூறிவிடுவது சரியல்ல என்று மைதிலி மொழிப் புலவர்கள் கூறுகின்றனர்.

மைதிலி மொழிக்காக என்று தனிவகுப்பு அமைக்கப்பட்டிருக்கிறதாக அறிகிறேன், டில்லி பல்கலைக்கழகத்தில்.

கலாச்சாரக் கழகம் எனும் அமைப்பை இந்தியப் பேரரசு நிறுவி, ஒவ்வொரு மொழியிலும் வெளியிடப்படும் சிறந்த

கருத்தோவியத்துக்குப் பரிசு தருகிறது. இந்தத் திட்டத்தின்படி மராத்தி, குஜராத்தி, தமிழ், இந்தி என்று பல மொழிகளுக்குப் பரிசு இருக்கிறது.

மைதிலி, இந்தி அல்ல, அது ஒரு தனி மொழி என்பதை ஒப்புக் கொள்ளும் முறையில் இந்தியப் பேரரசு, இந்தி , வங்காளி, மராத்தி போன்ற மொழிகளுக்குப் பரிசு வழங்குவதுபோல, மைதிலிக்கும் தனியாகப் பரிசு வழங்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தி மிகப் பெரும்பான்மையினர் பேசும் மொழி என்ற வாதமே தவறு; கணக்கே தவறு.

இந்தியே மிகப் பெரும்பான்மையினர் பேசும் மொழி என்பது உண்மை என்று வைத்துக்கொண்டால்கூட மிகப் பெரும்பான்மையினர் பேசுவது என்பவதற்காக மற்ற மொழியினர் மீது அந்த மொழி ஆதிக்கம் செலுத்துவது அறமாகாவது. அறிவுடமையாகாது என்ற தீர்ப்பு அளிப்பார்கள். கன்டாவில் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுபோல ஓர் தகுதிமிக்க குழு இங்கு அமைக்கப்பட்டால்.

தம்பி! இப்போது இங்கே சொல்லுகிறார்கள் அல்லவா, வடக்கே உள்ளவர்கள் ஏதாவது ஒரு தெற்கத்தி மொழியைப் படித்துக் கொள்ள விரும்புகிறார்கள், முன் வந்துள்ளனர் என்று; அதுபோல; எதிர்ப்பும் எரிச்சலும் வளர்ந்து விட்டிருப்பது கண்டு, ஆங்கில மொழி பேசுவோர், இனித் தங்கள் பிள்ளைகளுக்குப் பிரஞ்சு மொழியைக் கற்பிக்கப் போவதாகவும், பிரஞ்சு மொழிக்கான பள்ளிக்கூடங்களைத் தமது பகுதியில் இனி அமைக்கப் போவதாகவும் பேசுகின்றனர்.

இதைக் கேட்டு க்யுபெக் மக்கள் புளகாங்கிதம் அடைந்துவிட வில்லை. இது மயக்கும் பேச்சு, பயன் இல்லை என்று கூறுகின்றனர்.

க்யுபெக்கில் உள்ள மக்களில் 100க்கு 98 பேருக்கு ஆங்கிலம் தெரியாது; அங்கு அன்றாட நடிவடிக்கைககள் அனைத்தும் பிரஞ்சு மொழியில்.

ஆனால் க்யுபெக்கில் வணிகக் கோட்டங்களையும் தொழிற்கூடங்களையும் அமைத்துக் கொண்டுள்ள ஆங்கில மொழியினர், தமது அலுவலக நடவடிக்கைகள் அனைத்தையும் ஆங்கில மொழியிலேயே அமைத்துக் கொண்டுள்ளனர்.

க்யுபெக் மக்கள் அந்த அலுவலகங்களில் பணிபுரியும்போது, 'அன்னியர்' போன்ற ஒரு உணரச்சி தன்னாலே ஏற்பட்டு விடுகிறது. நாம் அனைவரும் கனடியர் அல்லவா! என்று பேசுவது, அந்தச் சமயத்தில் எவ்வளவு பெரிய கேலிக்கூத்தாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளேன்.

அந்த அலுவலகங்களில் பெரும்பாலான நடவடிக்கை ஆங்கில மொழியிலேயே நடத்தப்படுவதால், ஆங்கில மொழி பேசுவோரே, பெரிய இடங்களில் அதிகாரிகளாக முடிகிறது. க்யுபெக் மக்கள் எடுபிடி வேலை மட்டுமே பார்க்க முடிகிறது.

க்யுபெக் நமது நாடு, இங்குத் தொழில் நடத்திப் பெற்றிடும் செல்வம் நம்முடையது. ஆனால் இங்கு நமக்கு எடுபிடி வேலை!! இது அக்கிரமம்!! சொந்த நாட்டிலேயே நாம் அடிமைகளாக்கப்பட்டிருக்கிறோம்! இந்த அக்கிரமத்தை எப்படிச் சகித்துக்கொள்வது; ஏன் சகித்துக்கொள்ள வேண்டும் என்று க்யுபெனக்கில் எழுச்சி பெற்ற மக்கள் கேட்கின்றனர். அந்தக் கேள்வி கோபத்தை மூட்டவில்லை கனடா அரசுக்கு சிந்தனையைக் கிளறி விட்டிருக்கிறது.

இந்திதான் ஆட்சி மொழி என்ற நிலை வந்தே தீரும் என்ற பேச்சு வலுவடைய வலுவடைய, டில்லி போன்ற வடநாட்டுப் பெருநகர்களில், அரசாங்க அலுவலகங்களிலே மட்டுமல்ல, தனியார் துறையில் உள்ள அமைப்புகளில், வணிகக் கோட்டங்களில், மிகப் பெரும்பாலான நடவடிக்கைகளை இந்தியிலேயே நடத்த முற்பட்டு விட்டனர். ஆங்கிலம் தெரிந்தவர்கள் கூட இந்தியிலேயே பேசுவது, இந்தியிலேயே அலுவலகக் குறிப்புகளைத் தயாரிப்பது என்ற முறையில் மும்முரமாகி விட்டனர்.

படிப்பில், பயிற்சியில், செயல் திறமையில் தகுதி மிக்கவர்களாக உள்ள தென்னகத்தார், அத்தகைய அலுவலகங்களில், இந்திப் படை எடுப்பின் காரணமாக இப்போது இடர்ப்படுகின்றனர்.

இங்கே தரப்படுவதில் அரைப்பகுதி கிடைக்கும் என்றாலும், இதை விட்டு விட்டுத் தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்துவிடலாம் என்று பார்க்கிறோம்; இங்கே இனி அதிக நாட்களுக்கு இருக்க முடியாது போலிருக்கிறது என்று இப்போதே அவர்கள் குமுறிக் கூறி வருகின்றனர்.

இந்தி மட்டுமே ஆட்சிமொழி, ஆங்கிலம் அறவே அகறப்படும் என்ற நிலையில் இன்னும் எவ்வளவு தத்தளிக்க வேண்டி நேரிடும் என்பதை எண்ணிப்பார்க்கும் போதே திகில் மூண்டுவிடுகிறது. நிச்சயமாக.

தம்பி! இருமொழித் திட்டத்தை மேற்கொண்ட நிலையிலேயே மறைமுகமான அநீதி இழைக்கப்படுவதாக, க்யுபெக் மக்கள் கூறி எதிர்க்கிறார்கள்; இங்கோ காமராஜர் துணிந்து கூறுகிறார், போனால் போகட்டும் என்று அங்கிலமும் சிறிது காலம் இருந்து வரட்டும் ஏற்பாடு செய்கிறோம், ஆனால் ஒன்று மட்டும் இப்போதே கண்டிப்பாகக் கூறுவிடுகிறேன்; இந்த ஆங்கிலம் என்றென்றும் இருந்து வரும் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள், இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்ற நிலை எப்படியும் ஏற்பட்டே தீரும், என்பதாக.

அந்த நிலையில் , என்னென்ன விதமான ஆதிக்கம் அநீதி அக்கிரமம் நெளியும் என்பதை எண்ணிப் பார்த்திடும் எவர்தான் இன்றிலீருந்தே இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்று உணர்சசி கொள்ளாமலிருக்க முடியும்?

அந்த உணர்ச்சி கொந்தளித்துக் ரொகண்டிருக்கிறது. அச்சமூட்டி அதனை அழித்திட முடியவில்லை; கனிவாகப் பேசி அதனைக் கட்டப் படுத்த முடியவில்லை? அந்த உணர்ச்சி, கட்சிக் கட்டுகளைக் கூட இடித்துத் தள்ளிக் கொண்டு, பரவிக்கொண்டிருக்கிறது துரைத்தனம் மேற்கொள்ளும்

அடக்குமுறை அந்த உணர்ச்சியை மேலும் மேலும் வளர்ந்திடச் செய்து வருகிறது.

ஆனால், தம்பி! அந்தவிதமான உணர்ச்சியைக் கனடா அரசு மதித்து, பரிகாரம் தேடிட முயல்வதுபோல இருக்கும் இந்தியப் பேரரசு தக்க முறையை மேற்கொள்ள வேண்டுமானால்அந்த உணர்ச்சியை எதற்குப் பயன்படுத்திக் எவ்விதமாகப் பணியாற்றி வெற்றி பெற்றிட வேண்டும் என்பது பற்றித்தான் இப்போது அனைவரும் தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும்.

குழப்பம், கலகம், பலாத்காரம், நாசவேலை என்பவைகள் மூலம், இந்தி எதிர்ப்புணர்ச்சியை இந்தியப் பேரரசு உணரவேண்டும் என்று எண்ணுவதும், அம்முறையில் செயலாற்றுவதும், நிச்சயமாகப் பயன் தராது. மாறாக இந்தி எதிர்ப்புணர்ச்சியையே அது அழித்தொழித்துவிடும்....

க்யுபெக் கனடாவில் ஒரு பகுதிதான் என்றாலும், இன்று ஒரு கமிஷன் நியமித்துப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடியாக வேண்டும் என்ற அளவுக்குக் கனடப் பேரரசு எதனாலே வந்திருக்கிறது? பலாத்கார நடவடிக்கையினால் அல்ல!

உணர்ச்சியை வகைப்படுத்தி, அந்த உணர்ச்சி கொண்ட சர்க்காரை க்யுபெக்கில் அமைத்ததால்!!!

இந்தி எதிர்ப்புணர்ச்சியையும் இந்தியப் பேரரசு மதித்து, இந்தி பேசாதாரின் உரிமைகளை வழங்கிடத்தக்க ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமானால் - பலாத்காரத்தால் அல்ல - இந்தி எதிர்ப்புணர்ச்சி கொண்ட சர்க்காரை இங்கு அமைத்துக் காட்ட வேண்டும். அது மட்டுமே இந்தியப் பேரரசின் மமதையை மாய்க்கும் பிடிவாதத்தைப் போக்கும், பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்.

கனடப் பேரரசு கொண்டுள்ள முயினை அப்படியே ஒப்புக் கொள்ளும் அரசு இருந்து வந்தது, க்யுபெக்கில், முன்பு

க்யுபெக் மக்கள் மட்டும், ஆங்கில மொழியினரின் ஆதிக்கத்தை எதிர்த்து வந்தனர்; கிளர்ச்சி செய்தனர்; வேலை நிறுத்தங்கள், சச்சரவுகள் நடைபெற்றன.

வேலை நிறுத்தங்களை உடைக்கவும், சச்சரவுகளை அடக்கவும்கூட கனடா பேரரசு முனைந்தது. அந்த நாட்களில்.

பிறகு, தெளிவு பெற்றவர்கள், ஆங்கிலமொழியினரின் ஆதிக்கத்தை எதிர்க்கும் உணர்ச்சி மக்களிடம் வெளிவந்தால் மட்டும் போதாது, அந்த உணர்ச்சியின்மீது கட்டப்பட்ட அரசு க்யுபெக்கில் அமையவேண்டும் என்று திட்டமிட்டுப் பணியாற்றினர்.

அத்தகைய அரசு அமைந்தது க்யுபெக்கில்; இனி இந்தப் பிரச்சினையைப் புறக்கணிக்க முடியாது என்று கனடப் பேரரசு, கைகூப்பிய நிலை பெற்றது.

இப்போது க்யுபெக்கில், மக்களின் எண்ணம் வேறு. அரசின் எண்ணம் வேறு என்பது அல்ல நிலை.

தம்பி! இதனை மறந்திடலாகாது; எத்தனை வலுவுள்ளது என்று நாம் கூறினாலும், இந்தி எதிர்ப்புணர்ச்சி என்பது தமிழ் மக்களிடையில் அதிலும் தெளிவும் துணிவும் பெற்ற தன்னலம் மறந்த பகுதியினரிடையில் காணப்படுவதேயன்றி, தமிழக அரசுடையது அல்ல.

தமிழக அரசு, இந்தி ஆதரவளார்களின் முகாம், இதுகண்டு அருவருப்புக் கொண்டிடுவதால் மட்டும் ஆகப் போவது ஒன்றும் இல்லை.....

அரசினையே துச்சமென்று கருதத்தக்கவிதமாக இந்தி எதிர்ப்பு உணர்ச்சி தமிழக மக்களிடம் இருப்பதாக வீரம் பேசுகிறாயே ஐயா! அந்த வலிவினைக் கொண்டு, இந்தி எதிர்ப்பு உணர்ச்சிகொண்ட அரசு அமைத்திட ஏன் முடியவில்லை உம்மால்? என்று கேட்கும்!! அது... அது... என்று இழுத்துப் பேசினால் பயன் இல்லை.....

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி என்பது மக்களில் ஒரு பகுதியினரின் உணர்ச்சி மட்டும் அல்ல, தமிழக முழுவதும் ஊடுருவிப் பாய்ந்துள்ள உணர்ச்சி என்பது உண்மை என்றால் அந்த உணர்ச்சி கொண்ட அரசு ஏன் அமைக்கக் கூடாது, தமிழகத்தில்?

கலயங்களிலே வண்ணக் குழம்புகளை நிரப்பிவைத்துக் கொண்டு, தூரிகைகொண்டு, ஓவியம் தீட்டிட வேண்டும். அது ஓவியன் வேலை, வண்ணக் குழம்பினை மனம்போன போக்கிலே அள்ளித் தெளிப்பது ஓவியக் கலையல்ல.

உணர்ச்சியைப் பயன்படுத்துவதும், தம்பி! ஒப்பற்ற திறமை தேவைப்படும் ஒரு நுண்கலை.

தமிழகத்தில் இன்று காணப்படும் உணர்ச்சியைத் திறமையுடன் பயன்படுத்தி, இந்தி எதிர்ப்புணர்ச்சியின் மீது கட்டப்பட்ட அரசு காணவேண்டும் தமிழகத்தில்,

இந்தி எதிர்ப்புணர்ச்சியைத் தமிழகத்தில் அரியணை ஏறச் செய்வதிலே - வெற்றி பெறாமல், இந்தியப் பேரரசின் துணையுடனும் தமிழகக் காங்கிரஸ் அரசின் ஒப்புதலுடனும் அரிணை ஏறிடும் இந்தியை எப்படி விரட்ட முடியும்? கேட்கமாட்டார்களா, இந்தியப் பேரரசினர், உன்னுடைய இந்தி எதிர்ப்புணர்ச்சிக்கு உன்னுடைய தமிழகத்திலேயே தரவேண்டிய மதிப்பினை மக்கள் தந்திருந்தால், தமிழக அரசு இந்தி எதிர்ப்பு அரசாக அல்லவா வடிவம் பெற்றிருக்கும்; காணோமே; உன்னுடைய இந்தி எதிர்ப்பு உணரச்சியை ஒப்புக்கொள்ளும்படி உன்னுடைய மக்களையே உன்பக்கம் கொண்டு வர முடியவில்லை உன்னால், நான் உனக்குப் பணியவேண்டுமா! கூரை ஏறிக் கோழிபிடி ஐயா! முதலில்!! பிறகு கோபுரம் ஏறி வைகுந்தத்திற்கு வழி அமைக்கலாம்!! என்றெல்லாம்.

எனவேதான் தம்பி! க்யுபெக் மக்கள், முதலில், தம் மொழி நடத்திடும் அரசு அமைப்பதில் வெற்றி கண்டனர்; அந்த வெற்றியைக் கண்டபிறகு கடைப் பேரரசு, க்யுபெக்கின் கேள்விகளைப் புறக்கணிக்க முடியவில்லை.

கனடாவின் பிரச்சினை இந்தக் கருதினை நாம் பெற்றிடவும் பயன்படுகிறது. ஆனால் தம்பி! இதனை நான் உணர்ந்து என்ன பலன்! நீ உணர்ந்து மட்டும் என்ன பலன்! இந்தி எதிர்ப்பு உணர்ச்சிகொண்ட அனைவரும் உணர்ந்து தமிழக அரசினை மாற்றி அமைக்கும், உறுதி கொண்டால்தானே பலன் கிடைக்கும்?

இந்தியைத் தமிழக மக்களிலே ஒரு பகுதியினர் எதிர்க்கிறார்கள், தமிழக அரசு இந்தியை ஆதரிக்கிறது என்ற நிலை இருக்குமட்டும், இந்தியப் பேரரசு இறுமாந்து நிற்கும்; உலக ஜனநாயக நாடுகள்கூட, இந்தியப் பேரரசின் போக்கைக் கண்டிக்கத் தயங்கும்.

ஆனால், தமிழக அரசு இந்தி ஆட்சிமொழியாவதை எதிர்க்கிறது என்ற நிலை பிறந்திடும்போது இந்தியப் பேரரசு, அந்த உணர்ச்சியைப் புறக்கணிக்கத் துணியாது, துணியுமானால், இந்தியப் பேரரசை ஜனநாயக உலகு கண்டித்திட முனைந்திடும்.

பிரஞ்சு மொழியினரின் கிளர்ச்சியை இன்று கனடப் பேரரசு மதித்தாக வேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணத்தைக் கருத்துடன் ஆராய்ந்து பார்த்தால், தம்பி! இந்தி எதிர்ப்பு உணர்ச்சி வெற்றிபெறுவதற்கான வழி அந்த உணர்ச்சிமீது கட்டப்பட்ட அரசு தமிழகத்தில் அமைவதுதான் வழி அந்த உணர்ச்சிமீது கட்டப்பட்ட அரசு தமிழகத்தில் அமைவதுதான் என்பது புரியும். இதனைப் புரிந்திடச் செய்திடும் பணியினைத்தான் தம்பி! நீ மேற்கொண்டிருக்கிறாய். உன் வெற்றியைப் பொறுத்துத்தான் இருக்கிறது, நாட்டின் எதிர்காலம்.

❀ ❀ ❀

காமராஜர் இந்திதான் ஆட்சிமொழி என்பதை இப்போது இவர்கள் எதிர்க்கிறார்களே, நியாயமா? இந்தி ஆட்சிமொழி என்று இப்போதா புதிதாகச் சொல்லுகிறோம். அது அப்போதே செய்த முடிவு என்கிறார். அந்தப் பேச்சைக் கேட்டபிறகுதான் தம்பி! எனக்கு இந்தக் கதை நினைவிற்கு வந்தது!!

அப்போதே செய்த முடிவு என்று காமராஜர் கூறுவது எதனை மனத்திலே கொண்டு என்பது சரியாக விளக்கப்படவில்லை. காந்தியார் காலத்திலேயே காங்கிரஸ் கட்சி சுயராஜ்யம் கிடைத்ததும் இந்திதான் ஆட்சி மொழியாக வேண்டும் என்று தீர்மானம் போட்டத்தைக் குறிப்பிடுகிறார் என்றால், ஒன்று கூறவேண்டி இருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் முடிவு என்பது நாடு முழுவதன் முடிவு என்று கொள்ளளவும் முடியாது. கூறுவது நியாயமுமாகாது.

மற்றும் ஒன்றுகூடச் சொல்லவேண்டி இருக்கிறது. காந்தியார், இந்தியை அல்ல, இந்துஸ்தானியைத்தான், குறிப்பிட்டார், நாடு இந்து இந்தியா, முஸ்லீம் இந்தியா என்று இரண்டு ஆகிவிடக்கூடாது என்பதற்காகக் குறிப்பிட்டார்.

அந்த நிலைமை இன்று இல்லை; பாகிஸ்தான் தனி நாடு ஆகிவிட்டது.

இந்தியும் இந்துஸ்தானியும் ஒன்று அல்ல.

இதைச் சொல்லுவதால் இந்திக்குப் பதிலாக இந்துஸ்தானியை வைப்பதானால் ஏற்றுக்கொள்ளத் தயாரா என்று குறைமதியினர் கேட்கத்துடிப்பர், தம்பி! நான் கூறுவது அதற்கு அல்ல அப்போதே செய்த முடிவு என்கிறாரே காமராஜர், அந்த ‘அப்போது’ எப்படிப் பட்டது என்பதை விளக்கிக் காட்டினேன்.

❀ ❀ ❀

முதலாவதாக, அரசியல் நிர்ணய சபை கூடிய சூழ்நிலை மொழிப் பிரச்சினை பற்றி ஆர அமர யோசித்துப் பார்த்து ஒரு நியாயமான, நிரந்தரமாக இருக்கத்தக்க திட்டம் வகுத்திட அமைந்ததல்ல. விழாக்கோலம்! வெள்ளையராட்சியை விரட்டி விட்டோம் என்ற பெருமித உணர்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்த நேரம்! இயற்கையிலேயே அமைந்துள்ள வேறுபாடுகள்,

முரண்பாடுகள், இயல்புகள், நினைப்புகள் எனும் எவை பற்றியும் பேசுவதே தவறு என்று ஒரு தேசிய வேகம் இருந்த வேளை.

பல கோடிக்கணக்கான மக்களின் பிறப்புரிமையைப் பாதிக்கக் கூடிய மொழிப் பிரச்சினை பற்றி ஒரு முடிவு எடுக்க முற்பட்டதே தவறு. அந்தச் சூழ்நிலையில் எடுக்கப்பட்ட முடிவு எந்தெந்தச் சூழ்நிலை மாறி மாறி ஏற்படினும் நிலைத்து நிற்கும் என்று நினைப்பது அறிவுடமை ஆகாது; நிலைத்து நின்றாக வேண்டும் என்று வாதாடுவது, சகித்துக்கொள்ள முடியாத கொடுமையாகும்.

❀ ❀ ❀

இந்தி பேசாத பகுதியிலிருந்து வந்திருந்தவர்கள் அனைவருமே இந்தி ஆட்சிமொழி என்ற திட்டத்தைத் தாக்கியிருக்கிறார்கள்; சிலர் மனக்கசப்பை வெளிப்படையாகவே எடுத்துக் காட்டியுமுள்ளனரே, அப்போதே!! அதனை மறுப்பார்களா? பிடிவாதக்காரர்கள்.

இன்று போலவே அன்றும், இந்தி பேசும் பகுதியினர் ஒன்று கூடிக்கொண்டு, எண்ணிக்கை பலத்தைக் காட்டி இந்தி பேசாதோரின் வாதங்களை மறுக்க முடியாத நிலையில், கொடுமைப்படுத்தி, இந்தி ஆட்சி மொழி என்ற விதியைப் புகுத்திவிட்டார்களேயன்றி, நாட்டின் பல்வேறு பகுதியினரும் மனமுவந்து இந்தி ஆட்சி மொழி ஆவதை ஏற்றுக் கொண்டனரா? அரசியல் நிர்ணய சபைக் குறிப்புகளைக் காண்போர், அப்போதே எழும்பியிருந்த எதிர்ப்புணர்ச்சியினை நன்கு அறிந்து கொள்ளலாமே....!

கொங்கு நாட்டவர், தமிழகமெங்கணும் மதிக்கத்தக்க நிலை பெற்றவர் டி.ஏ. இராமலிங்கம் செட்டியாரவர்கள், இந்தி மொழியாளரின் இறுமாப்பினை இடித்துக் காட்டி....,

தில்லியிலே நானோர் அன்னியன் என்பது போன்ற உணர்ச்சி கொள்ளும்படிச் செய்கின்றனரே, இந்தப் போக்கு எங்குக்

கொண்டுபோய் விடுமோ என்றெண்ணும்போதே கவலை பீறிட்டுக் கொண்டு வருகிறதே, எதிர்காலத்தில் என்னென்ன ஆபத்துகள் எழுமோ என்றெண்ணும் போதே நடுக்க மெடுக்கிறதே என்று பேசினார்.

மராட்டியத்தின் தலைவர் சங்கர் ராவ் இந்தி ஆதிக்க நோக்கம் கொண்டோரைக் கடிந்துரைத்திருக்கிறார்.

பி.தாஸ் அவர்கள், வெள்ளையர்களிடம் கொண்டிருந்தது போன்றதோர் அச்சம் இந்தி மொழியாளரிடம் கொள்ள வேண்டி வந்துவிட்டதே. அத்துணை அகம்பாவத்துடன் அவர்கள் உள்ளனரே என்று குமுறியிருக்கிறார்.

எவ்வளவு படித்தாலும் தென்னாட்டவர், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுடன் சரி சமமான நிலையிலிருந்து போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என்று எச்சரித்துப் பேசினார் துர்காபாய் அவர்கள் (பிறகு தேஷ்முக்கானவர்)

இந்திப் பிரச்சினையை இப்போது எடுத்துக் கொள்ளவே வேண்டாம். பிறகோர் சமயம் பார்த்துக் கொள்ளலாம், பிறகு அமையும் பாராளுமன்றம் இதுபற்றி கவனம் செலுத்தட்டும் என்று (இன்றைய பாராளுமன்ற துணைத்தலைவர்) கிருஷ்ணமூர்த்திராவ் முறையிட்டுக் கொண்டார்.

இந்த முறையீடுகள், எச்சரிக்கைகள், கண்டனங்கள் யாவையும் 'அப்போதே' தான் இருந்தன, ஆனால், அதனை மறந்துவிடச் சொல்லுகிறார்கள் போலும்.

அப்போதே முடிவு செய்ததாகக் கூறுகிறார்களே, அதேபோது எழுந்த எதிர்ப்பு, நாளுக்கு நாள் வளர்ந்தது; குறையவில்லை.

அரசியல் நிர்ணய சபை கூடியபோது, இந்தப் பிரச்சினையில் போதுமான அக்கறை காட்டாமலிருந்தவர்கள் கூட பிறகு இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய பேராபத்தினை

உணரத் தலைப்பட்டனர்; இந்திக்கு எதிர்ப்பு வலுவடைந்தது, பரவிற்று.

டாக்டர் சுப்பராயன், இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் கதை போலிருக்கிறதே இந்திக்காரர் போக்கு என்று இடித்துரைத்தார்.

இந்தியாவுக்கு ஒரே ஒரு மொழிதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று கருதுவதே அறிவீனம் என்று வங்க முதல்வர் பி.சி.ராய் முழக்கமிட்டார். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு இயக்கமே உருவெடுத்து விட்டது. இந்தியைக் கட்டாய பாடமாக்கி, வெற்றி கிட்டாததைக் கண்ட ராஜகோபாலாச்சாரியார் இந்தி எதிர்ப்பில் முன்னணியில் நின்றிடலானார்.....

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அறப்போர் நடாத்தி இன்னுயிரையும் இழந்திடும் உறுதி ஓங்கி வளர்ந்திருக்க, காமராஜர் இப்போது, அப்போதே செய்த முடிவு என்று பேசுவதிலே பொருளுமில்லை, பொருத்தமுமில்லை.

❀ ❀ ❀

தம்பி! கடுமொழியும் கனல் கக்கும் பேச்சும் பேசின பலர் என்னுடன் இருந்தனர்-ஏ! அப்பா! இந்த இந்தி விஷயமாகவும், அதனைப் புகுத்திடத் துணைசெய்யும் காங்கிரஸ் தலைவர்களையும் என்னென்ன கூறினர். எத்தணைக் கடுமையாகத் தாக்கினர், கேட்பவர் இரத்தம் கொதித்திடும் விதமாக! எங்குளார் அவரெலாம்!! இந்தியின் காலடி தொழுதிடும் இடத்தில்!! ஏன்? அவர் அங்கு காணும் சுகம்யாதோ? எங்ஙனம் நான் அறிந்திட இயலும்?

ஒன்று மட்டும் தெரியும் எனக்கு - துள்ளும் மாடு பொதி சுமப்பதில்லை - தூற்றித்திரிவோர் எந்த முனையிலும் நிலைத்து நிற்பதில்லை.

இந்தியை எதிர்க்கும்போது, நாம் தம்பி! இழிமொழியால் எவரையும் தாக்கத் தேவையில்லை. தமிழ் அத்தகைய தகாத

செயலுக்குப் பயன்படுதல் கூடாது. நமது உள்ளத்தைத் திறந்துகாட்ட, உறுதியை வெளிப்படுத்தவே, தமிழ் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

எம்முறையில் பணியாற்றி இந்தி ஆதிக்கத்தினை ஒழித்திட வேண்டும் என்பதிலே நமது நோக்கம் செல்ல வேண்டுமேயன்றி இழிமொழியை எத்தனை வேகத்துடன் பொழிந்து நமது எரிச்சலைக் காட்டிக்கொள்ளலாம் என்பதிலே செல்லுதல் கூடாது.

தென்னவர் இந்தி கற்கச்
செப்புவோன் தமிழனல்லன்
அன்னையை வடவர்கூடி
ஆக்கிய கருவே அன்னான்!

எப்படித் தம்பி! இருக்கிறது. இந்தத் தாக்குதல்! இப்படியல்லவா சம்மட்டி அடி கொடுக்க வேண்டும் என்று பக்குவமற்றோர் பாராட்டுவர். ஆனால் இத்தனை துணிவுடன் இந்தியைத் தாக்கினோர்- இந்தியையா, இந்தி ஆதரவாளர்களை - இன்று எங்கு உளர்! இந்தி, கெக்கலி செய்கிறது. இந்தி ஆதரவாளர் கூறுகின்றனர், அந்த நாவுக்கரசர்கள் நம்மிடம் அடைக்கலமாயினர் என்று.

தம்பி! இந்தி மொழியை நீயும் நானும், இலக்கண வரம்பற்ற மொழி, இலக்கிய வளமற்ற மொழி, நேற்றுப் பிறந்த மொழி என்று மட்டுந்தானே கூறுகின்றோம், இந்தியும் இந்தியாவின் ஒரு பகுதியினரின் தாய்மொழி. ஆகவே அம்மொழியை இழித்துரைப்பது அம்மொழியாளரின் மனத்தினைப் புண்ணாக்கும் என்று எண்ணுகின்றோம்.

இது அல்ல போர்முறை! இஃதன்று வீரம்! தாக்கவேண்டும், அவர்கள் தமது நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகும் விதமாக என்று கூறிச் சிலர் இந்தியைத் தாக்கினர்,

வங்காள நாயகனை ஓடிப்பிடித்தாய்!
மராட்டி ஆடவனின் கூடப்படுத்தாய்!
எங்கேனும் யாரேனும் கைகாட்டினாலும்

எப்போதும் செயலாகும் தப்பாத கற்பின்
பங்காளியன்றோ? உன் பட்டாடையெல்லாம்
பல்லோரும் தொட்டாண்ட புத்தாடையன்றோ?
வங்காளம் மராட்டி எல்லாமிப்போது
வாலாட்டும் உன் வாழ்வை வீழ்த்தல் தப்பாது.

ஆமாம் தம்பி! பொறி பறக்கிறதல்லவா!! பறந்தது! பறந்தே போயினர்! புதிய பிறவிகளாயினர் - பிறவிகளா? புதிய தொழிலினை மேற்கொண்டு விட்டனர்.

முழக்கம்! ஆணையிட்டுக் கூறல்! சூள் உரைத்தல்! கொஞ்சமா!! இந்தியை ஒழித்திடாமல் இருப்பேனா - அதனை எவர் செய்திடத் தவறிடினும், நானே அப்பணியினை மேற்கொள்வேன், பகை வெல்வேன் என்று உரத்த குரலெழுப்பிக் கேட்போர் உள்ளத்தை உலுக்கினர்! உருமாறிப் போயினர் இன்று!

இழி செருப்பனைய இந்தியைக் காலில்
இட்டழித் தொருதுகள் எடுத்து
விழி குருடான கொடியவர் முகத்தில்
விட்டெறி வேனிதும் உண்மை!
கழிபெரும் உவகை கனித் தமிழ் மொழியில்
காணுவன் காணுவன் உண்மை!
அழிவதென்றாலும் இந்தியை அழித்தே
அழிவன் நான்! உண்மையினுண்மை!

தம்பி! நான் உன்னிடமிருந்து இத்தகைய வாணங்களை எதிர்பார்க்க வில்லை! இடியோசை அல்ல நான் விரும்புவது - உன் இதயத்தை!!

அப்போதே செய்த முடிவு என்று பேசிடும் காமராஜரின் வாதத்தின் பொருளற்ற தன்மையினை நாடு அறிந்திடச் செய்திடு, நாம் மேற்கொண்டுள்ள இந்தி ஆதிக்க ஒழிப்புத் திட்டத்துக்கு நாட்டினரின் நல்லாதரவு உண்டு என்பதனை உலகறியச் செய்திடு.

❀ ❀ ❀

தம்பி!

"தாயகத்தை விட்டுப் பிரியப் போகிறேன், நாளையதினம் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த நேரத்தில், நாட்டு மக்களுக்கு என்ன தந்துவிட்டுச் செல்கிறீர் - நாட்டவருக்குத் தாங்கள் அளித்திட விரும்பும் கடைசிச்செய்தி யாது? என்று என்னை வினவிடின், அயரிஷ் இனத்தவராகத் தொடர்ந்து வாழவிரும்பினால், அயரிஷ் மொழியைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் - என்றுதான் கூறிச் செல்வேன்."

பிரிட்டிஷ் பிடியிலிருந்து தாயகத்தை - அயர்லாந்து நாட்டை - மீட்டிட, அரும்பாடுபட்ட வீரன், அகில உலகு பாராட்டத்தக்க ஆற்றல் மிக்கோன், திவேலரா இதுபோலக் கூறினான்.

வல்லமை மிக்கவர்கள் இந்தப் பிரிட்டிஷார்! அவர்களின் படைபலம், பயமூட்டுவதாக இருக்கிறது, எதிர்ப்போரைக் கொன்று குவிக்கின்றனர்; நாடே நாசப் படுகுழியில் தள்ளப்படுவதாயினும் சரி, எங்கள் ஆதிக்கத்தை மட்டும் விடமாட்டோம் என்று கொக்கரிக்கின்றனர்; கொக்கரிப்பது மட்டுமல்ல, கூசாது கொடுமை பல செய்கினற்னர்; இவர்களை எப்படி விரட்டுவது, வீழ்த்துவது? தாயகத்தை எங்ஙனம் விடுவிப்பது என்று, மக்கள் மருண்டு கிடந்தபோது, "சாகத் துணிந்திடின், நாட்டினரே! நாடு வாழும்! வாழ வேண்டுமே என்று அலைந்திடின், நாட்டினரே! நாடு வாழும்! வாழ வேண்டுமே என்று அலைந்திடின், நாடு சாகும்!" என்றுரைத்து, வீர உணர்ச்சியை ஊட்டி, மக்களைத் திரட்டி, விடுதலைப் போர் நடாத்தி, வெற்றி பெற்ற மாவீரன், திவேலரா. அந்த விடுதலை வீரன், கூறுகிறான், மொழி காப்பாற்றப்பட வேண்டும் இனம் அழிந்து படாமலிருக்க வேண்டுமானால், என்று

ஆமாம்! உண்மைதானே அது ஒவ்வோர் இனத்துக்கென ஒவ்வொர் மொழி இயற்கையாக அமைந்திருக்கிறது. அந்த மொழி, 'வாழ்க்கை வழி' யை அந்த இன மக்களுக்கு, அமைத்துத் தருகிறது. ஓராண்டு ஈராண்டல்ல; பல தலைமுறைகளாகச், சிறுகச் சிறுகச் சமைக்கப்பட்டுக் கூட்டாகி, ஒரு பேருரு ஏற்பட்டுவிடுகிறது. அந்த மக்கள், உலவும் நாடு, வேட்டையாடி மகிழ்ந்திடும் காடு, நீந்தி

விளையாடும் ஆறுகள், உழுது பயன்காணும் வயல்கள், உழைப்புடன் மதிநுட்பத்தை இழைத்திடும் தொழடிலிடங்கள், குலவி இன்புறும் மனைகள் - இங்கெல்லாம், எண்ணங்களை, எடுத்துக் கூறிக் கூறியும், பிறர் கூறிடக் கேட்டும், கலந்துரையாடியும், கருத்துகளை உருவாக்கி பிறகு அதனைக் காப்பாற்றிடவும், வளர்த்திடவும், வழிவகை கண்டறிகின்றனர். இந்தச் சீரிய செல்வத்தை, மக்கள் பெற உறுதுணையாக நிற்பது, அவர்க்கென அமைந்த மொழி எனவேதான், மொழி என்பது வாழ்க்கை வழியினை அமைத்தளிக்கிது என்று, அறிவாளர் கூறுகின்றனர்.

தட்பவெட்ப நிலைக்கேற்ப, மொழி உருவாக்கப்படுகிறது.

பலப்பல நூற்றாண்டுகளாக, ஒரு குறிப்பிட்ட மக்கட்தொகை, அந்த மொழி மூலம், தங்கள் எண்ணங்களை எடுத்தியம்புவதாலும், கேட்டுப் பயன்பெறுவதாலும், கருத்துகள் உருவாகின்றன. அந்தக் கருவூலம், அந்த இனம், தேடிப்பெற்றது, பிறகு உலகுக்கு அளிப்பதுமாகும்.

இதனை அறிந்ததால்தான், மொழி, இனம், பண்பாடு என்பவைகள் ஒன்றுக்கொண்டு தொடர்புடையன என்கின்றனர்.

மொழி உணர்ச்சி ஒரு இன மக்களுக்கு உயிரூட்டம் தருகிறது.

அந்த இனத்துக்கென அமையும், தனி இயல்புகள், சிறப்புகள், அந்த மொழிவழி நின்று பெற்றது. எனவே அந்த மொழியை இழந்து விட்டால், அந்தத் தனி இயல்புகள், சிறப்புகள், மங்கி மடிந்து போகும்; அல்லது வேறு பிறவற்றுடன் கலந்து, உருவம் கெட்டுப் பலன் பாழ்பட்டுப் போய்விடும். இதனை நன்கு ஆய்ந்தறிந்தவர்களே எந்த ஒரு இனமும் தன் தாய் மொழியினை அழிந்தபட விடக்கூடாது, என்று கூறினர்.

அயர்லாந்து, பிரிட்டிஷ் பிடியில் இருந்தது. கேடுபல சூழ்ந்தனர்; வறுமை கொட்டிற்று; பஞ்சம் தலைவிரித்தாடிற்று; உழவு அழிந்தது; தொழில் நசித்தது; வாணிபம் பாழ்பட்டது.

எனின், எமக்குச் சோறுவேண்டும்!! வேலை வேண்டும்!! என்று அயர்லாந்து நாட்டுமக்கள், கேட்டனரோ எனின், இல்லை. எமக்கு எமது நாடு வேண்டும்! நாட்டு ஆட்சி எம்மிடம் இருக்கவேண்டும்! என்றுதான் கேட்டனர். ஏனெனில், வேறோர் நாட்டின் பிடியிலிருக்கும் போது, பசியும் பஞ்சமும் பல்வேறு விதமான கொடுமைகளும் தாக்குவது மட்டுமல்ல, இனஇயல்பு அழிக்கப் பட்டுப் போகிறது! அந்த இன இயல்பு அழிந்துவிட்டால், பிறகு என்றென்றும் நிமிர்ந்து நின்று, உரிமையைக் கேட்டிடும் துணிவே அற்றுப்போய்விடும். வயிற்றுக்குச்சோறு மட்டும் கிடைத்தால் போதும், என்ற விதமான நிலை ஏற்பட்டுவிடும்.

* * *

மொழி இருப்பதால் எத்தனை எத்தனை காலம், ஆதிக்கக்காரன், தன்னிடம் உள்ள எல்லாவிதமான படைக்கலன்களையும் கொண்டு அடக்கி ஒடுக்கி வைத்தாலும், அடக்கி வைக்கப்பட்ட மக்கள், விடுதலை உணர்ச்சியை அடியோடு இழந்து விடுவதில்லை விடுதலைப்போர் தொடுத்திடும் துணிவு பிறவாமலிருக்கக் கூடும் - ஆனால் அந்த உணர்ச்சி அழிந்துபடுவதில்லை. மொழிதான் அதற்குக் காரணம்.

எண்ணங்களை வெளிப்படுத்திக்கொள்ள, மனதிற்பட்டதை எடுத்தியம்ப, நமது கதி இதுதானா என்றென்றும் என்று கேட்டிட, இவ்விதமா நமது முன்னோர்கள் இருந்தனர் என்று பேச, இடுக்கண் வந்த காலை அவர்கள் யாதுசெய்து இன்னலைப் போக்கிக் கொண்டனர் என்பது குறித்துக் கலந்துரையாட மொழி பயன்படுகிறது.

அவ்வப்போது தோன்றும், எண்ணங்களை மட்டும் பெறுவது போதும் என்றால், எந்த மொழியைக் கற்றுக்கொண்டாலும், அம் மொழியில் பேசலாம்; போதும். ஆனால் விடுதலை உணர்ச்சிபெற, அவ்வப்போது தோன்றும் உணர்ச்சிமட்டும் போதாது; அடிமைப்படுவதற்கு முன்பு, உரிமை பெற்றவர்களாக இருந்தபோது, உலகம் மெச்ச வாழ்ந்தபோது, அந்த மக்களின் முன்னோர்கள், எங்ஙனம் இருந்தனர் என்பது தெரிய

வேண்டும்; அது குறித்துப் பேசவேண்டும்; பாரதியார் கூறியபடி அப்போதுதான் ‘எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே!’ என்ற நிலை கிடைக்கும். அந்த நிலையை அவரவர் தத்தமது தாய்மொழி மூலமாகவே பெற முடியும்; எனவே, தாய்மொழி காப்பாற்றப்படவேண்டும்.

என்ன அண்ணா! இது குறித்து இத்துணை விளக்கம் தேவையா? எவர் அறியார் இதனை! மந்த மதியினனும் இறுத்திடமாட்டானே! மொழியன்றோ, ஒரு இனத்தின் விழி7 அதனை இழந்திட, எந்த இழி மகனும் எண்ணங்கொள்ள மாட்டானே! - என்று கேட்பாய்.

கடைசிச் செய்தி தருவதானால், அயர்லாந்து வாழ அயரிஷ் மொழியைக் காத்து நில்லுங்கள், என்று திவேலரா கூறியதை நீ உவகை பொங்கிடும் நிலையில் ஏற்றுக்கொள்ளுவாய் என்பதை நான் நன்கு அறிவேன். தம்பி! அந்த ஆற்றல்மிக்கோன் கூறிய அறிவுரையை, மறுத்திடக்கூடப் போமோ என்று நீ, கேட்பாய் என்பதையும் அறிவேன். ஆனால் மொழியைக் காப்பாற்று, அப்போதுதான், உன்நாடு உன்னுடைய தாகவும், உன்னிடமும் இருக்கும் என்று திவேலரா கூறினாரே, அது போன்ற உணரச்சிமிகு அறிவுரையை எள்ளி நகையாட, எதிர்த்துப் பேசிட ஒரு மகானுபாவர் இருக்கிறார், நமது மண்ணில் இங்கா? என்கிறாயா? ஆமாம் தம்பி! இங்குதான்! ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இணையற்ற இலக்கியம் சமைத்தனரே, இதே இடத்தில்தான், இதே தமிழகத்தில்தான். இப்போதா? எக்கிறாயா? ஆமாம், தம்பி! வேதனை நிரம்பிய உண்மையை நான், உரைக்கிறேன், மொழி, இனம், நாடு, விடுதலை எனும் உணர்ச்சிகள், உன் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் இப்போதுதான், இருக்கிறார் அந்தப் புண்யவான்!! உன்னையும் என்னையும், நமக்கு உடன் இருந்து பணியாற்றும் பல இலட்சம் பண்பு நிறை வீரர் குழாத்தையும், இளித்த வாயர் என்றும், ஏதும் செய்ய இயலாதார் என்றும், பேசிக்கொண்டும் ஏசிக்கொண்டும் உலா வருகிறார், அந்த உத்தமர்!

திவேலரா சொன்னார், ‘மொழியை இழந்திடாதீர், பிறகு விடுதலைக்கான வழியே அழிந்துபடும்’ என்று.

இவர் கூறுகிறார், "இதென்ன, பித்தம்! என் மொழி! நன்மொழி என்ற பேச்சு! தாய்மொழி! தந்தை மொழி! என்ற வாதம்! இதுதான் படிப்பேன், இதைப் படிக்கமாட்டேன், என்று பிடிவாதம்! இந்த மொழிவெறி ஆகாது" என்கிறார்.

உலகம் மெச்சுகிறது. திவேலராவை!

உடனிருப்போர் மெச்சுக்கின்றனர், தாய் மொழியையும் இழித்துப் பேசிடும், இந்த மா மேதையை!!

❀ ❀ ❀

எத்தனை எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக் கொண்டோம்; கொற்றம் இழந்தோம், கோட்டை இழந்தோம், வாணிபம் இழந்தோம், விருது பலவற்றை இழந்து நிற்கிறோம்; தொழில் வளம் இழந்தோம், தோழர்களை இழந்தோம்; கலம் இழந்தோம்; காவியம் இயற்றும் திறம் இழந்தோம்; இத்தனை இன்னல்களும் தாங்கிக் கொண்டோம்; ஆனால், தமிழ் மொழியிடம் தமிழன் காட்ட வேண்டிய பற்றினை, தாய்மொழிக்குப் பேராபத்து எனின், துடித்தெழுந்து போரிடும் வீரத்தினை, தாய்மொழியைத் தாழ்த்திப் பேய்மொழி ஒன்றினைப் புகுத்திடும் கொடுமையை எதிர்த்திடும் வீரத்தினை, ஒரு தமிழன் அரசாளும் தமிழன் , தமிழ் நாட்டில், நாம் உயிருடன் உலவிக்கொண்டிருக்கும் நாட்களில், மொழிவெறி என்று கேலி பேசி இகழ்வது, அதனை நாம் கேட்டுக் கொண்டு நிற்பது, எனும், இந்தக் கொடுமையையுமா தாங்கிக்கொள்ள வேண்டும்!

❀ ❀ ❀

பற்று - வெறி - இந்த இரு நிலைகளுக்கும் இலக்கணம் காணல் எளிதல்ல - அளவு காட்டலும் ஆகும் காரியமல்ல.

இவருக்கு, நாம் மொழிக்காக வரிந்துகட்டி நிற்பது, பிடிக்க வில்லை -எனவே, அதனை வெறி என்கிறார். அவ்வளவே தவிர,



இவரென்ன, உணர்ச்சிகளை வகைப்படுத்தி, உரைத்தப் பார்க்கவோ, நிறுத்துப் பார்க்கவோ, தனியானதோர் முறை கண்டறிந்த வித்தகரோ? எவரும் கூறார். இவரே கூறிடக் கூசுவார்.

❀ ❀ ❀

தமிழகத்தில் இன்று காணப்படுவது, மொழிவெறி அல்ல! வெறியரிடமிருந்து மொழியைக் காப்பாற்றும் பணியில், தமிழரில் தகுதி படைத்தோர் ஈடுபட்டுள்ளனர்.

"கடைசிச் செய்தி யாது தருகிறீர்?" என்று, கேட்டால், அயர்லாந்து மக்களே! ஒற்றுமையாக இருங்கள்! வல்லமையோடு .... உழைத்து! தேடியதை மற்றையோருக்கும் தாருங்கள்! கல்விச் செல்வத்தை மறவாதீர்கள்! ஒழுக்கத்தை மறவாதீர்கள்! கர்த்தரை வழிபடுங்கள்! என்று எத்தனை எத்தனையோ கூறியிருக்கலாம், திவேலரா. ஆனால் அவர், அயரிஷ் மொழியை.. அயரிஷ் நாடு நிலைக்கும் என்று கூறினார்.

❀ ❀ ❀

அயர்லாந்து நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் கொண்ட, பிரிட்டிஷ் எதேச்சாதிகாரி, திவேலரா பேச்சினைக் கேட்டு, என்ன சொல்லுவான்: செச்சே! இந்த திவேலராவுக்கு என்ன புத்தி இப்படிக் கெட்டுவிட்டதே! மொழிவெறியைக் கிளறுகிறாரே!! என்றுதானே கூறுவான்.

❀ ❀ ❀

ஆதிக்க வெறிபிடித்தவர்கள், இந்தி மொழியை அகில - இந்தியாவுக்கும் ஆட்சி மொழியாக்கிவிட்டதாக அறிவித்துவிட்டார்கள்.

❀ ❀ ❀

'சுதந்திரத்தை'ப் பெறுவதற்கு முன்பே, காங்கிரஸ் கடசியினர், பதவியைச் சுவைத்தனர்; அந்த நாளில் ஆச்சாரியார் இந்தி

மொழியைக் கட்டாய பாடமாக்கியதும், கடும் எதிர்ப்பு மூண்டதும், ஆயிரவர் சிறை சென்றதும், இரு காளையர் சிறையில் மாண்டதும், தமிழகத்தின் வீர வரலாற்றுச் சுவடியிலே இடம் பெற்றுள்ளன.

அன்றெல்லாம் இந்தி எதிர்ப்பு என்பது, ஏமாற்றமடைந்த அரசியல்வாதிகளின் கைவரிசை என்று பேசப்பட்டது; ஆச்சாரியார் அப்படிச் சொல்லித்தான், நிலைமையை விளக்கப் பார்த்தார்; இன்றோ, அவரே இந்தி எதிர்ப்பாளராகிவிட்டிருக்கிறார்.

தம்பி! இருபது, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் நீ, கேட்டதுண்டோ இல்லையோ நானறியேன் - இந்தியை இன்று ஆட்சிமொழி என்றல்லவா சொல்கிறார்கள்; அப்போதெல்லாம், இந்தியை தேசீய மொழி என்றுதான் சொல்வார்கள்; தட்டித் தட்டிப் பேசுவார்கள்.

தமிழனுக்கு, இந்தியோ, வேறெந்த மொழியோ, தேசீய மொழியாகாது! என்பதற்கான காரணங்களைக் காட்டி, தீவிரமான பிரச்சாரம் செய்து, கிளர்ச்சிகளை நடத்தி, சிறை சென்று, பல்வேறு தொல்லைகளை நாம் தாங்கிக்கொண்ட பிறகு, இந்தி ஆதரவாளர்களின் தலைக்கனம் குறைந்தது - இப்போது மெத்த நாவடக்கதுத்துடன், இந்தியாவில் 14 தேசீய மொழிகள் உண்டு; இந்தி, அதிலே ஒன்று; ஆனால், மிக அதிகம்பேர் பேசும்மொழி; எனவே, அது பொது மொழி; ஆட்சிமொழி - என்று இப்போது பேசுகிறார்கள்.

இந்தி ஆதிக்க நோக்கத்தை அவர்கள் விட்டுவிட வில்லை; ஆனால் முறையை, பேச்சை மாற்றிக் கொண்டனர்.

தமிழர் தவிர மற்றவர் மொழி - இனம்-பண்பாடு என்னும் தொடர்பு பற்றி அதிகக் கவலையும் பொறுப்பும் காட்டவில்லை. இங்கோ, ஆர்வத்தீ என்றுமே அணைந்ததில்லை. ஆச்சாரியார் முயன்று பார்த்துத் தோற்றார்! ஆள்வது யார் என்று பார்த்துவிடலாம் என்று ஆர்ப்பரித்தார்! நாமல்லவா, வெள்ளைக்காரரை எதிர்த்தவர்கள்

- மொழிக்காக வாதிடும் இவர்கள் போரிட வல்லவர்களல்ல; அடக்குமுறையைத் தாங்க மாட்டார்கள், என்று தப்புக் கணக்குப் போட்டார்; தடியடி தந்தார்; மண்டைகள் உடைந்தன, மனம் உடையவில்லை; மருண்டார்; ஓடிவந்த இந்திப் பெண்ணே! கேள்! நீ, தேடிவந்த நாடு இதல்லவே! என்று பாடினர், களிநடமாடினர், தமிழர், கட்டாய இந்தி ஒழிந்தபோது,

❀ ❀ ❀

பத்துப் பேர்வழிகளைப் பிடித்துச் சிறையில் தள்ளினால் இயக்கம் படுத்துவிடும் என்று எண்ணித்தான், ஆச்சாரியார், அடக்குமுறைக்குத் தூபமிட்டார்; ஆனால் இந்தி எதிர்ப்பு வளர்வது கண்டு, மிரண்டு, சட்டசபையில், அவரே அலறிக் கூறினார்!

புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோலக் கிளம்புகிறார்களே! இந்தச் சனியன் இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால், இந்தியைக் கட்டாய மாக்கிப் புகுத்தி இருக்கவே மாட்டேன்! என்று.

❀ ❀ ❀

தம்பி! அப்போது, உன் அண்ணன் சர்வாதிகாரியாகப் பெரியாரால் நியமிக்கப்பட்டு, இந்தி எதிர்ப்புப் போர் நடத்தியபோது, காவிகட்டிய மூவர், உடன் இருந்தனர் - அருணகிரி அடிகள் - ஈழத்துச் சிவானந்த அடிகள் - சண்முகனாந்த அடிகள்!!

❀ ❀ ❀

இந்தி மொழியை ஆட்சிமொழியாக்குவது, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களுக்கு, அலுவலகத் துறையிலே ஆதிக்கத்தை ஏற்படுத்தும் அநீதியாகும் என்பதை, அறவழி அரசியல் இருத்தல் வேண்டும் என்போர் சுட்டிக் காட்டினார்.

நாம், தம்பி! இவைமட்டுமல்ல, இந்தி திணிப்பின் மூலம், தமிழ் மொழிக்கு உள்ள இடம் கேடுவதுடன், தமிழரின் இயல்பு கேட்டு, இன உணர்வு கெடடு, தனி அரசு அமைத்தாக வேண்டும்

என்ற விடுதலை வேட்கையை அறவே அழித்துவிடும், என்பதை உணருகிறோம்.

எனவேதான் , மற்றவர்களுக்கு இது ஒரு மொழிப் பிரச்சினையாக மட்டும் தெரிகிறது. நமக்கோ, இது இனவழி அரசு நடாத்தும் உரிமையை அழித்திடும், அரசியல் சூழ்ச்சியாகத் தோன்றுகிறது.

இந்தி விஷயத்திலே, அரசியல் சட்டம் மேற்கொண்டுள்ள திட்டம், ஆர அமர யோசிக்காமலும், மக்களின் கருத்தினை அறியாமலும், விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலும், ஏற்படுத்தப்பட்டதாகும்.

எனவே, இது, திருத்தப்பட்டாகவேண்டும்.

1965-ம் ஆண்டு, இந்தி, ஆட்சிமொழியாகிவிடும். ஆங்கிலம் அறவே நீக்கப்பட்டுவிடும், என்று அரசியல் சட்டம் காட்டுகிறது.

அந்த நாள் நெருங்க நெருங்க, இந்திமொழி ஆதிக்கக்காரரின் வெறி உணர்ச்சியும் வளரலாயிற்று; ஒளிவு மறைவு இன்றி, அவர்கள் தங்கள் ஆதிக்கத்தைக் காட்டிக்கொள்ளத் தலைப்பட்டனர்.

எமது மொழியே ஆட்சிமொழி! எனவே, நாங்களே ஆட்சி செய்ய வல்லவர்கள் என்று அவர்கள் எக்காளமிடத் துணிந்தனர். கொதித்தெழுந்து, இந்தித் திணிப்பை எதிர்த்தனர்.

பிறகே, தமிழர்களின் அளவுக்கு இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு வங்காளிகள் இந்தி ஆட்சிமொழியாகிவிட்டால், இந்தி பேசாத பகுதுகளில், குறிப்பாகத் தென்னகத்தில் வாழும் மக்களுக்கு, அலுவலகங்களிலே, சரியான அளவிலும் முறையிலும், இடம் கிடைக்காது, உரிமை இருக்காது, என்ற உணர்ச்சி மேலோங்கிற்று. கட்டாய இந்தியைப் புகுத்தி, தாளமுத்து, நடராசன் மாண்டிடக் காரணமாயிருந்த ஆச்சாரியாரே, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, இந்தியை எதிர்க்கலானார்.

இந்நிலையில், ஆட்சிமொழி குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழு, அறிக்கை வெளியிட்டது. டாக்டர் சுப்பராயன் அவர்கள், இந்தியைப் புகுத்தும் முறையினையும் ஆங்கிலம் அகற்றப்படும் விதத்தையும் கண்டித்து, தமது கருத்தை அறிக்கையில் இணைத்து அளித்தார்.

இந்தி பேசாத மக்களின் கருத்திணை மதிக்கவில்லை.

மதிக்காதது மட்டுமல்ல, அவர்களின் கருத்தினை அறிந்து கொள்ள முயற்சிக்கவில்லை.

இந்தி மொழியை ஆட்சிமொழியாக்குவது குறித்து, இந்தி பேசும் மக்கள், எவ்வளவு அவசரப்படுகிறார்கள். எத்துணை துணிவுடன் இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து கூறி, ஒப்பம் அளிப்பதாக மட்டுமே, குழுவின் அறிக்கை இருந்தது.

இதனை, டாக்டர் சுப்பராயன் அவர்களின் குறிப்பு, மிக நன்றாக எடுத்துக்காட்டவே, அதுவரை இந்தி விஷயம் , சாதாரண மொழிப் பிரச்சினை என்று எண்ணிக்கொண்டிருந்தோருக்கெல்லாம் கூட சூடு பிறந்தது, இந்திக்கு எதிர்ப்பு வலுத்தது.

❀ ❀ ❀

அந்த நேரத்தில்தான், நேரு பண்டிதர், நேர்மைக்கும் நீதிக்கும் துணை நிற்கும் கோலம் பூண்டவராகக், காட்சி தந்தார்.

இந்தி மொழியைத் திணிப்பது அடாத செயல் என்று காட்டினர்.

இந்தி மொழி விஷயத்தில், இந்தி பேசும் மக்கள் காட்டும் வெறி உணர்ச்சி கண்டிக்கப்பட வேண்டும் என்று உரைத்தார்.

சட்டத்தில் 1965-ல் ஆங்கிலம் அகற்றப்படும், அந்த இடத்தில் இந்தி அமர்ந்து அரசோச்சும் என்று இருந்தபோதிலும், அதன்படி, நிலைமை ஏற்பட்டுவிடாது என்று உறுதி கூறினார்.

இந்தி பேசாத மக்கள் ஆங்கிலம் எவ்வளவு காலம் ஆட்சி மொழியாக - இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதுவரை ஆங்கிலம் நீடித்திருக்கும் என்று தெரிவித்தார்.

இது விஷயமாக எந்த ஏற்பாடு செய்வதானாலும், இந்தி பேசாத மக்களுடைய கருத்தினை அறிந்தே செய்யப்படும், என்று வாக்களித்தார்.

இது விஷயமாக இந்தி பேசும் மக்களின் கருத்துக் கவனிக்கப் படவேண்டிய அவசியம்கூட இல்லை என்று அடித்துப் பேசினார்.

இவ்வளவும், தம்பி! பாராளுமன்றத்தில் பேசினார்.

இந்த நல்லுரையை, அவர் ஒருமுறை அல்ல, இருமுறை பேசினார்.

அவர் பேசப்பேச, பாராளுமன்றத்தில், மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது; பலரும் பாரர்ட்டினர், பத்திரிகைகள் புகழ்ந்தன.

பயம் போக்கினார், பாரதப் பிரதமர்.

இந்தி வெறியருக்குச் சரியான சவுக்கடி - என்றெல்லாம் தலைப்புகள் கொடுத்து பத்திரிகைகள் எழுதின.

சென்ற ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 7-ம் நாள் பண்டித நேரு பேசினார், இனி இந்தி ஆதிக்கக்காரர்களின் எண்ணம் ஈடேறாது என்று எல்லோரும் எண்ணிக் கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று. ஆட்சி மொழிப் பிரச்சினைப் பற்றி அமைந்தது.

பண்டித நேருவின் பட்டவர்த்தனமான வாக்குறுதியின்படியே, இனிக் காரியம் இருக்கும் என்ற உறுதி பலப்பட்டது.

ஆனால் தம்பி! இப்போது, ஆட்சிமொழிப்பற்றி, குடிஅரசுத் தவைலர் வெளியிட்டுள்ள ஆணை, நேரு பண்டிதர் தந்த வாக்குறுதியின் படி இல்லை.

அந்த வாக்குறுதி பற்றிக் குடிஅரசுத் தலைவரின் ஆணையில், முன்னுரையில் ஏனோதானோ என்று குறிப்பிட்டிருக்கிறதே தவிர, ஆணையில், அந்த வாக்குறுதி இணைக்கப்பட்டு இல்லை.

எனவே, இந்தி ஆதிக்கக்காரர்கள் துள்ளுகின்றனர்.

இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தப் பல குழுக்கள் விரைவாக வேலை செய்கின்றன.

குடிஅரசுத் தலைவரின் ஆணையை நிறைவேற்ற என்னென்ன செய்ய வேண்டும் என்பது குறித்து, டில்லி அரசு, மிகத் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது.

நேரு பண்டிதர் கொடுத்த வாக்குறுதி எங்கே?

இந்தியை ஆட்சிமொழியாக்கத் தீவிரமாக நடவடிக்கை எடுக்கும்போது, ஆட்சிமொழி பற்றி இந்தி போசாத பகுதிகளில் வாழும் மக்களின் கருத்தினை அறிந்துகொள்ள, ஏன் முயற்சி எடுக்கப்படவில்லை?

இவை நம்மை வாட்டும் பிரச்சினைகள்.

எனவேதான், குடிஅரசுத் தவைலர், ஆகஸ்ட் திங்கள் இறுதிக்குள், இந்தி ஆதிக்கத்துக்கு ஒப்பம் அளித்திடும் முறையில் பிறப்பித்து விட்ட ஆணையைத் திரும்பப் பெறவேண்டும் - நேரு பண்டிதரின் வாக்குறுதிக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்கான உறுதி அளிக்கப்படவேண்டும். இல்லையேல், இந்தி எதிர்ப்புக்கான போர் தொடுத்திட வேண்டும், என்று பொதுக்குழு தீர்மானித்து, குழுவும் அமைத்திருக்கிறது.

நேரு பண்டிதரின் வாக்குறுதியின்படி நடவடிக்கை எடுக்கப் படும் என்பது உறுதியானால், உடனடியாகக் குடி அரசுத் தலைவர் புதியோர் ஆணை பிறப்பிக்க வேண்டும்- இந்தி 1965ல் எப்படியும் ஆட்சி மொழி ஆகிவிடும் என்று உள்ள சட்டத்தைத் திருத்தவும், ஆட்சி மொழி விஷயமாக இந்தி பேசாத மக்களுடைய கருத்தினை அறியவும், வழிவகை மேற்கொள்ளப் படவேண்டும். இதனைச் செய்யும்படி வலியுறுத்துவது, அனைவரின் கடமையுமாகும்.

❀ ❀ ❀

நாம், நமது குருதியைக் கொட்டியேனும், கொடுமை புரியவரும் இந்தியை விரட்டத் தீர்மானித்து விட்டோம்.

ஆணைக்காகக் காத்திருந்த, அருமைத் தம்பி! ஆணை பிறந்து விட்டது; அழைப்புக் கிடைத்துவிட்டது; அணிவகுப்பிலே வந்து சேர்!!

தாயகம் அழைக்கிறது, தன்மான வீரனே! தளைகள் நொறுக்கிட விரைந்து வா, வருகிற வேகத்தில், மற்றவர்களை அழைத்துவா மறந்து விடாதே, பாசறைகள் உள்ளன, பட்டி தொட்டிகளிலெல்லாம்; உடன்வர விழைவோர் உள்ளனர் இலட்சக் கணக்கில்; அவர்களைக் கண்டு உரையாடி, அழைத்து வா, தம்பி! அதற்கான காலம் இதுதான்.

மீண்டும் மீண்டும் உனக்கு நினைவுபடுத்தத் தேவையில்லை, ஆட்சியாளர், உன் அண்ணனை, அதிக நாட்கள், அந்தக் காரியம், செய்யவிட்டு வைத்துக் கொண்டும் இருக்க மாட்டார்கள். ஆணையிட்டு அழைக்கிறது, தாயகம் அஞ்சா நெஞ்சினருக்கு, அரியதோர் வாய்ப்பு. அறிவித்துவிட்டேன்.

❀ ❀ ❀

இன்றைய தினம் வடக்கேயுள்ளவர்கள் இறுமாந்து இருக்கின்றார்களே, அவர்களெல்லாம் காடுகளிலே சுற்றிக் கொண்டும், குகைகளிலே வாழ்ந்து கொண்டும் மொழியறியாத

காரணத்தாலே வாழ்க்கை வழி தெரியாமல் வழுக்கி வீழ்ந்து கொண்டும் இருந்த நேரத்தில், இங்கே அகத்தையும் புறத்தையும் நம்முடைய பெரும் புலவர்கள் இயற்றினார்கள். முடியுடை மூவேந்தர்கள் இருந்த காலமும், அவர்கள் காலத்திலே இயற்றப்பட்டப் பெரும் இலக்கியங்களும், அந்த நாளிலே வடநாட்டிலே வங்காளமானாலும் சரி, பாஞ்சாலமானாலும் சரி, பண்டித ஜவகர்லால் நேருவினுடைய தாயகமாகப் போற்றப்படுகின்ற காஷ்மீரம் ஆனாலும் சரி, நான் வடக்கே இருக்கின்ற வரலாற்று ஆசிரியர்களைக் கேட்கின்றேன் - அந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னலே உங்களுக்கு உங்களுக்கு ஏது இலக்கணம்? உங்களுக்கு ஏது இலக்கியம்? உங்களுடைய மொழி எந்த நாட்டிலே பேசப்பட்டது? ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே- தமிழ் வணிகன் ரோம் நாட்டுக் கடைவீதியிலே பேசினானனே! ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே யவனத்திலல்லவா சென்று வியாபாரம் செய்தான்! ஈராயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே உலகத்தோடு தொடர்பு கொள்வதற்கு எங்கள் தமிழ்மொழி எங்களுக்குப் போதுமானதாக இருந்ததே.

❀ ❀ ❀

அவர்கள் தமிழ் மொழியறியாத காரணத்தால் அப்படிப் பேசுகிறார்கள் என்றால், மன்னித்து விடலாம். என்றாலும், அவர்களே சிற்சில வேளைகளீலே நம்முடைய முகவாய்க் கட்டையைத் தடவிச் சொல்லுகின்றார்கள், “தம்பி”, தம்பி! தமிழ் மொழியை இகழ்வதாகக் கருதிக்கொள்ளாதே, அது மிக நல்ல மொழி, எனக்குப் பேசத்தெரியாதே தவிர பேசுவதைக் கேட்டிருக்கிறனே். ‘மிக அழகாக இருக்கின்றது’ என்று நம்மிடத்திலே சொல்லிவிட்டு, “எங்களுடைய மொழி சிலாக்கியமானது என்று சொல்லவில்லை. எங்களுடைய மொழி இலக்கிய வளமில்லாத மொழிதான். நீங்கள் விரும்பினால் அதை 6 மாதக் காலத்திலே கற்றுக் கொள்ளலாம். ஓராண்டுக் காலத்திலே கற்றுக்கொள்ளலாம். என்றாலும் தமிழ் ஒரு புறத்திலே இருக்கட்டும்; இந்தியையும் ஏற்றுக் கொள்ளுங்கள் இந்திக்கு ‘ஆதிக்கம் தாருங்கள்’ என்று நம்மைப் பார்த்து கேட்கிறார்.

❀ ❀ ❀

தமிழை, தம்பி! தாய்மொழி என்றுதானே அழைக்கிறோம்.

மொழிகாத்திடத் தாய்மார்களை, நான் அழைப்பது முறைதானே!

❀ ❀ ❀

நாம் யார் என்பதை நமக்குக்காட்ட, நமது தாய்மொழியாம் தமிழ், கொடி இழந்து, கொற்றம் இழந்து, ஈட்டியது இழந்து, இனிமை பலவும் இழந்து கிடந்துழலும், இந்த நாட்களிலும் துணைநிற்கிறது. மனப்பிணி போக்கிவருகிறது.

அந்த அழகு தமிழ் மொழியினை அனைத்து, அழித்திட, ஏவுகின்றனர், இந்தியினை.

❀ ❀ ❀

'மொழி விஷயத்தை இவ்வளவு பெரிதாக்கலாமா' என்று பேசுகிறார்கள் சிலர். அவர்கள் வேறு ஏதோ மிகப்பெரிய, மனித குலத்தின் மேம்பாட்டுகான, விஷயத்தைக் கவனித்துக் கொண்டு இசைபட வாழ்ந்து கொண்டிருப்பரோ எனில், இல்லை, தம்பி! இல்லை! வெந்ததைத்தின்றுவிட்டு, வாயில் வந்ததைப் பேசிடுவோர்; அல்லது கிடைத்தது பறிபோகாதிருக்க, கைகட்டி வாய்பொத்திக் கிடக்கும் போக்கினர். வாயும் வயிறும் தவிர, வேறெது பற்றியும் கவலை கொள்ளா மனிதர்கள்! மனிதர்களா!! மனித உருவங்கள்!! இவர்கள் பேசுகிறார்கள், மொழிபற்றித் தகராறு கூடாது. என்று!!

❀ ❀ ❀

தம்பி! திருவண்ணாமலையில், மூன்றாண்டுகளுக்கு முன்பே இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே, இந்தி ஆதிக்கம் எனும் ஆபத்து வரக்கூடும்என்பது பற்றிப் பேசப்பட்டது. இந்தி எதிர்ப்பு நாள் நடத்தப்பட்டது; நாடெங்கும், கிளர்ச்சிக்கான முன்னேற்பாடுகள், செய்யலாயினர். ஆட்சி மொழி பற்றிக்கோர் குழு தந்த அறிக்கையில் டாக்டர் சுப்பராயனும், வங்கப் பேராசிரியர் ஒருவரும் ஒப்பம் எழுத

மறுத்து, எதிர்ப்புக் கருத்துகளைத் தெரிவித்திருந்தனர் - தமிழக மக்களுக்கு இது, பெரியதோர் விழிப்புணர்ச்சியை ஊட்டிற்று.

டாக்டர் சுப்பராயன், தமிழர் அறிமுகப்படுத்தத் தேவையில்லை அமைச்சராகி இருக்கிறார் இப்போது - முன்பு ஆச்சாரியாரின் வலக்கரம் என்ற சிறப்புக்கு உரியவராக இருந்தவர். அவர், கேர் குழுவின் முடிவைப் பலமாகத் தாக்கினார் - தக்க காரணங்களைக் காட்டி.

எங்கு சென்றாலும், எப்படி வாழ்ந்தாலும், எவருடன் குலவினாலும், தமிழன் என்ற இன உணர்ச்சி அவரை விட்டுவிடாது; எனவே அவர், மறுப்புரை எழுதியதிலே விந்தை இல்லை.

அதேவிதமான கருத்தினை, ஏறக்குறைய அதே சொற்களில் சுனிதிகுமார் சட்டர்ஜி எனும் வங்காளப் பேரறிவாளர் தெரிவித்திருந்தாரே, அது உள்ளபடி வியப்புக்குரியது ஐயமில்லை.

கனிதிருமார் சட்டர்ஜி, மொழித்துறை வல்லுநர், நாற்பது ஆண்டுகளாக அந்தத் துறையில் பணியாற்றிப் பெரும்புகழ் ஈட்டியவர்.

மேற்கு வங்க மேல்சபைத் தலைவராகத் திகழ்ந்தவர்.

வர்தாவில் துவக்கப்பட்ட 'ராஷ்டிர-பாஷா பிரசார் சமிதி' யின் மேற்கு வங்கக் கிளைக்குத் தலைவர்; எனவே, இந்திக்கு விரோதி அல்ல.

இந்தி மொழியில் நான்கு நூற்களை இயற்றியவர் - பரிசு கூடக் கிடைத்தது. எனவே, இங்கு இந்திக்காக வாதாடும் பேர்வழிகள் போல, இந்தி தெரியாதவரல்ல- விற்பன்னர்.

அப்படிப்பட்ட அறிவாளி 'இந்தி வெறி' 'இந்தி ஏகாதிபத்தியம்' என்றெல்லாம் கண்டித்து, எழுதினார்.

I cannot help feeling that the Report is simply triying to suggest certain programmes and lines of procedure from the centre without a close consideration, either of the general situation in India in the sphere of language or of future reaction and repurcussions among large sections of our poeple.

The entire out-look is that of the Hindi-speakers in the Indian union, who alone are to profit immediately and for a long time to come; if not forever.

I fear that in the entire report there is very little evidence of an attempt to understand the feelings and the intelectual approach of the Non-Hindi speaking peoples for their own languages....

The attitude is far from democratic-it is just a case of imposition of one kind of mentality over the rest....

The recommendation will in my opinion bring about the immediate creation without intending to do so of two classes of citizens in India-class I citizens with Hindi as their language obtaining an immense amount of special priveleges by virture of their language only.

I honestly feel that I am seeing an incident 'Hindi Imperialism'.

After consulting the non - Hindi states the constitution of Indai is to be amended in its section on the official language of the India Union.

❀ ❀ ❀

கேர் குழு, ஆட்சிமொழி குறித்து ஆய்ந்தறியத் தக்க முறைகளை மேற்கொள்ளவில்லை, என்பதற்கு சட்டர்ஜி காட்டுவதைவிட வெறேன்ன காரணம் தேவை?

மொழி விஷயமாக இந்தியா முழுவதிலும் என்ன கருத்துப் பொதுவாக நிலவுகிறது என்பதைக் கண்டறியாமலும், பெரும்பாலான மக்களிடையே, என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்காமலும், மத்திய அரசு என்னென்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்று மட்டுமே, குழு அறிக்கை தயாரித்திருக்கிறது.

❀ ❀ ❀

அறிக்கையின் நோக்கம் இந்தி பேசு ம் மக்களுக்கு உடனடியாகவும், நெடுங்காலத்துக்கும், ஒரு சமயம் என்றென்றும், இலாபம் கிடைத்திடக்கூடிய விதமாகவே அமைந்திருக்கிறது.

❀ ❀ ❀

இந்தி பேசாத மக்கள், தங்கள் மொழிபற்றிக் கருதுவது என்ன என்பதைக் கண்டறிய ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதும், இந்தி பேசாத மக்களுடைய உள் உணர்ச்சி மதிக்கப்படவில்லை என்பதம், அறிக்கையில் தெரிகிறது.

❀ ❀ ❀

இந்த அறிக்கையின்படி காரியமாற்றினால், இந்தியைத் தாய் மொழியாய்க் கொண்ட மக்கள் மேலோர் ஆகவும், மற்றவர்கள் இரண்டாந்தர மக்கள் ஆகவும் ஆகிவிடுவர்.

இந்தி ஏகாதிபத்யம், நெளிவதைக் காண்கிறேன்.

❀ ❀ ❀

இந்திய அரசியல் சட்டத்தில் மொழிபற்றி இருக்கும், விதியை, இந்தி பேசாத மாநிலங்களுடன் கலந்து பேசி, திருத்தி அமைக்க வேண்டும்.

❀ ❀ ❀

தம்பி! டாக்டர் சுப்பராயன், இந்தக் கருத்துக்களை ஆதரித்ததுடன், இந்தி பற்றி, பல்கலைக்கழக மாணவர்களின் கருத்தினை அறிந்திருக்க வேண்டும் என்று, சுட்டிக் காட்டினார்.

இந்தக் கருத்துகளும், நாட்டிலே, இதற்குப் பரவலாகக் கிடைத்த ஆதரவும், நமக்கெல்லாம் மிகுந்த திருப்தியை உண்டாக்கின.

❀ ❀ ❀

இந்திக்கு எதிர்ப்பு, எதிர்பாராத இடமிருந்தெல்லாம் வருகிறது. எனவே, வெறி குறையும், ஆதிக்க முயற்சி குலையும் என்று எண்ணம் பிறந்தது; செந்தேனாய் இனித்தது.

இம்மட்டோ! இந்தியைக் கட்டாய பாடமாக்கி, தமிழரை வம்புக்கு இழுத்து, தாளமுத்து - நடராசன் எனும் இரு இளைஞர்களைப் பலி கொண்ட அடக்குமுறையை அவிழ்த்துவிட்ட, ஆச்சாரியாரே, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, இந்தியைப் பலமாகத் தாக்கலானார்.

இந்தியை எதிர்த்து நானும் ஆச்சாரியாரும் ஒரே மேடையில் பேசிய அற்புதமே கண்டாயல்லவா!

வங்கம் சென்றுகூடப் பேசினார் ஆச்சாரியார்.

❀ ❀ ❀

இவைகளை எல்லாம்விட இந்தி குறித்துப் பண்டித நேரு பாராளுமன்றத்தில் இருமுறை பேசியது, நம்மைக் களிப்புக் கடலிற் கொண்டு சேர்த்தது என்னலாம்; இனிப்புக் கூட்டிப் பெருந்தன்மையைக் காட்டிப், பெருந்தலைவர் என்ற கோலம் பூண்டார் நேரு பண்டிதர்! நம்மை மகிழ்வித்தார். என்ன தெளிவு! எத்துணை கனிவு! தலைவரென்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்! மக்கள் குரலுக்கு எவ்வளவு மதிப்பளிக்கிறார். மரமண்டைகளும் புரிந்துகொள்ளத்தக்க விளக்கம் தரகிறார்! அச்சம் அகன்றது! ஐயம் நீங்கிற்று ஆணித்தரமாகப் பேசிவிட்டார்! இனி இந்தி வெறியர், பெட்டிப் பாம்பாவர்! என்றெல்லாம், நாடே புகழ்பாடிற்று, பண்டிதரின் பேருரை கேட்டு சந்தைச் சதுக்கத்திலோ, சாவடித் திண்ணையிலோ , அல்ல! தம்பி! பாராளுமன்றத்தில் பேசினார். எந்த இடத்தில் பேசினால், இந்தத் துணைக் கண்டம் மட்டுமல்ல, உலக நாடுகள் அனைத்திலும் கூர்ந்து கவனிக்கப்படுமோ, அங்குப் பேசினார்!!

Hindi would not be imposed against their wishes on non-Hindi speaking people.

English would continue as and associate or additional language in the country for an indefinite period or as long as the Non-Hindi speaking people wanted it.

The decision as to how long it would continue as and associate language should be left to the Non - Hindi speaking people and not to the Hindi-speaking people.

Many people in the South objected to learning Hindi. They did so because of a feeling that it was being imposed on them.

Therefore all talk of imposition must go. (Hear! Hear) I shall go further and say that if they don't want to learn Hindi, let them not learn Hindi.

I believe in two things. There must be no imposition of Hindi. Secondly for an indifinite period-I do not know how long - English should continue as an associate or additional language, not because of certain facilities and all that but because I do not wish people in the Non-Hindi areas to feel that certain doors of advances are closed to them.

So I would take (English) it as an alternative language so long as people require. It and the decision on that I would not leave to the Hindi-knowing people, but to the non-Hindi knowing people (Cheers)

படித்துப் படித்து இன்புறலாம் என்று தோன்றும், பண்டிதரின் பேருரை!

இந்தி பேசாத மக்கள் மீது அவர்களின் விருப்பத்துக்கு மாறாக இந்தி திணிக்கப்படமாட்டாது

❀ ❀ ❀

துணைமொழியாக, ஆங்கிலம், நீண்ட நெடுங்காலம் - அல்லது இந்தி பேசாத மக்கள், எவ்வளவு காலத்துக்கு இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதுவரையில் ஆங்கிலம் துணைமொழியாக இருக்கும்.

❀ ❀ ❀

ஆங்கிலம் துணைமொழியாக எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்பதை முடிவுகட்டும் உரிமை, இந்தி பேசும் மக்களிடம் அல்ல, இந்தி பேசாத மக்களிடமே விடப்படும்.

❀ ❀ ❀

தெற்கே பலர், இந்தி கற்பதை மறுக்கிறார்கள்; இந்தி திணிக்கப் படுகிறது என்ற எண்ணத்தினாலே.

எனவே, திணிப்புப் பற்றிய பேச்சு ஒழியவேண்டும்.

நான் இன்னும் சொல்லுவேன்; அவர்கள் இந்தி படிக்க விரும்பாவிட்டால், படிக்கத் தேவையில்லை.

இரு விஷயங்களில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். ஒன்று இந்தித் திணிப்பு கூடவே கூடாது. இரண்டாவதாக - காலம் குறிப்பிட முடியாது - எவ்வளவு காலம் என்று எனக்கே கூறத் தெரியாது. ஆங்கிலம் துணைமொழியாகத் தொடர்ந்து இருந்தாக வேண்டும்; அதனால் சிலவசதிகள் உள்ளன என்பன போன்ற காரணங்களுக்காகக்கூட அல்ல; தங்கள் முன்னேற்றம் தடுக்கப்பட்டு விட்டதாக இந்தி பேசாத மக்களுக்கு ஒரு உள் உணர்ச்சி ஏற்படக் கூடாது என்பது என் எண்ணம்.

எனவே, ஆங்கிலம், இந்திக்குப் பதிலாக, மாற்று ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் - எவ்வளவு காலத்துக்கு மக்கள் விரும்புகிறார்களோ, அதுவரையில் ஆங்கிலம் இருக்கவேண்டும். இதற்கான முடிவு கூறும் உரிமையை இந்திபேசும் மக்களிடம் நான் விடமாட்டேன்; இந்தி பேசாத மக்கள்தான் முடிவு எடுக்க வேண்டும்.

தம்பி! இவ்வளவு தெளிவாக இந்தத் துணைக்கண்டத்தின் முதலமைச்சர், காங்கிரஸ் கட்சியின் ஈடு எதிர்ப்பில்லாத் தலைவர், உலகப் பெருந்தலைவர்களின் வரிசையிலே இடம் பெறத்தக்கவர் என்ற புகழ் ஈட்டிக் கொண்டவர், பஞ்ச சீல கர்த்தாவென்றும் பாண்டுங் மாநாட்டு வீரர் என்றும் கொண்டாடப்படுபவர், போர் வெறிகொண்ட இந்தக் கெட்ட உலகிலே, சமாதானம் நிலவப் பாடுபடும் சாந்த மூர்த்தி, என்று போற்றப்படுபவர் - பண்டிதர் - பேசினால் யாருக்குத்தான். நம்பிக்கை மேலிடாது.

இந்தி குறித்து இனிக் கவலையில்லை.

அச்சம் இல்லை; நீதி நிலைத்தது.

இந்தி வெறியரின் கொட்டம் அழிந்தது; ஆதிக்கம் ஏற்படாது

இந்தி பேசாதா மக்களின் உரிமை பாதுகாக்கப்பட்டு விட்டது பண்டித நேருவே இதற்கு உறுதிமொழி அளித்து விட்டார்.

அவருடைய உறுதிமொழியை, மாஸ்கோவும் வாஷிங்டனும், பெர்லினும் இலண்டனும், பாரிசும் டோக்கியோவும், மதிக்கும்போது, நாம் மதிப்பளிக்காதிருப்பது, அறிவுடைமையாகுமா! - என்றெல்லாம் தம்பி! நம் நெஞ்சம் எண்ணியதிலே, தவறு இல்லையே! நம்பினோம்!

❀ ❀ ❀

பண்டித நேரு, கொதிக்கும் உள்ளத்துக்குச் சிறிதளவு சாந்தி தேடித் தருகிற முறையில், தேன்மொழி பேசிவிட்டு, இந்தித் திணிப்பு நடைபெறும் போது, நம்மை மயக்கத்திலிருந்திடச் செய்து விட்டால், நிலைமை மோசமாகிவிடுமே என்ற கவலை, நமக்கு, அந்த நேரத்திலும் இருந்தது. வாழ்த்தினோம்! வலியுறுத்தினோம்! என்ற அளவோடு நின்றோமில்லை.

“எந்த நேரத்திலும் தீவிரமான அறப்போர் நடத்தவேண்டிய நிலைமை ஏற்படக்கூடும் என்று இம்மாநாடு கருதுவதால், ஒவ்வொரு கிளைக் கழகமும், ஒவ்வொரு சிற்றூரிலும் இந்தி ஆதிக்க ஒழிப்பு அறப்போரில் ஈடுபட உறுதிக் கொண்டவர்களின் பட்டியலைத் தயாரித்து, தலைமைக் கழகத்திற்கு அனுப்பித் தரவேண்டும்”

என்ற தீர்மானத்தையும், பூவிருந்தவல்லி மாநாட்டிலே நிறைவேற்றியிருக்கிறோம்.

❀ ❀ ❀

இந்தி பேசாத மக்களுடைய கருத்தை அறிந்துகொள்ளாமல், இந்தியை ஆட்சிமொழி ஆக்குவது அடாத செயல், அதைத் தடுக்கத்தான், நமக்கு ஆவி; தாசராகித் தவித்திட அல்ல!!

திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவன் துச்சாதனன் என்றால், திரௌபதைக்கு என்றையத்தினம் துணி கிடைக்கும்?

திரௌபதைக்கு எந்தத் துணி தேவை என்பதைத் தருமன் கூற உரிமைபெற்றால், ஏதோ ஒரு நாட்டுச் சேலையாவது கிடைக்கக் கூடும்.

அருச்சுனனுக்கு அந்த உரிமை இருப்பின் ஒரு அலங்காரச் சேலை வாங்கித் தருவான். துரியோதனனுக்கோ துச்சாதனனுக்கோ அந்த உரிமை அளிக்கப்பட்டால், எந்தச் சேலை கிடைக்கும்? இருக்கிற சேலையையே உருவியவர்கள் அல்லவா, அவர்கள்!

அதுபோன்று இருக்கிறது, அரசியல் ஆதிக்கத்தைப் பறித்துக் கொண்டுள்ள வடவர், இந்தி பேசும் மக்கள், பார்த்து, நமக்கு எந்த மொழி ஆட்சிமொழி என்று முடிவுகட்டுவது.

❀ ❀ ❀

போலீஸ் இருக்கிறது, ஏவிச் செம்மையாக அடிக்கச் சொல்லலாம் என்ற துணிவு! அந்தப் போலீஸ் துறையினருக்கு மட்டுமென்ன? இந்திமொழி வந்து, ஆலாத்தி எடுக்கப் போகிறதோ!!

"பெயர்?"

"பாரதிதாசன் என்கிற பாண்டுரங்கம்"

"எதற்காக, வந்தீர்?"

"தங்களைப் பேட்டி கண்டு மனு கொடுக்க"

"மனுவா?"

"ஆமாம்! நான், சப்-இன்ஸ்பெக்டராக நீண்டகாலமாக இருந்து வருகிறேன்; இப்போது மேல் உத்தியோகம் பார்க்க விரும்புகிறேன்."

"உம்! மேல் உத்தியோகமா? சரி! தகுதி, கூறும்"

"எட்டு மாவட்டங்களிலே கொட்டமடித்துக் கொண்டிருந்த, கொலைக்காரக் கோபாலசாமியைப் பிடித்தது, நான்தான்!"

"அப்படியா? பிறகு...?"

"சூதாட்ட மடம் நடத்திய சுப்பண்ணா கோஷ்டியை, சிவராத்திரி அன்று, சுடுகாட்டு மண்டபத்திலே, சுற்றி வளைத்துப் பிடித்தது, நான்தான்! காதைப் பாருங்கள்! அந்தக் காலிகடித்துத் துண்டாக்கி விட்டான்."

"சரி! சரி! வேறே?"

"கடமை தவறாதவன். ஒரு கருப்புப் புள்ளியும் கிடையாது."

"இது கிடக்கட்டும். மேல் உத்யோகம் வேண்டும் என்கிறாயே! தகுதி வேண்டுமே, அதற்கு!! இந்தி தெரியுமா?"

"இந்தி மொழியா"

"என்னய்யா இழுத்துப் பேசுகிறீர்! இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி! அதுவே தெரியாதா உனக்கு தூத்தூது! இந்திமொழி தெரியாத ஆளுக்கு, மேல் உத்யோகமா? இந்த உத்யோகமே, இருக்கப் படாதே! திருடனைப் பிடித்தேன், சூதாடியைப் பிடித்தேன் என்று மளமளவென்று வீரப்பிரதாபத்தை எல்லாம் கொட்டிக் காட்டினாயே! இந்தி தெரியாத ஆள், இதெல்லாம் தெரிந்து என்ன பலன்? போ! போ! போய், இந்தியில் பரீட்சை எழுது! மார்க்கு வாங்கு! அந்தத் தகுதிபெற்ற பிறகு, வா! போ! போ!!"

தம்பி! நாம், தடுத்து நிறுத்தாவிட்டால், இந்தி ஆதிக்கம் ஏற்பட்டு விடும்; ஏற்பட்டுவிட்டால் போலீசுக்கும் இதே கதிதான்! அவர்கள் தானே அடிக்கப் போகிறார்கள்! பரவாயில்லை! தாங்கிக் கொள்வோம் தம்பி! நம் இனத்தின் மீது (போலீசில் உள்ளவர்களையும் சேர்த்துத் தான்) இந்தி ஆதிக்கம் செலுத்த

வருகிறது; அந்தத் தாக்குதலைவிட, போலீஸ் தடி கொண்டு தாக்குவது கொடுமையானதல்ல! தடி உடலைப் புண்ணாக்கும், உயிரைக் குடிக்கும்; இந்தியோ, மனதைப் புண்ணாக்கும், மரபினை அழித்திடும்!

❀ ❀ ❀

தம்பி! நாம், நீயும் நானும், நம்மைப்போல உள்ள மூன்றுகோடி தமிழர்களும், தமிழ்த்தாய் தலைவிரிகோலமாகி, தளைகள் பூட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தளைகளும் உடைபடவில்லை, நமது உடலிலும் உயிர் இருந்துகொண்டிருக்கிறது. வாழ்கிறோம் தமிழர் என்ற பெயரையும் சூட்டிக்கொண்டு!!

❀ ❀ ❀

அவர்கள் கிடக்கட்டும், தம்பி! தமிழ்மொழி கற்றறிந்தோர்! உரிமைவேட்கை குறித்து, நாடு பல சுற்றியும் ஏடு பல படித்தும் வித்தகரானோர்! இவர்களாகிலும் மொழிக்கு வரஇருக்கும் ஆபத்தை அறிந்து துடித்தெழக், காண்கிறோமா? இந்தி ஆதிக்கம், வெறி அளவு வளர்ந்திருக்கிறது. இது ஆகாது, கூடாது, தீது, என்று எடுத்துரைத்தால், என்ன கெட்டுவிடும்.

❀ ❀ ❀

தம்பி! இங்கு இருப்பது போலத்தான் எங்கும், என்று எண்ணி விடாதே.

நரேஷ்சென் குப்தா
நரேந்திர தேவ்
திரிகுண சென்
சுபீந்திரநாத் தத்தா
ராதாராணி தேவி
பேராசிரியர் குகா
புத்ததேவ போஸ்
பிரமாதநாத் பிசி
நிர்மல்சௌத்ரி பட்டாச்சாரியா



காஜிஅப்துல் வாதுத்
கஜேந்திரநாத் சென்
அபு சையத் அயூப்
டாக்டர் அதீந்திரநாத் போஸ்
விவேகானந்த முகர்ஜி
மைத்ரேயி தேவி
புரோதீவா போஸ்
சாகராமாய் கோஷ்
அமலன் தத்தா
கே.கே.சின்கா
ஹிரேன் குமார்சன்யால்

இவர்கள், தம்பி! வங்காளத்திலே உள்ள மேதைகள், ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் வித்தகர்கள்; புலவர்கள், பெரும்பேராசிரியர்கள்; கல்வித்துறை நிபுணர்கள்.

இவர்கள் கையொப்பமிட்டு, ஒரு அறிக்கையை இந்தத் திங்கள் துவக்கத்திலே வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்திய தேசிய மொழிகளின் வளர்ச்சிக்கான மன்றம் ஒன்று, பணியாற்றி வருகிறது; அந்த மன்றத்தின் சார்பில், இந்த அறிக்கை, அதிலே இந்தி ஆட்சிமொழி ஆவதுபற்றிக் குடிஅரசுத் தலைவர் விடுத்துள்ள ஆணை கண்டிக்கப்பட்டிருக்கிறது.

ஆணை கண்டோம், ஏமாற்றமடைந்தோம்.

ஆணையில் தெளிவு, விளக்கம், சரியாக இல்லை.

இந்திமொழியின் சார்பில் ஒருதலைப்பட்சமான அக்கரை காட்டப் பட்டிருக்கிறது.

இந்தி பேசுவோருக்குத் தனிச்சலுகை, மேலிடம், அளிக்கப்படுகிறது.

இந்தி அல்லாத மற்றமொழி பேசுவோருக்கு இது பெருத்த அநீதி இழைப்பதாகும்.

இந்தி பேசாத மக்களுடைய ஒப்பம் பெறாமல், ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தி ஆட்சி மொழியாகப் புகுத்தமாட்டோம் என்று, **1959**-ம் ஆண்டு செப்டம்பர் நாலாம் நாள். பாராளுமன்றத்தில் பண்டித நேரு வெளியிட்ட கொள்கை, திட்டவட்டமாகக், குடிஅரசுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிடும் என்று, இந்த மன்றம் எதிர்பார்த்தது; ஏமாற்றமடைந்தது.

குறுகிய கால அளவுக்குப் பிறகு, அகில - இந்தியத்துறை அலுவலகப் பணிகளுக்கான தேர்வுகள், இந்தியில் நடைபெறும் என்று, ஆணையில் குறிப்பிட்டிருப்பதை இந்த மன்றம், பலமாகக் கண்டிக்கிறது.

இந்தத் தேர்வுகளில், இந்தியாவின் மற்றத் தேசிய மொழிகள் குறித்து யோசிக்கக்கூட இல்லை என்பது கண்டிக்கத்தக்கது.

இந்த ஏற்பாட்டினால் இந்தி பேசும் மக்களுக்குத்தான் மற்றவர்களை மிஞ்சக்கூடிய, சலுகை கிடைக்கும்.

இந்த நிலைமையினால் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே ஆபத்து விளையக்கூடும்.

முதலமைச்சர் நேரு கொடுத்த வாக்குறுதியின்படி, காலக்கெடுவின்றி, ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருக்கும் விதத்தில், குடி அரசுத்தலைவர் தமது ஆணையைத் தெளிவாக்கும்படி இம்மன்றம் கேட்டுக் கொள்கிறது.

❀ ❀ ❀

தம்பி! இந்த மன்றத்தார் நம்மைவிட ஒருபடி மேலே சென்று விட்டார்கள்.

மற்ற மொழிகளின் வளர்ச்சிக்காக அளிப்பதைவிட மிக அதிகமான தொகையை இந்திமொழி வளர்ச்சிக்காக, இந்திய சர்க்கார் தரக் கூடாது என்பதை அறிக்கை வலியுறுத்துகிறது.

❀ ❀ ❀

தம்பி!

கிருஹப்பிரவேச மஹோர்சவ விஞ்ஞாபனம்

நிகழும் விகாரி வருஷம் தைமாசம் சுக்ரவாரம் உதயாதி சுவமுகூர்த்தத்தில் ஸ்ரீ மீனாட்சி சமேத சொக்கர் கடாட்சத்தால், அடியேன் ஏகாம்பரதாசன், திருமஞ்சன வீதியில் புதிதாக அமைந்திருக்கும் வீட்டிற்கு,

கிருஹப்பிரவேசம்

செய்யப் பெரியோர்களால் நிச்சயித்து இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டஜன மித்ராளுடன் எழுந்தருளி எம்மை ஆசீர்வதித்தருள வேண்டிக் கொள்கிறேன்.

அன்றிரவு பிரம்மஸ்ரீ காவியானந்த ஸ்வாமிகளின்

'ருக்மணி பரிணயம்'

எனும் காலட்சேபம் நடைபெறும். அனைவரும் வந்திருந்து பகவத் பிரசாதம் பெற்று ஆனந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்
தங்கள் விதேயன்
ஏகம்பரதாசன்
"அனுக்கிரஹம்"

இப்படி ஒரு அழைப்பிதழ் உனக்குக் கிடைத்தால், என்ன என்ணிக் கொள்ளுவாய்? என்னண்ணா! இது! எங்கே கிடைத்தது

இந்தப் பத்தாம் பசலி, எந்தக் குப்பையிலே கிடந்தது? தமிழா, இது? ஒரே மணிப்பிரவாளம்! யார் இந்தத் தாசன்? தேடித் தேடிப் பார்த்தால், தூய தமிழ்ச் சொற்கள் இந்த அழைப்பிதழிலே, ஒரு பத்துக்கூடக் கிடைக்காது போலிருக்கிறதே! தமிழ் வரிவடிவம் ஒரு கேடா, இந்த கலக்கலுக்கு! விஞ்ஞாபனமாம் விஞ்ஞானபனம்! க்ருஹம்! ஏன்? அழைப்பு! இல்லம்! என்று சொன்னால் என்னவாம்? வாயா வெந்துவிடும்? என்றெல்லாம் கேட்பாய் - கோபம் பொங்கும் உனக்கு. தமிழ்மொழியின் தூய்மையைக் கெடுக்கும் செயலைத்தான், நீ வன்மையாகக் கண்டிப்பவனாயிற்றே!

❀ ❀ ❀

தமிழ்த்தாய் தலைவிரிகோலமாகிக் கதறி, என் மக்கள் இனி இந்த இந்தியிடம் சிக்கி என்னென்ன பாடுபடவேண்டி நேரிடுமோ, இந்தியை ஆட்சிமொழி ஆக்கிவிட்டால், அம்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டவர்களன்றோ, ஆதிக்கம் செலுத்திடவும், அரசோச்சி மகிழவும் வழி ஏற்பட்டுவிடும், என் மக்கள் இழிநிலைமைக்குத் தள்ளப்பட்டுக் காடு வெட்டவும், கல் உடைக்கவும், குப்பை கூட்டவும் குற்றவேல் புரியவுமான அடிமை நிலையன்றோ அடைவார்கள்! சீராட்டிப் பாராட்டி வளர்த்தேன், செல்வக் குடிப்பிறந்தீர்கள், செயற்கரிய செய்து வாழ்வீர்கள் என்றெல்லாம் சொல்லிச் சொல்லிப் பூரித்துக் கிடந்தேன். இப்போதோ எமது மரபு அழித்திடும் இந்தியன்றோ ஆட்சிமொழி ஆகிறதாம் என்று கதறித் துடித்திடும் வேளையிலே, இந்திமொழிக்கு ஓர் வெற்றி உலா நடத்தி, அந்த உலாவின்போது, இந்திக்கு ஆலவட்டம் வீசிடத் தமிழ்த்தாயை அழைத்தால், எப்படி இருக்கும் நிலைமை?

❀ ❀ ❀

இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், அதற்கு என்னென்ன குழுக்கள் அமைக்கலாம். என்பதுபற்றி ஆர்வமும் அவசரமும் காட்டப்பட்டு, செயல்பட்டு வருகிறது; அந்த ஆர்வமும் அவசரமும்; இந்தி பேசாத மக்களுடைய கருத்து அறியவேண்டும், காலக்கெடு வின்றி ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருக்க

வேண்டும், என்பதிலே ஏன் காட்டப்படவில்லை. அந்த வகையிலே என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன?

இந்தி பேசாத மக்களின் கருத்தை அறியவும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கவும் உறுதி இருக்குமானால், அந்த வகையில் இந்திய அரசியல்சட்டம் திருத்தப்படவேண்டும்! அதற்கான நடவடிக்கை, என்ன எடுத்துக்கொள்ளப்பட்டது?

அந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படாமல், இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதற்கான வழிவகைகளிலே மட்டும், ஆர்வமும் தீவிரமும், அவசரமும் காட்டப்படுவதுதான், பேராபத்து என்கிறோம்.

தம்பி! இதற்காகத்தான், இந்தி எதிர்ப்பு அறப்போர் நடாத்த நமது கழகம் முடிவெடுத்திருக்கிறது.

❀ ❀ ❀

என்ன செய்வது? நமது நாட்டிலே மூண்டுகிடக்கும்இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை, எப்படிக் குடிஅரசுத் தலைவர் உணரும்படி செய்வது?

உடன் வருவோர், அவரிடம் உபசாரம் பேசுவர், உண்மை நிலையைக் கூறப்போவதில்லை.

அவராகக் கேட்டாலும், தேர்தலில் தோற்ற ஒரு சிறு கூட்டம், காரணமற்று இந்தியை எதிர்க்கிறது என்று கூறி, அவருடைய புன்னகையைப் பரிசாகப் பெறவே முயற்சிப்பர்.

❀ ❀ ❀

தமிழரின் தவிப்பை, தத்தளித்துக் கிடப்பதை அவர் அறியச் செய்வது எவ்வகையில்?

உமது ஆணை கண்டு, தமிழர் அஞ்சுகின்றனர் - இந்தி ஆதிக்க மொழியாகிட வழிவகுத்துவிட்டீர் என்று, நேரு பண்டிதர் கொடுத்த வாக்குறுதியும் மீறப்படுகிறது என்று. இதை நீக்கும் வகையில்.

இந்தி பேசாத மக்களின் விருப்பம் அறியாமல், இந்தி திணிக்கப்பட மாட்டாது,

அவர்களின் விருப்பப்படி, காலக் கெடுவின்றி ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருந்திடும். அதற்கான முறையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படும். என்று குடிஅரசுத்தலைவரை, 'அறிக்கை' பிறப்பித்துவிட்டுத் தமிழகம் வந்து உலா நடத்திக் கொள்ளும்படி இங்குள்ள அமைச்சர்கள் கூற வேண்டும்.

❀ ❀ ❀

பாபு பவனிவந்தார், ஊருக்கு நாலுவீதம், மொத்தத்தில் நாற்பது ஐம்பது பிணங்கள் கீழே சாய்ந்தன தமிழகத்தில், என்று வரலாற்றிலே பதித்துக்கொள்வது, சிறப்புக்கும் அறிவுடைமைக்கும் அறநெறிக்கும் உகந்ததென்றால், ஆட்சியாளர், தமது இஷ்டப்படி செய்து கொள்ளட்டும்.

எதிர்ப்பு உணர்ச்சி காட்டாதிருந்தால், இந்திக்குத் தமிழகம் தலை சாய்த்து விட்டது என்று பொருள்படும் என்று உணரும் தமிழர், அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சமாட்டார்கள்! பாபுவின் பவனி முறையுமல்ல; அவருக்குத் தேடித் தரவேண்டிய சிறப்பினையும் இங்குள்ள அமைச்சர்கள், பெற்றளிக்கத் தவறி விட்டார்கள் என்ற பழிச்சொல்லே பெறப் போகிறார்கள்.

❀ ❀ ❀

நிதி அமைச்சர் பேசாமலும் இல்லை.

ஏன் வீண் பீதி?
இந்தியை எங்கே திணிக்கிறார்கள்?
தமிழன்றோ ஆட்சிமொழி ஆகி இருக்கிறது

ஆங்கிலம் அறவே போய்விடாது.
என்றெல்லாம் பேசி வருகிறார்,

ஒருவிதத்திலே மகிழ்ச்சிதான் எனக்கு
எவனவன் இந்தியை எதிர்ப்பவன்?
இந்திதான் நமது தேசிய மொழி.
இந்திதான் ஆட்சிமொழி.
தமிழ்மொழி, தாய்மொழி என்று பேசலாகாது.
தமிழர் வேறு,இந்தியர் வேறு என்று கூறுவது மடமை,

என்றெல்லாம் பேசவில்லை - பேச முடியவில்லை - பேசினால், இப்படியும் ஒரு தமிழ்த்துரோகி இருக்கிறாரே என்று பாமரரும் கூறிக் கண்டிப்பார்கள் என்ற பயம் மேலிட்டிருக்கிறது. தமிழ் இனம் விழிப்புற்று இருக்கிறது என்பது தெரிந்து, சுடச்சுடப் பேசுவதுதான் சுவைமிக்கது என்ற கருத்தில் நாவைப் பயன்படுத்தும் அமைச்சர், அடக்க ஒடுக்கமாகப் பேசுகிறார். அந்த மாறுதல், வரவேற்கத்தக்கது; ஆனால், உண்மையையா, அவர் பேசுகிறார்?

தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட்டிருக்கிறது என்பதை மிகச் சிரமப்பட்டு விளக்கி இருக்கிறார்.

தமிழகத்தில், தமிழ் ஆட்சிமொழி ஆகி இருப்பது. அதிசயத்திலே ஒன்றல்ல.

மொழிவழி மாநில அமைப்பின்போதே, இப்படித்தான் நடத்திடும் என்பதை அனைவரும் அறிவர்.

தமிழ் மாநிலத்தில் தமிழ் ஆட்சிமொழி என்றிருப்பது போலவே, பிறமொழி பேசிடும் மாநிலங்களிலேயும் ஏற்பட்டுள்ளன.

❀ ❀ ❀

தமிழ் மாநில அரசு தில்லி அரசுக்குக் கட்டுப்பட்டு, அது இட்ட வேலையைச் செய்துகிடக்கக் கட்டுப்பட்டிருக்கிறது.

எனவே ஆட்டிப்படைக்கும் அதிகாரம், தில்லிக்கு.

அந்தத் தில்லிக்கு, ஆட்சி மொழி இந்தி!

பேரரசு என்ற நிலைபெற்று உள்ள தில்லியில், எம்மொழி ஆட்சி மொழியோ, அந்த மொழியைத்தான் உலக நாடுகள், உண்மையான ஆட்சிமொழி என்று ஏற்றுக்கொள்ளும் - மதித்திடும்.

இந்த உண்மையை எடுத்துரைக்காது மறைத்துவிடுகிறார் அமைச்சர்.

வெளிநாடுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்த நடவடிக்கைகள், இந்தியா முழுவதுக்கும் (தமிழகம் உட்பட) என்று இயற்றப்படும் சட்டங்கள், உத்தரவுகள், எல்லாம் இந்தியில்தான்!

இந்தியப் பேரரசின் கட்டுக்கு அடங்கி நடக்கவேண்டிய இராணுவத்தில் இந்திமொழியில்தான், கவாத்து பழகுவதிலிருந்து காரிய விளக்கங்கள் வரையில்.

இந்தியா முழுமைக்கும் என்று இருக்கிற உச்ச, உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் இந்தி மொழியில்தான்.

❀ ❀ ❀

இந்தியப் பேரரசு நடைபெறப் பணியாற்றிவரும் அலுவலங்களிலே உள்ளோர், இந்தி கற்றுத் தேறியாக வேண்டும்.

இவைகள், எதைக் காட்டுகின்றன? இந்தி, ஆட்சி மொழியாகி விடுவதை, ஆதிக்க மொழியாகி விடுவதை!

❀ ❀ ❀

அந்தப் பேரரசு, இந்தியை ஆட்சிமொழி என்றாக்கி விட்டால், இங்கு தமிழ்த்தான் ஆட்சிமொழி என்று கதைப்பதிலே, பொருள் என்ன இருக்கமுடியும்!

நீதி மன்றங்களில் கூட, இனித் தமிழ்தான் என்றார் அமைச்சர்.

யார் அவ்விதம் சொல்வது? உச்ச உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் இந்தியில் இருந்து தீரும். அந்நிலையில், ஒவ்வொரு மாநிலமும், தத்தமது தாய்மொழியில், உயர்நீதிமன்ற நடவடிக்கைகளை நடத்திச் சென்றால், குழப்பமல்லவா ஏற்படும். எனவே மாநில உயர் நீதிமன்றங்களும், இந்தி மொழியிலேயே நடைபெறவேண்டும் என்று அறைகிறார். தில்லி அமைச்சர் சென்!

இப்போதும், உயர்நீதிமன்றம் தமிழில்தான் நடைபெற வேண்டும் என்பதில், சென்னைத் துரைத்தனம் உறுதியாக இருக்கிறது என்று, பேசுகிறார் நிதி அமைச்சர்.

உரத்த குரலிற்கூடப் பேசலாம் - ஆனால் உறுதியாக இருக்க இவருக்கு ஏது உரிமை?

உயர்நீதிமன்றங்கள் இப்படி இப்படி நடைபெற வேண்டுமென்று, தில்லி தீர்மானித்துவிட்டால், அதை மீறும் துணிவும், வழி வகையும், இவருக்கு ஏது?

இவரே அல்லவா, தமது ஆட்சியின் கீழுள்ள இந்த மாநிலத்தில், ஏதேனும் ஓர் இந்திய மொழி பயிலவேண்டும் என்று தந்திரமாகக் கூறிவிட்டு, எல்லாப் பள்ளிகளிலும் இந்தியைத் திணித்திருக்கிறார்.

இவர், இந்தித்திணிப்பு இல்லை என்று பேசுவதை, எவர் மதித்திடுவர்.

❀ ❀ ❀

குடிஅரசுத்தலைவரின் துணைகொண்டு, இந்தியை எப்படியும் ஆட்சி மொழியாகத் திணித்து, ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தி பேசாதவர்களை அடிமைகளாக்கிடலாம். ஆணவ அரசினை நிலை நாட்டி விடலாம் என்று எண்ணிடும் வன்கணார்கள், இந்தி பற்றிய விளக்கம் தெரியாமல், இந்தி

பேசாதாரின் மனம் அறியாமல், பிரச்சினையைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதுபோல எண்ணிக்கொண்டு, மெத்தவும் கற்றறிந்த வித்தகர்கள், பேசினர், எழுதினர்! வடக்கே இன்று ஆணவம் தலைக்கேறிய நிலையில் உள்ள இந்தி வெறியர்கள், தலைவர்கள் என்ற நிலை பெற்றுள்ளனர். எப்படி, காந்தியாரின் சமரச நோக்கத்தை, கோழைத் தனம் என்று திரித்துக் கூறி, அவருக்கு எதிர்ப்பு மூட்டி, இறுதியில் கயவனொருவன் அவரைச் சுட்டுக் கொன்றிடும் கொடுமை ஏற்பட்டதோ, அதுபோல இந்தி பேசாதாரின் உணர்ச்சிகளையும் உரிமையையும் மதித்து, அவர்களை இந்தி மொழிமூலம் அடிமைப்படுத்த முற்படுவது அடாது என்பதை வெளிப்படையாகத் தெரிவித்து, அத்தகைய அக்ரமம் நடைபெற நான் இடந்தரமாட்டேன், உடந்தையாக இருக்கப் போவதில்லை, என்று உறுதியாக உரைத்திடும் எவரையும், எதிர்த்து ஒழிக்கவோ, குழிபறிக்கவோ, குலவிக் கெடுக்கவோ தயாராக உள்ள ஓர் கூட்டம். மாடமாளிகைகள், வாணிபக் கோட்டங்கள் எனும் இடங்களில் மட்டுமல்ல, கல்விக் கழகங்கள், துரைத்தன மன்றங்கள் ஆகியவற்றிலும், நிரம்பி உள்ளனர். அவர்கள் இந்திக்காக வாதாடுவது கூடத் தேவை இல்லை; கட்டளை பிறப்பிக்க வேண்டியதுதானே! இதிலென்ன காரணம் கூறுவதும், கனிமொழி பேசுவதும், இந்தி படித்துக்கொள்ளுங்கள், அப்போதுதான் ஏற்றம் பெறுவீர்கள் என்றுகூட எடுத்து இயம்ப வேண்டும், படித்தால், பிழைக்கட்டும், இல்லையேல் சாகட்டும். நமக்கென்ன; நாம் ஆணையிடும் நிலையில் இருக்கிறோம்; அவர்கள் அடிபணிந்து கிடக்கிறார்கள். நாம் வேங்கைகளாகி உள்ளோம்; அவர்கள் வெள்ளாடுகள்! இந்நிலையில் அவர்களிடம் நாம் ஏன் கெஞ்சிக் கிடக்கவேண்டும்; கொஞ்சுமொழி பேசவேண்டும், இந்தி தான் ஆட்சிமொழி! அறிந்திடுக! அதற்கேற்ப நடந்திடுக! என்று கட்டளையைப் பிறப்பித்துவிட்டு, அதனைச் செயல்படுத்தக் கடுமையான நடவடிக்கைகளைத் திறம்பட எடுத்துக் கொள்ள வேண்டியது தானே முறை! என்று கொக்கரித்துக் கிடக்கும் கெடுமதியாளர்கள், ஆட்சியின் எடுபிடிகளாக அல்ல, ஆட்டிப்படைப் போராக உள்ளனர். இதனைப் பண்டித நேரு மிக நன்றாக அறிவார். அறிந்திருந்தும், தமிழகம் எத்தகையது என்பதையும் தெரிந்துகொண்டதால், வாக்குறுதி வழங்கினார்; வாழ்த்தினோம் அவரை.

நமக்குக் கிடைத்துள்ள வெற்றி, தம்பி! நமக்கு மட்டுமல்ல, நம் தமிழகத்துக்குக் கிடைத்துள்ள வெற்றி - அது மட்டுமல்ல, இந்தி பேசாத மாநிலங்கள் அனைத்துக்கும் கிடைத்துள்ள வெற்றி, இதுதான், இந்தித் திணிப்பு இல்லை; ஆங்கிலம் அகற்றப்பட மாட்டாது; இந்தி பேசாத மக்களின் கருத்தறியப்படும்; ஆங்கிலத்தை காலக்கெடுவின்றி நீடித்திடச் செய்யும் சட்டம் நிறைவேற்றப்படும் என்ற திட்டவட்டமான, அறிவிப்புகள் கிடைத்துவிட்டன. அவை நேரு பண்டிதர் தணிப்பட்ட முறையில் தருவனகூட அல்ல; அவர் நடாத்திச் செல்லும் அரசின் சார்பிலே அளித்திருக்கிறார்.

இது நல்லதோர் வெற்றி, எனவே மகிழ்ச்சி; இது நல்லதோர் வாய்ப்பு, எனவே இதனைப் பயன்தரத்தக்கதாகும் பொறுப்பும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

உறுதிமொழிகள் அபின் மாத்திரைகள், நம்மை மயக்க, என்பார் உளர்.

நான், அந்த வகையிலே எண்ணவில்லை; எனினும் அந்த விதமாக எண்ணுபவர் கூறுகிறபடி, நாம் விழிப்பாக இருக்கத்தான் வேண்டும்.

உறுதிமொழிகளை ஒரு கரத்தால் அளித்துவிட்டு, மறுகரத்தால் நிலைமையை உருக்குலைக்கும் முயற்சிகளில் ஈடுகின்றனர்; அது கண்டிக்கத்தக்கது; தடுத்து நிறுத்தப்பட்டாக வேண்டும்.

உறுதிமொழிகளுக்கேற்ப, ஆங்கிலம் காலக்கெடுவின்றி ஆட்சி மொழி அலுவலுக்கு இருந்தவரச் செய்வதற்கான சட்டம் கொண்டுவரப்படும் என்று அறிகிறோம்.

ஆனால் அப்படி ஒரு தனிச்சட்டம் கொண்டு வந்து, பிறகு, அதிலே ஏற்படக்கூடிய நேர்முக, மறைமுகக் குறைபாடுகளால் விபத்துக்கள் ஏற்படுமானால், பிறகு தொல்லை நாட்டினைத் தாக்கும்.

எனவே, நாம், ஆட்சிமொழி பற்றி, இந்திய அரசியல் சட்டத்திலே உள்ளதைத் திருத்தி அமைக்க வேண்டும் என்பதை, நாட்டவருக்கும் நாடாள்வோருக்கும், செயற்குழுத் தீர்மான வாயிலாக எடுத்துக் கூறி இருக்கிறோம்.

இந்திய அரசியல் சட்டத்துக்கு ஒரு திருத்தம் கொண்டுவரப் பட்டால், நிலைமை தெளிவாகும் என்பது மட்டுமல்ல, இந்தி பேசாத மாநில அரசுகள் நிம்மதி பெற முடியும்.

❀ ❀ ❀

“மொழிப்பிரச்சினை சம்பந்தப்பட்டவரை, இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்துகொள்ளுவதுதான், உண்மையிலேயே நமக்கும் எதிர்காலத்திற்கும் நல்லது, நல்ல பாதுகாப்பு அளிப்பதாக இருக்கும். அந்தப் பாதுகாப்பைப் பெறுவதற்காகத்தான் இந்த அறிக்கையிலே எங்களுடைய திருத்தத்தை இணைத்துக்கொள்வது பொருத்தம் என்பதை, நான் நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.”

❀ ❀ ❀

இப்போது மூன்று வகையான மொழிப் பிரச்சினைகள் நம் முன்னால் இருக்கின்றன. ஒன்று தேசிய மொழிப் பிரச்சினை.

தேசிய மொழியைப் பொறுத்தவரையில் 10-15 ஆண்டுகளுக்கு முன்னால், எங்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்ததெல்லாம், இந்திதான் தேசியமொழி என்பதாகும். இந்திதான் தேசியமொழி என்று எடுத்துக் கூறப்படாத காங்கிரஸ் கூட்டங்கள் அப்போது கிடையாது. அவ்வாறு கூறாதவர் காங்கிரஸ்காரர் அல்ல என்ற கருத்து அப்போது நிலவிவந்தது. இன்றோ இந்தி தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், இந்தியுடன் தமிழும் மற்றப் பல மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, மொத்தம் 14-தேசிய மொழிகள் இருக்கின்றன.

❀ ❀ ❀

ஆட்சி மொழி அந்தஸ்தைப் பொறுத்தவரையில், தமிழ்தான் தமிழகத்தில் ஆட்சிமொழி.

❀ ❀ ❀

இந்தியாவில், நிர்வாக மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதுபற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

இந்தப் பிரச்சினையை மூன்று விதமாக நோக்கலாம். இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில், இப்பிரச்சினையைப் பார்ப்பது ஒருவிதம்.

இரண்டாவது, இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கப் போவதில்லை; அது பிரியப் போகிறது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு பிரியும்வரை உள்ள இடைக்காலத்தில் எது நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்று பார்ப்பது ஆகும்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்தியா பிரியப்போகிறது என்ற எண்ணத்துடன்தான், இப்பிரச்சினையை நாங்கள் அணுகுகிறோம்.

நிர்வாகத்தில் மத்திய சர்க்காரிடம் எந்தெந்தப் பொறுப்புகளை மாத்திரம் ஒப்படைக்கலாம் என்று பார்த்து, அவர்களிடம் இருக்கும் அதிகப்படியான பொறுப்புக்களைக் குறைத்துவிட்டால், அப்போது மத்திய அரசாங்க நிர்வாக மொழி எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடன், இப்பிரச்சினையை அணுகுவது மூன்றாவது விதம் ஆகும்.

❀ ❀ ❀

இந்தப் பிரச்சினையில் சமரச மனப்பான்மையுடன் நடந்து கொள்ளவேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு விரும்புகிறார் என்பதை அவருடைய வார்த்தைகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

❀ ❀ ❀

இந்தியை எதிர்ப்பவர்களும், இந்தி ஆட்சி மொழியாகக் கூடாது என்று சொல்பவர்களும், இந்தி மத்திய அரசாங்க ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்று கூறும் அரசியல் சட்டப் பிரிவை எதிர்ப்பவர்களும், அந்தப் பிரிவைத் திருத்தவேண்டுமென்று வாதாடுபவர்களும், தமிழ் நாட்டில் ஏராளமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதை, மத்திய அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்கு நாங்கள் வகை செய்கிறோம்.

❀ ❀ ❀

இந்த மொழிப் பிரச்சினையில் நாமெல்லோரும் சமரசத்திற்கு வந்துவிட்டோம் என்று தெரிவிப்பதைவிட, அடிப்படையில் சில மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை மத்திய சர்க்காருக்கு உணர்த்துவது மிகப்பொருத்தம் என்று கருதி, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தத் திருத்தத்தை நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம்.

❀ ❀ ❀

ஆத்தூர் தொகுதி உறுப்பினர் M.P. சுப்பிரமணியம் பள்ளிகளில் மூன்று மொழிகளைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்ற முறையை மறுத்து, தமிழ், ஆங்கிலம் எனும் இருமொழி மட்டுமே போதும் என்று திருத்தம் கொடுத்தார்.

தோழர் A. கோவிந்தசாமி அவர்கள், பாராளுமன்றத்தில், எந்த மொழியில் பேசினாலும் உடனுக்குடன் எல்லாத் 'தேசீய' மொழிகளிலும் அவை மொழிபெயர்த்தளித்திட ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற திருத்தம் கொடுத்தார்.

❀ ❀ ❀

(சுப்ரீம் கோர்ட்டில்) உச்ச உயர் நீதிமன்றத்தில், ஆங்கில மொழியே தொடர்ந்து அலுவல் மொழியாக இருந்து வரவேண்டும் என்ற திருத்தத்தை, தோழர் ப.உ. சண்முகம் கொடுத்தார்.

இவை யாவும் தோற்கடிக்கப்பட்டுவிட்டன.

சட்டசபையில் நமக்கு எண்ணிக்கை பலம் இல்லாததால், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற நமது முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டது.

இந்தச் சென்னை இராஜ்யத்திலே தமிழர்கள், ஆந்திரர்கள், மலையாளிகள், கன்னடியார்கள் ஆகியோர் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிவிடுவார்களா? என்று கம்யூனிஸ்டு தலைவர் இராமமூர்த்தி கேட்டார் - ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால்.

“ஆம்! ஒரே தேசீய இனம்தான். கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் தமிழின் உதிரத்தே உதித்தெழுந்து ஒன்று பல ஆயிருக்கும் வரலாறு, கட்டுரை யாளருக்குத் தெரியாமலிருக்க முடியாது” என்று சொல்லப்பட்டதே; நினைவில் இருக்கிறதா, தம்பி! அதனைத் தானே காட்டிக் காட்டி, கம்யூனிஸ்டுகளைச் சாடினர் விலகினோர்; இன்று மாறினர்; அது அவர்கள் விருப்பம்; ஆனால், அவர்கள் மாறிவிட்டதால், ‘வரலாறுமா’ மாறிவிட்டது? பேராசிரியர் சுந்தரனாரின் அருங்கவிதை அளிக்கும் அறிவுரைக்குமா ஒட்டு என்ன, உறவு என்ன, என்ற கேள்வி!! பயங்கரம்! மிகப் பயங்கரம்!!

தமிழ் தேசியம், என்று கூறும்போது, வேறுபல தேசியங்கள் உள்ளன என்பதும், அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டவை என்பதும், தமிழ் தேசியம் என்பதற்ககுத் தனியான சில இலக்கணம் உண்டு என்பதும், அதுபோலவே தனியான சில இலக்கணம் காரணமாகவே தனித்தனித் தேசியம் ஏற்படுகிறது என்பதும், ஒப்புக் கொள்ளப்படுகிறது. அவ்விதமெனின் தமிழ் தேசியத்தை, ஆந்திர தேசியத்திலிருந்து, கருநாடக தேசியத்திலிருந்து, கேரள தேசியத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுபவை யாவை? மொழி ஒன்றுதான் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது. அதுவும், மொழிவளம் அறிந்தவர்கள் கூறுவதை, என்னைவிட அவர்கள் எந்தவகையில்

பெரியவர்கள் என்று கேட்டு விடாமல், இந்தத் துறைவரையிலாவது அவர்கள் நம்மைவிட வல்லவர்கள், கருத்தளிக்கத் தக்கவர்கள் என்பதையாவது ஒப்புக் கொண்டால், அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நாலு மொழிகளும், முற்றிலும் வேறு வேறு அல்ல; மூலம் ஒன்றேதான் என்பதை விளக்குவது எளிது. இதோ அந்த விளக்கம் :

தமிழ்	தெலுங்கு	கன்னடம்	மலையாளம்
தாய்	தல்லி	தாய்	தள்ளே
தகப்பன்	தன்றி	தந்தை	அச்சன்
அண்ணன்	அன்ன	அண்ண	சேட்டான்
தம்பி	தம்புடு	தம்ம	அனுசன்
கணவன்	மொகுடு	கெண்ட	பர்த்தா
மகன்	குமாரடு	மகனு	ஆண்குட்டி
பாட்டன்	தாத	தாத	மூப்பன்
உடல்	ஒள்ளு	மய்யி	தேகம்
மனைவி	பெண்ட்லாமு	எண்டத்தி	பாரியா
மகள்	குமாரத்தி	மகளு	பெண்குட்டி
அக்காள்	அக்க	அக்க	சேட்டச்சி
மாமன்	மாம	மாவ	அம்மாவன்
மருமகன்	அல்லுடு	அளிய	மருமான்
பாட்டி	அவ்வ	தாத்தி	முத்தி
எது	எதி	எது	எது
அது	அதி	அது	அது
இது	இதி	இது	இது
இங்கே	இக்கட	இல்லி	இவடே
அங்கே	அக்கட	அல்லி	அவடே
எங்கே	எக்கட	எல்லி	எவடே
இப்போது	இப்புடு	ஈவாக	இப்போள்
அப்போது	அப்புடு	ஆவாக	அப்போள்
எப்போது	எப்புடு	ஏவாக	எப்போள்
சிறிய	சின்ன	சிக்க	சிறிய
பெரிய	பெத்த	தொட்ட	வலிய

நெருப்பு	நிப்பு	பெங்கி	தீ
மழை	வான	மளெ	மழ
கொடு	ஈய்	கொடு	கொடு
இரவு	ராத்தி	ராத்திரி	ராத்திரி
பகல்	பகலு	அகலு	பகல்
யார்	எவுரு	யாரு	யாரானு
ஊர்	ஊரு	ஊரு	ஊரி
ஊருக்கு	ஊரிக்கி	ஊரிகே	ஊரிலே
சோறு	அன்ன	ஊண்ட	ஊணு
சேலை	சீரா	சேலை	முண்டு
நீர்	நீள்ளு	நிறு	வெள்ளம்
கண்ணு	கன்னு	கண்ணு	கண்ணு
மூக்கு	மூக்கு	மூங்கி	மூக்கு
காது	செவ்வு	கிரி	செவி
வாய்	நோரு	பாயி	வாயி
தலை	தல	தலெ	தலை
வா	ரா	பா	வரி
பசு	ஆவு	அசுவு	பசு
எருது	எத்து	எதது	காள
சொல்லு	செப்புனு	ஹேளு	பர

இனி, நான்கு மக்களும் தனித்தனி மொழிக்காரர்கள் - மூலம் மூலமாகக்கூட ஒட்டு இல்லை, உறவு இல்லை என்றே வைத்துக் கொள்வோம் - வாதத்துக்காக; இதைக்கொண்டே இவர்கள் வெவ்வேறு தேசீய இனம் ஆகிவிடுகிறார்களா?

"ஒரு தேசிய இனம் என்பதற்கு மொழி ஒற்றுமையைக் காட்டிலும், கலாச்சார ஒற்றுமை, வாழ்க்கை ஒற்றுமை ஆகியவை அதிக அவசியம்."

❀ ❀ ❀

பெரியார் வற்புறுத்துவதெல்லாம், தம்பி!

1. தமிழர், தெலுங்கர், கேரளம், கருநாடகர் நால்வரும் ஒரே இனத்தவர்.

2. இவர்கள் வேறுவேறு மொழி பேசுகிறார்கள் - ஆனால், இந்த நான்கு மொழிகளும் ஒன்றேதான்.

3. இந்த நால்வரும் ஒரே இனம் என்ற பிரசாரம் மற்ற மூன்று இடத்தில் வெற்றிகரமாக நடைபெறாததால், இன உணர்ச்சி அங்கு ஏற்படவில்லை.

❀ ❀ ❀

நாலு மாதமும் நாங்கள் அங்கு, தமிழ்! தமிழ்! தமிழ்! என்ற உணர்ச்சி வயமாகி இருந்து வந்தோம், பெரியாருடன் பன்னிரண்டு மணி நேரம் (இரவில்தான் தனித்தனியாகப் போட்டு பூட்டி விட்டார்களே) ஒன்றாக இருக்க, பேச, கேட்க, பழக அருமையான வாய்ப்பு, இரசமான விருந்து, சுவையுள்ள காலமாக அந்த நாலு மாதங்கள் இருந்தன.

❀ ❀ ❀

பிறர் மனம் மகிழும்படி நடந்துகொள்வது நல்லதுதான் - பண்பு கூடத் தான் அது - ஆனால் தன்மானம் என்ற ஒன்றும் இருக்கிறதே, ஒரு அமைப்பின் தன்மானம், அது அழைக்கப்பட்டது. அதைக் கலந்து திட்டம் தீட்டப் பட்டது என்று நிலைமை இருந்தாலல்லவா நிலைக்கும், தழைக்கும்!

போர் முடிந்துவிட்டது! பலாபலன் தெரிந்துவிட்டது!! என்ன காண்கிறோம் தம்பி. காமராஜரின் அறிக்கை!!

❀ ❀ ❀

யூனியன் பார்லிமெண்டு சபாநாயகர், மாவ்லங்கர் இந்தி கட்டாயத்தின் மூலம் நுழைக்கப்படாது என்று சேலத்தில் மே - 31இல் பேசி இருக்கிறார், (மெயில் - ஜூன் 1)

❀ ❀ ❀

இந்தியைத் திணிக்கவில்லை - திணிக்கமாட்டோம். இந்தி படிக்கும்படி தூண்டுகிறோமே தவிர, கட்டாயப் படுத்தவில்லை என்பதாக யூனியன் தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் மே - 28-இல் திருச்சூரில் தெரிவித்திருக்கிறார். (மே - 29-மெயில்)

❀ ❀ ❀

உத்யோகத்தை நாடுபவர்களுக்குத் தொல்லை வராதபடிதான் இந்தியைப் பக்குவமாகப் பரப்புவோம், என்று யூனியன் டிப்டி போலீஸ் மந்திரி தத்தார் தெரிவிப்பு, மே-4 மெயிலில் காணக் கிடக்கிறது.

❀ ❀ ❀

இந்தியை மக்கள்மீது கட்டாயப்படுத்தித் திணிக்கும் பிரச்சினைக்கே இடமில்லை என்று மே 11-இல், பூரியில் யூனியன் மந்திரி கேஸ்கர் தெரிவித்திருப்பது, இந்துவில் வெளிவந்திருக்கிறது.

❀ ❀ ❀

இந்தியைத் திணிக்கமாட்டோம் கட்டாயப்படுத்த மாட்டோம் - தமிழ்நாட்டு மக்கள் தாமாக இந்தியில் பயிற்சி பெற்று வருகிற வரையில் காத்துக் கொண்டிருப்பேன் - என்பதாக, யூனியன் மந்திரி கேஸ்கர் மதுரையில் ஜூலை 6-இல் பேசியிருக்கிறார். இந்தத் தெரிவிப்பு மெயிலில் வெளியாகி இருக்கிறது.

❀ ❀ ❀

தென் இந்தியாமீது இந்தியைத் திணிப்பது சர்க்கார் நோக்கமல்ல என்று குடி அரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத், ஹைத்ராபாத்தில், ஜூலையில்தான் பேசியிருக்கிறார்.

நேரு பண்டிதர், பல தடவைகளில் இந்தி வெறியர்களின் போக்கைக் கண்டித்திருக்கிறார்.

எந்த மொழியும் சொந்த மொழிக்கு ஈடாகாது என்று பலமுறை பண்டிதர் பேசி இருக்கிறார்.

வடநாட்டிலேயே, பல தலைவர்கள் வங்கம் - மராட்டியம் - கலிங்கம் - பாஞ்சாலம் ஆகிய பகுதியினர், இந்தி வெறியைக் கண்டித்துப் பேசினர்.

மொழி அல்லது கல்வி சம்பந்தமான விழாக்கள் நடைபெறும் போதெல்லாம், இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று டில்லி தர்பாரினரே பேசுகிறார்கள்; இனியும் பேசப் போகிறார்கள்.

தாலமுத்து நடராசன் உயிர் குடித்ததோடு, தமிழகத்தைப் பொறுத்தவரையில், கட்டாய இந்தி மடிந்தது என்று திட்டவட்ட மாகக் கொள்ளலாம்.

மத்திய சர்க்காரின் நிலையைப் பல தடவைகளில் இது சம்பந்தமாகத் தெளிவுபடுத்திவிட்டனர் - 'ராஜ்ய சர்க்காருக்கு யுக்தம்போல்' நடந்து கொள்ளும் உரிமை தரப்பட்டிருக்கிறது.

எனவேதான், ஆந்திரத்தில் ராஜ்ய சர்க்கார் இந்தியைக் கட்டாய பாடமாக்கிவிட முடிந்தது; சென்னை இராஜ்யத்தில், இந்தி கட்டாய பாடம் ஏன் ஆக்கவில்லை என்று ஆந்திராவைச் சுட்டிக்காட்டி, மத்திய சர்க்கார் கேட்கவில்லை.

'கட்டாய இந்தி' மத்திய சர்க்காரின் திட்டமாகவும் இன்று இல்லை; சென்னை ராஜ்யமும் அதைத் திட்டமாகக் கொள்ள வில்லை - அது போன்ற நோக்கமோ முயற்சியோ இல்லை.

இந்த நிலையில், இந்தியைக் கட்டாய பாடமாக்குவதில்லை, திணிப்பதில்லை என்று வாக்குறுதி ஏன் நமக்கு?

எனவே, இப்போது கொடி கொளுத்துவதாகக் கூறி ஓர் போர்ச் சூழ்நிலையை உருவாக்கி, அதனைக் காட்டி, காமராஜர் அறிக்கை என்ற 'வரம்' பெற்றதாகக் கருதிப் பூரிப்படைய நமக்கு மனம் இடந்தரவில்லை.

‘ழ’ கரமும் ‘ற’ கரமும்

தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணச் சிறப்பு - மொழிவழி அரசு அமைதல்.

தம்பி,

புதிதாகப் பதவியேற்ற பிரஞ்சு அமைச்சர், அலுவலத்தைப் பார்வையிடச் சென்றார் - முதல் அறையில் பணியாளர் இல்லை! இரண்டாவது அறையிலும் யாரும் இல்லை! மூன்றாவது அறையில் நாற்காலியில் உட்கார்ந்தபடி ஒரு பணியாளர் உறங்கிக் கொண்டிருந்தார்! அமைச்சருடன் வந்தவர், உறங்கிக் கொண்டிருந்தவரை எழுப்புவதற்காக அருகே சென்றார். அமைச்சர் அவரைத் தடுத்து நிறுத்தி, “வேண்டாம்! வேண்டாம்! அவரை எழுப்பி விடாதே! எழுந்தால், அவரும், மற்ற இருவரும் வெளியே சென்றுவிட்டது போல, அலுவலகத்தை விட்டுப் போய்விடப் போகிறார்!” என்று கூறினாராம்.

ஒருவர்கூட அலுவலுகத்திலே இல்லாதிருப்பதை விட, உறங்குபவர் நிலையிலாவது ஒருவர் இருக்கட்டும் என்று அமைச்சர் எண்ணிக் கொண்டார் போலும்!

பொறுப்பற்ற தன்மை எந்த அளவுக்கு இருந்தது என்பதை இந்த நிகழ்ச்சி விளக்குவதாக இருக்கிறது.

பிரஞ்சு அமைச்சர் உறங்கிக் கிடப்பவரை எழுப்பி விடாதீரய்யா, அவரும் வெளியே போய்விடப் போகிறார் என்று கூறி, வேதனையை நகைச்சுவையால் மாற்றினார்.

இன்று நமது திரு இடத்தில் ஒரோவழி ஒருவரிருவர், இங்கொன்றும் அங்கொன்றுமாக, மொழி, நாடு, இனம் என்பன குறித்து ஒரு சிறிது பேசும்போது, அவர்கள் இவ்வாறுதானா கூறுவது, அவர்களின் பொறுப்பும் பணியும் இந்த அளவோடு முடிந்துவிடல் வேண்டும். அவர்தம் அறிவாற்றலுக்கு ஏற்ற அளவுக்கா இப்பணி இருந்திடக் காண்கிறோம் என்ற எண்ணம் நமக்கெல்லாம் எழத்தான்

செய்கிறது; தம்பி! அத்தரத்தினர் மீது நீ கோபித்துக் கொள்ளும்போது, எனக்கு அந்தப் பிரஞ்சு அமைச்சருக்கு ஏற்பட்டது போன்ற கவலைதான் பிறந்து விடுகிறது.

இவர்களைக் கோபித்துக்கொண்டால், இவர்கள் இதனையும் கூறாதிருந்துவிடின் என்ன செய்வது - ஏதோ இதையாவது சொல்கிறார்களே - ஒரோர் சமயத்திலாவது பேசுகிறார்களே - சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, பாதுகாப்புச்சுவர்களையும் பக்குவமாக எழுப்பிக்கொண்ட பிறகேனும், சிலகூற வாய் திறக்கிறார்களே, இவர்களைத் தம்பி, கடிந்துரைத்தால், இதனையும் கூறாது இருந்து விடுவரே என்ற அச்சம் எனக்கு.

பேராசிரியர் சேது(ப்பிள்ளை) அவர்கள் செந்தமிழின் சுவையினை நாட்டு மக்களுக்கு விருந்தாக அளித்திடும் நல்லவர்! பொன்னாடை போர்த்தி அப்புலவரைப் பெருமைப்படுத்தினர். நான் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேனில்லை எனினும், இருக்குமிடத் திருந்தே அவர் பெற்ற ஏற்றம் கண்டு இறும்பூதெய்து பவன். அவர் அறியார் என்று எண்ணுகிறேன், அவரிடம் தொடர்பு கொண்ட குழாத்தினரில் கூட அவர்பால் பெருமதிப்புக் கொண்ட என் போன்றோர் அதிகம் இரார்.

பேராசிரியர் சேது(ப்பிள்ளை) அவர்கள், தமிழின் ஒலிமாட்சி குறித்து, அழகுறப் பேசியிருக்கிறார்.

தமிழ் மொழிக்கே அணியாக விளங்கிடும் 'ழ' கரம் 'ற' கரம் குறித்து எடுத்துக் கூறி, 'ழ' அளிக்கும் ஒலியின் இனிமையை எடுத்தியம்பி, இத்தகைய ஒலி மாட்சியை, பிற மொழிகள் பெற்றிராத ஒலிமாட்சியை, நந்தம் மக்கள், உணர்ந்து உவகை கொள்ளா திருத்தல் குறித்தும், அதன் உயர்வறியாது அதனைப் பாழ்படுத்திடும் போக்கினைக் கண்டித்தும் பேசியுள்ளார்.

எழுந்திரு - ஏந்திரு என்றாகிவிட்டதையும்,
திருவிழா - திருவிஷா என்று கெடுவதையும்,
பழம் - பளம் ஆகிப் பாழ்படுவதையும்,

கிழவி, கியவி ஆகி 'ழ' கரம் கேலியாக்கப்படுவதையும், எடுத்துக் காட்டி, நமது தாய்மொழிக்கே அழகளிக்கும் 'ழ' கரம் இங்ஙனம் பாழ்படுத்தப்படுகிறதே, கொச்சை பேசி மொழியினைக் கொலை செய்கிறார்களே என்று கூறிக்கசிந்துருகி நிற்கிறார்.

'ற' கரம் மற்றோர் அணி! இதனையும் பாழ்படுத்துகின்றனர், உரையாடலில்!

'ற' கரம் வன்மையான உணரச்சியைக் காட்டிடும் ஒலிக்குறி! இதனை உணராமல், 'ற' வை, படாத பாடு படுத்துகிறார்கள் நம்மனோர். காற்று, காத்தாகி விடுகிறது! நாற்று, நாத்தாகிறது! ஐயகோ! அம்மவோ! சிலம்பளித்த செல்வன்,

அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து
இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!

என்று கண்ணகி கூறுவதாகச் செப்புகிறாரே, ஆறு றகரம் ஒலிக்கிறது கேண்மின் - என்று எடுத்துக்காட்டுகிறார்.

மற்றும் பல கூறி, பேராசிரியர் மொழி வளம் பாழ்படுவது குறித்துக் கவலைப்படுகிறார்.

'ழ' கரம் - 'ற' கரம் பாழ்படுகிறது!!

'ழ' தமிழ் மொழிக்கே தனிச் சிறப்பளிக்கும் அழகணி, இதனை அறியாதிருக்கும் தமிழர் தமிழழிப்போராகின்றனர்!

அவர்தம் போக்குக் கண்டு, மொழியின் சுவையினைப் பருகிடும் பேராசிரியர், கொதித்தெழுவதும், ஆகுமோ இந்தப் போக்கு எனக் கடாவுவதும், 'ழ' கரத்தின் அருமையினைக் கூறுவேன் கேண்மின் என்று அறைவதும் முறையே - குறை கூறுகின்றேனில்லை! அவர் ஆறு 'ற' கரம் ஒலித்திடும் சிலப்பதிகார அடிகளை நினைவுபடுத்தும் போது, உண்மையிலேயே, அந்த 'ற' கரங்கள், தமிழ்மொழியின் ஒலி மாட்சியையும், பத்தினிப்பெண்ணின் உணர்ச்சியையும் ஒருசேர எடுத்துக்காட்டத்தான் காண்கிறோம். மறுப்பாரில்லை! அத்தகைய

மாண்புமிகு மொழிக்கு நாம் உடையோம் என்றெண்ணிப் பெருமிதம் கொள்ளாமலில்லை!

மங்கை நல்லாளிடம் காணும் ஒயிலும், மயிலிடம் காணும் சாயலும், மொழியிடம் காணப்பெறும் ஒலி அழகுக்கு ஈடாகாதுதான்! அந்த ஒலி அழகு, கொச்சை பேசுவதால் செத்தொழிகிறது என்பது கண்டு கண்ணீர் வடித்திடத் தக்கதோர் நிலைதான் ஐயமில்லை! ஆனால்...!

மொழியின் 'ஒலி' மட்டுமா இன்று பாழ்பட்டுக் கிடக்கிறது.

'ஒளி' மங்கி மறைந்து கொண்டிருக்கிறது!

ஒலிகெட்டும் ஒளிமங்கியும் இருத்தல் மட்டுமல்ல, மொழியே கீழ்நிலைக்கு, தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கிறது.

பாவலரும் காவலரும் போற்றி வளர்த்த மொழி, அரச அவையிலும், ஆடலரங்கிலும், புலவர் மன்றமதிலும் பூங்காவிலும், கடலின் மீதும், குன்றின்மீதும், களிறு ஏறுவோனும், காற்றை அடக்குவோனும், எங்கும் எவரும் பேசி மகிழ்ந்த மொழி, இன்று, எல்லாத் துறைகளிலும், பேராசிரியர் பெருங்கவலை கொள்வதுபோல, ஒலிமாட்சி இழந்து மட்டுமல்ல, நிலை இழந்து நிற்கிறது! கேட்பார் யார்? எங்குளர்? மொழியின் வளம் பேசி மகிழ்வோர் உளர்! ஒலி அழகுகாட்டி உவகை ஊட்டுவோர் உளர்! மொழியின் நிலை? அந்நிலைக்கு வந்துள்ள கேடு? அக்கேட்டினை மூட்டிடும் கெடுமதி கொண்டோர்! அவர்தம் அடிதொட்டு ஏற்றம் பெற எண்ணும் முதுகெலும்பற்றோர்! இவை குறித்து எடுத்தியம்ப யார் உளர்?

❀ ❀ ❀

மொழி இன்று தாக்கப்படுகிறது. சிறுகச் சிறுக அழிக்கப்பட்டு வருகிறது - அரச அவை அதனை ஏற்க மறுக்கிறது - அஞ்சல் நிலையத்தார் அதனை அடித்து விரட்டுகிறார்கள் - நாணயம் அதனைத் தாங்கிட மறுக்கிறது - நயாபைசா வருகிறது! இந்நிலையில், பழம் பளமானது பற்றியும், கிழவி கியவியானது பற்றியும் காற்றைக் காத்தாக்கி, நாற்றை நாத்தாக்கி விட்ட கொடுமை பற்றியும் காற்றைக்

காத்தாக்கி, நாற்றை நாத்தாக்கி விட்ட கொடுமை பற்றியும் எடுத்துப் பேசுவது, சாமான்யர்களுக்கே ஏற்றதாகாது என்றால், பேராசிரியர்களுக்கே இவ்வளவுதான் கூறமுடியும் என்றா நாம் மன அமைதி கொள்ள முடியும்! கேட்டால், இதனையும் கூறாது சேது(ப்பிள்ளை) பெரும் பேராசிரியர் வையாபுரி(ப்பிள்ளை)யாக வடிவமெடுத்து விடுவாரோ, என்றல்லவா அச்சம் பிறக்கிறது. எழுப்பி விடாதே இவனும் வெளியே போய்விடப் போகிறான், என்று கூறின பிரஞ்சு அமைச்சன் போலல்லவா, ஏதோ, இதனையாவது பேசுகிறாரே என்று எண்ணிக் கொள்ள வேண்டி இருக்கிறது. ஏனெனில் இது மிகப் பெரியவர்கள் மிகத் துணிவுடன் மிகப்பெரிய உண்மைகளை மிகச் சாமார்த்தியமாக மறைத்துவிடும் காலமாக இருக்கிறது! காலமாகவா? மிகப் பெரிய மனிதராவதற்கு, இஃதொன்றே யன்றோ, வழியாகவே அமைந்து விட்டிருக்கிறது.

❀ ❀ ❀

அறிவு வறைபோகிய பொறி அறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே! என்பதில் காணக் கிடக்கும் 'ற' கரத்தின் பெருமையில் பேராசிரியர் நீந்திக் களித்திடுகிறார் - இன்று இறைமுறை பிழைத்தோன் வாயிலோனாக உள்ள பணிக்கர்கள் கண்ணீர் பொழிந்திடும் கண்ணகிகளை "வழக்காடவும் துணிந்தனையோ! அவன் தலை வெட்டுண்டது போல உன் நாவும் வெட்டுப்பட வேண்டியோ, எமது கொற்றத்தினைக் குறை பேசி நிற்கிறாய்" என்று கேட்கின்றனர். நமது பேராசிரியர்கள் அந்த வாயிலோன் எது செய்யினும் பரவாயில்லை, 'ழ' கரம் பாழ்படாது இருக்கிறதா என்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

லோக்சபா - ராஜப்பிரமுக் - ராஷ்டிரபதி - நயாபைசா! இவ்வண்ணம் படை எடுக்கின்றன, வழக்கில் நடமாட வேண்டிய சொற்கள்! 'ழ' வும் 'ற' வும் மட்டுமா, மொழியே பிழைப்பது கடினம் என்று நிலை பிறந்திருக்கிறது. கேட்கும் உரிமை உணர்ச்சி, அதற்கான உள்ள உரம் எழக் காணோம்! இரயில்வே நிலையங்களில் இந்தி, அஞ்சல் அட்டைகளில் இந்தி, நாணயங்களில் இந்தி, அலுவலகங்களின் பெயர் பொறிப்பலகைகளில் இந்தி, பட்டாளத்தில் இந்தி - என்று எங்கும் இந்தி நுழைக்கப் படுகிறது!

ஆட்சி மன்றங்களிலிருந்து அங்காடி வரையில் இந்தி அரசோச்சக் கிளம்பிவிட்டது. கேட்பார் இல்லை!

"தமிழ்" இலக்கியம் எதையும் சார்ந்திருப்பதன்று. கலாச்சார உபயோகத்தில் அது தனித்து இயங்க வல்லது.

இந்திய இலக்கியங்கள் பற்றி, தென் இந்தியாவிலிருந்தே அதுவும் திராவிடர்கள் மூலம் முக்கியமாகத் தமிழ், மலையாளம் பேசும் மக்கள் மூலம்தான் ஐரோப்பாவில் அறிய முடிந்தது.

17-வது 18-வது நூற்றாண்டில், தமிழ் சமஸ்கிருத்தைவிட அதிகம் முன்னேறி இருந்தது. தமிழ்மொழி தவிர மற்ற மொழி களெல்லாம் சமஸ்கிருதக் கலப்புடையன.

பிலியோஜாத் எனும் பிரஞ்சு நாட்டு, மொழித்துறை ஆராய்ச்சியாளர் கூறுகிறார். நாள் பத்து ஆகவில்லை. இங்ஙனம் இவர் சென்னையில் கல்லூரியில் நடைபெற்ற, தமிழ்க்கலைக் கழகக் கூட்டமொன்றில் பேசி! பேராசிரியர் சேது(ப்பிள்ளை) அவர்களும் அந்த மன்றத்தில் அமர்ந்திருந்தார் என்று தெரிகிறது. எனினும், என்ன பயன்? ஏற்புடையது! ஈடில்லாதது! தனியாக இயங்கவல்லது! பண்பின் பெட்டகம்! இன்ப ஊற்று! என்றெல்லாம் கூறித்தான் என்ன பயன்? இந்தி இழிவு படுத்துகிறது - அதனை இழிவென்று எண்ணாதீர், என்னைப் பாரும், என் சொல்லைக் கேளும், அடுத்த உத்தியோகம் கிடைக்கும் வரை நான் இப்படி அடப்பம்? தாங்கும் பணிபுரிபவன் அறிமின்! என்று கூறி வருகிறார் பணிக்கர்.

❀ ❀ ❀

இதோ மற்றோர் தமிழாசிரியர், 'ழ' கர 'ற' கரத்தோடு நிற்பவரல்ல, நம்மோடு நெடுந்தூரம் வருபவருமல்ல. எனினும், நாம் செல்லும் திசையைச் சுட்டிக் காட்டிடும் அளவுக்கு முன்னணி வருகிறார், டாக்டர் இராசமாணிக்கனார், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் உள்ளவர்.

“இந்திய வரலாற்றுக் காலம் தோன்றிய நாள் தொட்டு வெள்ளையர் ஆட்சி ஏற்படும் வரையில், தமிழகம் இந்தியாவை ஆண்ட எந்தப் பேரரசாலும் ஆளப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கது. இந்தியாவின் பெரும்பகுதியை ஒரு குடைகீழ் வைத்தாண்ட அசோகன் காலத்திலும், தமிழகம் தனியாட்சி புரிந்தது என்பதை அப்பேரரசன் வெளியிட்ட கல்வெட்டுகளே தெரிவிக்கின்றன. இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தனிப்பட்டு இருந்த தமிழகம் தனக்கென ஒரு மொழியையும் அதற்குரிய இலக்கியங்களையும் தனிப்பட்ட பண்பாட்டையும் வளர்த்து வந்தது.”

தமிழாசிரியர்கள் அனைவரும் இத்தகைய வரலாற்று உண்மைகளை எடுத்துக் கூறும் உள்ளத் திண்மை பெற்றுவிட்டால், மொழி ஆராய்ச்சித் துறையிலே அல்ல, ஆட்சியாளர்களுக்கு நேசத் தொடர்புகளை ஏற்படுத்தித் தரும் துறையிலே, பணியாற்றும் பணிக்கர் இவ்வளவு பதட்டமாகவா பேசிடுவார்!

ஏன், தமிழறிந்தோர் துணிவு பெறாதுள்ளனர்?

டாக்டர், அந்த நோயின் தன்மையையும் விளக்குகிறார்.

“தமிழன் - தமிழனாக வாழ்தல் வேண்டும். அவன் தன் தாய்மொழியின் சிறப்பை அறிதல் வேண்டும்; தமிழிலேயே தனக்குரிய சடங்குகளைச் செய்துகொள்ள வேண்டும் என்று தமிழில் வல்ல சான்றோர் கூறினால், இவர்கள் நாத்திகர்கள் - வடமொழியை வெறுப்பவர் - ஒருமைப்பட்டுள்ள சமுதாயத்தில் வேற்றுமையை உண்டாக்குகின்றனர் என்று ஒரு சாரார் பழிதூற்றுகின்றனர். இவர்களுக்குள்ள நாளிதழ்களின் செல் வாக்காலும், உயர் அலுவலரது மறைமுகமான செல்வாக்காலும், இச்சான்றோர் பலவாறு அழுத்தப் படுகின்றனர். தமிழருள்ளே அறிவற்ற புல்லுருவிகளை ஏவி விட்டுத் தூற்றவும் செய்கின்றனர்.”

இந்த அச்சம்தான் பலரை ‘ழ’ கர ‘ற’ கரத்தோடு நிறுத்தி விடுகிறது.

இந்தியப் பேரரசு, இந்தி தேசீய மொழி, என்பவைகளை மறுப்பது ஆபத்தாக முடியும் என்று அஞ்சிக் கிடப்பதும், 'ழ' கரத்தையும் ற கரத்தையும் காத்திட நம்மாலான முயற்சி செய்வோம் என்று முனைவதும், பலனளிக்காது. வேரிலே கொதி நீர் ஊற்றும் காதகர்கள் இருக்கும் போது, இதழின் அழகு பற்றிப் பேசி மகிழ்வது பலன் தராது! 'ழ' 'ற' மட்டுமல்ல, தமிழ் மொழிக்கு, தமிழ்ப் பண்பாட்டுக்கு, தமிழகத்துக்கு ஆபத்து என்பதை அஞ்சாது எடுத்துரைக்க முன் வருதல் வேண்டும்.

தம்பி! பேராசிரியர்கள், 'ழ' கர 'ற' கரத்தோடு நின்று விட்டாலும், நீயும் நானும், நம் போன்ற சாமான்யர்களும், கடல் நீர் கரிக்கிறது - பணிக்கர் பேச்சு புளிக்கிறது - டில்லி கொட்டுகிறது என்ற உண்மைகளை எடுத்துரைப்போம்.

❀ ❀ ❀

மொழி வழி அரசு என்பது இன்று நேற்று முளைத்ததல்ல! காந்தீயக் கழனியிலே பயிரிடப் பட்டதாகும்!

அதற்கும் முன்பேகூட, விடுதலைக் கிளர்ச்சிக்கான முயற்சி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே, மொழிவழி அரசு மக்கள் மன்றத்திலே உலவிற்று.

பாரத மக்களே! பரங்கியின் ஆட்சியை நீக்கிட வாரீர்! - என்று மட்டும் கூறினாரில்லை. பாலகங்காதர திலகர்! அவருடன் இருந்தோரும் அவர்வழி வந்தோரும் விளக்கமாகவே பேசினர், மக்கள் வீறு கொண்டு எழுத்தக்க வகையில் மொழிவழி அரசு அமைய வேண்டும் என்ற குறிக்கோளுடன்.

சுயராஜ்யப் போர்ப்படை திரட்டிப் பணியாற்றிய சோர்விலாத் தலைவர்கள், எந்தெந்த இடத்தில் எந்தெந்த மொழியாளர்களைக் கண்டனரோ, அவர்களுடைய வரலாற்றை எடுத்துக் காட்டித்தான், உணர்ச்சியூட்டினர்!

சேரனும் சோழனும் பாண்டியனும் ஆண்ட செந்தமிழ் நாட்டவரே! இன்று செக்குமாடுகளென நம்மை நடத்தும் வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்திட வாரீர்! என்று கூவி அழைத்தனர்.

மாவீரன் சிவாஜியின் வழிவழி வந்த வீரர்காள்! மராட்டியம் இன்று மமதை நிறைந்த வெள்ளையன் பிடியிலே சிக்கிச் சீரழிவதைப் பார்த்தும் உங்கள்இரத்தம் கொதிக்கவில்லையா! எங்கே சிவாஜி ஊட்டிய வீரம்! அந்த மாமன்னன் தந்த விடுதலை உணர்ச்சி மங்கிக் கிடக்கிறது. மராட்டிய மாவீரர்கள்! மடிந்து போகவில்லை வீரம்! மாற்றானை ஒட்டிட வாரீர்! மராட்டியத்தின் கீர்த்தியை மீண்டும் நிலைநாட்டிட வாரீர்! - என்று தான் அழைத்தனர்!.

விஜயநகர சமஸ்தான காலத்தைக் கவனப்படுத்தித்தான் ஆந்திரர்களை அழைத்தனர்!

ரஞ்ஜித் சிங்கின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர், பாஞ்சாலத்தில்!

ஷா ஆலம் சக்கரவர்த்திக்கு வெள்ளையர் இழைத்த கொடுமைகளை எடுத்துக் கூறித்தான், டில்லி வட்டாரத்தினரை, இஸ்லாமியரை அழைத்தனர்!

இங்ஙனம், மொழிவழி அமைத்திருந்த அரசுகளின் முன்னாள் சிறப்புகளை எடுத்துக் காட்டித்தான், போர் முகாம் அமைத்தனர்!

இது போதாது என்று, காந்தியார், தெளிவுபட திட்டவட்டமாகத் தெரிவித்தார், சுயராஜ்யம் கிடைத்தும், "மொழிவழி அரசு" தான் அமைக்கப்படும் என்று.

அன்று முதல் இன்று வரை, 'மொழிவழி அரசு' என்ற பிறப்புரிமைக் கிளர்ச்சி இருந்து வருகிறது.

❀ ❀ ❀

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே காந்தாரமும் கனோசும், காமரூபமும் மாளவமும், கூர்ஜரமும் பிறவும் உருவாகாத நாட்களிலேயே, அயோத்தியும் அஸ்தினாபுரமும், காசியும் அரித்துவாரமும் 'திவ்ய க்ஷேத்திரங்கள்' ஆகாததற்கு முன்பே, பூம்புகாரும், கொற்கை, தொண்டி முசிறி எனும் பல்வேறு துறைமுகங்கள் கொண்டதாய் விளங்கியது எந்த நாடோ, எந்த நாட்டிலே முரசு மூன்று தமிழ் மூன்று வகை என்றும், தானை நால்வகை, போர் முறை பல்வேறு வகை, கருவிகள் பலப்பல என்றும் வகுத்து வைக்கப்பட்டிருந்தனவோ, எந்த நாட்டிலே நிலமே ஐவகையாக இயல்பும் எழிலும் பயனும் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டு இருந்ததோ, எந்தநாட்டு முத்தும் பவழமும் பிறநாட்டுப் பேரரசர்கள் தமது காதலைப் பெற்ற கட்டழகியர்க்குக் காணிக்கையாக்கிக் களித்தனலோ, எந்த நாட்டுப் புலவர்கள் புவியாளுவோரையும் துச்சமென்றெண்ணி அறநெறிக்கு மக்களை அழைத்துச் சென்றனரோ, எந்த நாட்டிலே முகிலின் முழக்கமும் முழவின் ஒலியும், மின்னல் ஒளியும் கன்னல் சுவையும், ஆடலழகியரின் கடையிடையும் ஆற்றலரசர்களின் கட்டாரியும் கொல்லவும் வெல்லவும் பயன்பட்டனவோ, எங்கு?

நற்றிணை நல்ல குறுந்தொகை
ஐங்குறு நூறு, ஒத்த பதிற்றுப்பத்து
ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு
அகம் புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை.

என்றபடி, பேரிலக்கியங்கள் கற்றோர் ஈட்டிய கருவூலமாக உளதோ, அந்த நாடு, அதன் எல்லைகள் வெட்டப்பட்டு, வேற்றாரால் கவரப்பட்டு அதன் பண்பு பாழ்படும் வகையினதான மொழிக்கும் கலைக்கும் இடமளித்துவிட்டு, இடர்ப்பட்டு, இழிநிலை பெற்று, இயல்பு கெட்டு, எழில் குலைந்து, கொற்றம் அழிந்து, கோலம் கலைந்து, மற்றையோர் கண்டு எள்ளி நகையாடத்தக்க விதத்தில் மானமழிந்து, ஈனர்க்குக் குற்றேவல் புரிந்து கிடக்கும் எடுபிடியாக்கப் படுகிறது! எட்டுத்திக்கும் ஒரு காலத்தில் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறந்திட்டதாம்! இன்றோ, திக்குத் தெரியாத காட்டிலே

சிறகொடிந்த நிலையில், தத்தித் தத்திச் செல்லும் தந்தை போலாகிக் கிடக்கிறது! முத்துப் பந்தலலித்து முழங்கற் படியிட்டுப் பணிந்தான் ஓர் மன்னன்! தந்தக் குவியல்களைக் காலடியில் கொட்டி, அரசர்க்கரசே! என்று அஞ்சலி செய்தான் மற்றோர் வேந்தன். படைகொண்டு வருவேன் என்று கூறினதும், திறைகொண்டு வந்தேன் என்று பதிலிறுத்தனர் மன்னர் பலர். காவிரிக் கரையிலே காதல் கீதம் பாடிய கட்டிளம் காளை, கட்கம் ஏந்திக் கங்கைக் கரையினரைப் போரிலே வென்று, அவர்தம் தேர்ச்சிலைச் சீலையினை, தமக்கு அதரத் தேனளித்து ஆட்கொண்ட ஆரணங்குகள் விளையாட வைத்திருந்த பொம்மைகளுக்கு அளித்தானாம்.

❀ ❀ ❀

முப்பதாண்டு காலமாக, கருவில் உருவாகி வந்து இன்று ஓங்கி வளர்ந்துள்ள உரிமை உணர்ச்சி, மொழிவழி அரசு என்பது.

மொழிவழி அரசு அமைக்காமல், ஆணவ வழியில் அரசு அமைத்துக் கொண்டான் ஆங்கிலேயன்; அவனது ஆட்சி அழிக்கப் பட்டானதும் 'இந்தியா'வில், மொழிவழி அரசு ஏற்படும் என்று, 'மகாத்மா'வே வாக்களித்தார்.

மாநாடு தவறாமல், இதற்கான தீர்மானங்கள், நிறைவேற்றப் பட்டன; நாட்டு மக்களுக்கு நம்பிக்கை வளர்ந்தது.

தலைவர்கள் மேடைகளிலே பேசும்போது, இந்த மொழிவழி அரசுத் திட்டத்தை வலியுறுத்தினர், விளக்கினர், அதனால் கிடைக்கக் கூடிய சுவையும் பயனும் பற்றி உணர்ச்சியூட்டினர்!

காங்கிரஸ், தேர்தல்களின் போதெல்லாம் மொழிவழி அரசு ஆதரவு காட்டியே 'ஓட்டு' வாங்கிற்று.

'மொழிவழி அரசு' இருந்தால் மட்டுமே, உண்மை தேசீயம், உறுதியான ஜனநாயகம் மலரும் என்று அறிவாளர் பலர் கூறினர். ஆமாம் என்றனர் நேரு உள்ளிட்ட தலைவர்கள்.

❀ ❀ ❀



தமிழ் மகனே! தமிழ் மகனே! தலை நிமிர்ந்து வாழ்ந்து வந்த இனத்திலுதித்த தமிழ் மகனே! தரணி மெச்ச வாழ்ந்த மரபினில் வந்த தமிழ் மகனே! ஏனடா கொற்றவனே! இந்நாளில் இந்த மண்ணிலே வந்து பிறந்தாய்! பனிப்பாறைகளே உள்ள இடந்தனிலோ, பாலைவனப் பகுதியே மிகுதியும் உள்ள நாடதிலோ, வரலாற்றுச் சிறப்பற்ற ஓரிடத்திலோ; எங்கோ ஓரிடத்திலே பிறந்திருக்கக்கூடாதா! இங்கு வந்து பிறந்தனையே, நிலையைத் தாங்கித் தவித்திட, இன்னலை ஏற்றுத் துடித்திட, இருப்பனவற்றிலெல்லாம் இனித்திடுவதாம் தன்மானம் தன்னைப் பறித்திடும் செயலிலே ஈடுபட்டுவிட்ட வன்கணாளரின் வஞ்சகத்தால் வதைபட! ஏன் இங்கு பிறந்தாய்!!

இன்பத் தமிழ் நாட்டிலே பிறந்ததனாலன்றே உனக்கு, மொழி உணர்வும், உரிமை வேட்கையும், தன்மான ஆர்வமும், துளிர்ந்து வளர்ந்து வண்ணமும் மணமும் நிறைந்திடும் எண்ணத்தினைத் தந்துவிட்டது. இணையற்ற நிலையில், இசைபட வாழ்ந்திருந்த தமிழ் இனத்திலே பிறந்ததனாலன்றோ உனக்கு உணர்ச்சி பொங்கி வழிகிறது;

❀ ❀ ❀

வேறு எதுவும் கிடைக்காததால், இந்தி எதிர்ப்பு செய்து வருகிறார்கள் என்று பேசி வந்தார்களே, அந்தப் பேச்சைத்தான், கழகத் தோழர்களையும் மாணவர்களையும், துரத்தி அடித்திடக் கிளம்பியவர்கள், நொறுக்கிப் போட்டு விட்டார்கள்! அடி விழுந்தது நம்மீது என்று எண்ணிக் கொண்டனர், விளைவு அறிந்திடும் விவேகமற்றோர்! அடி விழுந்தது, இந்தி எதிர்ப்பு பற்றி இருந்து வந்த அலட்சியப் போக்கின்மீது! அந்தப் போக்கு பொடிப் பொடியாகி விட்டது! இந்திஎதிர்ப்பு அணி, வியந்து பாராட்டிடத் தக்கவிதமாக, விரிவடைந்து விட்டது, புதிய எழுச்சியுடன் நடை போடுகிறது. குருதி கொட்டிடவும் கொடுமைகளைத் தாங்கிடவும். நேரிட்டு விட்டதே என்றெண்ணி மனம் குமுறி, தமிழ் மகனே! தமிழ் மகனே! ஏனோ பிறந்தாய் இங்கு! என்று ஏக்கம் கொண்டு பேசினேனே; தவறு! தவறு! மிகப் பெருந்தவறு! கொட்டிய குருதி வீண்போக வில்லை. குண்டடி தடியடிப்பட்டது பயன்றுப் போய்விடவில்லை. இந்தி

எதிர்ப்புப் படைவரிசையைச் சிதறடிக்க, சிறுமதியாளர் திட்டமிட்டனர், ஆனால், இந்தி எதிர்ப்புக்கு, எங்கெங்கிருந்தும், எழுச்சிமிக்க புதுப் புது படைவரிசைகள் கிளம்பி விட்டன. உறிஞ்சிக் குடித்து உருசி காண எண்ணிய கரடி; தேன்கூடு தன்னைக் கலைக்க முயன்றிட, கூட்டுக்குள்ளிருந்து தேனீக்கள் கூட்டம் கூட்டமாகக் கிளம்பிக் கொட்டி, கரடியைத் துடி துடிக்கச் செய்துவிட்டது என்று கதை படித்ததுண்டு! இன்று முதலமைச்சர் முறுக்கு மீசையினராக, உருட்டு விழி காட்டுபவராக, மிரட்டல் பேச்சு பேசுபவராகக் கோலம் பூண்டார்! அவர் காண்பது என்ன? தமிழகமே போர்க்கோலம் பூண்டு எழுந்த காட்சியை!!!

❀ ❀ ❀

நாம் 25-ம் நாள் துக்கதினம் நடத்துவோம் என்று எண்ணி, கருப்புச் சின்னமணிந்து, கருப்புக்கொடி ஏந்தி, கண்டனக் கூட்டம் நடத்த முனைந்தனர் மாணவர் - எத்தனை எத்தனை கொடுமைகள் - எங்கெங்கெல்லாம் தடியடி, துப்பாக்கிச் சூடு - மாணவரொருவர் சுட்டுவீழ்த்தப்பட்டார்! பலருக்குப் படுகாயம் - பயங்கரம் - இவைகளைத் தாங்கிக் கொண்டதன் பலன், இன்று இந்தி எதிர்ப்பு எங்கும் கேட்கப்படும் முழக்கமாகி விட்டதனைக் காண்கின்றோம்.

> "இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்க்கும் தி.மு.க.வை ஒதுக்கிவிட்டால்கூட, அதே எதிர்ப்புணர்ச்சியைக் காட்டும் பல்லாயிரக்கணக் கானவர்களை எப்படிப் புறக்கணிப்பது?"

என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் கேட்கிறது; இது ஒரு இதழின் கேள்வி மட்டுமல்ல; நாட்டவர் எழுப்பியுள்ள கேள்வி!

தமிழ் மகனே! உன்னைத் தாக்கினர்- உனக்காகப் பரிந்து பேச, வழக்கறிஞர்களும் இதழாசிரியரும் மட்டுமல்ல - தமிழர் மட்டுமல்ல - ஆந்திரர் - கன்னடியர் - கேரளியர் இவரெல்லாம் பரிவு காட்டுகின்றனர். வங்கமும் வாஞ்சனை காட்டுகிறது. எங்கெங்கும் உள்ள நல்லோர் பரிவு காட்டுகின்றனர் - இந்தி ஆதிக்கம் ஆகாது என்று உறுதியுடன் கூறுகின்றனர்.

❀ ❀ ❀

இருமொழிக் கொள்கையை உருவாக்கிட, சட்ட வடிவத்தைப் பெறத்தக்கவிதமாக, 1963-ல் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தி அமைத்திட, முதன் மந்திரிகள் மாநாடு ஏற்பாடாகிறது என்ற செய்தியை இந்தியாவின் முதலமைச்சர் லால்பகதூர் அறிவித்தார்.

இப்போது தென்னகத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையில், மறைந்த பண்டித நேரு வாக்களித்திருந்த இருமொழிக் கொள்கை, (ஆட்சிமொழி சட்டத்தை அதற்கு ஏற்ற விதமாகத் திருத்தி அமைப்பதன் மூலம்), அனைவருடைய அச்சத்தையும் போக்கத்தக்க வடிவம் பெற்றாக வேண்டும் என்பதனை வலியுறுத்தி அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜர் அறிவித்தார்.

இருமொழிக் கொள்கையை சட்ட வடிவம் கொள்ளச் செய்வதில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மாநில முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தெரிவித்தார்.

சட்ட நுணுக்கமறிந்தவர்கள். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகியோருடன் இதுபற்றிக் கலந்து பேசி ஒரு திட்டம் உருவாக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தாம் வலியுறுத்திய சூழ்நிலை உருவாக்கிவிட்டதால் தமது விலகலைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக மத்திய அமைச்சர்கள் சுப்பிரமணியமும் அளகேசனும் அறிவித்தனர்.

முதன்மந்திரிகள் மாநாடு கூடுவதற்கு முன்பு அகில இந்திய காங்கிரசின் காரியக்கமிட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

குடியரசுத்தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் தமது பேருரையில் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தனை அறிவிப்புகளின் துணைபெற்று நடைபெற்ற முதன்மந்திரிகள் மாநாடு, இருமொழிக்கொள்கையை என்ன வடிவத்திலேயே உருவாக்கப் போகிறது, அந்தத் திட்டம் எந்த அளவு திருப்திகரமாக இருக்கும் என்பது, தரப்படும் சட்டதிருத்தத்தின்

வாசகம், அந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது.

இந்த 'ஏற்பாடு' எந்த அளவுக்கு எவரெவரைத் திருப்திப்படுத்தும் என்பது ஒருபுறமிருக்க, இந்த இருமொழிக் கொள்கை உண்டாவதற்கு இருந்த காரணங்கள் மிக முக்கியமானவை என்பதை உணரவேண்டும். அரசியல் சட்டப்படி இந்தியக் கூட்டமைப்பு ஆட்சி மொழியாக இந்தி ஒன்றுமட்டுந்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டது; அரசியல் சட்டம் துவங்கி 15 ஆண்டுகள் வரை ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்படவேண்டும் என்றும் வரையறுக்கப்பட்டது.

அரசியல் சட்டப்படியும் அதனை ஒட்டி குடிஅரசு தலைவர் தந்த ஆணைப்படியும் இந்தியின் உபயோகம் வரவர விரிவாக்கப் பட்டும் ஆங்கிலத்தின் இடம் குறைக்கப்பட்டும் வந்தது.

இந்தி ஆதிக்கம் வளர்வதும், ஆங்கிலம் ஒதுக்கபடுவதும் இந்தி பேசாத மக்களிடம் அச்சத்தை உண்டாக்கியது. தென்னாட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் திராவிட முன்னேற்ற கழகம் அறவழி நடத்தி இந்த மனப்போக்கை எடுத்து விளக்கிற்று. நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கத் துறைகளில் இந்தி திணிக்கப்பட்டமுறை, கழகம் எழுப்பிய கண்டனத்திற்கு வலிவளித்தது.

இந்தி பேசாத பகுதி மக்களின் அச்சம், கண்டனமாக மாறிவரும் நிலையில் பிரதம மந்திரியாக இருக்க பண்டிதநேருவும், குடிஅரசுத்தலைவர் டாக்டர் இராஜேந்திரபிரசாதும் அரசாங்கச் சார்பில் பல உறுதிமொழிகளைத் தந்தனர். அவற்றில் முக்கியமானது 1959-ல் செப்டம்பர் 4-ல் பாராளுமன்றத்தில் பண்டிதநேரு தந்த உறுதிமொழியாகும். இந்தி ஆட்சிமொழியாக வருவது பற்றி இந்தி பேசாத மக்கள் கவலைப் படுக்கின்றனர் என்பதை இந்த உறுதிமொழி கட்டிக் காட்டியது.

அரசியல் சட்டத்தில் உள்ளத்தை அப்படியே நிறைவேற்ற அனுமதித்திருந்தால் 1965 ஜனவரி 26-க்குப் பின் இந்தி ஒன்று மட்டும்

இந்தியாவின் ஆட்சிமொழி என்ற நிலை பிறந்திருக்கும்; ஆங்கிலம் அடியோடு அகற்றப்பட்டுப் போயிருக்கும்.

அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்ட காலவரையறை - 1965 ஜனவரி 26 நெருங்க, நெருங்க, இந்தி பேசாத மக்களின் அச்சம் அதிகரித்தது. ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியைக் கொண்டு வருவது சரியல்ல என்று பல்வேறு காரணங்களைக் காட்டி வலியுறுத்தப்பட்டது. இந்திக்கு உண்டான எதிர்ப்பு அலட்சியப் படுத்த முடியாததாக வளர்ந்து விட்டது.

மற்றொரு வகையில், அரசியல் சட்டத்தை எழுதும் நேரத்தில் மிக உற்சாகமாக 15 ஆண்டுகளுக்குப் பின் இந்தி மட்டுந்தான் ஆட்சிமொழி என்று எழுதிவைத்துக்கொண்ட போதிலும், ஆட்சிமொழி என்ற கௌரவப் பெயரை ஆங்கிலத்துக்கு இந்திப் பிரியர்கள் தர மறுத்தாலும், ஆங்கிலத்தை அறவே நீக்கி விடுவது என்பது முடியாத காரியம் என்று அவர்களுக்கும் பட்டது. ஆட்சி மொழியின் முழுப் பொறுப்பையும் இந்தியிடம் தர இந்தியா தயாராகவில்லை; இந்தி பேசாத மக்கள் தயாராக இல்லை; இந்தி மொழியே தயாராக இல்லை.

ஆக இந்தி தனியாக ஆட்சிமொழியாக ஆவதற்கு இரு தடைகள் உண்டாயின; ஒன்று நேரடியாக இந்திக்கு உண்டான எதிர்ப்பு; இரண்டாவது, அதனுடைய இயலாத தன்மை. எனவே இரண்டு வகையிலும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த அவசியம், "ஆட்சி மொழிகள்" சட்டம் என்பதை உருவாக்கியது.

ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்த வழி வகை செய்யப் பட்டு விட்டது என்றும், நேரு தந்த உறுதிமொழி நிறைவேற்றப் படுகிறது என்றும் அரசாங்கச் சார்பில் கூறப்பட்டது. விரும்பினால் ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம் என்று இருப்பது ஆங்கிலத்தை உபயோகத்தைக் குறைத்து, இந்தி ஆதிக்கத்துக்கு இடம் ஏற்படுத்தும் என்று, தி.மு. கழகமும் மற்ற இந்தி எதிர்ப்பு உணர்வினரும் கருதினர். நேரு உறுதிமொழி அந்தச் சட்டத்தில் இடம்பெறவில்லை என்பதனை இதற்காக எடுத்துக் காட்டப்பட்டது.

1965 ஜனவரி 26 நெருங்க நெருங்க, இந்தித் திணிப்பு புதுவேகத்தை அடைந்தது. இந்தி பற்றி அரசாங்க உத்திரவுகள் வந்தபடி இருந்தன. இந்தி ஆதிக்ககாரரின் குதூகலமும் பெருமிதமும் வெளிப்படையாகத் தெரிந்தன.

எல்லாம் அரசியல் சட்டப்படிதான் நடைபெறுகிறது என்று அரசாங்கச் சார்பில் கூறப்பட்டது; இந்தி பேசாத மக்களின் அச்சத்தை இந்தப் பேச்சு குறைக்கவில்லை; மாறாக அச்சம் வளர்ந்தது. சட்டப்படி நடந்தால், இந்திதான் ஆட்சிமொழி என்பது தெளிவாக இருந்தது. எனவே இந்தி ஆதிக்கத்தைத் தடுக்க வேண்டுமென்றால் சட்டபூர்வமான பாதுகாப்பு இருந்தாலொழிய வேறு வழியில்லை என்பது தெளிவாயிற்று. இந்தத் தெளிவு, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஒரு தனிக்கட்சி நடத்துவது என்ற நிலையிலிருந்து, அனைவரின் கவனத்தையும் ஆதரவையும் ஈர்த்திடும் பெரிய பிரச்சனையாகிட உதவிற்று. மாணவர் எழுச்சி பிறிட்டுக் கிளம்பிற்று. ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தி ஆட்சிமொழியாக வ௩ுவதை தென்னாடு - இந்தி பேசாத பகுதி - ஒப்புக்கொள்ளவில்லை என்பதைக் கிளர்ச்சி எடுத்துக் காட்டியது.

எதிர்ப்புணர்ச்சி பொங்கி எழுந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முதலாமைச்சர் இந்த நேரத்தில்தான், "இரு மொழிக் கொள்கைக்காக வாதாடப் போவதாகவும், அதற்காக சட்ட ஏற்பாடு பெறப் போவதாகவும்" அறிவித்தார்.

1965 - ஜனவரி 26க்குப் பின் திடீரென எதுவும் நிகழவில்லை என்றும், நேரு வாக்குறுதி முழுமையாக நிறைவேற்றட்டப்பட்டு வருகிறது, என்றும் இந்தியப் பிரதமர் லால்பகதூர், பேசிக்கொண்டும், அறிக்கை தந்து கொண்டும், வானொலிப் பேருரை நிகழ்த்திக்கொண்டும் இருந்த நிலையில், தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், பிரதமரின் விளக்கம் போதாது, என்பதனை எடுத்துக் கூறும்விதமாக, இருமொழிக் கொள்கை சட்டபூர்வமாக ஏற்பட்டாக வேண்டும் என்று பேசியது குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல, எத்தனைதான் அவர் கண்டித்தபடி இருந்த போதிலும் அவருடைய மனம் மாறிவந்திருக்கிறது என்பதனையும் எடுத்துக்காட்டுகிறது.

இதற்கு முன்பு எப்போதும் அவர் கூறாதது, இரு மொழிக் கொள்கைக்கு சட்டவடிவம் வேண்டும் என்று இப்போது பேசியது.

நேருவின் வாக்குறுதிபோதும் என்றும், அது நிறைவேற்றப் படுகிறது என்றும், லால்பகதூர் சர்க்கார் நேருவின் வாக்குறுதிப்படி நடந்து கொள்ளும் என்பதிலே தமக்கு முழு நம்பிக்கை இருக்கிறது என்றும் பேசிப்பேசிப் பழக்கப்பட்ட முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், திடீரென இருமொழிக்கொள்கை சட்டவடிவம் பெற்றாக வேண்டும் என்று பேச முற்பட்டது டில்லி வட்டாரத்தைத் திடுக்கிடச் செய்திருக்கும், காங்கிரஸ் வட்டாரத்தினரையும் ஒரு குலுக்கு குலுக்கி இருக்கும். இன்று ஆட்சிமொழிச் சட்டத்தைத் தக்கவிதத்தில் திருத்தி, நேருவின் வாக்குறுதி நிறைவேற்றப் படத்தக்க பாதுகாப்பு பெற்றாக வேண்டும், · இருமொழிக் கொள்கை சட்டத்தில் இடம்பெறவேண்டும், இப்போது உள்ள சட்டம் போதாது என்று பேசும் இதே முதலமைச்சர் அதே சட்டம் குறைபாடுடையது என்று 1963-ல் பலர் எடுத்துக் காட்டியபோது, ஏற்கமறுத்தவர்; சட்டத்தை முழுத் திருப்தியுடன் வரவேற்றவர். இப்போது அவருக்கே, ஆட்சிமொழிச் சட்டம் தக்கவிதமாகத் திருத்தப்பட்டால் தான், இருமொழிக் கொள்கை நடைமுறையில் வெற்றிபெறும், நேருவின் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதாக ஆகும் என்று தெரியவருகிறது.

இவருடைய நிலையிலேயே இந்தவிதமான மாறுதல் ஏற்பட்டது என்றால் மற்ற மற்ற காங்கிரஸ் தலைவர்கள் வேகவேகமாக இருமொழிக்கொள்கைக்காகச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கருத்தின் பக்கம் வந்து நிற்பதிலே வியப்பு ஏதுமில்லை.

எழுச்சிமிக்க அணிவகுப்பினை நடத்திக் காட்டிவிட்டீர்கள், ஏற்புடையது உமது எழுச்சி என்று அனைவரும் பாராட்டுதலை வழங்கியுள்ளனர், உமது எழுச்சி காரணமாக இந்தி ஆதிக்கத்துக்கு எத்தகைய எதிர்ப்புணர்ச்சி உருவாகி இருக்கிறது என்பதனை இந்தியப் பேரரசு உணர்ந்துவிட்டது. ஏதாகிலும் ஒருவிதமான தீர்வு கண்டாக வேண்டும் என்ற நிலைக்குப் பேரரசு இப்போது வந்துவிட்டிருக்கிறது, இந்தப் புதிய போக்கு காரணமாக என்ன கிடைக்கிறது, எவரெவர் இதற்காக முயற்சி மேற்கொள்ளப்

போகிறார்கள் என்பதனைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும், பிரச்சினையை இனிமற்றவர்கள் கவனித்துக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும், எனவே போராட்டத்தை மாணவர்கள் விட்டுவிட வேண்டும், நேரடி நடவடிக்கைகள் கூடாது, நேரடி நடவடிக்கைகளை மேற்கொண்டவுடன், தூய இயக்கத்தைப் பாழ்படுத்தி மகிழும் தீய சக்திகள் நுழைந்து கொண்டுவிடும், ஆகவே நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று மாணவர்களைக் கேட்டுக கொண்டேன். அந்த அறிக்கைக்கு உடனடியாகப் பலன் ஏற்படவில்லை. பிறகு, தமிழகத்தில் நடைபெற்றவைகளை இப்போது கூட எண்ணிப் பார்க்கும்போது நெஞ்சு நடுக்குறுகிறது. எவை எவை நடைபெறக் கூடாதோ அவைகெளெல்லாம், எவை எவைகளைத் தமிழ்ப் பண்பாடு ஏற்காதோ அவைகளெல்லாம் நடைபெற்றுவிட்டன. நாடே அதிர்ச்சி அடைந்துவிட்டது. பெரும் இழப்புகள், கொடூரங்கள் நடைபெற்றுவிட்டன.

இது குறித்து சுதேசமித்திரன் வாரமலர், “கடந்த வாரம் தமிழகம் கண்ட பயங்கர ரணகளம் குறித்துப் பேரதிர்ச்சியும் ஆழ்ந்த வருத்தமும் அடையாதவர் இருக்க முடியாது. ஆனால் வருந்தி மட்டும் பயனில்லை; அவதியுற்றவர்களுக்கு வெறும் அனுதாபம் தெரிவிப்பதாலும் ஆவதொன்றுமில்லை. இனி ஒருபோதும் அவ்விதம் நடக்கவிடக் கூடாது. அதுவே அனைத்திலும் முக்கியம்”. என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது.

நடைபெற்றவைகளுக்கான காரணங்களை ஆராய்வதும், புகார் கூறிக்கொண்டிருப்பதும், பயன் அளிக்கப் போவதில்லை.

அடக்குமுறைக்கு மத்தியிலும் வன்முறை எழாத நிலையை ஏற்படுத்திக் கட்டிக்காத்திட வேண்டும்; அது இயலாது என்று தோன்றுமானால், தெரியுமானால், எத்தனை தூய்மையான நோக்கத்துக்காக எவ்வளவு எழுச்சியுடன் நடத்தப்படும் கிளர்ச்சியாயினும் அது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இதுவே அறநெறி வழுவாத முறை.

அடக்குமுறை அத்துமீறிப் போய்விட்டதன் விளைவே வன்முறை என்பது வாதம்; நியாயமாகாது.

வன்முறை ஏற்பட்டுவிட்ட பிறகு அரசு, சட்டமும் அமைதியும் காப்பாற்றப்படுவதற்காக என்று காரணம் காட்டி, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட வழி கிடைத்துவிடுகிறது. இதன் தொடர்பாக, கழகப் பொருளாளர் கருணாநிதி பாதுகாப்புச் சட்டப்படி கைதாகினார் என்பதும், கழகத் தோழர்கள் பலர் கைது செய்யப்படுகின்றனர் என்பதும், நமது உள்ளத்துக்கு எத்தனை உளைச்சலை ஏற்படுத்தினாலும், நாமும் நமது கழகமும், நிதானம் இழந்திடாத, எதனையும் பொறுத்துக் கொள்ளக் கூடிய மனதினர் என்பதனை நினைவிற் கொள்ள வேண்டும் மஇப்போது நாட்டுக்கு மிக மிகத் தேவைப்படுவது, உடனடியாகத் தேவைப்படுவது, அமைதி. பகை உணர்ச்சிகள் மடிந்திட வேண்டும், மறச் செயலினை வெறுத்து ஒதுக்கிட வேண்டும், அறநெறி பாதுகாக்கப்பட்டாக வேண்டும், சமூகத்தில் கலவரமும் பீதியும் ஏற்படக்கூடிய எந்தச் செயலையும், சொல்லையும் தவிர்க்க வேண்டும். எல்லாத் துறையினரும் எல்லா வகையினரும், எல்லா வகைகளிலும் நெஞ்சு வெடித்திடத்தக்க இழப்புகள் பெற்று, தமிழகம் தத்தளித்து விட்டிருக்கிறது. கண்ணீரும் இரத்தமும் எங்கெங்கும். இந்த நிலை, எவ்விதமாக ஏற்பட்டிவிட்டிருப் பினும் எவரும் இதனை ஏற்புடையது என்று கருதமாட்டார்கள்; குறிப்பாக ஆண்டு பலவாக அறநெறிக் கிளர்ச்சிகள் பல மேற்கொண்டு, அமைதிக்கோ ஒழுங்குக்கோ, உயிருக்கோ உடைமைக்கோ ஒரு சேதமும் ஏற்படாதபடி, கிளர்ச்சி என்பது இலட்சிய வெற்றிக்காக மேற்கொள்ளப்படும் தூயபணி என்பது மெய்ப்பிக்கப்படத்தக்க விதமாக நடந்துகொண்டு வந்துள்ள நமது கழகம், தீச்செயல்கள் தலைவிரித்தாடிடத்தக்க சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடிய கிளர்ச்சிகளை ஆதரிக்காது - ஆதரித்ததில்லை. இந்த நமது நிலையினை ஏற்க மறுத்து அரசு நம்மில் பலரைக் கைது செய்திடினும், கழகத் தோழர்கள், நீதிவெல்லும் என்ற நம்பிக்கையுடன், அமைதிகாத்து, அறநெறி நின்றுவரவேண்டும். நடைபெற்றவைகளை எண்ணிஎண்ணி வேதனைப்பட்டு, புண்பட்ட உள்ளத்திலிருந்து வெளிவரும் என் வேண்டுகோள் இது. என்போன்றே நாட்டிலே, பலரும் எண்ணம் தெரிவித்துள்ளனர். அனைவரும் அமைதி காத்திட, அறநெறி நின்றிட வேண்டும் என்பதே இன்று தமிழகத்தின் வேண்டுகோள்.

இந்தித் திணிப்பே கிடையாது என்றும், இந்தி மட்டுமே ஆட்சி மொழி ஆகவேண்டும் என்றும், பேசிக்கொண்டு வந்த காங்கிரஸ் வட்டாரத்திலேயே இப்போது இந்தி திணிப்பு இருக்கிறது என்ற உணர்வும், இந்தித் திணிப்பு கூடாது என்ற உறுதியும், இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கும் என்பதனை இந்தி பேசாதா பகுதி ஏற்றுக் கொள்ளாது, ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற எண்ணமும் ஏற்பட்டு வருகிறது. பல காங்கிரஸ் தலைவர்களும், அமைப்புகளும் இந்தக் கருத்தினைத் தெரிவித்திருப்பதனை அனைவரும் அறிவர். பண்டித நேருவின் வாக்குறுதியே போதும், இதனை உறுதிப்படுத்தவும் செயல்படுத்தவும் சட்ட வடிவம் வேண்டும் என்ற கருத்தினை இதுவரை மறுத்துக் கொண்டும் எதிர்த்துக்கொண்டும் வந்திருந்த காங்கிரஸ் கட்சியினர் இப்போது சட்டம் வேண்டும் என்ற வலியுறுத்த முற்பட்டு விட்டுள்ளனர். ஆங்கிலம் அகற்றப்பட்டுவிடக்கூடாது என்பதற்கு ஆதரவான தீர்மானம், சில நகராட்சிகளில், கட்சி வேறுபாடின்றி, காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்று நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இவைகள் ஒவ்வொன்றும் புதிய போக்குக்கான அறிகுறிகள்; மொத்தத்தில் புதியபோக்கு ஏற்பட்டு வருகிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது என்பது இதனால் விளக்கமாகிறது. இந்தி ஆங்கிலம் எதிர்ப்புப் பிரச்சினை, காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளின் நடவடிக்கை அல்லது கிளர்ச்சி என்பது இந்தி ஆதிக்கத்தைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோருக்கும் இந்தி பேசாத பகுதியினருக்கும் உள்ள உறுதிக்கும் இடையே ஏற்பட்டு விட்ட பிரச்சினை என்றாகிவிட்டது. இது முக்கியத்துவம் வாய்ந்த திருப்பம்.

இந்தக் கட்டத்திலேதான் முதன் மந்திரி மாநாடு. இருமொழிக் கொள்கையின் வடிவம் அந்த நடைமுறை ஆகியவை இனித்தான் தெரியவருகிறது தெரிந்த பிறகுதான் அது குறித்து நாம் விரிவான கருத்தளிக்க இயலும்.

இருமொழிக் கொள்கை நல்லமுறையில் திட்டமிடப்பட்டு நல்ல எண்ணத்தில் நிறைவேற்றப்படும் என்றால்கூட, அது இந்தியாவின் மொழிப்பிரச்சினை நிரந்தரமான முறையில் தீர்த்துவிடாது.

ஆனால், ஒரு புதிய போக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்துப் பார்த்தால், நம்பிக்கைக்கு வழி ஏற்படும்.

இந்தியே இந்தியாவின் ஆட்சிமொழி, ஆங்கிலம் எந்தக் காரணத்தைக் கொண்டும் துணை ஆட்சிமொழியாகக் கூட இருக்க அனுமதிக்கப் போவதில்லை என்று கூறிக்கொண்டிருந்த பிடிவாதம் உடைபட்டு விட்டிருக்கிறது. இந்தி பேசாத பகுதியினர் விரும்பினாலொழிய ஆங்கிலம் அகற்றப்படமாட்டாது என்று கூறிடவும் வாக்குறுதிகளைத் திரும்பத் திரும்ப வழங்கவும், வழங்கப்படும் வாக்குறுதிகளை நம்ப இயலாது, சட்டத்திலே அது ஏற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தியதாக இப்போது ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்தவும் இந்தியப் பேரரசு முன் வந்திருப்பது, புதியபோக்கு ஏற்பட்டிருப்பதை விளக்குகிறது.

இந்தி ஆங்கிலம் என்ன இரு மொழிகளும் ஆட்சி மொழிகளாக சட்டப்படி இயங்கும் என்ற திட்டமும் தற்காலிக திட்டந்தான். ஆனால் முன்பு இருந்து வந்ததைவிட ஒருபடி முன்னெறிய திட்டம் இந்தி எதிர்ப்பாளர்களின் குரலை மதித்தாக வேண்டும் என்ற நிலைக்கு இந்தியப் பேரரசு வந்திருக்கிறது - வரவேண்டியாகிவிட்டது - என்பதை எடுத்துக்காட்டும் திட்டம் ஒரே ஒரு மொழிதான் ஆட்சிமொழி என்ற கொள்கை தளர்த்தப்பட்டு, இரண்டு மொழிகள் ஆட்சி மொழிகளாக இயங்கலாம் என்பது - கருத்து அளவுக்காகவது - ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பது, பழைய பிடிவாதம் தகர்ந்து வருகிறது என்பதனைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் அளவையும் உணர்ச்சி வலியையும் அலட்சியப்படுத்த முடியாத நிலையில் இந்தியப் பேரரசு இருமொழிக் கொள்கை என்ற இந்த அளவுக்கு இறங்கி வந்திருக்கிறது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இராஜகோபாலாச்சாரியார் இந்த இருமொழிக் கொள்கையை வலியுறுத்தியபோது ஏற்க மறுத்த அரசு இப்போது, இந்தி பேசும் பகுதி இந்தி பேசாதார் பகுதி எனும்

இரு பிரிவினருக்கும் சமரசமாக இருமொழிக் கொள்கையும் திட்டமும் இருக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

இருமொழிக் கொள்கை என்பது சட்ட அமைப்பில் தெளிவு, நடைமுறையில் நேர்மை ஆகியவை சரியாக இருந்தால்கூட, இந்தி பேசாத மற்றவர்களுக்கு முழுத் திருப்தியை அளித்துவிடாது. மத்திய ஆட்சிமொழிகளாக வளம் பெற்ற எல்லாத் தேசீய மொழிகளும் ஏற்கப்படும் வரை, நிலையான, திருப்திகரமான முடிவு ஏற்பட்டதாகக் கருத முடியாது என்றாலும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்பட்ட கிளர்ச்சி இந்த அளவுக்காவது பலன் தந்திருக்கிறதே என்பது நமது ஊக்கத்தை வளர்த்திடச் செய்யும். கிளர்ச்சிகளைக் கட்டுப்பாடாகவும், அமைதியும் ஒழுங்கும் கெடாத, முறையிலும், வன்முறை எழாத தன்மையிலும், காவல்துறையினருக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் பகை உணர்ச்சி ஏற்படாத தன்மையிலும், கொடுமைகளும் குரூர நிகழ்ச்சிகளும் ஏற்படாத விதத்திலும், பொதுச் சொத்துக்கு நாசமும், சமூகத்தில் கலவரமும் பீதியும் ஏற்படாதபடியும் நடத்திச் செல்ல முடியாமற் போய் விட்டது மனவேதனையைத் தருவதாகும். கிளர்ச்சிகள் தொடங்கும் போதே அடக்குமுறை வீசப்படும் என்பதனை அனைவரும் அறிவர்; அடக்குமுறையைக் காரணமாகக் கொண்டு வன்முறை தலைதூக்க இடம் கொடுத்ததால், கிளர்ச்சி என்ற பேச்சே மனக்கிலேசத்தை மூட்டி விடுவதாக ஆகிவிட்டது. இது மிக மிக வருந்தத்தக்க நிலையாகும். சமூக விரோத சக்திகள் எந்தத் தூய்மையான கிளர்ச்சியையும் உள்ளே நுழைந்து கெடுத்துவிடும், சமூகத்துக்குக் கேடு செய்துவிடும் என்பதனைக் கண்ட எவரும் கவலையும் கலக்கமும் கொள்ளாமலிருக்க முடியாது.

எனவே, ஒரு இடைக்கால ஏற்பாடு, என்ற முறையிலே இருமொழிக் கொள்கை அமைகிறது என்ற போதிலும், இதிலே முழுத் திருப்தி கொள்வது இயலாது என்ற போதிலும், நிரந்தரமான நிலையான தீர்வுதேசீய மொழிகள் யாவும் ஆட்சிமொழிகளாவதிலே தான் இருக்கிறது என்றாலும், பெற்ற வெற்றி பெறவேண்டிய வெற்றிகளுக்கு வழி அமைக்கிறது என்ற முறையில் இந்த இருமொழிக் கொள்கையைக் கொள்ளவேண்டி இருக்கிறது. தேசீய மொழிகள் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற நிலையான தீர்வு

ஏற்பட அமைதியும் ஒழுங்கும், கண்ணியமும் கட்டுப்பாடும் மிக்க முறையில், காந்தீய நெறியில், அறவழியில் பணியாற்றி வரவேண்டும். இடைக்கால ஏற்பாடு போன்ற இருமொழிக் கொள்கை நல்ல வடிவம் பெற்று, நேர்மையாக நடத்திக் காட்டப் படுமானால், அது இப்போதைக்கு உடனடியாக ஏற்பட்டு விட்டிருக்கக் கூடிய இந்திய ஆதிக்கத்தின் பிடியிலே ஒரே அடியாகச் சிக்கி, ஆங்கிலத்தின் துணையையும் இழந்து எல்லா வகையாலும் இடரும் இழிவும் பெற்று நலிந்து போகவேண்டியதைத் தடுத்து நிறுத்துகிறது. இருமொழிக் கொள்கை, மொழிப் பிரச்சினைக்கும் சிக்கலுக்கும் தீர்வு காட்டவில்லை என்றபோதிலும், உடனடியாக உருட்டி மிரட்டிக் கொண்டு வந்துகொண்டிருக்கும் இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த, கட்டுப்படுத்தத் துணை செய்கிறது. இந்த இருமொழிக் கொள்கை சட்டவடிவம் பெற்றபிறகு மேலும் இது குறித்து கருத்தறிவிக்க வாய்ப்புக் கிடைக்கப்பெறும். இப்போதைக்கு, ஒரு பிடிவாத நிலையிலிருந்து இந்தியப் பேரரசு, சமரசம் தேடும் நிலைக்கு வந்திருப்பது, குறிப்பிடத்தக்க ஒரு வெற்றி என்றே கொள்ளவேண்டும். இதுவும் கிடைக்காது போயிருப்பின் இந்தி ஆங்கிலத்தை மிக விரைவிலே விரட்டிவிட்டு, தமது ஆதிபத்தியத்தைச் செலுத்தி நம்மைத் திக்குமுக்காடச் செய்து விட்டிருக்கும். இப்போதைக்கு அபாயநிலையை நீங்கியிருக்கிறது - உலக மொழியான ஆங்கிலம் தொடர்ந்து துணை ஆட்சிமொழியாக இருந்துவர் சட்டம் கிடைக்கிறது. இந்தி ஆட்சிமொழி என்பது அகற்றப் படவில்லை; ஆனால் இந்தித்திணிப்பு, இந்தி ஆதிக்கம் தடுத்து நிறுத்தப் படவில்லை; ஆனால் இந்தித்திணிப்பு, இந்தி ஆதிக்கம் தடுத்து நிறுத்தப் பட்டிருக்கிறது என்பதுதான் இருமொழிக் கொள்கையினால் நாம் எதிர்பார்க்கக்கூடிய பலன்.

இது முழுவதும் திருப்தி தருவதல்ல, நிலையான பரிகாரம் தேடியாக வேண்டும் என்பது உண்மை என்றபோதிலும், இதற்காக இனி மாணவர்கள் கிளர்ச்சி நடத்தத் தேவையில்லை என்பதனைப் பரிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மொழிப் பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை வகுப்பிலும், நடத்திச் செல்வதிலும், கட்டுப்பாட்டுடன் வன்முறை எழாத முறையில், அறநெறியில் பணியாற்றத்தக்க சூழ்நிலையை உருவாக்கிடவும், தொடர்ந்து பணியாற்றவும் மாணவர்கள் இந்தி

ஆதிக்கத்தை எதிர்த்துப் பணியாற்றிடும் மற்றவரக்ளிடம் பிரச்சினையை விட்டுவிட வேண்டும். பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம், மாணவர்கள் மேலும் கிளர்ச்சிகளில் ஈடுபட வேண்டாமென்று, மாணவர்களின் மொழிப்பற்றினையும், எழுச்சியினையும் வரவேற்றுப் பாராட்டி துணைநின்ற எல்லா இதழ்களும் இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதனை மாணவர் சமுதாயம் கவனித்து கிளர்ச்சி இனி இல்லை என்று அறிக்கை வெளியிட்டிருப்பதனை போற்றி வரவேற்காதார் இல்லை. வழக்கறிஞர்கள், பொதுமக்களிடம் தொடர்பு கொண்ட தலைவர்கள், இதழாசிரியர்கள் பொதுமக்கள் ஆகியவர் அனைவரும் இந்தப் பிரச்சினையில் அக்கறை கொண்டுவிட்டனர்.

பாராளுமன்றத்திலே நடைபெற்ற பேச்சுக்ளை நுணுகி ஆராய்ந்து பார்ப்போர்; புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதை உணருவார்கள். சிலர் இந்தி ஆதிக்கம் உடைபட்டுப் போகிறதே என்ற எரிச்சலில் பேசியுள்ளனர் என்றபோதிலும், பொறுப்புள்ள பலர், இந்தித் திணிப்பு காரணமாக இந்தியா உடைபடும் என்ற நிலை ஏற்பட்டுவிடக் கூடாது - இந்தியா முக்கியம் இந்தி அல்ல என்று பேசியிருப்பது, பொருள் நிரம்பிய பேச்சாகும்.

இந்தியா ஒன்றுபட இந்தி என்பது பழைய பேச்சு! இப்போது எழுந்துள்ள கேள்வி, இந்தியாவா இந்தியா, எது தேவை என்பதாகும்; இதற்குப் பெரும்பாலார் தந்துள்ள பதில், இந்தியா முதலில் என்பதுதான். இந்த புதிய திருப்பத்துக்கு எல்லா முதலமைச்சர்களும் இசைவு அளித்திருப்பது காண்கிறோம்.

நமது கழகத்தின் கொள்கையை நண்பர் மனோகரன் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறியபோது, எழுந்த குறுக்கீடுகள், பிடி தளருகிறது என்பதனை உணர்ந்து எரிச்சல் கொண்டவர்களின் எக்களாம். இது, பாராளுமன்றத்தின் பெரும்பான்மையினரின் கருத்தை எடுத்துக் காட்டுவது அல்ல.

இதற்கு முன்பு எப்போதும் இந்தி எதிர்ப்பாளர்களைக் கண்டிப்பதிலேயே அக்கறை கொண்டு, திறமையைக் காட்டி, இந்தி ஆதரவாளர்களின் கண்சிமிட்டலிலே சொக்கிப் போயிருந்த பல

காங்கிரஸ் உறுப்பினர்கள், இம்முறை, உணர்ச்சியுடன் வாதாடவும், தமிழக நிலையை விளக்கவும், தி.மு. கழகத்தின்மீது குற்றம் கூறிவிடுவது பிரச்சினையைத் தீர்த்திட உதவாது என்று அறிவுறுத்தவும், இந்தித் திணிப்புக்குத் தமிழர் அனைவரும் எதிர்ப்பாளரே என்று இடித்துக் கூறவும், சந்தேகத்துக்கும் அச்சத்துக்கும் இல்லாத முறையில், சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும் என்று வலியுறுத்தவும் முற்பட்டது காண மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கொள்ளமுடிகிறது.

முழுக்க முழுக்க இந்தி வட்டாரம் என்று கருதத்தக்க மாநிலத்தவர் கூட, இப்போது நிலைமையை உணர்ந்து, தங்களின் பழைய போக்கை மாற்றிக்கொள்ள முன்வந்துள்ளனர்.

இந்தி மொழியில் விற்பன்னரும், கவிவாணரும், முன்னாள் இராஜ்யசபை உறுப்பினரும், இப்போது பகல்பூர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக உள்ளவருமான தின்கர் என்பவர், இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படுவதால், இந்தியாவில் ஒற்றுமை குலையும் என்று தெரியுமானால், இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படும் திட்டத்தைக்கூட விட்டுவிட வேண்டியதுதான் என்று கூறியிருக்கிறார்.

பீகார் மாநிலத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றும் இருவர், என்னைக் கண்டு பேசியபோது (25.2.65)ம், இதனை வலியுறுத்திப் பேசினர். இந்தியால் ஒற்றுமை உணர்வு ஏற்படும் ஏற்படும் என்று எண்ணினோம், இப்போது நாங்கள் நிலைமையை உணர்ந்து கொண்டோம்; இந்தியால் இந்தியாவின் ஒற்றுமை கெடக்கூடாது என்பதிலே பீகாரில் பொறுப்புள்ள பலருக்கும் எண்ணம் ஏற்பட்டு விட்டிருக்கிறது என்று கூறி, தின்கர் அவர்களின் பேச்சைச் சான்றாக எடுத்துக் காட்டினர்.

அவர்களுடன் உரையாடும்போது, நானும் அவர்களிடம் கூறினேன் - இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படவேண்டும் என்பதற்காக வாதாடுவோர்களிடம் எங்களுக்கு ஒரு பகையும் இல்லை, தகராறும் இல்லை; சர்க்காரின் போக்குதான், இந்திக்காரர், இந்தி பேசாதார் எனும் இருசாராருக்கும் ஒருசேர, மனக்குமுறலை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. இந்திக்காரர்களிடம் இந்தச் சர்க்கார் 1965-ல் இந்தியே ஆட்சிமொழி என்று நம்பிக்கையுடன் பேசிப்பேசி, அவர்கள்

மனதிலே எழுச்சியை மூட்டிவிட்டது; அதேபோது, இந்தி பேசாத பகுதியினரான எங்களிடம், இந்தியைத் திணித்துவிட மாட்டோம், உங்கள் சம்மதம் பெறாமல் ஆங்கிலத்தை நீக்கிவிட மாட்டோம், காலவரையறையின்றி ஆங்கிலம் நீடிக்கும் என்று பேசி, எங்கள் மனதிலே நம்பிக்கையை ஏற்படுத்தி வந்திருக்கிறது. இவ்விதமாக இருகுரலில் பேசிடும் போக்கின் விளைவே இன்றைய நெருக்கடி என்பதனை விளக்கினேன். அந்த பீகார் நண்பர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். தெரிவித்துவிட்டு தி.மு.கழகத்தின் மொழிக் கொள்கை என்ன என்று கேட்டனர். ஆட்சிமொழிகளாக தேசிய மொழிகள் யாவும் சட்டத்தில் இடம்பெறவேண்டும்; அதற்குக் காலம்பிடிக்கும் ஆகையால், அதுவரை ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும், இதுதான் கழகக் கொள்கை என்று கூறினேன். அவ்விதம் ஆன பிறகும் ஒரு இணைப்பு மொழி வேண்டுமே, அது எது? என்று கேட்டனர். தேசிய மொழிகளெல்லாம் ஆட்சிமொழிகளான பிறகும், ஆங்கிலத்தை எவரும் புறக்கணித்து விடப் போவதில்லையே, இந்தியே ஆட்சிமொழி ஆகவேண்டும் என்பவர்கள்கூட ஆங்கிலம் பயிலவேண்டும் என்றுதானே கூறுகிறார்கள், அந்த ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருந்துவிடட்டுமே என்றேன், அவர்கள் அதிலே முழுத்திருப்தி பெறவில்லை. நம்முடைய மொழிகளிலே ஏகாகிலும் ஒன்றுஇணைப்பு மொழியாக இருப்பது நல்லதல்லவா என்றனர்; நான் தேசிய மொழிகளிலே ஏதேனும் ஒன்று இணைப்பு மொழியாக வரவேண்டும் என்பதைக் காலம்தான் நிர்ணயிக்க வேண்டும், இயற்கையாக அந்த நிலை வரவேண்டும், சர்க்காரின் துணையுடன் ஒரு மொழி அந்த நிலையைப் பெறக்கூடாது; மக்களே முடிவுசெய்ய வேண்டும், என்று கூறினேன். அவர்கள் அதிலே மகிழ்ச்சி பெற்றனர்.

புதிய திருப்பம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்பதனை மெய்ப்பிக்கும் பல நிகழ்ச்சிகளைக் காண்கின்றேன். முதலமைச்சர் களின் முயற்சியும் இந்தப் புதிய திருப்பத்தின் விளைவுதான். இனி இது குறித்து எத்தகைய சட்டவடிவம் கிடைக்கிறது என்பதனைக் கண்டறிந்து மேலால் என் கருத்தைக் கூறுகிறேன். இப்போதைக்கு, ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதனை மட்டும் எடுத்துக்காட்டுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். பிற, பிறகு.



கலை

குழலூதும்போது கவனித்துப் பார் தம்பி! விரல்கள் எவ்வளவு, 'நளினமாக' வேலை செய்கின்றன என்பது விளங்கிடும். ஓவியம் தீட்டுவோன் தூரிகையை எவ்வளவு பக்குவமாகப் பயன்படுத்துகிறான் என்பதனையும்ப ார்த்திடு, கல்லிழைத்த நகை செய்திடும் பொற்கொல்லரின் கைத்தி றனையும் பக்கமிருந்து பார்!

பொன்னார் இழை கொண்டு ஆடை நெய்திடும் கலைஞன்

என்ன முறையில் வேலை செய்கிறான் என்பதனைப் பார்!

கட்டை பிறப்பவன், கோடரியை வீசிடும் விதத்தையும் பார்!

"பயிர்களுக்குப் பூச்சித் தொல்லை ஏற்படாதிருப்பதற்காக, எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளப் முயற்சி பாராட்டத்தக்கதுதான், ஆனால் செலவினத்தைப் பார்க்கும்போது, சங்கடமாக இருக்கிறது. மக்களின் அடிப்படைத் தேவைக்கான துறையிலே எவ்வளவு பெரும்பொருள் செலவிடுவதும் தவறல்லதான். எனினும் பயன்கெடாத முறையில் செலவின் அளவைக் குறைத்திட முடியுமா என்பது பற்றி நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்."

"பூச்சிகள் முழுவதையும் ஒழித்திடாமல், பாதி அளவு மட்டும் ஒழித்திடலாம் என்பது, அம்மையாரின் வாதமோ!"

"அப்பாவியும் அப்படிக் கூறானே! அன்புக்கே உறைவிடமான தாய்க்குலத்தவளான நானா அதுபோல் எண்ணுவேன். பரிகாசம் பேசும் தோழர், சிறிதளவு பொறுப்புணர்ச்சியைக் காட்டி நான் கூறும் பிரச்சினைக்கு விளக்கம் தர வேண்டுகிறேன்."

"பெரும் பொருள் செலவாவது உண்மைதான்! ஆனால் பயிரை நாசம் செய்யும் பூச்சிகளைக் கொன்றொழிக்க இந்தப் பொருள் தேவைப்படுகிறது."

"பூச்சிகளை ஒழித்திட, இப்போது நாம் தெளிக்கும் மருந்து வகையின் உற்பத்திச் செலவை, மேலும் குறைத்திட, நமது விஞ்ஞானிகளிடம் யோசனை கேட்கப்பட்டதா?"

"இந்த யோசனை நிச்சயம் கவனிக்கப்படும்."

“நன்றி! விரைவில் கவனிக்க வேண்டுகிறேன்.”

என்ன தம்பி! இப்படிப் பார்க்கிறாய்? பகட்டுடையின்றி, எளிய தோற்றத்துடன், குழுவில் அமர்ந்து, உழவு முறை, விஞ்ஞான வளம், பொருளாதாரப் பிரச்சினை குறித்தெல்லாம், தெளிவும் கனிவும் காட்டிப் பேசிடும், இந்தக் காரிகை யார்? எங்கோ பார்த்த முகம் போலிருக்கிறதே என்று ஆச்சரியப்படுகிறாய் அல்லவா! உனக்கேன் தொல்லை, நான் கூறிவிடுகிறேன். இதோ நாட்டு ஆட்சிமுறைக் குழுவில் அமர்ந்து பணியாற்றும் இந்த நாரீமணிதான், நேற்றிரவு, நாடக மேடையில் கண்களிலே நீர்துளிர்க்க, கேட்போர் மெய்சிலிர்க்கும் விதமாகப் பேசி நடித்த நங்கை. முன்னாள் இரவு நடிகை; இங்கு, ஆட்சிமன்ற அலுவலில் ஈடுபட்டள்ள மாதரசி!

தம்பி, நீயும் நானும் சீனா சென்றால், கற்பனைபோல் தோன்றும் இந்தக் காட்சியில் காணப்படும் காரிகையைச் சந்திக்கலாம்!

டியன் ஹுவா என்றோர் நடிகை, சீனநாட்டில் பெரும் புகழ் பெற்று விளங்கி வருவதுடன், தேசீய மக்கள் காங்கிரசில் உறுப்பின ராகவும் அமர்ந்து அரும்பணியாற்றுகிறார்.

நாடகத் துறையிலும் படக்காட்சித் துறையிலும் ஈடுபட்டு, கலைஞர்களின், நன் மதிப்பையும் மக்களின் பேராதரவையும் காணிக்கையாகப் பெற்றுத் திகழும் டியன் ஹுவா, நாட்டாட்சிப் பிரச்சினையிலும் ஆர்வம் காட்டுவதுடன், ஆட்சிப் பிரச்சினையைக் கவனிக்கும் மன்றத்திலமர்ந்து அரும்பணியாற்றுகிறார் - இன்றயை சீனாவில் - செஞ்சீனாவில்.

வயது 27; வசீகரமான தோற்றம்! கலைத்திறம் வளமாக இருக்கிறது! நாடக மேடையில் ‘நவரசம்’ சொட்டச் சொட்ட நடித்து மக்களை மகிழ்விக்கிறார். ஆட்சிமன்றக் குழுவில் காலையில் அமர்ந்து அரும் பணியாற்றுகிறார்.

புன்னகையும் பெருமூச்சும், பொறி பறக்கப் பேசுவதும் புலம்பி நிற்பதும், தேன்மொழி பேசுவதும் திகைப்புண்டு நிற்பதும்,

தாபத்தை வெளியிடுவதும் தத்தளிப்பைக் காட்டுவதும், நாடக மேடையில்! ஆய்வுரை நடத்துவதும் ஆதாரங்கள் காட்டுவதும் புள்ளி விவரம் கேட்பதும் பிரச்சினைகளை அலசுவதும் மன்றத்திலே.

நாடகமாடும் நாரீமணிதானே, நயனத்தின் மூலம் நானாவிதமான உணர்ச்சிகளை எடுத்துக்காட்ட, நெளிய, குழைய, பூவிதழ் விரித்திட, பூங்கொடி போலாடிட, கலைந்திடும் கூந்தலையும், நெகிழ்ந்திடும் ஆடையையும், வளை குலுங்கிடும் கரத்தால் சரி செய்து காட்ட இயலுமேயன்றி, மக்கள் சார்பாகப் பேச, பணிபுரிய, திட்டங்களை ஆராய, கருத்துரை தர, எங்ஙனம் இயலும், என்று, சீன நாட்டிலே கேட்கவில்லை.

❀ ❀ ❀

தம்பி! அந்த நாட்களில் அருந்தமிழ் வளர்த்து ஆற்றலுடன் நாடாண்ட, மன்னர்களின் ஓவியத்தைக் காணத்தானே, இங்கு மங்கும் பார்க்கிறாய்! அது தெரியாமல், உன் செங்கரும்பு, பார், நானிருக்க இவர் நயனம் நானாபக்கம் பாய்வதேன் என்று கேட்கிறார் - கேட்கவில்லையா உன் செவிக்கு? அதோ பழத்தைத் தோலோடு தின்ன முற்படும் உன் அருமை மகனிடம் பேசுகிறாள் பார், அந்த அணி மயில்! ஒரு இடமாக உட்காரக் கூடாதா? இங்கும் அங்கும்... என்று பேசுவது தெரிகிறதா! உனக்காகத் தான்! நீ தேடுவது வேறோர் தேன்மொழியையோ என்று தோன்றுகிறது; நீ தேடுவதோ, அருந் தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்களின் ஓவியத்தை. தேடிப் பயனில்லை, தம்பி, துளியும் பயனில்லை. தமிழர் இல்லங்களில் தமிழ் அரசர் ஓவியங்கள் இரா! இல்லங்களில் மட்டுந்தானா இல்லை! பலர் உள்ளங்களிலேயே இல்லையே அந்த நினைப்பு.

❀ ❀ ❀

குழலூதும்போது கவனித்துப் பார் தம்பி! விரல்கள் எவ்வளவு, ‘நளினமாக’ வேலை செய்கின்றன என்பது விளங்கிடும். ஓவியம் தீட்டுவோன் தூரிகையை எவ்வளவு பக்குவமாகப் பயன்படுத்துகிறான் என்பதனையும்ப ார்த்திடு, கல்லிழைத்த நகை செய்திடும் பொற்கொல்லரின் கைத்திறனையும் பக்கமிருந்து பார்!

பொன்னார் இழைகொண்டு ஆடை நெய்திடும் கலைஞன்
என்ன முறையில் வேலை செய்கிறான் என்பதனைப் பார்!
கட்டை பிறப்பவன், கோடரியை வீசிடும் விதத்தையும் பார்!

முன்னவர்கள் புதிய படைப்புகளைச் செய்தளிக்கிறார்கள்; கோடாரிக்காரன் கிடைத்ததை உடைத்துத் தருகிறான் பேச்சிலேயும், இப்படி வகை உண்டு.

❀ ❀ ❀

அப்போதுதான் தம்பி! அரசியல் உலகில், கழக வளர்ச்சி கண்டு அருவருப்பு அடைந்தவர்கள், கழகம் வளருவதற்கான காரணம் எதையாவது கூறியாக வேண்டும் என்ற நிலைக்குத் துரத்தப்பட்டு, நான்,

அடுக்குமொழி பேசி மயக்குகிறேன் என்றும்,

காமச்சுவையுள்ள கட்டுரைகள் எழுதிக் கெடுத்து விடுகிறேன் என்றும்,

குற்றம் சாட்டி வந்தனர்.

ஒரு ஐந்தாறு வருடமிருக்கும், தமிழகத்தில் எல்லா அரசியல் கட்சி மேடைகளிலும், இதுதான் பேச்சு!

அடுக்கு மொழி!
ஆபாச நடை!!

தமிழ்மொழியின் அமைப்பே அடுக்கு மொழிக்கு இடம் தருகிறது. அடுக்கு மொழி பேசுவதற்கு முன்வந்தவன் நான் மட்டும் அல்ல! என்றாலும் செய்யக் கூடாத ஒரு பாதகத்தை நான்செய்து வருவது போன்ற ஒரு தோற்றமளிக்கும்படி, எல்லா அரசியல் கட்சியினரும் பேசினர், அடுக்கு மொழியைக் கண்டித்து

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிரை சத்திச் சரவண
முத்துக்கொரு வித்துக் குருபரா!

என்பன போன்ற சந்தச் சுவைமிகு எடுத்துக் காட்டுகளையெல்லாம் நான் பேசி, அடுக்குமொழி என்பது தவறு ஆகாது என்று விளக்கிக் கொண்டு வந்த காலம்.

❀ ❀ ❀

தம்பி! எனக்கொரு ஆசை; சிற்சில ஊர்களிலே ஓரளவு செய்கின்றனர், நமது தோழர்கள்.

தமிழர்கள் திருநாள், அந்த ஊருக்கே, மகிழ்ச்சி தரும் நாள்! எனவே, ஊர் மக்கள் அனைவரும், விழாக்கோலம் பூண்டிருக்கும் அந்நாள், உழைப்புக்கும், அறிவுக்கு, எழிலுக்கும், ஏற்றத்துக்கும், ஊர் மன்றம் புகழ்மாலை சூட்டிப் பெருமைப்படுத்த வேண்டும்.

உழவுத்திறன் காட்டச்சொல்லி, உழவர்க்குப் பரிசு அளித்தல்,

வலிவுத்திறம் விளக்கிடும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தி வெற்றிகொள்வோருக்குப் பரிசளித்தல்.

நேர்த்திமிக்க ஆடை நெய்தவர்க்குப் பரிசு.
ஊர்மக்கள் நோய்தீர்த்த உத்தமருக்குப் பரிசு,
கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியருக்குப் பரிசு,
முதல் தரமான பசு,
நல்ல காளை,
அழகான கன்று,
எடுப்பான தோற்றமுள்ள சேவல், கோழி,
அழகான குழந்தை,
ஆடல் பாடலில் வல்லோர்,
புதிய கவிதைகள் புனைந்தோர்,
நல்ல ஏடு தருவோர்,

இப்படிப்பட்ட, சிறப்பு இயல்புகளுடையோரைத் தேர்ந்தெடுக்க ஊர் மன்றம் கூடிப் பரிசளித்து, மகிழ்ந்து கொண்டாட வேண்டும்.

அன்றலர்ந்த பூத்தொடுத்த அழகான மாலையோ,
புத்தாடையோ,
பொற்பதக்கமோ,
பரிசுப்பொருள், எதுவாக இருப்பினும், அன்று பெறுவதிலே ஓர் தனி மகிழ்ச்சியுண்டு; அத்தகைய ஓர் ஏற்பாடு விழாவினுக்குச் சிறப்பளிக்கும்.

களம் சென்று மட்டுமே உள்ளவுரம் காட்ட வேண்டும் என்று தமிழர் இருந்தால் இல்லை.

ஊரார் கண்டு மகிழ, தம்மையொத்தவர் வியந்திட, வீர விளையாட்டுகளில் ஈடுபட்டு, வெற்றி பெற்று, விருது பெற்றனர்; விழாக்களிலே இவை தனிச்சிறப்பான இடம் பெற்றிருந்தன.

மலர்கள், தமது திறம் காட்டினர்.

மாடு அடக்குதல், வீர விளையாட்டாகத் திகழ்ந்தது.

கூடிப்பாடுதல், கைகோத்து ஆடுதல் - இவை மகிழ்ச்சிப் பெருக்கைக் காட்டின.

விழாக்களில், ஈடுபடும்போது புதுஎழிலைப் பெற்றனர் - அணிபணியாலும் ஆடை வகையாலும் ஆடவரும் ஆரணங்குகளும்.

செல்வம் சீரளித்தது என்பதனை எடுத்துக்காட்டுவனவாக, விழாக்கள் இருந்து வந்தன என்பது மட்டுமல்ல, விழாக்கோலம், கலை அழகு வளர்ந்திட, வாய்ப்பு அளித்தது என்பதும் தெரிகிறது; இலக்கியம் பயிலும்போது.

கசங்கிய கண்ணினராக, கூப்பிய கரத்தினராக, வாழ்வைச் சுமையாகக் கருதிக் காதலை வெறுத்து மாதரை மாயப்பிசாசு என்று இழித்துக் கூறி, தமிழர் வாழ்ந்தாரில்லை.

வாழ்க்கையும் ஒரு கலை என்று அறிந்திருந்தனர்.

வாழ்க்கைக் கலையினை விளக்கத் தனியாக நூலொன்று தந்தாரோவெனில், இல்லை, ஆனால், அறநெறி உரைத்திடத் தமிழ்ப் புலவோர் ஆக்கி அளித்த காப்பியங்களிலேயே, மக்கள் வாழ்ந்த வகையினை அழகுற எடுத்துக் கூறும்போது, கலை அறிவுடன் அவர்தம் வாழ்க்கை அமைந்து இருந்ததை எடுத்துக்காட்டினர்.

பூம்புகார், மதுரை மாநகர் இரண்டிலேயும், மாந்தர் வாழ்க்கை, சிறப்பாக மகளிர் வாழ்க்கை இருந்த விதத்தைப் படம்பிடித்துக் காட்டும் பான்மையிலே தந்தவர் துறவி. இளங்கோ அடிகள்.

மலரணி கொண்டை மாதர்க்கு அழகு!

இளங்கோ அடிகள், மதுரை மகளிர் மலரணிந்து மகிழ்ந்திருந்தனர் என்று மட்டுமல்ல, மலர்கள் பல வண்ணங்களாக உள்ளன அல்லவா? அவற்றினை ஒன்றாகத் தொடுத்து, அணிந்தனர் என்பதையும் கூறுகிறார்.

மலர், மணம் தருகிறது! எனவே, மாதர்தம் கூந்தலுக்குச் சேருகிறது.

ஆனால், இது, கலை அழகும் பெறுகிறது. கலை அழகு உணர்வு மிகுந்தவர் மதுரை மகளிர், என்பதைக் காட்டுகிறது. அவர்கள் முல்லை, குவலை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ முதலயிவற்றினைத் தொடுத்து அணிந்து கொண்டனர் என்று அடிகளார் கூறும்போது.

அந்த மலர்களையும், மதுரை மகளிர், முத்தாரங்களுடன் தொடுத்து அணிந்திருந்தனராம். பாண்டி நாடு முத்துடைத்து அல்லவா!

செல்வம், சீர், கலை உணர்வு, வாழ்க்கையை வெறுத்திடாத தன்மை, இவ்வளவும் விளங்கும் வகையில், மதுரை மகளிர் முல்லை,

குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ முதுலியவற்றை முத்தாரங்களுடன் தொடுத்து அணிந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

வாழ்க்கை இவ்விதம் இருத்தல்தான் முறை; மதுரை மகளிர் இப்படி இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை, அடிகள் எப்போது காட்டுகிறார்? கண்ணகி, கணவன் அன்பைத் திரும்பவும் பெற்றுப் புது வாழ்வு தொடங்கப் பொருள் தேட முயலும் நோக்குடன் கோவலனுடன் வருகிறபோது!

மதுரை மகளிர், முத்தாரமும் மலரும் தொடுத்து அணிந்துள்ளனர்; வணிகக் கோமான் மகள், கண்ணகி இதனினும் மேலாக, அணிபணி பூண்டு வாழ்ந்திடலாம்.

ஆனால், காற்சிலம்பு விற்றால்தான், கைப்பொருள் கிடைக்கும் என்ற நிலை!!

என்றாலும், மகிழ்ந்து இருக்கும் மதுரை மகளிரைக் கண்டபோது, புதுவாழ்வு கிடைக்கும்; அப்போது, இதுபோல! என்ற எண்ணம் கண்ணகிக்கும் தோன்றியிருக்குமோ, என்னவோ!

காலத்துக்கு ஏற்றபடி, தம்மை அழகுபடுத்திக்கொள்வது, நுண்ணிய கலை உணர்வைக் காட்டுவதாகும்.

இப்போது, ஜப்பான் நாட்டுப் பெண்கள் தமது இல்லத்தையும் தம்மையும், வண்ணங்களின் வகை அறிந்து அழகுபடுத்தும் நுண்கலை மிகுதியாகப் பெற்றவர்கள் என்று கண்டறிந்தோர் கூறுகின்றனர்.

காலத்துக்கு ஏற்ப, ஊர் கோலம் கொள்கிறது - இயற்கை அப்படிக் கோலத்தை மாற்றிக் காட்டுகிறது.

அந்தக் கோலத்துக்கு ஒத்ததுபோல ஆடை அணிபுனைவது, கலை அழகினை நன்கு உணர்ந்தால் மட்டுமே முடியும்.

அத்தகைய கலைஉணர்வு மதுரை மகளிருக்கு இருந்திருக்கிறது என்பது வாடைக் காலத்துக்கு ஏற்ப அரத்தப் பூம்பட்டையை, மகளிர் அணிந்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து தெரிகிறது.

பூம்புகார் நகரத்துப் பெண்கள் பகலில் பட்டு ஆடையும், இரவில் பருத்தி ஆடையும் உடுத்தினராம்.

ஆரணங்குகள் மட்டுமல்ல; ஆடவரும், அணிபணி பூண்டு, தம்மை அழகுபடுத்திக்கொண்டனர். வெள்ளி நாரால் தொடுக்கப் பட்ட பொற்குவளை மலர்களை, ஆடிடும் விறலியர் அணிவராம்.

வெள்ளியால் நார்! பொற்குவளை! - வண்ணங்களை அடுக்கி அழகுபெறும் கலைத்திறனை, கலையால் கவர்ச்சியூட்டும் விறலியர் பெற்றிருப்பது மிகப் பொருத்தமல்லவா?

ஆடவரோ, கடகம் கழல் எனும் அணிகள் பூண்டிருந்தனர்.

அவை, செல்வத்தைக் காட்டுவன மட்டுமல்ல, வீர வெற்றிகள் பெற்றவர் என்பதையும் காட்டுவன.

கொள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே (புறநா : 11)

எரியகைந் தன்ன வேடி தாமரை
சுரியரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணிய. (பொருந : 159 - 62)

(வேடி - சிவந்த (பொன், அழகிய); பித்தை - கூந்தல்; பாடினி - பாடுபவள்)

அணிவன, சூடுவன, என்பதில் மட்டுமல்ல, பூசுவனவற்றிலே, பல பொருள், பல முறைகள் இருந்திருக்கின்றன.

மாதவி, தன் கூந்தலைப் பத்து வகைப்பட்ட துவர் ஐந்து வகைப் பட்டவிரை, முப்பத்து இரண்டு வகை ஓமாலிகைகள் முதலியன ஊறின நல்ல நீராலே கழுவி, வாசனைப் புகையூட்டி கஸ்தூரி, சவ்வாது கலந்த தைலத்தைத் தடவி அழகுபடுத்திக் கொண்டால், என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

இப்படியெல்லாம் செய்து கோவலனை மயக்கினாள் - என்று கூறுவர், நுனிப்புல் மேய்வோர்.

எண்ணிப்பார்த்து வியப்படைய வேண்டியது அஃது அல்ல. இவ்வளவு இன்பமாகச் செல்வமாகக் கலை அழகு உணர்வுடன், காட்சிப் பொருளாக வளர்ந்த அந்த ஆடலழகி, கோவலன் தன்னைத் துறந்தான், பின்னர் வெட்டுண்டு இறந்தான் என்றவுடன், என்ன ஆனாள்? எல்லாம் துறந்தாள்!!

அவ்வளவு அழகூட்டும் முறைகளும், அவனுக்காக; அவனை மகிழ்விக்க! அவன் இல்லை! அவை இனி ஏன்? என்று துறந்தாள்.

ஆடலகியரும் விறலியரும் அழகளிக்கப் பலமுறை தேடிக் கொள்வதிலே வியப்பென்ன? அது பொதுமுறையாமோ? என்று சிலர் ஐயப்படுவர்.

அலத்தகம் எனும் செம்பஞ்சுக் குழம்பை, கால், உள்ளங்கை, இதழ், நெற்றி, நகம் - இங்கெல்லாம் பூசி இலக்கணையார் மண அறைக்கு அழைத்துக் கொண்டு வரப்பட்டார் என்று சிந்தாமணியில் காண்கிறோம்.

கால வேறுபாட்டினைக் கவனித்துப் பெண்கள், மலர் சூடுவர் என்பதும், கூறப்பட்டிருக்கிறது.

மாதவியின் ஒப்பனை
பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத் திருவகை யோமா லிகையானும்
ஊறின நன்னீர் வுரைத்த நெய்வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்

புகையில் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி

(சிலப்: கடலாடு காதை : 76 - 81)

(துவர் - பூசுவன, விரை - கலவைச்சாந்து; ஓமாலிகை - மணம் உள்ள நீரில் இடும்பொருள்; மான்மதம் - கஸ்தூரிக் குழம்பு)

அம்மலர் அடியுங் கையும் அணிகிளர் பவழவாயும்
செம்மலர் நுதலும் நாவும் திருந்தொளி உகிரோ(டு) அங்கேழ்
விம்மிதப் பட்டு வீழ அலத்தகம் எழுதி இட்டாள்
அம்மலர்க் கண்ட முள்ளிட் டரிவையைத் தெரிவை தானே.

(இலக்கணையாரிலம்பகம் ; 69)

(நுதல் - நெற்றி; உகிர் - நகம்; அலத்தகம் - செம்பஞ்சுக் குழம்பு).

முன்பனிக் காலத்தில், மகளிர், தம் கூந்தலில் மல்லிகையையும், அதன் அருகே வாகையையும் சூடிக் கொள்வராம்.

இளவேனிற் காலத்திலோவெனில், கழுநீர் மாலையாம், குவளை மலராம்!!

தம்பி! இவ்விதமாகவெல்லாம், இல்லறத்திலே, வாழ்க்கைக் கலையழகுடன், வாழ்ந்து வந்தவர் தமிழர், முன்பு!!!

தமிழரின் தனிச்சிறப்புடைத் திருநாளாம், பொங்கற் புதுநாளன்று - ஓர் நாளாகிலும் - எழில் குலுங்க, இன்பம் துலங்க, மகிழ்ச்சி பொங்க இருக்கவேண்டாவா? அதை அறிந்தே, தமிழகம் விழா நடத்தி மகிழ்கிறது.

நமது பூம்புகார் பற்றியும், கொற்கை குறித்தும், உறையூரில் நமது அரசு இருந்த ஏற்றம் பற்றியும், நமது மன்னர், காழகம், கடாரம், வங்கம், கலிங்கம் சென்று வெற்றி கண்டது குறித்தும், நமது தமிழகப்

பட்டிதொட்டிகளிலெல்லாம், எடுத்துக்கூறும் கட்டத்திலே நாம் மும்முரமாக ஈடுபட வேண்டி இருக்கிறது.

தமிழகமெங்கணும், தமிழ் இன உணர்வு வீரமணம் எழுப்பினால், பிற நாட்டார் நம்மை அறிந்துகொள்ளச் செய்வதிலே கஷ்டம் அதிகம் இருக்காது.

எந்த நாடும், ஒரு நாட்டின் ஆட்சி மன்றத்திலே எவர் இடம் பெறுகின்றனர். அவர்தம் திட்டமென்ன, கொள்கை என்ன, மக்கள் ஆதரிப்பது எந்தக் காரணம் கொண்டு என்பதனை இன்று அறிய ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

❀ ❀ ❀

தம்பி! இது கலைஞர்களைப் பற்றியது! மிகக் கசப்புத் தந்து விட்டிருக்கிறதாம் கழகத்தின் போக்கு, இதிலே! அந்தக் கசப்புக்கு மருந்து பிரிவினை! திராவிட இனமக்களின் வாழ்க்கையிலே ஒரே சகப்பு - இருந்தும் அவர்களுக்கு 'பிரிவினை' உடனடியாக வேண்டாம் - பிரிந்துபோகும் உரிமை மட்டும் இருந்தால் போதுமாம். ஆனால், கலைஞர்கள் கழகத்தில் இருப்பதால், ஏற்படும் விளைவுகள் மெத்தக் கசப்பாக இருப்பதால், கழகத்தைவிட்டு இவர் போகிறார். என்ன நியாயமோ? ஏனோ, அந்தக் கசப்பு ஏற்படாதபடி, கலைஞர்களுக்கும் கழகத்துக்கும் தொடர்பு எந்த அளவில் இருக்க வேண்டும், எப்படி அது பக்குவப் படுத்தப்பட வேண்டும், திருத்தப்பட வேண்டும் என்பதை இங்கு இருந்தே எடுத்துச் சொல்லிக், கழகத்தைச் செம்மைப்படுத்தியிருக்கக் கூடாது? இருக்கட்டும் - யார் இந்தக் கலைஞர்கள்! மேடை தோறும், எப்படி எப்படி, படக்காட்சிகள் எடுக்கப்படுகின்றன என்பது பற்றிப் பேசிப்பேசி, நம்மை ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி, அரிசி நிலைபற்றி, அங்காடிப் போக்கு பற்றியெல்லாம் சிந்திக்க ஒட்டாது தடுத்துவிடும், பொல்லாதவர்களோ! எந்தக் கலைஞரும், கலைபற்றி அல்ல, கழக நிலைப்பற்றித்தான் பேசிடக் கேட்கிறோம்.

❀ ❀ ❀

பேசத் தெரியாத, எந்தப் பிரச்சினையிலும் தொடர்பு கொள்ளாத, ஒப்புக்கு ஒரு கட்சியிலே அலங்காரப் பொருளாக இருக்கும் நிலை மட்டும் போதும் என்று உள்ள கலைஞர்களாக நமது கலைஞர்கள் இருப்பார்களானால், பிரச்சினையே எழாது என்று எண்ணுகின்றனர். ஆனால் நம்மிடம் தொடர்பு கொண்டுள்ளவர்கள் மக்கள் கலைஞர்!

❀ ❀ ❀

தம்பி! இந்த ஆராய்ச்சியோடு, காங்கிரசார் நிறுத்திவிட வில்லை. என் பேச்சு, எழுத்து. அதில் உள்ள அடுக்குமொழி, உவமை, அந்த உவமையிலே உள்ள தன்மை, சுவை இவை பற்றியெல்லாம் ஆராய்ச்சி நடத்தினர். அதன் விளைவுதான், என்னைப்பற்றி மட்டுமல்ல, பொதுவாகக் கழகத்தைக் குறித்தே, மிகக் கேவலமான முறையில்,

கூத்தாடிகள்
கூவிக்கிடப்போர்
அடுக்கு மொழியினர்
ஆபாச நடையினர்
காமச்சுவைப் பேசினர்
கதை எழுதிப் பிழைப்போர்

என்றெல்லாம் இழிமொழியால் ஏசலாயினர். கேட்டுக் கொண்டேன். அப்போது என் சார்பாக வாதாடி நின்றவர்கள் இன்று, அதே இழிமொழி வீசி என்னை ஏசிட முற்படுகின்றன. செய்யட்டும். இதையும் தாங்கிக் கொள்கிறேன்.

❀ ❀ ❀

மேதைகளென்றும், மறுமலர்ச்சி எழுத்தாளர்களென்றும் தங்களைக் கூறிக் கொள்பவர்கள், பெரும்பாலும், இதே பாணியில்தான் எழுதுகிறார்கள்.

முற்போக்குக் கருத்துகள் தூவப்படும்! பிறகு, அது மறைக்கப் படும் அளவுக்குப் பழைமை கொட்டப்படும்!!

❀ ❀ ❀



இந்தப் போக்கினர்தான், கதை, நாடகம், சினிமா இவைகளிலே பிரச்சாரம் கூடாது - பொதுவாகக் கலையைப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தினால், அதன் மேன்மையே குறைந்து போகிறது, தூய்மை நாசமாகிறது என்று “இலக்கிய உபதேசம்” செய்பவர்கள்.

❀ ❀ ❀

பிரசாரத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்று பேசுபவர்கள், தமது ஒவ்வொரு முயற்சியிலும் பிரசாரத்தில் தான் ஈடுபடுகிறார்கள் - வெற்றி பெறுவதில்லை, பாபம். அதனால்தான், வெந்த உள்ளத்துடன், பிறர் வெற்றிகரமாகக் கலையை நல்லறிவுப் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவது கண்டு வெகுண்டு, கலையைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்று கூறுகிறார்கள்.

“அது என்ன வழக்கம் சார்? எனக்குத் துளியும் பிடிப்பதில்லை, மனைவியைக் கூட்டிக் கொண்டுதான், ‘பீச்சு’க்கு வர வேண்டுமா? பொம்மனாட்டிங்களோடு அவளை வரச் சொல்லிவிட்டு, வரப்படாதோ! நான் அப்படித்தான்” என்கிறார் எம்பெருமாளய்யங்கார்! காரணம் இருக்கலாம் - அவரைப் பொறுத்தவரையில்! அம்மையின் திருப்பாதங்கள், கஜமுகன் அருள் பாலிக்கப்பட்டவையாக இருக்கலாம். வெளியே அழைத்து வந்தால், ஆபாசமாக இருக்குமென்று ஐயங்கார் சுவாமிகள் கருதியிருக்கலாம்.

“இந்த “ஜடத்”தோடு யார் போவா, பீச்சுக்கு? இது மூஞ்சியும் முகரக் கட்டையும் பார்த்தாலே, பீச்சுக்கு வர்ரவா, கேலியான்னா பேசுவா? இதனோட “தொண தொணப்பை, ஆத்திலே சகிக்கிறது போதாதுன்னு, பீச்சுக்குப் போய் வேறே பிராணனை விடணுமா? வேண்டாம்டியம்மா நான் போகல்லே, அவரோட” என்று சகதர்மணி கூறிவிட்டிருக்கலாம்.

அநாகரிகமான வேறு பல காரணங்களும் இருக்கலாம்.

அவர், தமது துணைவியை உடன் அழைத்து வராததாலேயே, அதுதான் முறை, தமது இலக்கிழத்தியுடன் வருபவர்கள், நாகரீக மற்றவர்கள் என்று பேசுவது அறிவுடைமையாகுமா!

அதுபோலத்தான், இவர்களால் கலையைப் பிரசாரத்துக்கு பயன்படுத்த முடியவில்லை.

அந்த முயற்சியால் ஈடுபட்டு வெற்றி கிட்டவில்லை.

இதைக் கொண்டு கலையை நல்லறிவுப் பிரசாரத்துக்கு வெற்றி கரமாகப் பயன்படுத்தும் மற்றவர்களைப் பார்த்து, பொம்மனாட்டிகளை ஏன் அழைச்சிண்டு வரணும் என்று கேட்கும் போக்கில், கலையில் பிரசாரம்இருக்கலாமா, என்று இந்த மேதைகள் பேசுகிறார்கள்.

தம்பி! நான் இப்படிச் சொல்வதால், சுவையும் அழகும் கொண்ட வகையில் எழுதக் கூடியவர்கள் நம்மவர்கள் மட்டும்தான், மறுமலர்ச்சி எழுத்தாளர்களுக்கு அவ்விதம் எழுதவே தெரியாது, என்று அகம்பாவம் கொள்கிறேன் என்று எண்ணிக் கொள்ளப் போகிறார்கள் - சொல்லிவிடு அவர்களுக்கு நான் அப்படிப்பட்டவனல்ல என்பதை!

அவர்கள் தோல்வி அடைவதற்குக் காரணம் அழகாக, அருமையாக எழுதத் தெரியாததால், அந்தத் திறமை இல்லாததால் அல்ல! அவர்களின் தோல்விக்குக் காரணம், அவர்கள் மனதிலே, தெளிவான திட்டமான கொள்கையும், அதைக் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற நேர்மையும் இருப்பதில்லை.

பழைமை செத்து விடுகிறதே என்ற துக்கம் குடைகிறது. அதே போது இந்த நாட்களில் பழைமையை ஆதரிப்பதா என்று வெட்கமும் வேலாகிக் குத்துகிறது. எந்த முகாமில் இருப்பது, என்பது பற்றி முடிவெடுக்க இயலாமல், அவர்கள் குழம்பிக் கிடக்கிறார்கள்! அந்தக் குழப்பம், அவர்களின் திறமையை மண்ணாக்கி விடுகிறது.

❀ ❀ ❀

இந்தப் போக்கினால்தான், இவர்களைவிட இலக்கியத் திறமையும் எழுதும் திறமையும் குறைந்தஅளவு பெற்றுள்ள

நம்மவர்கள் பெறுகிற வகையான அளவுள்ள வெற்றியை இவர்களால் பெற முடிவதில்லை.

❀ ❀ ❀

புதுமையின் வேகத்தையும் தடுக்க முடிவதில்லை - பழைமையாளர்களையும், நாசுக்காகவாவது திருத்தமடையச் செய்ய முடிவதில்லை. காரணம், இவர்கள் திறமையற்றவர்கள் என்பதல்ல; உள்ள சரக்கு மகாமட்டம். ஊசல் சரக்கை உண்மை அறிந்த மக்கள், குப்பைக்குப் போடுகிறார்கள்; இவர்கள் அதைக் குனிந்தெடுத்து, கூவிக் கூவி விற்கிறார்கள்! வியாபாரம் மிக மந்தமாக இருக்கிறது!

❀ ❀ ❀

அபிதான சிந்தாமணி

'நாலுமாதம்' என்றார் மாஜிஸ்டிரேட்! நாலு மாதம்! என்று லேடி டாக்டர் கூறிடுவது கேட்டு மகிழும் ஆரணங்கு போலானேன். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி 1938-ஆச்சாரியார் ஆட்சிக்காலம் - என்மீது, குற்றம் புரியும்படி தூண்டி விடுதல், உடந்தையாக இருத்தல் எனும் 'குற்றங்கள்' வழக்கு நடைபெற்று, அன்று சென்னை எழும்பூர் கோர்ட்டில், நாலு மாதம் என்று தீர்ப்பளிக்கப்பட்டதும், கொள்கைக்காகக் கஷ்ட நஷ்டம் ஏற்கும் உள்ளம் இவனுக்கு உண்டு என்று இயக்கமும் இயக்கத்தின் போக்கைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பொதுமக்களும் நல்ல தீர்ப்பு அளித்து விட்டனர் - பரீட்சையில் தேறிவிட்டோம் என்று எண்ணினேன். விவரிக்க முடியாததோர் மகிழ்ச்சி - வெற்றி பெறுகிறோம் என்ற நம்பிக்கை.

❀ ❀ ❀

ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாகி விட்டார்; சென்னை வருகிறார் பவனிக்காக! கூண்டோடு பிடிபட்டுச் சென்னைச் சிறையில் கொண்டு போய் வைக்கப் பட்டிருந்தோம் - 1948 - இல்!

❀ ❀ ❀

இருமி இளைத்து ஈளை கட்டிய நிலையில் இருந்த நமது மனதுக்குகந்த அழகிரிசாமி அண்ணன் உட்பட.

நானும் அழகிரி அவர்களும் அப்போது பக்கத்துப் பக்கத்து அறை.

இரவு நேரத்தில், எனக்கு விருந்து கிடைக்கும் - பக்கத்து அறையிலிருந்து,

“காணக் கண் கோடி வேண்டும்” - என்று ஆரம்பிப்பார் ஓரடி பாட! பலே! பலே! ஒன்ஸ்மோர்! என்று நான் இந்தப் பக்கத்து அறையிலிருந்து கூவுவேன்.

“தூங்கவில்லையா இன்னும் - அடே அப்பா! நீ தூங்கினால்தான் நான் பாட முடியும்; நான் பாடுவதைக் கேட்டு விட்டுக் காலையில் கேலி செய்ய நினைக்கிறாய் - இடங்கொடேன்” என்பார். “அண்ணேன்! உண்மையாக நன்றாகவே இருக்கிறது. கொஞ்சம் ஆலாபனையும் நடக்கட்டும்” என்பேன் அழகிரி அவர்களின் ஆலாபனமும் அருணாசலக் கவிராயர் இயற்றிய கீர்த்தனையும் கிடைக்கும். இரண்டாம் முறையாகக் கண்ட சிறை அனுபவத்திலே எனக்குக் கிடைத்த இந்த ஆலாபனத்தையும், நான் எப்போதும் மறந்திட முடியாது. எப்படி முடியும்? எவ்வளவு சுவை என்கிறீர்கள் - நித்த நித்தம்!

❀ ❀ ❀

தம்பி,

புயலும் வெள்ளமும் விளைவித்த வேதனையும் பெருநஷ்டமும் குறித்த செய்திகள் வந்தவண்ணம் உள்ளன; நெஞ்சைப் பிளக்கும் செய்திகள்.

கிராமம் கிராமமாக அழிந்து போயின - குடும்பம் குடும்பமாக இறந்து பட்டுள்ளனர் - மீதமிருப்போர் இப்போது படும் துயரம் சொல்லுந் தரத்தன்று.

எங்கு நோக்கினும் அழிவு - எப்பக்கம் பார்ப்பினும் பேரிடி, பெரு நஷ்டம். ஏழை எளியவர்கள் வாழ்விலே வேதனைப்படுவதை பல காலம் கண்டு பாறை நெஞ்சினராகி விட்டவர்கள்கூட, பதறிப் போயுள்ளனர், இந்த அழிவு கண்டு.

❀ ❀ ❀

தம்பி! நமது கலைச்செல்வர்கள் கருணை உள்ளம் கொண்டவர்கள் என்று சென்ற இதழிலே குறிப்பிட்டிருந்தேன், காண்கிறாயல்லவா, அவர் தம் கொடைத் திறனை!

இன்று அந்த கலைச்செல்வர்கள், வைரம் மின்னிட, தங்கம் ஒளிவிட, தந்தக் கட்டிலில் அமர்ந்து வெள்ளிவட்டிலில் இனிப்புப் பண்டம் வைத்து உண்டு மகிழத்தக்க நிலை பெற்றவர். எனினும் அவர்களில் எல்லோருமே, இல்லாமை கொட்டுவதை, வறுமை வாட்டுவதை அனுபவித்து அறிந்தவர்கள். ஏழையின் இதயக் குமுறலை நன்கு தெரிந்தவர்கள். கருணை அவர்கள் உள்ளத்தில் நிச்சயம் சுரக்கத்தான் செய்யும். ஆகவே, அவர்களிடம் எனக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு. சென்ற கிழமை அவர்கள் கூடி நிதிதிரட்டத் துவங்கினர்; துவக்க கட்டமே வெற்றி அளித்திருக்கிறது; தொடர்ந்து பணியாற்றுவர்; அவர்தம் பணியின் பலன், அழிந்தது போக மீதமிருக்கும் வலிவு கொண்டு வாழ்வுடன் போராடி, உழைப்பால் மீண்டும் பொலிவு பெறும் ஏழை எளியவருக்கான அழகிய குடில்களாகக் காட்சி தரட்டும், அழிவு தோற்றொடட்டும்! நாசத்தின் கோரப் பற்களால் ஏற்பட்ட புண் ஆற்றிடும் மாமருந்து கிடைக்கும்.

நமது அருமருந்தன்ன நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் மதுரையம்பதி கடைவீதியில் சென்று, கை ஏந்தி நின்று பணமும் பண்டமும் கேட்டும் பெற்று உதவினார் என்றோர் செய்தி கேட்டு, இத்தகு இதயம் படைத்தவரை, நண்பராகப் பெற்றிருக்கிறோம், நமது கழகத்தினராகவும், கொண்டிருக்கிறோமே என்பது எண்ணிப் பெருமைப் படுகிறேன் - பெருமைப் படுகிறேன். கலைச் செல்வர்களின் பணி, உண்மையிலேயே போற்றுதற்குரியதாகவே அமைந்திருக்கிறது. எனினும்..

ஆமாம், தம்பி! எனினும் என்று கூறத்தான் வேண்டி இருக்கிறது - ஏனெனில் அவர்கள் மூலம்தான் பல இலட்சங்கள் இந்த நற்காரியத்துக்கு, கேடு சூழ்ந்துள்ள நாட்டினை மீட்டிடும் தூய தொண்டுக்கு, கிடைத்தாக வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். தமது இசையாலும், நடன மூலமும், நாடக படக்காட்சி மூலமும் நாட்டு மக்களுக்கு இன்பமும் நல்லறிவும் தந்துதவுபவரிடம் நான் சில பல இலட்சங்களை எதிர்ப்பார்ப்பதிலே என்ன தவறு? அவர்கள் அறிவார்கள் அல்லலுறும் மக்களின் அவல நிலையைப் போக்குவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சி எவ்வளவு மாமலை போன்ற தென்பதை, எனவே நம்பிக்கையுடன் நாடு அவர்கள் உதவியை நாடலாம்.

என்ன செய்ய நண்பரே! ஒன்று இரண்டு என்று இன்று ஆயிரக்கணக்கில் கொடுத்திருக்கிறோம் - இன்னும் என்ன செய்ய? அங்காடிகளில் சென்று வசூலிக்கவா, இசை அரங்குகள், கலா நிகழ்ச்சிகள், திறந்தவெளி நாடகங்கள் மூலம் நிதி திரட்டவா? என்று கேட்பர் இவைகள் மூலமெல்லாம் திரட்டத்தான் வேண்டும் - இன்றே துவங்கி; தொடர்ந்து; ஆனால், இம்முறையில் பணம் குவிய, பாடும் அதிகம், காலமும் மிகுதியாகத் தேவைப்படும்.

மதுரை அங்காடியிலே நமது நண்பர் இராமச்சந்திரன் சென்ற காலை, நேரிட்டது என்ன? உதவியும் உபத்திரவமும், தோழமையும் தொல்லையும், நேசப்பான்மையும் நெருக்கடியும் போட்டியிட்டு, அவர் மேற்கொண்ட பொறுப்பான காரியத்தைக் குலைத்தே விட்டது. நடிகர்கள் அங்காடி சென்றாலே இது! நட்சத்திரங்கள் சென்றாலோ!!

எனவே, நமது கலைச்செல்வர்களுக்கு நானோர் யோசனை கூறுவேன்.

N.S. கிருஷ்ணன்
M.K. ராதா
M.R. ராதா
K.R. ராமசாமி
M.G. ராமச்சந்திரன்

T.K. சண்முகம்
T.K. பகவதி
சிவாஜி கணேசன்
ஜெமினிகணேசன்
S.S. ராஜேந்திரன்

இப்படிப்பட்ட கலைச்செல்வர்கள் (பட்டியல் பூர்த்தியானதல்ல)

T.R. ராஜகுமாரி
லலிதா
பானுமதி
பத்மினி
அஞ்சலி
வரலட்சுமி
T.M. மதுரம்

போன்ற கலைச்செல்வியர்கள் இவர்கள் யாவரும், ஒருசேர ஒரே படத்தில் நடித்தால்...!

எந்த முதலாளிக்காகவுமல்ல, தாயகத்தின் தவிப்பைப் போக்குவதற்கு, நாலு அல்லது ஐயாயிரம் அடி அளவிலே அமைத்து விட்டாலும் போதும், பத்தே நாளில் படம் தயாரித்து, அதனை, கலைச் செல்வர்களின் அன்புக் காணிக்கையாகப் படைத்தால்... இலட்சங்கள் புயல் வேகத்தில் குவியும்.

இந்த நற்காரியத்தை ஒரு நடிகர் குழு மேற்கொண்டால், எந்தப் படம் தயாரிக்கும் அமைப்பும் இலவசமாக வசதிகளைச் செய்தளிக்கும்.

ஆர்வத்துடன் பணியாற்றினால், இரண்டு வாரத்தில், படம் தயாராகி விடும்.

இத்தனை கலைச்செல்வர்களையும் ஒரே படத்தில் காணும் வாய்ப்பு.

இவர்கள் அனைவரும் தூய ஒரு காரியத்துக் இந்தப் படத்தை அர்ப்பணிக்கிறார்கள் என்ற மதிப்பு.

இவை போதும், இலட்சங்களைக் கொண்டுவர!

இதற்கென்று ஒரு கதை - அதிலே பல கட்டங்கள் - இது அல்ல நான் குறிப்பிடுவது.

சலிப்பாக இருக்கிறது என்று கூறிக் கண்ணை மூடிக்கொள்கிறோமல்லவா, சர்க்கார் வெளியிடும் சில செய்திப் படங்கள்.

நான் குறிப்பிடுவது செய்திப் படம் போன்றது - ஆனால், செய்திப் படத்தை சர்க்கார் வெளியிடுகிறார்களே அத்தகைய சத்தற்ற, சாரமற்ற விதத்தில் அல்ல.

கொடுமைக் காட்சிகள் - அவை பற்றி நமது கலைஞர்கள், நாட்டு மக்களிடம் முறையிடுதல்.

நாட்டுக்கு இத்தகைய நெருக்கடிகள் தாக்கும்போது, மக்கள் காட்டவேண்டிய வீர உணர்ச்சி, தியாக உள்ளம்.

இழப்புகளுக்கு ஆளாயியிருப்போருக்கு ஆறுதல் மொழி.

இவ்வகையிலே படம் அமையலாம்.

முறை அல்ல முக்கியம் - என் மனம் இருக்கும் நிலையில் அதுபற்றித் தெளிவுகூட இல்லை என்னிடம் - நான் விரும்புவது, கலைச் செல்வர்களின் முயற்சி, இப்படியோர் அன்புப் படையலாக இருத்தல் வேண்டும் என்பது.

நிதி குவியவும், வேகமாகக் குவியவும், தக்க பலன் தரக்கூடிய அளவில் குவியவும், இது நல்லமுறை என்று எண்ணுகிறேன்.

சர்க்கார் இதற்கு 'வரி' இல்லாமல் விலக்களிக்க வேண்டும்.

கலைச்செல்வர்கள் கூடிக் குழு அமைத்தால் ஒரு திங்களில், பலன் பூத்துக் காய்த்துக் கனியும்; நாடு சுவையும் பயனும் பெறும்.

தம்பி! கலைச்செல்வர்களுக்கு, நான் கூறிடும் இந்தக் கருத்து சரி என்று உனக்கும் தோன்றினால், நீயும் அவர்களிடம் சொல்லு.

மொழி வழி அரசு என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய திட்டமாகி விட்டது.

இலக்கியம்

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற நெஞ்சுறுதி கொண்டோராகத் தமிழர் இருந்த நாட்களில், சிங்களம், புட்பகம், யவனம், சீனம், சோனகம், வங்கம், மகதம், கலிங்கம், காந்தாரம், காமரூபம் - எனும் எண்ணற்ற நாடுகள் பலவும், தமிழகத்தின் திருவைக் கண்டு வியந்தன, திறனைக் கண்டு அஞ்சின, செருமுனைக்கு வரப் பயந்தன, தோழமைக்குக் காத்துக் கிடந்தன! இமயம் தொட்டு நின்ற அரசுகள் அனைத்தும் தமிழர் முரசு கொட்டுகின்றனர் என்று அறிந்தால், தமது அரசுகட்டில் ஆடிட அச்சம் கொண்டனர்.

தித்தன் எனும் தன் தந்தையிடம், மனவேறுபாடு கொண்ட கோப்பெருநற்கிள்ளி எனும் மன்னர் மகன் பற்றிய செய்யுளொன்று புறநானூற்றில் உளது.

தந்தையும் மகனும் வேறாயினர் - கோப்பெருநற்கிள்ளியிடம் தந்தை தொடர்பு கொள்ளாது தனித்திருந்தனன்.

கோப்பெருநற்கிள்ளி கட்டிளங்காளை. போரில் வல்லான். அவன் ஒரு சமயம், முக்காவல் நாட்டு ஆமூர் எனும் இடத்தே, மல்லன் ஒருவனைப் போரில் வென்றான்! அதனைப் பாராட்டி, சாத்தந்தையார் எனும் புலவர் பெருமகனார் பாடியது, என் நினைவிற்கு வருகிறது - தேனாய் இனிக்கிறது.

மற்போரினைக் கண்டு களித்தார் அப்புலவர். மல்லன் வலிவு மிக்கன்; கோப்பெருநற்கிள்ளியின் மார்பின்மீது உட்கார்ந்து கொண்டு அழுத்துகிறான்; கிள்ளி அந்த அழுத்தத்தை அகற்ற, மல்லனுடைய தலையையும் காலையும் வளைத்திழுத்து ஒடித்துத் தோற்கடித்தான். பசி மிகுந்த யானை, மூங்கிலைப்பற்றி இழுத்து ஒடிக்குமே, அதுபோலிருந்ததாம், கிள்ளியின் மற்போர் வகை, அதைப் பாராட்டிய புலவர்,

நல்கினும் நல்கானாயினும்
'காண விரும்பினாலும் விரும்பா விட்டாலும்'

வெல்போர்ப்போர் அருந் தித்தன் காண்க!

போரில் வெல்லும் திறன் படைத்தவனும், எதிர்ப்பாரற்ற வலிவுடையோனுமாகிய , கிள்ளியின் தந்தையாம் தித்தன் காண்பானாக!

என்று பாடுகிறார்.

தந்தையும் மகனும் மனவேறுபாடு கொண்டவர்தாம் - ஆயினென்!

தத்தனும் கிள்ளியும் வேறு வேறு இடத்திலேதான் வாழ்கின்றனர். எனினும், மகனுடைய மற்போர் வெற்றியைக் காண்பதன்றோ, தந்தைக்குக் கிடைத்தற்கரிய பேறு! எனவே, கிள்ளியின் வெற்றியைத் தந்தை காண வேண்டும் - அவருக்குக் காட்சி களிப்பளிப்பின்னும் அளித்திடாது போயினும், கவலையில்லை, கண்டால் போதும் என்கிறார் சாத்தந்தையார்!

இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங் கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின் ஒதுங் கின்றே
நல்கினும் நல்கான் ஆயினும் வெல்போர்ப்
போரருத் தித்தன் காண்கதில் அம்ம
பசித்துப்பணை முயலும் யானை போல
இருதலை ஒசிய ஏற்றிக்
களம்புகும் மல்லன் கடந்தடு நிலையே- (புறநானூறு-80)

தம்பி! கடினமாக இருக்கிறதா- சிறிதளவு எளிதாக்க முயல்கிறேன்.

ஆமூரில் வலிமைமிக்க மல்லனின் ஆற்றலை அடக்கி, அவன் மார்பில் ஒரு காலை ஊன்றி, மற்றொரு, காலால் அவன் எதிர்ப்புக்களை விலக்கி, பச்சை மூங்கிலை வளைத்து ஒடித்துத் தின்ன முயலும் யானையைப் போல, அம்மல்லனின் காலும் தலையும் முறிய அவனைக் கொன்று வெற்றிமாலை புனையும் இவனை (போர்வைக் கோப்பெருநற்கிள்ளியை) போர் வெல்லும் திறமை

மிக்க தித்தன் என்னும் இவன் தந்தை, மகிழ்ந்தாலும் மகிழாவிட்டாலும் காண்பானாக.

மைந்து - வலிவு-; முருக்கி - கெடுத்து; போர் அரும் - போரில் மிக்க; பணை - மூங்கில்; இருதலை-தலையும் காலும்; ஒசிய - முறிய;

❀ ❀ ❀

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற நெஞ்சுறுதி கொண்டோராகத் தமிழர் இருந்த நாட்களில், சிங்களம், புட்பகம், யவனம், சீனம், சோனகம், வங்கம், மகதம், கலிங்கம், காந்தாரம், காமரூபம் - எனும் எண்ணற்ற நாடுகள் பலவும், தமிழகத்தின் திருவைக் கண்டு வியந்தன, திறனைக் கண்டு அஞ்சின, செருமுனைக்கு வரப் பயந்தன, தோழமைக்குக் காத்துக் கிடந்தன! இமயம் தொட்டு நின்ற அரசுகள் அனைத்தும் தமிழர் முரசு கொட்டுகின்றனர் என்று அறிந்தால், தமது அரசுகட்டில் ஆடிட அச்சம் கொண்டனர்.

கலிங்கத்துப் பரணி இதனைக் காட்டி நிற்கிறது.

கனக - விசயர் காதை இதனை அறிவிக்கிறது.

கடாரம் கொண்டான், கங்கை கொண்டான், இமயவரம்பன் - என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் உள்ளன - ஒவ்வொன்றும் ஒவ்வோர் வீரக் காதையை விளக்குவன!

அவ்விதம் புகழ் பரப்பி வாழ்ந்த தமிழன் இன்று, அடிபணிந்தும், அடிமையாகியும், உரிமை இழந்தும், உதவாக்கரை நிலை பெற்றும், இழிந்து கிடக்கிறானே, இந்த நிலை மாற வழி என்ன என்கிறோம் - காமராஜர், நீதான் நக்கீரன் பரம்பரையாச்சே! உனக்கென்ன குறை! என்று நையாண்டி பேசுகிறார்.

❀ ❀ ❀

தமிழகத்திற்கென்று இருக்கின்றனவே தனிச்சிறப்புகள் - என் செய்வது! எப்படி மறப்பது! எப்படி மறைப்பது!!

யாதும் ஊரே; யாவரும் கேளிர்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
மெய்ப் பொருள் காண்பது அறிவு
யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு

இவைகளை எங்ஙனம் மறந்திட இயலும். வேறு எங்கும் இந்த எண்ணம் ஏற்படாத நாட்களில் இவை தமிழகத்திலே மலர்ந்தன என்ற உண்மையை எப்படி மறைக்க முடியும்! ஏன் மறைக்க வேண்டும்?

❀ ❀ ❀

வான் கோழி கண்டால் வருத்தப்படுமே என்று எண்ணித் தோகையை கீழே உதறிப் போட்டுவிடுமா கலாப மயில்; காக்கைக்கு வருத்தமாக இருக்குமே என்பதற்காகப் பச்சைக்கிளி கருப்புப் பூச்சைத் தேடிக் கொண்டிருக்குமா? பிற நாடுகளும், நமது நாட்டின் பிற பகுதிகளும் பெற்றிராத கருத்துக் கருவூலத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுவது எந்த வகையிலும் தவறு அல்ல; எத்தகைய தீமையும் தந்திடாது; எவருக்கும்.

தமிழரின் தனிச்சிறப்பினை அறிந்திடப் பயன்படும் நமது இலக்கியச் செல்வத்தை நினைவிற் கொள்ளவும், மற்றையோர்க்கு எடுத்துக்கூறவும் பொங்கற் புதுநாள் ஏற்றது என்பதாலேயே பெரியோர்கள் இதனைத் தமிழர் திருநாள் என்றழைக்கின்றனர்.

❀ ❀ ❀

சின்ன வயதிலே சந்தைப் புறத்திலே காணாமற் போய்விட்ட குழந்தை, வேற்றாரிடம் வளர்ந்து, பெரியவனானாலும், பிறகோர் நாள், உண்மை தெரிந்ததும், தாயின் பாதத்தைத் தம் கண்ணீரால் கழுவிடக் காண்கிறோம் - கதைகளில்! தலைமுறை தலைமுறையாக தொல்காப்பியரும், வள்ளுவரும், இளங்கோவும் காக்கைப்பாடினியாரும், சீத்தலைச் சாத்தனாரும், கோவூர் கிழாரும், கணியன் பூங்குன்றாரும், கபிலரும், திருத்தக்கரும், நக்கீரரும், நாகனாரும், நச்செள்ளையாரும், (மற்றவர் பற்றிய முறையான பெயர்

வரிசையை நமது நாவலரிடம் கேட்டுப் பெறுக) ஊட்டி வளர்த்து, உருவாக்கி வைத்துள்ளதை, ஊராளவந்தவர்கள் உத்தரவு போட்டு உருக்குலைந்துவிடுவதாமே! இப்படியொரு 'உற்பாதம்' நேரிட விடலாகுமா!

❀ ❀ ❀

மழையால் நனைந்து வந்த ஔவைப் பெருமாட்டிக்கு "எந்தையும் இழந்தோம், எம்குன்றும் பிறர்கொண்டார்" என்று கூறிட வேண்டிய நிலைபெற்று நலிந்து நின்ற பாரி மகளிர், ஒரு நீலச் சிற்றாடை தந்தனராமே, அதுபோது, மூதாட்டி அம்மகளிரின் மாண்பு கண்டு நெஞ்சு நெக்குருகி,

பாரி பறித்த பறியும், பழயனூர்க்
காரி கொடுத்த களைக்கொட்டும் - சேரமான்
வாராய் என்றழைத்த சொல்லும்இம் மூன்றும்,
நீலச்சிற் றாடைக்கு நேர்!

என்று பாடினதாகக் கூறுகிறார்களே, அந்த நிலைக்குத் தாவிற்று, என் உள்ளம்.

அந்த 'நீலச்சிற்றாடை' தரும் நேர்மையாளர்கள், நிரம்ப இருக்கிறார்கள் நாட்டில், மிக நிரம்ப.

❀ ❀ ❀

மாணிக்க விளக்கு ஒளி தருகிறது.

புலிச் சங்கிலியிட்டுச் செய்த இருக்கையில், படுத்திருக்கிறான் மன்னன்.

காவலாளிகள், சுற்றித் திரிந்தபடி உள்ளனர்; மாற்றாரிடமோ, உற்றாரிடமோ, நடப்பனவற்றை உளறிக்கொட்ட முடியாத நிலையினர்; ஊமையர்.

விளக்குகள் அணையும்போது, பந்தத்தைக் கொளுத்தி விளக்குகளை எரியச் செய்கிறார்கள் கச்சையணிந்த மங்கையர்.

கச்சையணிந்த மங்கையர்தானே, என்று கெடுமதியாளர் எண்ணிடத்துணிய முடியாது - அம்மங்கையர் வாள் அணிந்துள்ளனர்.

மெய்காப்பாளர்களும் காவலிருக்கின்றனர்.

காலத்தைக் கணக்கிட்டு, ‘நாழிகை’ கூறி நின்றனர், சிலர்.

இருக்கையில் உள்ளான் மன்னன் - நடுநிசிக்குப் பிறகும் உறக்கம் கொள்ளவில்லை! பள்ளிஅறை அல்லவே! பாசறை! அடர்ந்த காட்டினை அழித்து, அமைக்கப்பட்ட பாசறை! அங்கு உலவிய கொடிய மிருகங்களையும், கொடியோரையும், அழித்தும் அகற்றியும், முள்வேலி அமைத்துக் காவலாக்கிய நிலையில் உள்ள பாசறை!

உறக்கம் கொள்ளாதது ஏன்? கடும்போர் நடந்திருக்கிறது! அதிலே படுகாயமுற்றனர், தன் படையினர்! அதனை எண்ணி, வெற்றி பெற்று, தன் கொற்றத்தின் சிறப்பினை நிலைநாட்டிட, அவ்வீரர், பட்ட கஷ்டங்களை எண்ணி, உள்ளம் உருகுகிறான் மன்னன்!

போர்வீரர்கள் குறித்து மட்டுமல்ல, பகைவரின் தாக்குதலால் புண்பட்ட, கரிபரி குறித்தும் கவலையுறுகிறான்! ஒருகரம் படுக்கையில்! மற்றோர் கரம்கொண்டு கண்களைத் தடவிக் கொண்டுள்ளான் மன்னன்!

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் அளித்துள்ள முல்லைப்பாட்டு, பாசறையில் இருந்த மன்னனைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

தம்பி! நெடுஞ்செழியன் பாசறையில் இருந்த ‘பாங்கு’ காண்போம் நக்கீரர், காட்டுகிறார், நெடுநல்வாடையில்.

பாசறையில், தூக்கம் வரவில்லை, பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு களத்திலே, களிறுகளின் துதிக்கைகளை வெட்டி வீழ்த்திக் கடும் போரிட்டுக் களைத்துக் கிடக்கின்றனர் வீரர்கள்!

வாடைக்காற்று அடித்துக் கொண்டிருக்கிறது.

விளக்கின் சுடர்கள், வாடை காரணமாகத் தென் திசையாகச் சாய்ந்து காட்டுகின்றன!

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் தோளின்மீதுள்ள ஆடை நழுவிடுவதை, இடப்பக்கத்தில் இறுக்கிப் பிடித்தபடி, பாசறைப் பகுதியில், விழுப்புண்பெற்றுப் படுத்துக்கிடக்கும் வீரர்களைச் சென்று பார்க்கிறான்.

வேம்பு அணிந்த வேந்தன், தன் கொற்றத்தின் ஏற்றத்தைக் குறைத்திடத் துணிந்த மாற்றாரின் கொட்டதை அழித்திட, களம் புகுந்து கடும் போரிட்டு, விழுப்புண்பெற்று, வீரராய்த் திகழ்ந்திட இத்துணை ஆற்றலர்கள் உள்ளனர் என்பதைக் காண்பதால் போலும், முகமலர்ச்சியுடன் காணப் படுகிறான்!

இது மன்னன் நிலை - பாசறையில்.

அழகான அரண்மனை! அந்தப்புரம்! படுக்கை அறை!

யானையின் கொம்பினால் வேலைப்பாட்டுடன் செய்யப்பட்ட கட்டில்.

தந்தக் கட்டில்தானே என்று கருதிவிடக்கூடாது. நக்கீரர் வெகுண்டெழுவார்! அந்தக் கட்டில், செல்வ நிலையை மட்டும் காட்டுவது அல்ல.

போரிலே ஈடுபட்டு இறந்தபட்ட, யானையின் கொம்புகள்! நாற்பது வயதானதாக இருக்குமாம், யானை!

முத்தாலே சாளரங்கள்! புலி வடிவமும், பூ வேலைப்பாடு முடைய திரைகள்! முல்லையும் பிறமலர்களும் அன்னத்தின் தூவியும் தூவப்பட்ட படுக்கை!

அதிலே, படுத்திருக்கும்போது, துயில் வரவில்லை!

அவள் அடியினை, அழகு மகளிர், மெல்ல வருடுகிறார்கள், துயில் கொள்ளட்டும் என்று; பயன் இல்லை!

தலைவன் இல்லை, துயிலும் இல்லை.

தலைவன் இல்லாததால், துயில் மட்டுமா இல்லை! மார்பிலே முத்து மாலைகள் இல்லை! கரங்களிலே பொன் மணி வளைகள் இல்லை; சங்குளையல்களே உள்ளன! நூற்புடைவை தான் - அதிலும் மாசு நிரம்ப! அணிபணி அகற்றிவிட்டு, பிரிவாற்றாமையால், பெருந்துயர் உற்று, கண்களிலே துளிர்த்திடும் நீர்த்துளியைத் தன் கைவிரலாற் போக்கி, கலங்கித் தவிக்கிறாள், அரசி.

தந்தக் கட்டிலில் படுத்துத் துயில்கொள்ளாது துயரம் மிகுந்து, தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த அரசியைப் பிரிந்துதான், பாண்டியன் நெடுஞ்செழியன் பாசறையில் உலவிக் கொண்டிருக்கிறான்.

'நெடுநல்வாடை' காட்டும் பாடம், மறக்கப்போமோ!!!

களம் செல்வதெனின், காதலையும் மறந்திடும் ஆற்றல் கொண்டவர், தமிழர்.

காதலின்பம் பற்றிய கருத்தற்றவரோ, மனை மாண்பு அறியாதாரோ, எனின், அகம் கேலி செய்யும், அதற்கென்றே ஓர் களஞ்சியமாக நிற்கிறேன், அறிவிலிகாள்! ஏன் உமக்கு, அர்த்தமற்ற ஐயப்பாடு என்று கேட்கும்.

வறிய நிலத்திலே, உள்ளது நெரிஞ்சி. சிறிய இலைகள் கொண்டது; கண்ணுக்கினிய பூக்கள் கொண்டது. பூ உதிர்ந்ததும், காய் காய்க்கும், அது முள்ளாகிக் காலில் குத்தும்.

நெரிஞ்சியோ, புதுமலர் தருகிறது. கண்ணுக்கு இனிமை கிடைக்கிறது.

அதே நெரிஞ்சியே முள்ளும் உதிர்க்கிறது, காலில் தைக்கிறது.

இதனை எடுத்துக்காட்டி, என் காதலர் எனக்கு இனியது செய்தும் மகிழ்விக்கிறார்; அவரே பிறகு இன்னலை விளைவிக்கிறார் எனைப் பிரியும்போது; நெரிஞ்சிபோல!! - என்று பிரிவுத்துயரை விளக்கிடத் தமிழணங்குக்குத்தான் தெரிகிறது!

நோம்என் நெஞ்சே!
நோம்என் நெஞ்சே!
புன்புலத்து அமன்ற
சிறிஇலை நெரிஞ்சி
கட்குஇன், புதுமலர்,
முள்பயந்து ஆங்கு
இனிய செய்த நம் காதலர்
இன்னா செய்தல், நோம்என் நெஞ்சே!

கண்ணுக்கு இனிமைதரும் புதுமலர் கிடைப்பதும் நெரிஞ்சியில்! - முள் பயந்து குத்துவதும் நெரிஞ்சியால்! என்று இயற்கை உவமையைக் காட்டி தன் உள்ளத்து நிலையை விளக்கிடும் தமிழணங்கு காண்கிறோம்.

இத்துணை அளவுக்குப் பிரிவாற்றாமை ஏற்படுகிறது என்பது அறிந்துதான், களம் சென்றனர் - உரிமை காத்திட, மரபு வாழ்ந்திட!

களம் செல்லாக்காலை, எத்துணை கவர்ச்சி கண்டனர் காதலில்!!

கார் காலம் கண்டான் தலைவன்! மயில் ஆடுகிறது! முல்லை மலருகிறது! உடனே, தலைவியின் நினைவுவந்து குடைகிறது. மேகத்தை விட விரைந்து வருகிறான்; காதலியிடம் கூறுகிறான்.

மயிலைக் கண்டேன், உன்னைப்போலவே இருந்தது!

முல்லை மலர்ந்திருக்கக் கண்டேன் - உன்னை எண்ணினேன்!

ஒளி பொருந்திய நெற்றியை உடைய அரிவையே! விரைந்து வந்தேன்! என்று காதல் பொங்கிக் கவிதை வடிவாகிறது!

நின்னே போலும்

மஞ்ஞை!

என்று ‘ஐங்குறுநூறு’ அழகாகக் கவிதை அளிக்கிறது.

சோலைகள், பொய்கைகள், ஏரிகள்!

மதில் சூழ்ந்த நகரம்!

மதிலின் வாயிலில் இரட்டைக் கதவுகள்

மதிலிலே, புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

சோறிடும் சாலைகள் ஏராளம்!

அங்கு வடித்த கஞ்சி ஆறென ஓட, அதிலே ஏறுகள் புகுந்து சண்டையிட, சேறாகி, பிறகு உலர்ந்து, புழுதியாகிறதாம்!

கடல்வழி வந்த குதிரைகள்
நிலவழி வந்த மிளகுப் பொதிகள்
இமயச் சாரலின் மணியும் பொன்னும்,
குடகுமலைச் சந்தனமும், அகிலும்,
தென்கடல் முத்து
கீழ்க்கடல் பவளம்
ஈழ நாட்டுப் பொருள்
காழக நாட்டுப் பொருள்

இவைகளெல்லாம் மலைமலையாகக் குவிக்கப் பட்டிருந்தன, ஒவ்வொரு நாளும் விழாக்கோலமாம்! ஆடலும்,

பாடலும் அழகியதாய் அமைந்திருந்தனவாம்! கடலடி சென்று விட்டது காவிரிப்பூம் பட்டினம், கவிதை வடிவில் உள்ளது இன்றும்! நாமோ, நிலமிசை நின்று விட்டோம்; நீங்காப் பெரும்பழியை ஏற்று நிற்கிறோம்.

வளம், தமிழகமெங்கணுமே கொழித்திருந்தது, நன்கு தெரியத் தக்க கவிதைகள் இருந்துகொண்டு நம்மை இன்று, வேதனைக்கும், வெட்கும் நிலைக்கும் தள்ளியபடி உள்ளன! தமிழில் என்ன உண்டு என்றெண்ணிடும் பெருமதியேனும் பெற்றோமா! இல்லையே! தமிழின் இனிமையும், தொன்மையும், உள்ளத்தைத் தொட்டுத் தொட்டு அவ்வப்போது நம்மைத் தமிழனாக்கிவிடுகின்றன!

மலைபடுகடாம் காட்டிடும் வளம், காண்போம், வா, தம்பி!

மழை, வேண்டியபோது பொழிந்து வளமளிக்கிறது. எல்லாம் செழித்துவ ளருகின்றன!

விண்ணகத்து நட்சத்திரங்கள் உதிர்ந்து கீழே சிதறிக் கிடப்பது போல, கொல்லைகளிலே, முசுண்டைக் கொடியின் பூக்கள் உள்ளன.

எள்ளு, எத்துணை வளமாக இருக்கிறது என்கிறார், புலவர்! ஒரு கைப்பிடியில் ஏழே காய்கள்தான் அடங்குமாம்! தொட்டதும் நெய் மணம்.

தினைக்கதிர்களைக் காண்கிறார் - கண்டதும், யானைக் கன்றுகள், விளையாடும்போது, துதிக்கைகளை ஒன்றோடொன்று பிணைந்து கொண்டு நிற்பது நினைவிற்கு வருகிறது; அவ்விதம் உள்ளதாம், தினைக்கதிர்கள்.

அவரைப்பூக்கள் சிதறி இருப்பது, தயிர்க்கட்டிகள் வீழ்ந்து கிடப்பதுபோல் இருக்கிறதாம்!

கரும்பு கண்டதும், புலவர் களமே சென்றுவிடுகிறார்!

மிகவளர்ந்துள்ள கரும்புகள், காற்றினாலே ஒரு பக்கமாகச் சாய்ந்து அசைகின்றன. வேற்படைச் சேனைகள் ஓடுவதுபோலத் தெரிகிறது புலவருக்கு!

வேண்டாம், தம்பி, வேண்டாம்! அந்த வளமத்தனையும் விளக்க விளக்க, இன்றைய வெறிச்சிட்ட நிலை தரும் வேதனை அதிகப்படும்.

இன்று இடம் படர்ந்துள்ளது, இல்லாமை கொட்டுகிறது; கல்லாமை அரசாள்கிறது.

தமிழ்நாடு என்ற பெயர்கூட இல்லை.

உயிர் தருகிறேன், உரிய பெயரை, உரிமைப் பெயரை, முன்னோர் நானிலமெங்கணும் சென்று பெருமிதத்துடன் கூறிய பெயரினைத் தாருமய்யா என்று கேட்டுக் கேட்டு, மடிந்தார், வீரத்தியாகி சங்கரலிங்கனார்! அதனாலென்ன - என்று கேட்டிடும் அன்பர் அரசாள்கிறார்!

❀ ❀ ❀

அந்த நாளில், வாழும் வேலும், போதும், நாளும் கோளும் என் செய்யும்? கரியும், பரியும் இருப்பின், புகையும், புல்லருரையும் எற்றுக்கு? என்று அறிந்து வீறென நடைபோட்டு, களத்திலே வீரக் கலாபம் விரித்தாடி, வெற்றிக் கழலொலியால் வளையொலியாள் காதலினைக் காணிக்கையாகப் பெற்ற, வீரர் கோட்டமாக, நம் நாடு விளங்கிய வரலாறு நினைவிலே வந்து நிற்கவேண்டும்; நெஞ்சிலே தேனூறும்! நம்மவர் அங்ஙனம் இருந்தகாலை, பாரிலே மற்றையோர், மந்தை முறையில் வாழ்ந்தனராம், நொந்து கிடந்தனராம், மொழி வளமே கிடையாதாம், வரைமுறை அறியாராம், அறிவளிக்கும் நூலின்றி, அறம் காக்கும் அரசின் வாழ்வளிக்கும் வகையின்றி, நாடே காடாக, நலிந்தனராம். கடலில் நம் கலமாம்! கடாரம் நம் காலடியாம்! பொன்னும் மணியும் எங்கெங்குமாம்! போர்முரசு கேட்டால் பேரரசுகள் நடுக்குறுமாம்! கவிதை புனைவாராம் புலவர் குழாம், காவலர் தருவாராம் கனகமணி! அகமும் புறமும் கண்டவர் யார்? அவன் புகழ வாழ்ந்தோர் யார்? என்றால், அவர்தாம் தமிழர், என்று எவரும் கூறும் நிலைபெற்று, நம்மவர் வாழ்ந்தார் சீரோடு, நாம் அவர் வழிவழி, மறத்தலாமோ!!

❀ ❀ ❀

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு” என்றார் வள்ளுவர்; ஆமெனக் கொண்டார் அறிவாளர். வான வெளியிலே வருவார் நாரதர், கானம் எழுப்பியே! என்றனர் கதைப்போர்! “யாம் விடுத்த செயற்கைக்கோள், சந்திர மண்டலத்தையும் கடந்து சென்றுள்ளது” என்கின்றனர் சோபித மிகுந்த சோவியத் நாட்டு விஞ்ஞான வித்தகர்கள். தாரை தழுவிட, வழுவினான் சந்திரன்! “தகாதது புரிந்தாய், தேய்வாய்” என்று சாபமிட்டார் குருவும் கண்டு என்று சாற்றினார் புராணிகர் சந்திரன் பற்றி. “சற்றே பொறுத்திரும், ஆண்டு மூன்று ஆகட்டும்; ஆங்குக் குடியேறி அருமையாக வாழ்ந்திடலாம்; வழி அறிவோம்; முறை காண்போம்”, என்று கூறுகிறார்கள் ரஷிய நாட்டவர். இந்நிலையில் “லீலைகளும் விளையாடல்களும், அவதார மகத்துவமும்” எத்தனை நாள் விலைபோகும்? வீண் முயற்றி! எல்லாப் புராணமும் எலி வாலைப் பிடித்தவன், ஏழ் கடலைத் தாண்டினான் எனும் கதை போன்றதுதான் என்று, எவரும் துணிந்துரைக்கும் நிலைபெற்றார். கவிதையில் அழகுண்டு, மெருகுண்டு - சுவையுண்டு - என்று கூறிடும் வாரியாருக்கு, சுவைமிக்க அருங்கவிதை, வேறு பல உண்டன்றோ, பழந்தமிழர் அளித்துள்ள பாடலெல்லாம் போதாவோ, பதுமத்தில் உறைபவனை, பாஞ்சன்யம் கொண்டவனை, நெற்றிக்கண் நேர்த்தியனை, அவன் பெற்றெடுத்த இரு மகவை, தவமாய்த் தவமிருந்து மணமுடித்த அம்மையரை, ஆமையாய், அழகற்ற பன்றியாய், கொல்லும் அரியாய், குரங்கேறி நின்றவனாய், இவ்வாறெல்லாம் வந்த இறையவனைக் காட்டுதற்கோ, உவமையும் உருவகமும், அணியும் பிறவும் பயன்படுத்துதல் வேண்டும்? குன்றும் களிறும், கொங்கும், தெங்கும், வண்டும், நண்டும், வாளையும், வாவியும், புன்னையும் புறவும், மயிலும் குயிலும், மாலை மதியமும் காலைக் கதிரோனும், இன்னபிற அழகெல்லாம் இன் கவிதையாக்கி, எட்டுத்தொகை என்றும் பத்துப்பாட்டென்றும் தந்துளரே தமிழ்ப்புலவோர், போதாவோ என்று கேட்க, இளம் தமிழர் எழுந்து விட்டார்; ஏற்றம் தமிழுக்கு; எங்கும் தமிழ் முழக்கம்! இந்நிலையில், ஆடலிலும் பாடலிலும் கூத்திலும் கூட்டத்துப் பேச்சிலும், பழமைகள் படும்பாடு, கொஞ்சமல்ல; பரிதாபம்!

புலமைமிக்கவர்கள் பலர், தரமான முறையிலே சிந்தனைக்குத் தெளிவளிக்கும் ஓவியங்களைத் தீட்டித் தந்தபடி உள்ளனர். பகுத்தறிவு பரவுவது மட்டுமல்ல, புராணப் பிடிப்பு குறையக் குறைய, தமிழ் இலக்கியத்தின்மீது ஆர்வம் வளருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு திருக்குறளை அறிய மறுத்தவரெல்லாம் இன்று புதுப்பொருள் கூறுகின்றனர்; சிலர் சூதுமதியுடன்! தமிழன் தொன்மை, மென்மை, தூய்மை, பொலிவு யாவும் இப்போது மக்கள் மன்றத்திலே எடுத்துரைக்கப்பட்டு, மனைகளில் பேசிக் கொள்ளப் படுகின்றன. உனக்காகத் தம்பி, ஒருநாள், புறநானூற்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். படித்தேன் என்று கூற மனமில்லை. படிக்க வேண்டும் நிரம்ப என்ற ஆர்வம் உண்டு; புறநானூறு பாடிய புலவர் பெருமக்கள் - பெண்பாற் புலவரும் உண்டு - பற்றிய குறிப்புக் கண்டேன்; வியந்தேன். எத்துணைப் பழங்காலத்திலே புறநானூறு எழுந்தது. அக்காலத்தே, உலகிலே பல நாடுகள், உருவம்கூடப் பெறவில்லை, நாடான பலவற்றிலே மொழிவளம் இல்லை, மொழிவளம் இருந்த இடங்களிலும் இலக்கியம் எழவில்லை, இங்கொன்றும் அங்கொன்றுமாக இலக்கியம் எழுந்த இடங்களிலும், இத்துணைப் புலவர்கள் இருந்ததில்லை; அதிலும் பெண்பாற் புலவர்கள் இங்கு இருந்தது போல, அளவிலாயினும் சரி, தரத்தி லாயினும் சரி, மற்ற இடங்களிலே இருந்ததாக எனக்கு யாரும் கூறினாரில்லை.

தம்பி! எத்துணை வாழ்க்கை வளம், அரசு நெறி, சீர் இருந்தால் இத்துணைப் புலவர்கள், இன்றளவும் இவைபோன்ற அருங்கவிதை இல்லை என்று கற்றோர் வியந்திடும் தரமான கவிதைகளை இயற்றி இருக்க முடியும் என்பதை எண்ணிப்பார். தமிழர் எத்திறத்தவர் என்பதும் புரியும்; தமிழர் என்று பேசிப் பேதம் வளர்த்திடாதீர் என்று கூறிடும் மேதாவிகளின் கூற்று எத்துணை பொருளற்றது என்பதும் விளங்கும்.

அடைநெடுங்கல்வியார்.
அண்டர் மகன் குறுவழுதி.
அரிசில் கிழார்.
அள்ளூர் நன்முல்லையார்.
ஆடுதுறை மாசாத்தனார்.



ஆலங்குடி வங்கனார்.
ஆலத்தூர் கிழார்.
ஆலியார்.
ஆவூர்க் கிழார்.
ஆவூர் மூலங்கிழார்.
இடைக்காடனார்.
இடைக்குன்றூர்க்கிழார்.
இரும்பிடர்த்தலையார்.
உலோச்சனார்.
உறையூர் இளம்பொன்வாணிகனார்.
உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.
உறையூர் மருத்துவன் தாமோதரனார்.
உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.
உறையூர் முதுகூத்தனார்.
ஊன்பொதி பசுங்குடையார்.
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.
எருமை வெளியனார்.
ஐயாதிச் சிறுவெண்டரையர்.
ஐயூர் முடவனார்.
ஐயூர் மூலங்கிழார்.
ஒக்கூர் மாசாத்தனார்.
ஒக்கூர் மாசாத்தியார்.
ஒருசிறைப் பெரியனார்.
ஒரு உத்தனார்.
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்.
ஓரம்போகியார்.
ஓரேருழவர்.
ஔவையார்.
கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி.
கண்ணகனார்.
கணியன் பூங்குன்றன்.
கபிலர்.
கயமனார்.
கருங்குழலாதனார்.
கருவூர்க் கதப்பிள்ளை.

கருவூர்ப் பெருஞ்சதுக்கப் பூதநாதனார்.
கல்லாடனார்.
கழாத்தலையார்.
கழைதின் யானையார்.
கள்ளில் ஆத்திரையனார்.
காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்.
காரிகிழார்.
கரவட்டனார்.
காவற்பெண்டு.
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.
குட்டுவன் கீரனார்.
குடபுலவியனார்.
குடவாயிற் கீரத்தனார்.
குண்டுகட் பாலியாதன்.
குறமகள் இளவெயினி.
குறுங்கோழியூர்க் கிழார்.
குன்றூர்க்கிழார் மகனார்.
கூகைக் கோழியார்.
கூடலூர்க்கிழார்.
கோடைபாடிய பெரும்பூதனார்.
கோதமனார்.
கோப்பெருஞ் சோழன்.
கோவூர்க்கிழார்.
கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்.
சங்கவருணரென்னும் நாகரியர்.
சாத்தந்தையார்.
சிறுவெண்டரையார்.
சேரமான் கணைக்காலிரும்பொறை.
சேரமான் கோட்டபலத்துதுஞ்சிய மாக்கோதை.
சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்.
சோழன் நல்லுருத்திரன்.
சோழன் நலங்கிள்ளி.
தன்காற்பூட் கொல்லனார்.
தாமப்பல கண்ணனார்.

தாயக்கண்ணனார்.
தாயங்கண்ணியார்.
திருத்தாமனார்.
தும்பி சோகினனார்.
துறையூர் ஓடைகிழார்.
தொடித்தலை விழுத்தண்டினார்.
தொண்டைமான் இளந்திரையன்.
நரிவெரூஉத்தலையார்.
நல்லிறையனார்.
நன்னாகனார்.
நெட்டிமையார்.
நெடுங்கழுத்துப்பரணர்.
நெடும்பல்லியத்தனார்.
நொச்சி நியமங்கிழார்.
பக்குடுகை நன்கணியார்.
பரணர்.
பாண்டரங்கண்ணனார்.
பாண்டியன் அறிவுடை நம்பி.
பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.
பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.
பெருந்தேவனார்.
பாரி மகளிர்.
பாலை பாடிய பெருங்கடுங்கோ.
பிசிராந்தையார்.
பிரமனார்.
புல்லாற்றூர் எயிற்றியனார்.
புறத்திணை நன்னாகனார்.
பூங்கணுத்திரையார்.
பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு.
பெருங்குன்றூர் கிழார்.
பெருங்கோழிநாய்க்கன் மகள் நக்கண்ணையார்.
பெருஞ்சித்திரனார்.
பெருந்தலைச்சாத்தனார்.
பெரும்பதுமனார்.

பேய்மகள் இளவெயினி.
பேரெயின் முறுவலார்.
பொத்தியார்.
பொய்கையார்.
பொருந்திலிளங்கீரனார்.
பொன்முடியார்.
மதுரை அளக்கா ஞாழலார் மகனார் மள்ளனார்.
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்.
மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்.
மதுரை ஒலைக்கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனார்.
மதுரைக் கணக்காயனார்.
மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார்.
மதுரைக் கள்ளின் கடையத்தன் வெண்ணாகனார்.
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்.
மதுரைத் தமிழ்க்கூத்தனார்.
மதுரை நக்கீரர்.
மதுரைப் படைமங்கமன்னியார்.
மதுரைப் பூதனிளநாகனார்.
மதுரைப் பேராலவாயர்.
மதுரை மருதனிள நாகனார்.
மதுரை வேளாசான்.
மருதனிள நாகனார்.
மாங்குடி கிழார்.
மாதி மாதிரத்தனார்.
மார்க்கண்டேயனார்.
மாற்பித்தியார்.
மாறோக்கத்து நப்பசலையார்.
முரஞ்சியூர் முடிநாகராயர்.
மோசி கீரனார்.
மோசி சாத்தனார்.
வடம நெடுந்தத்தனார்.
வடமவண்ணக்கன் தாமோதரனார்.
வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.
வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்.
வடமோதங்கிழார்.

வன்பரணர்.
வான்மீகியார்.
விரிச்சியூர் நன்னாகனார்.
விரியூர் நக்கனார்.
வீரை வெளியனார்.
வெண்ணிக் குயத்தியார்.
வெள்ளெருக்கிலையார்.
வெள்ளைக்குடி நாகனார்.
வெள்ளை மாளர்.
வெறிபாடிய காமக்கண்ணியார்.
வேம்பற்றூர்க் குமரனார்.

தம்பி! மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, கிடைத்துள்ள புலவர் வரிசை இது. இன்னமும் கண்டறிய வேண்டிய பெயர்களும் உள்ளன.

ஒவ்வோர் புலவரும் ஒன்று அல்லது இரண்டு கவிதைகளே இயற்றினர்; இன்று அவைகட்கு உயிரூட்டம் உள்ளன! என்ன பொருள்? அத்துணை புலமையை அதிலே வடித்துள்ளனர்!

எவர்? இந்தியை அரசுக் கட்டிலில் ஏற்றிக்கொள்ள, இல்லையேல், சிறை பிடிப்போம், சுடுவோம் என்று வடவர் கூற, அஞ்சி அஞ்சிச் சாகும் இன்றைய மக்களின் முன்னோர்; தமிழர்! அற்றை நாளில் அப்பெரும்புலவோர் அளித்தனவெல்லாம் இற்றை நாளில் நாம் எடுத்தியம்பலால், முற்றும் அவர் உரை ஏற்றோம் என்று பொருள்கொளல் வேண்டாம். அவர் திறம் வியந்திடவும், அந்நாளிலே இருந்த புலமைவளம் கண்டு மகிழ்ந்திடவும், கூறுகிறோம். அவர் அறிவாற்றல் பெரிது; ஆயினும், அதனினும் பெரிது காலம் கனிந்தளிக்கும் கருத்துப் படையல்கள் அன்று அவர் கண்ட உண்மை பல உண்டு எனினும், மேலும் பல உண்மை காணும் வாய்ப்பு, காலம் சமைத்தளிக்கக் காண்கிறோம்.

முடியுடை மூவேந்தர்கள் மட்டுமல்ல; குறுநில மன்னர்கள், வேளிர்கள், பலரும்கூடப் புலவர் பெருமக்களை ஊக்குவித்தனர். கவிதை பெருக்கெடுத்தது; தமிழ் மணம் கமழ்ந்தது. அந்நிலை காட்டவே அவர் பெயர் கூறி மகிழ்கிறோம்.

தம்பி! மற்றோர் முறை புலவர்கள் பெயர்ப்பட்டியலைப் படி. மூடிவை! நினைவிற்குக் கொண்டுவந்து பார்! இயலாது! உனக்கு மட்டுமல்ல! எனக்குந்தான்! எனக்கு மட்டுந்தானா, இன்றுள்ள புலவர்களிலே பலருக்கு. எல்லோருமா டாக்டர் மு.வ.வாக இருப்பர்?

போகட்டும்; பழனிமலைப் பேகன், பறம்புமலைப் பாரி; கோடை மலை நெடுவேட்டுவன்; கொல்லி மலை ஓரி; பொதிய மலை ஆய்ஆண்டிரன்; குதிரைமலை அதிகமான்; முதிரமலைக் குமணன்; தோட்டி மலைப் பெருநள்ளி. தமிழகம் தனி அரசு ஆகக் கூடாது, பாரதத்தின் ஒரு பகுதியாகத்தான் பிணைந்து (இணைந்துகூட அல்ல) கிடக்கவேண்டும் என்று கூறும் குடிஅரசுத் தலைவர் பாபு ராஜேந்திரருக்கு இந்த மலை அரசுகளாண்டவர் எவராவது தெரியுமா, என்று கேட்டுப்பார். தெரியாது! பன்றிமலைச் சுவாமிகளைத் தெரியும்!

பூவார் சோலை மயிலாடப்
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி!

என்று பாடினார் இளங்கோ . கவி தாகூரின் சிறப்பினை நமக்கறிவிக்கும் பண்டித நேரு அறிவாரா, சேர நன்னாட்டு இளவலை! கோபிப்பார், கேட்டால், ஆணையும், அரசும், பெருமளவில் பெருமிதத்துடன் அமைத்துக் கொண்டு அரும்பாடு பட்டு வருகிறேன்! என்னைப் போய், அறிவிலி! அந்த நாளில் ஏதோ ஆறு பற்றிப் பாடிய ஒரு புலவனைப் பற்றிக் கேட்கிறாய். என்ன துணிவு! எத்துணைத் தேசத் துரோகம் என்று ஆர்ப்பரிப்பார்.

கொங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; குரவமும் முல்லையும் நறுமணம் கமழும்; கோலமயில் தோகை விரித்தாடும்; தேனுண்ட வண்டுகள் தமிழ்ப்பாட்டிசைக்கும் என்றார் தமிழ்ப் புலவர்.

அன்பார்ந்த குழவியை அழகிய மஞ்சத்தில் அமைத்து, அதன் மேனியைக் கைகளால் தடவித் துயில்விக்கும் அன்னைபோல் ஈரம்

வாய்ந்த பொய்கை, கமலப்பள்ளியில் அமர்ந்த அன்னத்தைத் தன் அலைக்கைகளால் தட்டித் துயில்வித்தது - என்று ஓவியம் தீட்டுகிறார், கவிதை வடிவில் மற்றோர் மாத்தமிழர்.

வியக்கத்தக்க காட்சிகளைக் கவிதைகளாக்குவதுடன் அமைந்தனரோ? அன்று! அன்று! அறம் உரைத்தனர்! அரசருக்கும் அஞ்சாது அறநெறியை எடுத்துரைத்தனர். வெற்றுரையாம் பழமையிலா அவர்தம் மனம் படிந்திருந்தது? இல்லை! புதுமொழியில் திளைத்தனர்.

செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூரா!

புது மொழிவழி அவர்தம் நாட்டம் தொடர்ந்து சென்றதனால், விளைந்த எண்ணம் ஓர்வகை சுற்றுச்சார்பை ஏற்படுத்தியதால்தான், பக்தி மார்க்கத்தைப் புகுந்த வந்த புனிதர்களே கூட, எவரும் எங்கும் எஞ்ஞான்றும் வாதிடும் கடவுட் கொள்கைபற்றி,

கழியுளா ரெனவுங் கடலுளா ரெனவுங்
காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளாரெனவு மலையுளா ரெனவு
மன்னுயிர் விண்ணுளா ரெனவும்
சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தனசொல்லும்

என்று கூறவேண்டி வந்தது.

‘கண்ணுதலோனை’க் காண்மின் என்று கூறப்போந்த சுந்தரரே, தமிழர்கள், கடவுள்பற்றிய கட்டுக் கதைகளை மட்டும் கூறினால் கேட்டு இன்புறார் என்று அச்சப்பட்டவர்போல், அவர் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் தலத்தைக் காண்மினோ என்ன வேண்டுகிறார்.

கண்ணுதலோன் மேவிய ஊர்வினன்
அரும்பருகே சுரும்பருவ

அறுபதம் (வண்டு) பண்பாட
அணிமயில்கள் நடமாடும்
அணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை
கண்வளரும் கழனி
கமலங்கள் முகம் மலரும்
கலயநல்லூர் காணே!

என்று பாடி, அரும்பு, கரும்பு, வண்டு, மயில், கருங்குவளை, கமலம் ஆகியவற்றினைக் காட்டி இப்படிப்பட்ட அழகு மல்கும் ஊர் காண்மின் என்கிறார்.

❀ ❀ ❀

இறவாப் புகழ் பெற்ற நூல்கள் இயற்றப்பட்டன. தம்பி! அது மட்டுமன்று. நூல், எங்ஙனம் இருத்தல்வேண்டும் என்பதற்கே, விளக்கம் கண்டனர் அந்த நாளிலே.

நூலெனப் படுவது நுவலுங் காலை
நுதலிய பொருளை முதலில் கூறி
முதல்நடு இறுதி மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றமைந்த உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

எல்லா எழிலும் நிரம்பிய நாடுமட்டுமல்ல, எதிலும் எழிலும் ஏற்றமும் பெறுதல் எங்ஙனம் என்று 'இலக்கணம்' வகுத்துக் கொண்ட நாடு. இன்று வளம் பிறர்க்கு, வாட்டம் தமிழர்க்கு என்ற நிலையில் கிடந்து உழலக் காண்கிறோம்; உள்ளம் உலைக்கூடம் போலாகிக் கிடக்கிறது. பேச்சும் பெருமூச்சும் பொறிகளென்றாகி, தமிழரிடை வந்துற்ற தீய நினைப்புகள், தன் நிலை மறந்த போக்கு என்பவைகளை எரித்திடத் தலைப்பட்டுள்ளன. உனைக் கண்டு மயக்குற்றதால், எரி நெருப்பிட எடுத்த விறகுத் துண்டைக் கெண்டை விழியாள், வேறு பக்கம் போடக் கண்டு, கேலியால் கொத்துகிறாய்; ஆனால் நம்மிலே பலர், 'ஏக இந்தியா' எனும் பிடிப்பில் மயங்கி, தமிழர்க்குத் தொண்டாற்றத் தவறி விடுவது கண்டால் நெஞ்சம் எரியிடைப்பட்ட மெழுகாகவன்றோ ஆகிறது.



உன் ஒரு சிறு நகை கண்டதும், முல்லை நகையாள், தன் தவற்றினைத் திருத்திக்கொண்டு, முத்தமல்லவா தருகிறாள், உன் இன்பப் பெருக்குக்கு! உன் பணியும், தம்பி, உணராதாரிடம் காய்வது அல்ல; அவர்தம் விழியைத் திருப்புவது, வழியைக் காட்டுவது, உடன் அழைத்து வருவது, என்றிருக்க வேண்டும்.

பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் என்றார் புலவர். அவ்வழியே நம் வழியாதல் வேண்டும்.

தம்பி! உனை நெடுந்தொலைவு அழைக்கிறேன் என்று கோபம் கொள்ளாதே! நானறிவேன் இன்று உன் நிலை யாது என்பதை! மனையில் மகிழ்ந்திரு! பெற்றோருக்குப் பெருமை தேடிடு! உற்றார் உறவினரை உவகைகொள்ளச் செய்! ஊருக்கு உழைத்தலில் இன்பம் பெறு! விழிபுகுந்து நெஞ்சிலே உறையும் உன் இனியாளைக் கண்ணெனப் போற்றிடு! கன்னல் மொழிக் குழந்தைகளைக் கற்றோராக்கு! தமிழ் மணம் கமழ வழி காண்பாய், தம்பி!

தமிழன் என்றோர் இனம் உண்டு!
தனியே அவர்க்கோர் குணம் உண்டு !

தமிழர்க்கென்றோர் விழா உண்டு, தனியாய் அதற்கோர் சிறப்புண்டு. பொங்கற் புதுநாள், அந்த விழா போற்றி மகிழ்வோம், தமிழ்த்திருநாள். போ! போ! தம்பி! ஆயிரம் நான் சொல்கிறேன், உன் கண்கள் மட்டும்...! உன்மீது என்ன தவறு? உன்னை ஈர்க்கும் துடியிடையும் குற்றமா புரிகிறாள்?

செக்கச் செவந்த கன்னம்
　　　　சேல்விழியாள் நடையில் அன்னம்
செந்தாமரை யாகும்முகம்
　　　　செதுக்கி வைத்த
செம்பொற் சிலையாகுமே வடிவம்.

என்று காதற்பண் பாடிய தமிழ் மரபினனல்லவா!

கத்தும் கடலில் முத்தெடுத்தான்
கற்றைக் குழலாளுக்களித்தான்

கட்டழகி பெற்றதைத் திருப்பித் தந்தாள்
கண்ணே! என்றழைத்து மகவுக்குத்தான்!

என்றல்லவா, குறும்பும் புலமையும்குழைத்துப் பாடினார் முன்னோர். அவ்வழி வந்தவனன்றோ! வேறாகவா இருக்கும் உன் போக்கு!

இன்ப நாளிது! இதயம் பாடுது! மகிழ்ந்திரு. ஆனால், திருநாட்டை மறவாதிரு! வாழ்க நின் குடி! வளர்க நின் மகிழ்ச்சி! வாழ்க தமிழ்!

அறநெறிதனை எடுத்தியம்பிடின், நல்லொழுக்கந்தனை உணரச் செய்திடின், மக்களை நன்மக்களாக்கிடின், சமூகத்தில் உள்ள கேடுகள் மாய்ந்தொழிந்து போகும் என்கின்றனர். அதுபோல் அறநெறி கூறிடல் கூடாது என்று கூறுவேன் என்று எண்ணத் தேவையில்லை, தம்பி! ஆனால், அவையாவும், எரியும் கொப்பரைமீது தெளிக்கப்படும் பன்னீர்த் துளிகளெனப் பொரிந்து போகின்றன.

செய்ந்நன்றி கொல்லன்மின்;
தீ நட்பு இகழ்மின்;
பொய்க்கரி புகலன்மின்;
பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம்
அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்!

என்று சிலம்பு ஒலித்திருக்கிறது! புதிதாக நன்னெறி பற்றி நாம் ஆராய்ந்தறிந்து கூறிடத் தேவையில்லை. சிலப்பதிகாரத்திலேயே ‘பொய்க்கரி’யால் விளைந்த பொல்லாங்கு விளக்கப்பட்டுமிருக்கிறது. எனினும், சிலப்பதிகார காலத்து இளங்கோ அடிகள் கால முதற்கொண்டு இன்றளவும் செய்யப் பட்டுவரும் நன்னெறி, சமூகத்தின் போக்கை மாற்றி அமைத்திடக் காணோமே, என் செய்வது?

'தனி மனித வாழ்க்கை' என்பதே, தம்பி! இப்போது மிகமிக அரிதாகிக்கொண்டு வருகிறது சுற்றுச் சார்பின் வேகமும் நெருக்கமும், 'தனி மனித வாழ்க்கை' யை இயலாததாக்கி விட்டிருக்கிறது.

❀ ❀ ❀

இலக்கியம் (தமிழ்)

தம்பி! கடலும் கடல் சூழ்ந்த இடமும், நெய்தல் என்றனர் தமிழர். நிலத்தின் இயல்பு கண்டு, பெயரிட்டனர்; தனிச்சிறப்புக் கண்டு பயன் பெற்றனர். குறிஞ்சி, மருதம் , முல்லை, நெய்தல், பாலை, எனும் ஐந்து வகையாக, நிலத்தினைப் பிரித்தனர். எப்போது என்கிறாய், தம்பி? ஈராயிரம் ஆண்டுகளுக்கும், முன்பாக!! இன்றுள்ள பல நாடுகள், பெயரற்ற இடங்களாக இருந்த நாட்களில்!! இன்றுள்ள பல நாட்டு மக்கள், காட்டில் திரிந்த காலத்தில்!! எத்துணை ஆராய்ச்சித் திறன் இருந்திருக்க வேண்டும், அந்த நாட்களில், இயல்பு கண்டு இடங்களைப் பிரித்து, பெயரிட்டுக் காட்ட!

தம்பி! இத்துணைச் சிறப்புகளும், இன்று எடுத்துக் கூறப்பட வேண்டியவைகளாகிவிட்டன. வெளிநாட்டவருக்கோ, இராமாயண மகாபாரதம் தெரிவிக்கப்பட்டிருக்கும் அளவு, தமிழரின் தனிச்சிறப்பான 'திணை இலக்கணம்' அறிவிக்கப் பட்டதில்லை. எங்ஙனம் அறிவிக்க இயலும்! தமிழ் மொழியில் உள்ள தனிச் சிறப்புகளை நாம் கூறினால், இன்று வெளிநாட்டவர் கைகொட்டி அல்லசோ சிரிப்பர்! தமிழாம்! தமிழ்! ஐவகை நிலமாம்! அதற்கோர் இலக்கணமாம்! ஆங்கு வாழ்க்கை முறைகள், தனித்தனிச் சிறப்புடனாம்! எல்லாம் இயற்கையோடு தழுவியவையாம்! ஏதேதோ கூறுகின்றனர். எனினும் இந்தத் தமிழர், இந்தி மொழி கற்றுத் தேறினால் மட்டுமே, பிழைக்க முடியும் - ஆட்சி மொழியாக இருப்பது இந்தி - அழகு பார், அணி பார், அகவலைப்படி, அறநூற்களைக் கவனி! என்று பேசி, ஆகப்போவது என்ன! அரசோச்சுவது இந்திமொழி! அதற்கு அடிபணிந்து கிடக்கும் இவர்கள், அகமும் புறமும் பேசி நிற்பது, தோற்றோடி வந்தவன், தன்வாளின் பிடியிலே இழைக்கப்பட்ட ஒளிவிடு கற்களைக் காட்டுவதுபோலன்றோ! - என்று கேட்டுக் கெக்கலி செய்வர்.

❀ ❀ ❀

வருகிறதே இந்தி - நமது மரபு அழிக்கும் செந்தீ! அதைத் தடுத்து நிறுத்தாவிட்டால் ஏடு பல இருந்து பயன் என்ன!!

மரபு அழிக்கும் சத்திட்டமாகவே, நாம் இந்த இந்தியைக் கருதுகிறோம்- வெறும் மொழிப்பிரச்சினையாக அல்ல.

எண்ணங்களை வெளியிடும் கருவி, மொழி, என்று வாதாடுவது எளிது! ஆனால் எண்ணங்கள், உருப்பெற அவரவர்க்கு அவரவர் இயல்புக்கு ஏற்ப, வாழும் நாட்டின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப, அமையும் மொழியே துணை நிற்கிறது.

அந்தத் தமிழ்மொழி அழிந்துபடாது! அது மாநிலத்திலே மாண்புடன் விளங்கும் - தழைக்கும் - மணம் பரப்பும் என்றுரைப்பார் உளர். அவர்கள் உயரிடமும் சென்று அமர்ந்துள்ளனர். இடம் உயரமே தவிர, அவர்களின் கூற்று மிகமிக மட்டம், என்பதை எடுத்துக்காட்டவா, வேண்டும்.

❀ ❀ ❀

ஆட்சி மொழியாக இந்தி என்று ஆகிவிட்ட பிறகு, எவரும் அம்மொழியிடம் ‘பயபக்தி விசுவாசம்’ காட்ட முற்படுவரேயன்றி, தமிழா கற்பர்! கற்றதனால் ஆய பயன் என்கொல், பெற்றிட, இயலாது எந்த இடமும் என்ற நிலை ஏற்பட்டுவிடும் போது.

ஆட்சிமொழியாக இந்தி புகுந்தால், உலகு, நம்மை அம்மொழி கொண்டு அளந்திட முற்படுமேயன்றி, அழகு தமிழ் கொண்டா, அறிந்திடமுயலும்.

தமிழ் மன்னர்கள் காலத்து ‘நாணயங்கள்’ இன்று எந்த அங்காடியில் ஏற்றுக்கொள்வர். முன்பு, அந்த நாணயமன்றோ, நாடாண்டது! இன்று ஆரயய்ச்சிக் கூடத்திலே, பாடம் புகட்டுகிறது; பழம் பொருட்காட்சிச் சாலையிலே படுத்து உறங்குகின்றனது! அந்நிலைதானே, தமிழ் மொழிக்கும், அரசோச்ச, ஆணையிட அகிலமெலாம் உலாவர இந்தி எனும் வேற்று மொழி இடம் பெறும்போது.

உடல் பெரிது, உள்ளே நுழையும் கிருமி, மிகமிகச் சிறிது! அளவில்! ஆயின் என்ன? உடலை அரித்து அரித்து கிருமிகள் உயிரையே குடித்து விடுகின்றனர்!!

"செம்மொழி, எம் தமிழ் மொழி!" - என்று செப்பிக் கொண்டிருக்கலாம் சின்னாட்கள். பிறகு, "எம்மொழி, ஆட்சி மொழி?" என்று... இந்தி ஆட்சிமொழி என்று கூறிடின், பிறகு செம்மொழிக்கும் எவர் மதிப்பளிப்பர்?

❀ ❀ ❀

இந்தி தமிழகத்திலே நுழைக்கப்பட்டால், ஏற்படக்கூடிய ஆபத்தை எடுத்துக்காட்டியும் இந்த இழிசெயலுக்கு உடந்தையாக இருப்போரின் போக்கினை இடித்துக் காட்டியும், மற்றையோர் பேசும்போது, உடல் புல்லரிக்கிறது, உள்ளம் பொங்குமாங் கடலாகிறது.

தமிழ் மொழியின் சிறப்பினை, மறுப்பார் இல்லை.

இந்தி மொழிக்கு உள்ள சிறப்புக்கள் பற்றிப் பேசும் துணிவு, இந்தி ஏகாதிபத்தியவாதிகளுக்கேகூட ஏற்படாது.

ஆனால் இந்தப் பெருமை பேசிடின், பிரச்சினை தீர்த்துவிடுமோ? பகற்கனவு! முயற்கொம்பு!!

"தமிழ் எவ்வளவு சிறப்பான மொழி என்பதைத் தமிழனிடத்திலே, தமிழன் எடுத்துச் சொல்லவேண்டி நேரிட்டிருப்பது, அவமானத்தின் அறிகுறி என்றே நான் கருதுகிறேன்."

மூன்றாண்டுகளுக்கு முன்பு, திருவண்ணாமலையில் நாம் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே , நான், இப்படித்தான் பேசினேன்.

❀ ❀ ❀

இந்தி எதிர்ப்பு மாநாடு இன்றையதினம் நாம் நடத்தினோம். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்தி மொழியின் இயலாத தன்மையினையும் தமிழின் தொன்மையினையும், அழகுற எடுத்துச் சொன்னார்கள், வேறு பல நண்பர்கள் இந்தி தமிழகத்திலே நுழைக்கப் பட்டால் நேருகிற பேராபத்தை எடுத்துச் சொன்னார்கள். இவைகளை மட்டும் அலசி ஆராய்ந்துவிட்டு இந்த மாநாடு முடிவடைந்து விடப் போவதில்லை. இந்த மாநாடு மொழிப்பிரச்சினையை ஆராய்வதற்கு மட்டும் கூட்டப்பட்டதுமல்ல; இந்த மாநாடு தமிழ்மொழி சிலாக்கியமானது என்று எடுத்துச் சொல்லுவதுமல்ல, தமிழ் எவ்வளவு சிலாக்கியமானது என்பதைத் தமிழனிடத்திலே தமிழன் எடுத்துச் சொல்லுவது அவமானத்தின் பதிலளிப்போம் அறிகுறி என்றுநான் கருதுகிறேன்.

தமிழ் மொழி, ஈராயிரம் ஆண்டுகளுககு முன்னலேயிருந்து எத்தனையோ பெரிய படையெடுப்புக்களையும், எத்தனையோ பெரிய தாக்குதல்களையும், எத்தனையோ பெரிய தூற்றுதல்களையும் தாங்கிக் கொண்டு, இன்றயை தினமும் தன்னிகரற்ற நிலையிலே இருக்கிறதென்றால், அந்த மொழி நமக்கு உகந்த மொழிதான். நமக்கு ஏற்றமொழிதான் - தலைசிறந்த மொழிதான். பாரிலே உள்ள பல மொழிகளிலே தமிழ்மொழி தலைசிறந்த மொழி என்று. தமிழன் தமிழர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பது உண்மையிலேயே சில நேரங்களுக்கு வேண்டுமானால் பொருந்தும். காதல் பேசும் நேரத்திலே, கணவன் தன் மனைவியை அருகிலே வைத்துக் கொண்டு ‘உன்னை விட அழகியை உலகத்திலே நான் கண்டதே இல்லை’. எனக் கொஞ்சுவான். இப்படிக் கொஞ்சத் தேவையில்லையென்றாலும் கொஞ்சுவதாலே இலாபம் கிடைக்கும் என்பதாலே கொஞ்சுகின்றான். அதே முறையிலே தமிழ்மொழியை இன்றையதினம் கொஞ்சுகிறோமேயொழிய, அதற்கு வாதங்கள் தேவையில்லை. ‘என்னுடைய மொழியைவிடச் சிறந்த மொழி உலகத்திலே வேறொன்றில்லை’ என்று எடுத்துச் சொல்லுகின்ற கடமை, எஸ்கிமோ நாட்டுக்காரனுக்கு, இருக்கின்றது. பின்லாந்து நாட்டுக்காரனுக்கு இருக்கின்றது. வளமற்ற மொழி படைத்தவனானாலும் அவனுக்குச் செம்மொழி தாய்மொழிதான்.

“நமக்குக் கிடைத்திருக்கின்ற தாய்மொழி பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், பிற மொழியாளர்களெல்லாம் பார்த்து, இவ்வளவு எழிலுள்ள மொழியாக உங்களுடையது? இவ்வளவு ஏற்றம் படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? ஈராயிரம் ஆண்டுக் காலமாகவா இந்தமொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகின்றது? என்ற ஆவலுடன் சிலரும், ஆயாசத்துடன் பலரும், பொறாமையோடு சிலரும், பொச்சரிப்பாலே பலரும் கேட்கத் தக்க நல்ல நிலையிலேதான் தமிழ்மொழி இருக்கின்றது. ஆகையினாலே, தமிழ் மொழிக்கா - வாதாடு வதற்காக தமிழர் மன்றத்திலே தமிழன் பேசவில்லை. ஆனால் தமிழ் மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை நுழைக்கின்ற பேதைமை, தமிழ்மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை ஆதிக்க மொழி யாக்குகின்ற அக்கிரமம் - இவைகளைக் கண்டித்து அந்த அக்கிரமத்தை நீக்குவதற்கு வழி என்ன என்று உங்களைக் கேட்க இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. தமிழ்மொழியிலே அகத்திலே என்ன இருக்கின்றது? புறத்திலே என்ன இருக்கின்றது? என்பதை நாவலர் நெடுஞ்செழியன் அருமையாக நமக்குச் சொல்லிவிடுவார். தமிழ் மொழியிலே பெயர்கள் எப்படியெல்லாம் மாற்றப்பட்டனர்? என்பதைக் கூற ‘ஊரும்பேரும்’ எழுதிய பேராசிரியர் சேதுப்பிள்ளை போதும். தமிழ்மொழியிலேயுள்ள இலக்கணச் செறிவுகள் என்னென்ன? - இதற்கு பாரதியார் ஒருவர் போதும்; ஆனால், அவைகளுக்காக மட்டுமல்ல; இங்கே இந்த மாநட்டிலே நாம் கூடியிருப்பது.

“இந்த மாநாட்டிலே எடுக்கின்ற முடிவினை, இந்த மநாட்டிலே இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்று நாம் நிறைவேற்றியிருக்கின்ற தீர்மானத்திற்கு உயிரூட்டம் தரவேண்டுமானால், நீங்களெல்லோரும் 1937-க்கு வருவதற்குச் சித்தமாக இருக்கின்றீர்களா? என்று கேட்பதற்கு மாநாடே தவிர, சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கல்ல; கம்பராமாயணத்தினுடைய சுவைகளை எடுத்துச் சொல்வதற்கல்ல; அகத்திலேயும் புறத்திலேயும் உள்ள அணிகளையும் அழகுகளையும் எடுத்து விளக்குவதற்கு அல்ல; அவைகளுக்குத் தமிழ்ப் பெரும் புலவர்கள் போதும். வகுப்பறைகள் போதும்.”

“வெட்டவெளியிலே கொட்டகை போட்டு, வீதி தவறாமல் தோரணங்கள் கட்டிச் சிற்றூர்களிலிருந்தெல்லாம் சிங்க நிகர்த்த காளைகள் சாரைசாரையாக வந்து, இந்த மாமன்றத்தில் கூடியிருப்பதற்குக் காரணம், இந்தி மொழியைவிடத் தமிழ் மொழி சிறந்தது என்று வாதாடுவதற்கல்ல. தமிழகத்திலே இந்தி மொழி திணிக்கப் பட்டால், அதை எந்த வழியிலே ஒழித்துக்கட்டுவது? அதற்கு நம்முடைய காணிக்கை என்ன? என்று சிந்தித்து அவரவர்கள் தங்கள் காணிக்கைசச் சேர்ப்பிப்பதற்காக இங்கு கூடியிருக்கிறார்களே, தவிர வெறும் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அல்ல.

❀ ❀ ❀

தமிழ்ப் பார்வையில் குளிர்ச்சியும் உண்டு; கோபக் கனலும் உண்டு. தமிழன் தன்னுடைய நாட்டையே அர்ப்பணிப்பான், தோழன் என்று வருபவனுக்கு; தமிழன்; தன்னுடைய தாளை மிதித்தவனை அவனுடைய தலை தாளிலே படுகின்றவரை போரிட.... இலக்கியங்களெல்லாம் எடுத்துச் செல்லுகின்றன.

❀ ❀ ❀

காதலே யுலகம்! காதலே வாழ்க்கை!
காதற் களிப்பே கடவுட் களிப்பாம்;
காதலின் மறுப்பே கவலையுந் துயரும்!
காதலின் அளிப்பே கட்டறு மின்பம்!
காதலால் உயிரைக் கடவுள் படைத்தான்.
காதலித் தின்னுங் கண்ணிலம் பெருகவே!
விண்மீன் கணங்களு மிளிர்வன காதலில்!
தண்ணுங் காற்றுந் தவழ்வன காதலில்
உண்கனி விளைவதும் உள்ளக் காதலால்!
புன்னகை யொன்றாற் பூத்திடுங் காதல்;
கண்கள் கதுவிக் கனவுகள் காணும்;
இன்னிய காதலால் எண்ணம் உயரும்;
பொன்னொளிர் வனப்பும், புதுப்புது மகிழ்வும்,
நாளொரு மேனியும், நாண்மல ரழகும்,

வாள்விழி நோக்கின் வரப்பிர சாதம்.
புள்ளின் பாட்டும், பூவின் மணமும்
கள்ளுண் வண்டும், காற்றின் உயிர்ப்பும்
அன்னமும், மானும், அழகிய கிளியும்,
வன்ன வியற்கையும், வசந்தப் பசுமையும்,
காதலர் தூதே! காசினி யெல்லாம்
காதலர் கடிதம், காதலர் பேச்சு!
காலமும் இடமும் காதலை வெல்லா;
கால மிடத்தைக் காதலே வெல்லும்;
காதலே காய கற்பமு மாகும்;
காதலே தேவர் சோதிக் கனவாம்;
கண்களாற் பேசிக் கருத்திரண் டணைத்துப்
புண்களை யாற்றிப் புலன்களைப் பற்றி,
இமையவ ரின்பமும் இணையிலா இன்பம்
இமையி னளித்திடும் இன்பமே காதல்.
காதல் வாழ்க! காதலர் வாழ்க!
காதலால் வாழ்வுக் கற்பக மோங்குக!
ஓங்குயர் காதலே உயிர்க்கடை யாளம்
நீங்ககாக் காதலே நித்திய வாழ்வு;
காத லற்றவர் கட்டையைப் போல்வர்;
உயிரின் இன்பமே, உயிரெனும் பசிய
பயிரினை வளர்க்கும் பைம்முகி லேயுனைப்
பிரிந்து வாழேன்; பிதற்றியுன் பெயரை
விரிந்த வுலகெலாம் வெறிகொண் டலைந்தேன்;
நீவே றில்லை; நான்வே றில்லை;
பூவே றில்லை; நிறம்பவே றில்லை;
நானுன் யாக்கை; நீயென் னாவி;
நானுன் வாழ்க்கை; நீயென் வையம்;
உள்ளந் தாராய்; உயிரைத் தாராய்;
உள்ளம் வணங்கும் ஒன்றிய காதலே!

எப்படித் தம்பி, கவிதை!! ஏதேது, அமைச்சர்கள் சொல்லச் சொல்ல, அண்ணன், அகவலாகக் கொட்டுகிறான் போலும், காதல் பற்றி; என்று தானே எண்ணிக் கொள்கிறாய்; தம்பி! இது நான் தொடுத்த கவிதையே அல்ல!! வாழ்வு எனும் மாயப் பைசாசத்தின்

பிடியில் அகப்பட்டு உழன்று, பேரின்பம் பெறவே முடியாத வகையில் சிற்றின்பச் சேற்றில் அழுந்திக் கிடந்திடும், அறம் மறந்த ஒருவரின், வேட்கை குழம்பி வெளிப்பட்டதுமல்ல. இளைஞர் மனத்தினை ஈர்த்துக் கட்சிக்கு வலிவு தேடும் 'கதை கூறி'யின் பேச்சுமல்ல. கண் கவரும் காட்சி காட்டிக் காசுதனைப் பறிக்கக் கலையை விலையாக்கும் காதகரும் அல்ல இவர்! தூயவர்! ஆம்! அங்ஙனம் நான் கூறுவதை அமைச்சரும் ஒப்புவர்! மேலவர்! அவர் அறிவு கண்டோர் கூறுவர் அதுபோல்! அதுமட்டுமன்று தம்பி! புலன் அடக்கி வாழ்கின்றார். புதுயோகி இவர்; என்று, அமைச்சர் போன்றார் போற்றினர், நாடறியும், அரவிந்தர் அமைத்த நல் ஆசிரமம் தனில் இருந்தது; அறம் வளர்த்தார், இவர் துறவி, என்று அநேகர் கூறினர். அந்தத் துறவி தந்த அருங் கவிதைதான், இங்கு நான் இணைத்துத் தந்தது. காதலின்பம், மாண்பு கூறிடுதல் தீதென்றால், இக்கவிதைக்கு என்ன பெயர்? இதனைத் தந்த துறவியை அறிவர் நாட்டார்; சுத்தானந்த பாரதியார்.

அவர் பாடி அளித்திட்ட இந்த அரும் கவிதை கண்ட அமைச்சர்கள், நாவெல்லாம் அசையாது இருந்தது ஏன்? பசைபோட்டு அவர் நாவை ஒட்டிவைத்தனரோ, எவரேனும்? கதைக்கின்றார் இதுபோது, 'கழகம் உள்ளோர், காதற்கதை பேசி வளர்க்கின்றார், கேடு' என்று; அன்று துறவி தொடுத்த கவிதை கண்டு, வாய் அடைத்துக் கிடந்திடக்காரணம் என்ன? அவர் கவி பாடினார்; கட்சி நடத்தவில்லை, நாம் கவி பாடவுமில்லை, கட்சி ஒன்றில் ஈடுபட்டோம்; அந்தக் கட்சியின் வளர்ச்சி கண்டதால் அவர்க்குக் கசப்பு! உள்ளே வெந்தால், வாயும் கசக்கும், என்றுரைப்பர் மருத்துவம் அறிந்தோர். இவர்தம் கசப்புக்கு இஃதே காரணம்.

சிறை செல்கிறேன் என்பதறிந்த என் கெழுதகை நண்பர் புலவர் அருணகிரிநாதர், அங்கு நிரம்ப நேரம் கிடைக்கும், பல்வேறு விஷயங்களைப் படிக்க இது தூண்டுகோலாக இருக்கும் என்று கூறி, என்னிடம் அபிதான சிந்தாமணி எனும் புத்தகம் கொடுத்திருந்தார். அவர் உனக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்கக் காரணமில்லை, தம்பி, பொதுவாழ்வுத் துறையிலே துவக்கக் கட்டத்தில் எனக்குற்ற

தோழராக இருந்தவர் - அவரே ஒரு அபிதான சிந்தாமணி - மணிக்கணக்கில் பேசிக்கொண்டே இருப்போம். பல பல விஷயங்களைக் குறித்து. எல்லா விஷயங்களைப் பற்றியும் ஏதேனும் ஓரளவுக்குக் கூறும் வகையான கல்வியும் கேள்வியும் படைத்தவர் - எனவே அவர், சிறையில் என்னோடு இருப்பது போலவே எனக்குத் தோன்றிற்று. அபிதான சிந்தாமணியைப் படிக்கும்போதெல்லாம். அந்த 'அபிதான சிந்தாமணி'யை நான் மறப்பதற்கில்லை. இப்போதும் 'அபிதான சிந்தாமணி'யைக் காணும்போதெல்லாம், எனக்கு அந்த நாலு மாதக் கடுங்காவல் நினைவிற்கு வரும்; நினைவிலே அந்தச் சம்பவம் தோன்றியதும், எனக்குள்ளாகவே ஓர் மகிழ்ச்சி, கொள்கை! கொள்கை!

❀ ❀ ❀

தலபுராணம் எத்துணையோ இடங்களுக்க இருக்கத்தான் செய்கிறது. படிப்போர், அகமும் முகமும் மலர்ந்து, நந்தம் நாட்டின் சிறப்புத்தான் என்னே! இத்துணை இடங்கள் உள்ளனவே பாவங்களைப் போக்க, என்று இறும்பூதெய்துகின்றனர் - தம்பி - நான் உள்ளபடியே வெட்கப்படுகிறேன், வேதனையுமடைகிறேன் - இவ்வளவு இடங்கள் தேவையாக இருக்கு மளவுக்கா இங்கு பாபம் மலிந்து குவிந்து வளர்ந்து கிடக்கிறது என்பதை எண்ணிடும்போது. தத்தமது பார்வைக்குக் கொண்டு வரப்பட்ட இடங்களை, விளம்பரப் படுத்தும் முறையில், தலபுராணங்களை ஆக்கினரேயன்றி, பிற எந்த நாட்டுக்கும் தேவையில்லாதிருக்கும் போது இங்கு மட்டும் ஏன் இத்தனை பாபம் போக்கும் பதிகளும் நதிகளும் இங்குள்ளோர் பாவச் செயல்களில் விடாமல் ஈடுபட்டுக் கிடக்கும் இழிதன்மையிலா உளர் என்பது பற்றி எண்ணிப் பாராதாரில்லை. ஏனோ?

❀ ❀ ❀

மருந்து விளம்பரத்துக்காக, அப்பாவியைக் குட்ட நோயாளனாக்கிக் காட்டியதுபோல், ஆறுகளுக்கும், திருக்குளங் களுக்கும், சோலைகளுக்கும், ஊர்களுக்கும் கீர்த்தியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, 'தல புராணங்கள்' புனையப்பட்டன! அதனால், அந்தத் தலங்களில் மகிமை தெரிவதைவிட, விளக்கமாக,

பாவச் செயல்புரிவோர் மிகுந்திருக்கிறார்களா என்று எண்ணித்தான் நம் போன்றோர் ஆயாசப்பட வேண்டி இருக்கிறது.

பாரேன் தம்பி, துவக்கத்தில் உள்ள பாடலை, பாவங்களின் பட்டியலைக் கொடுத்து, இவ்வளவு பாபங்களையும் போக்கும் பதி இது என்று கூறப்பட்டிருக்கிறது.

பாவங்களைப் போக்கிடும் என்று மட்டும் கூவினால் போதாது என்றெண்ணி, 'தலபுராணக்காரர்' எல்லாப் பருவத்தினரின் பாபமும் போக்கப்படும் என்று வேறு கூறுகிறார்.

அறியாமல் இளமையில் செய் பாவமெல்லாம் நண்பகலில் ஆடத்தீரும்!

காளையராய் மனதறியச் செய்த பாவம், சிறுகாலை படிந்திடில் போம்!

வறிதான புன்மாலை படிந்தார்க்கு முதுமையில் செய் மாபாவம் போம்!!

முப்பொழுது ஆடில், எழுபிறப்பும் பெயர்க்கும்!!!

இவ்வளவு மகிமை கூறப்பட்டிருக்கும் குற்றாலத்தில் இருந்து கொண்டு இதை எழுதுகிறேன், தம்பி!

இருண்ட மேகம் சுற்றிச்சுருண்டு சுழியெறியுங் கொண்டையாள்.

கார்நிறக் கூந்தால் என்று வண்ணத்தை மட்டுமல்ல, அது... சுருண்டு சுழித்து அழகுற இருக்கிறதாம்.

விழி, இலேசானதா? நெஞ்சைச் சூறையாடுகிறதாமடா தம்பி.

குழையேறியாடி நெஞ்சைச் சூறையாடும் விழிக் கெண்டையாள்.

கேட்டாயா? கெண்டைமீன் போன்ற கண்கள் என்று மட்டும் சொல்லவில்லை, அந்தக் கெண்டைகள் நெஞ்சைச் சூறையாடு கின்றனவாம்.

அரும்பு இதழினாள், கரும்பு மொழியினாள், முல்லைப் பல்லினாள், பிறை நுதலினாள்!

அழகு சரி, பருவம்? என்று கேட்பரே, இதோ அதையும் கூறுகிறார்.

மங்கைப் பருவத்தாள், மங்கைப் பருவத்தாள் என்றால் என்ன செய்கிறது தெரியுமோ அந்தப் பருவம், அறிவை மயக்குமொரு கருவம் இருக்கும் மங்கைப் பருவத்தாள்.... அறிவை மயக்குகிறதாம்.

மதிமுகம் அவளுக்கு, முத்துப் பற்கள். அந்த முத்து வரிசையை எட்டிப் பார்ப்பது போலிருக்கிறதாம் அவள் மூக்கிலொரு முத்து - பல்லினழகை எட்டிப் பார்க்கும் மூக்கிலொரு முத்தினாள்.

உற்சாகத்தின் உச்சி சென்று அவர் கூறுகிறார். கச்சுக் கிடக்கினும் தித்திச்சுக் கிடக்கும் இரு....

குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் இப்படி ஒரு வசந்தவல்லியைக் காட்டுகிறார்.

எங்கே அந்த எழில் மங்கை? முத்துப் பல்லினாள் எங்கே? துடியிடை எவ்விடம் உள்ளாள்? கனகவல்லி எங்கே? மதிமுகவதி எவ்விடம் இருக்கக் மயக்கும் பருவத்தாள் என்கிறீரே, அவளைக் காணா முன்பே அறிவு மயக்க மேலிடுகிறதே; எங்கே உள்ளனள் அந்த ஆரணங்கு!

அவள் என் நெஞ்சைச் சூறையாடுவது இருக்கட்டும், புலவரீர்! உமது கவிதை என் நெஞ்சைச் சிதறடிக்கிறதே, எங்கே அந்தச் சிற்றிடை, கூறுக, என்று கேட்டிடத் தோன்றும், குற்றாலக் குறவஞ்சி படிக்கும்போது. நான் அந்த மாளிகைக் கூடத்திலே அமர்ந்து குறவஞ்சியைப் படித்த போது, தம்பி, கவி தீட்டிக் காட்டிய அந்த பெண் பாவையை அல்ல, நமது திரு இடத்தைத்தான் எண்ணிக்

கொண்டேன். அத்துணை எழில் நிரம்பிய நாடு. ஆயின் என்ன நிலை இன்று என்று எண்ணும்போது, இன்று, திருவிடம் இருக்கும் நிலையினைப் படம் பிடித்தளிக்க ஓர் புலவர் முன்வரக்கூடாதா என்று கூட எண்ணினேன்.

❀ ❀ ❀

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டுகோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வு சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டின் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள் - மூதறிஞர்கள் கூறிச்சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகதிலும் ஏராளம், ஏராளம், அவன் அவைபற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை; கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர், அவன் செய்தொழிலின் சிறப்புக் குறித்துச் செப்பியுள்ள ஒப்பில் புலமை நிறை மணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைத்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவைபற்றி அவன் அறிவான்; ‘கருக்கலிலே போக வேண்டும் - பசுந்தழை பத்து வண்டி வேண்டும் - பண்ணையாரிடம் இன்னது கூறவேண்டும் - வேலியை இவ்விதம் சரி செய்ய வேண்டும்’ - என்ற இவைபற்றித்தான் பேசுகிறான்.

❀ ❀ ❀

எந்த மொழிக்காரனும், “சிந்தைக்குச் செந்தேனாக அமைந்துள்ள இத்துணை இலக்கியத்தை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே பெற்றிருந்தீரே! என்னே, உம்நாட்டு மனவளம்! எத்துணை நல்லிசைப் புலவர்கள் வீற்றிருந்தனர்! அரசு, அத்தகைய மொழி வளம் மலர்ந்திடச் செய்ததே! கோனாட்சியிலே இந்த நல்லறம் பூத்ததே! இஃதன்றோ பெருமைக்குரிய செய்தி” - என்றெல்லாம் கூறி வியப்புறுவான்; எனினும், நாம், இந்திக்குத் தலைவணங்க வேண்டுமென்ற இறுமாந்தகூறும் போக்கினரிடமன்றோ சிக்கிக் கிடக்கிறோம்.

❀ ❀ ❀

வடவேங்கடம் - தென்குமரி - என்ற உரை, அரசியல் கிளர்ச்சிக் காரர் இட்டுக் கட்டிய தொன்றல்ல; இலக்கியம், வரலாறு சமைத்தளிக்கும் உண்மை. அதனை மதிக்க மறுத்திடும் ஆந்திரருடன் உடந்தையாக நிற்கிறது. டில்லி - என்று எண்ணத்தகும் போக்கிலே , ஆட்சி நடந்து கொள்கிறது.

❀ ❀ ❀

கடுமையான பணியாற்றுவதற்கு இடையிலேயும், உனக்கு மடல் எழுதவும், கதை, கட்டுரை, உரையாடல் போன்ற வடிவங்களில் என் எண்ணங்களை வெளியிடவும் நான் தயங்கினதுமில்லை - அஃது எனக்குப் பளுவான வேலையாகவும் தோன்றினதில்லை - சொல்லப் போனால், மனத்திலே ஏற்பட்டு விடும் சுமையும், அதனாலேற்படும் சோர்வும், உனக்காக எழுதும்போது பெருமளவு குறைந்து போவதுடன், புதியதெம்பும் பிறந்திடுகிறது.

❀ ❀ ❀

நாட்டு மொழி, பாட்டு மொழி, வீட்டு மொழி என்றெல்லாம் பிறர் பேசுகிறார்கள், விரிவுரையாற்றுகிறார்கள், போற்றுகிறார்கள், புகழாரம் சூட்டுகிறார்கள், எனினும் வேற்றுமொழி வேங்கை எனப் புகுவதுகண்டு விரட்டிட முன்வருகிறார்களில்லை. இந்த இளைஞர்களோ, எமது மொழியை அழித்திடவும், எமது வாழ்க்கை நிலையினைக் கெடுத்திடவும் வந்திடும் இந்தியினை எத்தனை இன்னல்கள் எமைத் தாக்கிடக் கிளம்பிடினும், எதிர்த்தே நிற்போம் என்று சூளுரைத்துச் செயல்படுகின்றனரே; இத்தகையர் இரண்டாங்கட்டிலும் இன்பத் தமிழ் அழிப்பார் கூடத்திலும் இருந்திடும் நிலை உளதே; இந்தக் கொடுமையினை மாற்றிடும் நன்னாளே, பொன்னாள், அது எந்நாள், எந்நாள்? என்று ஆவலுடன் கேட்ட வண்ணமுள்ளனர் பல்லாயிரவர்.

❀ ❀ ❀

இத்தகைய அறப்போர் வீரர்தம் மனப்போக்கு பற்றியே ஆங்கிலக் கவிஞரொருவர்,

கருங்கற் சுவரும் காவற் கூடமாகுமோ
இரும்புக் கம்பியும் பெருஞ் சிறையாகுமோ
தூய்மை மனத்தன் விடுதலை வீரன் புகும்
சிறைச்சாலை தானும் அறச்சாலை ஆகுமே.

என்று கூறினார்.

❀ ❀ ❀

தம்பி! நாம் நடத்தி வரும் இந்தி எதிர்ப்பு அறப்போர் குறித்து அமைச்சர்களும் அவர்களின் அணைப்பிலே அகமகிழ்ச்சி பெறுவோரும் எதைக் கூறிக் கொண்டிருப்பினும் நாம் பொருட்படுத்தத் தேவையில்லை- நாம் மேற்கொண்டுள்ள காரியத்தில் நமக்கு அழுத்தமான, தூய்மைமிக்க நம்பிக்கை இருந்தால். அந்த நம்பிக்கை இருப்பதனால் தான், நாடு மெச்சிடும் விதமான அறப்போரினைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம்.

மொழிக்காக ஒரு கிளர்ச்சியா, போராட்டமா! செச்சே! என்ன மதியீனம்! வாழ வழி என்ன என்பதற்குப் போராடுவார்களா, என்மொழி, உன்மொழி, என்று சண்டைபோட்டுக் கொள்வார்களா என்று பேசுகிறார் காமராசர். மொழிப்பிரச்சினை அவருக்கு அவ்வளவு சாமான்யமானதாக, உப்பு சப்பு அற்றதாகத் தோன்றுமானால், நாட்டு மக்களிடையே மனக்கொதிப்பையும், கசப்பையும் மூட்டிவிடும் மொழிப் பிரச்சினைப் பற்றி ஏன் வீணாகப் பிடிவாதம் காட்டுகிறீர்கள் - ஆங்கிலந்தான் இருந்து விட்டுப் போகட்டுமே - தமிழைத்தான் ஆட்சிமொழி ஆக்குங்களேன் என்று, இந்தி ஆதிக்கத்தைப் புகுத்துவதில் முனைந்து நிற்கும் லால்பகதூர்களிடம் எடுத்துச் சொல்லுவதுதானே! சொல்லிப் பார்க்கட்டும் - அப்போது தெரியும் காமராஜர் கண்காட்டும் வழியிலே காங்கிரஸ் செல்கிறது என்ற பேச்சு எத்தகைய இனிப்புப் பூச்சுள்ளது என்பது.

காமராஜர் கருதுவதுபோகூல, இப்போது எல்லோரும் வடி ஒன்றுபட்டு நின்று கவனம் செலுத்தித் தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சினை, சோற்றுப் பிரச்சினை தான் என்றால், லால்பகதூர்

இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதிலே இத்தனை தீவிரமும் பிடிவாதமும் காட்டுவானேன்?

இந்தி முக்கியமான பிரச்சினை அல்ல என்று காமராஜரும்,

இந்தி இரண்டு தலைமுறை கழித்துத்தான் வரும் என்று டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரும், பேசுகிறார்கள் - நம்மை மயக்க - உணர்ச்சியை வேறு பக்கம் திருப்பிவிட! ஆனால், ஒவ்வொரு நாளும் ஒரு புது உத்தரவு கிளம்புகிறது டில்லியிலிருந்து, இந்தியின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவும், வேகத்தை அதிகப் படுத்தவும்.

தூங்கு, ஒரு பயமும் இல்லை. பூனை நடமாடும் சத்தம், வேறொன்றுமில்லை, என்று மாளிகையின் காவலாளி கூறி, மற்றவர்கள் விழிப்புடன் இருப்பதைத் தடுத்து விடுகிறான் என்றால், சூது சூழ்ச்சி அற்ற முறையிலே காவலாளி அவ்விதம் செய்திருந்தால் அவனை ஏமாளி என்போம்; தெரிந்தே வீட்டாரை ஏய்க்க அவ்விதம் கூறியிருந்தால், திருடனுக்கு உடந்தை என்போம்.

இந்திப் பிரச்சினை ஒரு அவசர அவசியப் பிரச்சினை அல்ல என்று பேசுவோரும், இந்தி இரண்டு தலைமுறைக் காலம் வரையில் வராது என்று கூறுவோரும், இந்த இரண்டு வகையில் எந்த வகையினர் என்று கூற இயலவில்லை, தம்பி! ஆனால், எந்த வகையினராக இருப்பினும், நாட்டுக்கு அவர்களின் போக்கு ஆபத்தினையும் கேட்டினையும் மூட்டிவிடுகிறது என்பதிலே அறிவாளர் எவருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது.

பொன்னிழந்து விட்டால் வேறு
பொருள் விளைக்கலாகும்; நாளும்
உண்ணும் சோறிழந்தால் வேறு
உணவு தேடலாகும்; மொழிக்
கண்ணிழந்து விட்டால், வாழ்வுக்
காட்சி காண்பதேது? பின்னர்
மண்ணின் வாழ்வெதற்கு? இதனின்
மடிதல் மேலதன்றோ?

இவ்விதம் கேட்கிறார் கவிஞரொருவர் - இலங்கைத் தீவினிலிருந்து.

கவிஞர்தானே! அப்படித்தான் கேட்பார் என்று கூறுவார்களோ ஒருவேளை, சரி தம்பி! கற்பனைச் செல்வம் தரும் கவிஞரின் பேச்சுடன், வேறொன்றும் காட்டுவோம்.

இவர் அரசியல் தத்துவம் போதிக்கும் பேராசிரியர், பெயர் பி.கே. எஸ். ராஜா, 1963, -ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் எட்டாம் நாள், கருத்தரங்கம் ஒன்றில் பேசினார். சோற்றுப் பிரச்சினையா, மொழிப் பிரச்சினையா என்று கேட்கிறாரே காமராஜர், அவர் காணட்டும், பேராசிரியரின் கருத்தினை.

இந்நாட்டில் உள்ள மக்களிடையே பேசப்படுகிற மொழிகளில், இந்தி சிறுபான்மையோர் மொழியாகும். பெரும்பான்மையான மக்கள் இந்தி பேசாத பகுதியைச் சார்ந்தவர்கள்.

ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதால் இந்தி பேசும் மக்கள் நியாயமற்ற வகையில் முன்னணியில் நலம் பெறுவர்.

முதலாவதாக, தேசிய மொழியின்றி இந்தியா ஒரு நாடாக விளங்குவதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆட்சியைப் பொறுத்தமட்டில் ஆங்கிலமே நீடிக்க வேண்டும்.

ஆங்கில மொழியின் நுழைவால்தான் இந்தியத் தேசியம் உருவெடுத்தது. இதன் பயனாகவே இந்திய தேசியக் காங்கிரசும் தோன்றியது.

போகட்டும், நமக்கேன் தகராறு - ஒரு காங்கிரசாரின் கருத்து, அதிலும் ஆங்கிலம் பற்றியுள்ள கருத்தினைத் தான் கூறுவோமே.

ஆங்கிலத்தின் இடத்தை இந்தி வகிக்க வேண்டுமாம்! இதிலே எனக்கு நம்பிக்கை இல்லை.

ஆங்கிலம் இந்த நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

ஒரு காங்கிரசுக்காரரா, மனம் துணிந்து, மரபு மறந்து, ஆங்கிலம் இந்நாட்டுத் தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

❀ ❀ ❀

தம்பி! ஆங்கிலம் தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்கலாம் என்று பேசியர், புதியவருமல்ல, புசிக்க ஏதேனும் கிடைக்கும் என்பதற்காக நேற்றுப் புகுந்தவருமல்ல - உண்மைக் காங்கிரஸ்காரர் - முன்னணியினர் - மூலவர்களிலே ஒருவர் - நாடாளும் நற்பேறு கொண்டவர், பம்பாய் மாநில முதலமைச்சர் சவான்! ஆம், தம்பி! இப்போது மத்திய சர்க்காரில் பாதுகாப்பு அமைச்சராக உள்ள அதே சாவன்தான் - நாகபுரியில் பேசினார் மூன்றாண்டுகளுக்கு முன்பு - 19.8.61 இதழ் பார்த்தால் புரியும். அவருடைய அந்தக் கருத்தினைப் பாராட்டியும் வரவேற்றும், இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரை வெளியிட்டது.

ஆங்கிலத்தை அந்திய மொழியாகக் கருதினால் அது அவலமாக முடியும் என்பதை சாவன் வற்புறுத்தி அறுதியிட்டுக் கூறியுள்ளார். உண்மையில் ஆங்கிலம் ஓர் அனைத்துலக மொழி; அறிவு வள மொழி என்பதாக.

தம்பி! நாம் அதுபோலக்கூட ஆங்கிலத்துக்கு மேம்பாடான இடமளிக்க வேண்டும் என்று வாதாடவில்லை - அதற்காகப் போராடவில்லை; நமது தாய்மொழியாம் தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாகக் கொள்ளுங்கள், அந்தக் காலம் வருகிறவரையில், வேறோர் பகுதி மக்களின் தாய்மொழியான இந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சிமொழி என்று ஆக்கி எம்மை இழிவுபடுத்தாதீர், இன்னல் விளைவிக்காதீர் இழிமக்களாக்காதீர் என்று கேட்டே போராட்டம் நடத்துகிறோம்.

❀ ❀ ❀

இங்கே சிலர்தான் இந்தியை எதிர்க்கிறார்களே தவிர, ஆயிரக்கணக்கான தென்னாட்டவர் இந்தி படித்துக் கொண்டு வடக்கே வந்திருந்து வாழ்கிறார்கள் - அவர்களுக்கு இந்திமீது வெறுப்பு இல்லை - அவர்கள் இந்தியை எதிர்ப்பதில்லை என்று கூறி, இந்த நிலையை இந்திக்கு நிரம்ப ஆதரவு இருப்பதற்கு அடையாளம் - சான்று என்று பேசுவோர் உளர். இந்த வாதம் எத்தனை சொத்தையானது என்பதனை எடுத்துக்காட்டி உடைத்தெறிந்திருக் கிறார் ஒருவர் - அவரும் காங்கிரஸ்காரர் - மராட்டியப் பகுதியினர் சங்கர்ராவ் தேவ் என்பார்.

தெற்கே இருந்து வடக்கே மக்கள் வருகிறார்கள் -இந்தி மொழிமீது உள்ள ஆசை காரணமாகவும் அல்ல, அந்த இந்தி மொழி மூலம் பெறக்கூடிய கலாச்சாரத்திற்காகவும் அல்ல; அவர்கள் வருவது பிழைப்புத்தேடி.

சோற்றுக்காக வருகிறார்கள்! சோற்றுக்காகத்தான் மக்கள் சச்சரவிட்டுக் கொள்கிறார்கள்.

இன்று இந்தியை மக்கள் மதிக்க வேண்டி வருகிறது என்றால், அது மற்ற மொழிகளை விட மேலானது என்பதற்காக அல்ல, இந்தி படித்தால் பிழைக்க வேலை கிடைக்கும் என்பதால்தான்.

நீங்கள் இந்தியை உங்கள் பிரதேச மொழியாகவும் கொண்டிருக்கிறீர்கள். அதே போது மத்திய ஆட்சிமொழியாகவும் ஆக்கிக் கொள்கிறார்கள். இது உங்களுக்கு ஒரு ஆதிக்க உயர்வைத் தருகிறது.

ஒன்றை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்; ஒருவன் எவ்வளவுதான் இந்தியையோ வேறு மொழியையோ கற்றுக் கொண்டாலும், அது அவனுடைய தாய்மொழியாக இருந்தாலொழிய, ஒவ்வொரு நாளிலும் இருபத்து நான்குமணி நேரமும் அவன் பயன்படுத்தும் மொழியாக இருந்தாலொழிய, அவன் துரைத்தன அலுவலங்களில் மேலிடம், உயரிடம் பெறமுடியாது, மற்ற வேலைத்துறைகளிலும் கூடத்தான்.

காமராஜர் மிக்க விருப்பத்துடன் கிளப்புகிறாரே சோற்றுப்பிரச்சினை, அது மொழிப் பிரச்சினையோடு எப்படிப் பிணைந்திருக்கிறது என்பதை சங்கர்ராவ்தேவ் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டினர்.

❀ ❀ ❀

இந்தியை ஆட்சிமொழி ஆக்குகிறார்கள் என்ற காரணம் காட்டி, நாட்டிலே ஒரு பகுதியின்மீது மற்றோர் பகுதிக்குக் கசப்பு ஏற்படும்படி செய்கிறார்கள் என்று ஒருமைப்பாட்டு உரை நிகழ்த்துவோர் குற்றம் சுமத்துகிறார்கள்.

சரியாகவோதவறாகவோ, இந்தி புகுத்துவதற்காக நீங்கள் வரிந்து கட்டிக்கொண்டு நிற்பது, இந்தி பேசாத பகுதி மக்களிடையே ஒரு உணர்ச்சியை மூட்டிவிட்டிருக்கிறது; அதாவது இந்தியாவின் கூட்டுக் கலாச்சாரத்துறையில், மற்ற வலிவுள்ள மொழிகள் செல்வாக்குப் பெறுவதைத் தடுக்கவே இந்திக்காக இப்படிச் சண்டை போடுகிறீர்கள் என்ற உணர்ச்சி.

ஐயா! தெற்கே உள்ள இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பலம் வாய்ந்ததாக இருக்கிறது.

ஒரு பகுதிக்கு மட்டும் சொந்தமான மொழியை (இந்தியை) நீங்கள் தேசிய மொழி என்ற அளவுக்கு அந்தஸ்து தருவதுதான், இந்தி பேசும் மக்களுக்கும் இந்தி பேசாத மக்களுக்கும் இடையே கசப்பை மூட்டி விட்டிருக்கிறது.

இவ்வளவு வெளிப்படையாகப் பேசியவரும், காங்கிரஸ் கட்சியினர் தான். கொலுவிருக்கக் காங்கிரஸ் கிளம்பியபொழுது இடம் தேடிக் கொண்டவர் அல்ல - சுயராஜ்யக் கிளர்ச்சியில் ஈடுபட்டு, சண்ட மாருதம் போல் சுற்றிப் பிரசாரம் செய்து சிறைக் கோட்டமும் சென்றவர் - ஆந்திர நாட்டு மாதர் திலகம் - துர்க்காபாய் அம்மையார்.

குறுகிய மனப்பான்மை கொண்டவருமல்ல - மராட்டியத்துத் தேஷ்முக்கைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்.

அந்த அம்மையாரின் எச்சரிக்கையையாவது, இந்தி ஆதிக்கக்காரர்கள் பொருட்படுத்தினரா? இல்லை!

கடந்தமூன்று வாரத்து நடவடிக்கைகளாலும், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சார்ந்த என் நண்பர்கள் மேற்கொள்ளும் போக்கினாலும் என் உள்ளத்தில் மூண்டுவளர்ந்துள்ள பயத்தை,உள்ளது உள்ளபடி நான் எடுத்துக் கூறாவிட்டால், என் மனச்சாட்சிக்கும், ஆண்டவனுக்கும், என் மாபெருந் தலைவர் மகாத்மா காந்திக்கும் உண்மையாக நடந்துகொண்டவனாக மாட்டேன்.

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்புவரை, அதிகாரவர்க்கம் பிரிட்டிஷாரிடம் இருந்து, லண்டன் நகரத்தில், பெரிய உத்தியோகங்களுக்கான பரிட்சைகள் நடத்தப்பட்டு வந்த நிலையின் போது, எங்களுக்குச் சந்தேகமும் பயமும் மனத்திலே குடிகொண்டன. வெள்ளையனே உத்தியோக மண்டலத்தில் ஆதிக்கம் வகித்து வந்தான். இப்போது உயர் பதவிகளுக்கான பரிட்சை டில்லியில் நடத்தப்படுவதால், இந்தி பேசும் பகுதிகளான உத்தரப்பிரதேசம் மத்தியப்பிரதேசம் ஆகிய இடத்தவர் உத்தியோக மண்டலத்தில் ஆதிக்கம் பெறப்போகிறார்கள்.

ஏன் உத்தரப்பிரதேசத்து மத்தியப்பிரதேசத்துக்காரர்கள் இவ்வளவு சகிப்புத்தன்மை அற்றவர்களாக இருக்கிறார்கள்?

நாங்களும் மனிதர்களே! உயர்தரமான தேசிய இலட்சியங்கள் எப்படி எங்கள் எண்ணங்களை உருவாக்குகின்றனவோ அது போலவேதான் பிழைப்பு நடத்துவதும் வேலை பெறுவதும் எங்கள் உள்ளத்தைப் பாதிக்கின்றன. (இந்தியை ஆட்சிமொழி ஆக்கி விடுவதானால்) ஒரிசா, அசாம், வங்காளம், தென் மாநிலங்கள் ஆகிய இடங்களைக் காட்டிலும் உத்தரப்பிரதேசத்துக்கும் மத்தியப் பிரதேசத்துக்கும் கூடுதலான

சலுகைகள், வாய்ப்பு வசதிகள் ஏற்பட்டு விடுவதைத் தடுக்க என்ன திட்டம் தீட்டப் போகிறீர்கள் - சொல்லுங்கள்.

இவ்விதம் 'அச்சம் தயை தாட்சணியமின்றிக் கேட்டவர் ஒரிசாவைச் சார்ந்த தாஸ் என்பவர்' - புகழ்மிக்க காங்கிரஸ் தலைவர். அவருடைய பேச்சுக்கு ஏதேனும் பலன் கிடைத்ததா? இந்தி ஆதிக்கக் காரர்கள் தமது போக்கை மாற்றிக் கொள்ள ஒருப்பட்டனரா? இல்லை! இல்லை! அவருடைய வார்த்தையையும் துச்சமென்று தள்ளிவிட்டு, இந்திதான் ஆட்சிமொழி என்று அரசியல் சட்டத்தில் எழுதிவிட்டனர்.

தாஸ், சங்கர்ராவ், துர்க்காபாய் போலக் காரசாரமாக, ஒளிவு மறைவின்றிப் பேசினால், இந்தி ஆதிக்கக்காரர்கள் கோபம் கொண்டு தமது போக்கை மாற்றிக் கொள்ள மறுப்பார்கள் - இதமாக - விநயமாக - கனிவாக நேசப் பான்மையுடன் - அடக்க ஒடுக்கமாக - நல்ல வாதத் திறமையுடன் பேசினால், அவர்களின் போக்கு மாறிடக்கூடும் என்ற எண்ணம்போலும், இன்று பாராளுமன்றத் துணைத்தலைவராக உள்ள S.V. கிருஷ்ணமூர்த்திராவ் அவர்களுக்கு; அவர் மிகக் கனிவாகப் பேசினார்.

> ஐயா! நான் இந்தியைக் கற்றுக்கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டேன். என் சொந்த மொழியான கன்னடத்தில், சில இந்திப் புத்தகங்களைக்கூட மொழிபெயர்த்திருக்கிறேன். ஆனால் எனக்கு இந்திமொழி மிகக் கடினமாதாக இருக்கிறது.அதனால் தான் இந்தச் சபையில் இந்தியில் பேசும் துணிவு வரவில்லை.
>
> இந்தி பேசும் மக்களுடைய மொழியை, அதன் இலக்கண இலக்கியக் கட்டுக்கேப்புடன் எங்களால் படித்துக்கொள்ள முடிய வில்லை. காலம் பிடிக்கிறது. நான் ஒரு அறைகூவல் விடுக்கிறேன். இங்குள்ள கோவிந்ததாஸ் அவர்களோ, தாண்டன் அவர்களோ, தமிழர்கள் மத்தியில் போய் இருந்துகொண்டு தமிழ்பேசக் கற்றுக் கொள்ளட்டும். அதற்கு

அவர்களுக்கு எவ்வளவு காலம் பிடிக்கிறதோ, அவ்வளவு காலம் தேவை, தென்னகத்தில் இந்தியைப் புகுத்துவதற்கு.

இவ்வளவு சாந்தத்துடன், சமரசநோக்குடன் பேசினாரே கன்னடக் காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணமூர்த்திராவ், இதையாவது, பாவம்! நம்முடைய கட்சிக்காரர்! இந்தி கற்றுக்கொள்வதிலே உள்ள கஷ்டத்தை அனுபவித்துக் கூறுகிறார். அவர் கூறிடும் வாதம் நியாயமாகத்தான் இருக்கிறது; நாம் இந்தியைத் தென்னகத்துக்கும் சேர்த்து ஆட்சிமொழி என்று ஆக்குவது அநீதியாகத்தான் இருக்கும் என்ற உணர்வும் தெளிவும் பெற்றனரா, இந்தி ஆதிக்கக்காரர்கள், அவர்களா! அவர்கள்தான், யார் எதிர்த்தாலும், எதிர்ப்புக்களை முறியடித்துவிட்டு இந்தி ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டியாக வேண்டும் என்று துணிந்துவிட்டவர்களாயின்றே! கேட்பார்களா கிருஷ்ணமூர்த்திராவ் அவர்களின் பேச்சை! கேட்கவில்லை!

தம்பி! இந்தி ஆதிக்கத்தைக் கண்டித்து அறிவுரை, தெளிவுரை, கனிவுரை, எச்சரிக்கை தந்தவர்களின் பட்டியல் மிகமிகப் பெரிது; சிலவற்றை மட்டுமே எடுத்தளித்திருக்கிறேன்.

இந்தியை ஆட்சிமொழி ஆக்கவேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையில் முனைந்தபோதே அறிவாளர் பலர் இதுபோலக் கண்டித்தனர், முயற்சியைத் தடுத்து நிறுத்தப் பார்த்தனர், முடியவில்லை.

அதற்குப் பிறகும் தொடர்ந்து பேரறிவாளர் பலர், இந்தி ஆட்சி மொழியாக்கப்படுவதைக் கண்டித்த வண்ணம் உள்ளனர்.

நானறிந்த வரையில், எந்த ஜனநாயக நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்கு இத்தனை பரவலான முறையிலும் தொடர்ந்தும் கண்டனமும் எதிர்ப்பும் இருந்து அத்தனையும், வேண்டுகோள், முறையீடு, வாதம், விளக்கம், கண்டனம் எனும் எந்த வடிவினதாயினும் அலட்சியப் படுத்தி விட்டு, ஒரு சர்க்கார் தன் போக்கிலே பிடிவாதமாக இதுபோல் இருந்ததில்லை.

இந்தி ஆதிக்க விஷயத்திலே காங்கிரஸ் துரைத்தனம் காட்டிவரும் பிடிவாதம் ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கி வைத்திருக்கிறது.

உங்களைப் பேச அனுமதித்திருக்கிறார்களே என்பதும், வெளியே விட்டு வைத்திருக்கிறார்களே என்று கூறுவதும், சுட்டுத் தள்ளாமல் இருக்கிறார்களே என்று கூறுவதும், ஆட்சி நடத்தும் வாய்ப்பினைப் பெற்றதனால் ஏற்பட்டுள்ள ஆணவமின்றி, அறிவுடைமை என்று எவரும் கூற முற்படமாட்டார்கள். நெரித்த புருவம், உருட்டு விழி, மிரட்டும் பேச்சு, நெடுநாட்களுக்கு நிலைத்து இருப்பதில்லை.

❀ ❀ ❀

தமிழுக்கு ஒரு ஆபத்தும் இல்லை. அம்மொழி ஒரு போதும் அழியாது, அது இலக்கியத்தின் மூலம் இறவாவரம் பெற்றுவிட்டது என்று பேசுவதும், பேச்சினைக் கேட்பதும் இனிப்பளிக்கலாம். கவிதைகளை எடுத்துக்காட்டி, உவமை நயமதை உரைத்து, கருப்பஞ் சாற்றினிலும் இனித்திடும் இன்மொழியாம் எமது தமிழ் மொழிக்கு, எவரே இழுக்குத் தேடவல்லார்! தென்றலின் இனிமை, திங்களின் குளிர்ச்சி, தேனின்சுவை, கடலின் அலையோசை, அருவியின் மழலை, குழவியின் இசை, இயற்கை எழில்- எவரேனும் இந்த இயல்பினைக் கெடுத்திட இயலுமோ!! அஃதேபோல, தமிழின் மாண்பினை மடிந்திடச் செய்திடல் எவராலும் இயலாது என்று பேசலாம் - வீரம் குழைத்து. ஆனால், தம்பி! இந்தி மட்டுமே ஆட்சிமொழி என்றாகிவிட்டால், இன்பத் தமிழ் பொலிவிழந்து போற்றுவாரிழந்து, வலிவிழந்து வளம் இழந்து, என்றோ தீட்டிய ஓவியமாய், எப்போதோ கேட்ட கீதமாய், கனவினில் கண்ட கனியாய்ப் போய்விடும் - வீணுரை அல்ல இது - வேண்டுமென்றே பயமூட்டக் கூறுவதுமல்ல; அரசுக் கட்டிலிலேயே இந்தி என்று ஆகிவிட்டால், முரசு முழங்கிய தமிழத்தின் அள்ள அள்ளக் குறையாத சொத்தாக இருந்துவரும் செந்தமிழ், கண்ணகிபோல் கண்ணீர் உகுத்து, கடந்த காலத்தை எண்ணி ஏக்கமுற்று, கசிந்து உருகிப் போய்விடும்.

ஒன்று புரிந்துகொள்ளச் சொல்லு தம்பி! முதற்கட்டம், இந்தி மத்திய சர்க்காரின் ஆட்சிமொழியாவது; அடுத்த கட்டம்? விளக்கவா வேண்டும்! மத்தியில் ஒன்று, மாநிலத்தில் வேறொன்று என்று இருப்பதனால் ஏற்படும் இன்னல் குறித்துச் சிலபல கூறிவிட்டு, மத்திய சர்க்காருக்கு ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்ட இந்தியே மாநிலத்திலும் ஆட்சி மொழியாக இருப்பதுதான் வசதி, முறை என்று வாதிட்டு, அது போன்றே செய்தும் விடுவர்.

நமது அமைச்சர்கள் வாளாயிருப்பரோ? என்று கேட்பர், காங்கிரசை நம்பி உள்ளோர்! வேறு என்செய்வர்? வளைவர், நெளிவர், பணிவர், பிறகு ஆதரவாளராகி விடுவர். பார்க்கிறோமே ஒவ்வொன்றிலுமே வேளாண் பெருங்குடிமகன், வேறெவரும் பெறாத அளவு பதவி அனுபவம் பெற்ற பெரியவர் பக்தவத்சலனார். இந்தியில் பரீட்சை எழுதத் தேவையில்லை என்றார் ஓர் நாள்; காரணம் காட்டினார், மறுக்கொணாததாக; பிறகோ லால்பகதூர் அப்படியா? என்றார், இவர் ஆமென்றார், அவர் ஏன் என்று கேட்டார், இவர் காரணம் கூறினார், அவர் கனைத்தார் இவர் கலங்கினார், பரீட்சை இல்லாவிட்டால் படித்திட மனம் வராதே என்றார், அது உண்மைதான் என்றார் இவர், ஆகவே என்று ஆரம்பித்தார் லால்பகதூர், இதோ பரீட்சை வைக்கிறேன் என்று முடித்தாரே முதலமைச்சர்.

இவர் போன்றோர், இந்திதான் இங்கும் ஆட்சிமொழியாதல் முறை என்று டில்லியின் கூறினால், தாயின் மேல் ஆணை! தாய்த் தமிழைத் தாழவிடேன்! என்றா முழக்க மெழுப்புவர், டில்லியாரின் தாக்கீதினைத் தலைமீது வைத்துக்கொண்டு, இதுவே தகுந்த முறை என்று ஒப்பம் கூறுவர்; கண் கசிந்திடும் தமிழரைப் பார்த்தோ, “ஏன் அழுகிறீர்கள்? ஆட்சி மொழியாக இந்தி இருந்தால் என்ன? தமிழ் தாழ்வடையுமோ? அகம் என்ன, புறம் என்ன எட்டுத்தொகை என்ன, பத்துப் பாட்டென்ன, இவைகளைப் படித்திடலாகாது என்று தடுத்திட இயலுமோ! இன்பத் தமிழ், கேவலம் அரசாங்க அலுவலிலே இருக்காதே தவிர, வீட்டிலிருக்கும், அங்காடியில் இருக்கும், மன்றத்திலிருக்கும், மாதரின் நெஞ்சமிருக்கும், மழலையரின் மொழியில் இருக்கும், என் உள்ளத்திருக்கும்

உன்னிடமும் இருக்கும். ஆகவே தமிழ் மகனே! கவலை கொள்ளற்க! என்று கூறிடுவர், தமிழின் இனிமையினை அறிந்தவனே யானும் என்று கூறி, அதனை மெய்ப்பிக்க'',

திருவே என்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்ஜோதிமிக்க
உருவே என் உறவே என் ஊனே
ஊனின் உள்ளமே, உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே
கண்ணிற் கருமணியே மணியாடுபாவாய், காவாய்
அருவாய் வல்வினை நோய் அடையா வண்ணம்
ஆவடுதன் துறையுறையும் அமர ரேறே

என்று பாடிடக்கூடும். பக்கம் நின்று சிலர், என்னே தமிழ்ப்பற்று! என்னே தமிழினிமை! என்று பேசி மகிழ்விக்கக் கூடும்.

இப்போதேகூடச் சிலர் இதுபோல், தமிழின் இனிமை பெருமை, தொன்மை, மென்மை, வளம் வனப்புப் பற்றி கேட்போர் நெஞ்சு நெக்குருகப் பேசி, இந்தி ஆதிக்கத்தால் தமிழுக்கு ஆபத்து ஏற்படாது என்று வாதாடுகின்றனர்.

மாசறு பொன்னே!
வலம்புரி முத்தே!
காசறு விரையே!

என்றெல்லாம் கொஞ்சுமொழி பேசிய கோவலன்தான் பின்னர், கண்களில் கொப்பளிக்கும் நீரும், காலிற் சிலம்பும் கொண்ட நிலை யினளாக்கினான் கண்ணகியை மையல் வேறோர் மாதிடம் கொண்டதால்.

❀ ❀ ❀

தடை உடைபட பகை பொடிபட, பரணி பாடிக் களம் சென்று வெற்றி கண்டார் முன்னோர் என்பது பற்றிய காப்பியம் பயின்றாய்; ஒப்பற்றது என்று அறிவாளர் ஒப்புக் கொள்ளத்தகு திறம் நிறைந்த மொழி பயின்றாய்; அம்மொழியில் ஆன்றோர் வடித்தளித்த

இலக்கியம் கற்றாய்; அந்த இலக்கியம் அளித்திடும் ஏற்றமிகு நற்கருத்துகளைப் பெற்றாய்; பெற்றதனால், உன் நடையிலே ஓர் முடுக்கு, உன் பார்வையிலே ஓர் ஒளி, உன் பேச்சிலே ஓர் எழுச்சி பிறந்தது; அதன் காரணமாகவன்றோ, நான் எதனையும் இழப்பேன், என் உரிமையை மட்டும் இழந்திட மாட்டேன்; எவரையும் வரவேற்பேன், ஆதரிப்பேன், நட்பு கொள்வேன்; யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் நெறி நிற்பேன்; ஆனால் அவருக்கும் ஆட்படேன், அடிமை ஆகேன் என்று முழக்கமிட முடிகிறது.

என் மொழி என்று முழக்கம் எழுப்புகிறாய்! என் மொழி தொன்மையும் மென்மையும் கொண்ட இனிமைத் தமிழ் மொழி, ஏங்கித் தவித்து; இளைத்துக் களைத்து, ஒருபுறம் நிற்க; இந்தி மொழிக்கா அரியணை என்று கேட்கின்றாய். புருவத்தை நெறிக்கின்றனர்! பொறி பறக்க பேசுகின்றனர், நாராசச்சொற்களை வீசுகின்றனர்! கூடிப் பேச முனைகின்றாய், காலிக் கும்பல் என்று ஏசுகின்றனர். உறுதியாகக் கூறுகின்றாய், வெறிப்பேச்சு என்று ஏளனம் செய்கின்றனர். அணிவகுத்துச் செல்கின்றாய், வெறிப்பேச்சு என்ற ஏளனம் செய்கின்றனர். அடித்து விரட்டுகின்றனர் சிறைச்சாலைக்கு. தடியடி! கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு! துப்பாக்கிச் சூடு! எல்லாம் உனக்கு! எல்லாம், உன் உள்ளத்திலே இருந்து, அந்த உணர்ச்சியைக் கல்லி எறிந்திட, கருக்கிப் போட்டிட! அதனை அறிந்துதான் கேட்கின்றேன், கண்ணீர் உகுத்தபடி, கொற்றவனே! ஏனடா இந்தத் தமிழ் நாட்டிலே வந்து பிறந்தாய் என்று. கரம் ஒடித்தனர். சிரம் பிளந்தனர், காலில் அடித்தனர், கண்களைக் குத்தினர் என்றெல்லாம் செய்திகள்! அடிபட்டவர்களின் படங்கள்! அவர்களை அல்லலுக்கு ஆளாக்கிட வந்தவர்களின் காட்டு முறை பற்றிய விவரங்கள்! இவைபற்றிப் படித்திட்டபோது, என் உள்ளம் மட்டுமல்ல, எது நடந்திடினும் எமக்கென்ன என்று இருந்து வரும் இயல்பினரின் உள்ளமும், அனலிடை மெழுகாயிற்று; கைபிசைந்து கொண்டோம், கண்களைக் கசக்கிக் கொண்டோம்; என் செய்வோம்! சாரைசாரையாக சென்றனர்; கொண்டு செல்லப்பட்டனர்; இழுத்துச் செல்லப்பட்டனர். மொழி உணர்வு கொண்டிடத் துணிந்து நின்றவர்களை! தமிழகமெங்கணும், இருபத்தி

ஐந்தாம் நாள் நள்ளிரவில் தொடங்கிய இந்த வேட்டை தொடர்ந்து, தொடர்ந்தது, மூன்று நான்கு நாட்கள். எங்கெங்கு உள்ளோரும் சிறையில் தள்ளப்பட்டனர்!

நாவலர்? சிறையில்!
மதி? சிறையில்!
கருணாநிதி? சிறையில்!
அன்பழகன்? சிறையில்!
செழியன்? சிறையில்!
நலிந்து உடல் மெலிந்து உள்ள சி.பி. சிற்றரசு! சிறையில்!
மனோகரன்? சிறைதான்!

அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்பானேன், மொழிப்பற்று, உரிமை வேட்கை கொண்டு, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திடத் துணிந்தவர் அனைவரும் மாணவமணிகள் உட்பட சிறையில்தான்! - இந்த நிலையால் நொந்தனர் பல்லாயிரவர் எனில், வெளியிலே இருந்தவர்கள் பட்ட வேதனையின் அளவும் வகையும் சொல்லுந் தரத்தன்று.

ஜனவரி 26-ல் இந்தி ஆட்சிமொழி ஆக்கப் படுகிறது, குடிஅரசு நாளாகப் பார்த்து நம் குடிகெடுக்கும் இந்தியை அரசோச்ச வைக்கிறார்கள் என்று உணர்ந்து உள்ளம் வெதும்பி, உயிரைச் சுமந்துகொண்டு, உலுத்தனே! இருந்தனையே! ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசினாயா? ஒரு சிறு கண்டனம் தெரிவித்தனையா? உன் உள்ளக்குமுறலை ஊர் அறிய உலகறிய, உன் துயரத்தை எடுத்துக் காட்டினாயா? என்று உலகின் அறிவாளர் கேட்பார்களே, இன்று மட்டுமல்ல, எதிர்காலம் கேட்குமே என்று நினைத்து, நமது கண்டனத்தை, துக்கத்தைத் தெரிவிக்க, கருப்புக்கொடி ஏற்றுவது, கருப்புச்சின்னம் தரிப்பது என்று முடிவெடுத்தோம்; அதனை முறைப்படி அறிவித்தோம்.

சென்னையில் இரு இளைஞர்கள், வெளியில் ஒருவர்; ஆக மூவர், இழிநிலையைச் சுமந்து கொண்டு இனியும் நாங்கள்

இருந்திடப் போவதில்லை; இந்தி ஆதிக்கம் புகுத்தப்பட்டுவிட்ட இந்த மண்ணில் இனி நாங்கள் உலவிடப் போவதில்லை என்று கூறி, தம்மைத்தாமே மாய்த்துக் கொண்டு விட்டனர். ஆமாம், அநியாயமான சாவு! கேட்போர் நெஞ்சு பிளந்திடும் விதமான தீக்குளிப்பு. இங்குள்ளோர் மட்டும் அல்ல, தொலைவினில் உள்ள லால்பகதூரும், நெடுந்தொலைவினில் உள்ள அமெரிக்க நாட்டினரும் பிறரும்கூட, கேட்டு துயருற்றனர், மனம் குமுறினர். நமது அமைச்சர்கள்? அவர்களா! அவர்கள், என்ன, சாமானியர்களா, அழுதிட! ஆராய்கின்றனர்!! ஏன்? எப்படி? என்று!! இரக்கம் எழுமே, எவருக்கும் என்பீர்கள்! ஆம்! இரக்கம் எவருக்கும் எழும் - இதயம் இருப்பதால்! நமது அமைச்சர்கள், நல்ல விலைக்குத் தமது இதயத்தை விற்று விட்டவர்களாயிற்றே! ஏன் அழப் போகிறார்கள்! அழவில்லை மாறாக, பரிகாசம் பேசினர்!!அது கேலிக்குரியதாகிறது கனம்களுக்கு!! மக்கள் மனம்! குமுறினர், உள்ளம் நைந்து உருகினர்; ஆயிரக்கணக்கினர் பார்த்தனர், பதறினர், தாய்மார்கள் கண்டனர், கண்கள் குளமாயின! அமைச்சர்களோ, இரக்கம், உருக்கம் எனும் உணர்ச்சிகளை விரட்டி அடித்துவிட்டு, நிமிர்ந்து நின்றனர்! நாடு, தீக்குளித்தோர்களைக் கண்டு விம்மிற்று; இரக்கம் எழா மனத்தினராக நின்றிருந்த அமைச்சர்களைக் கண்டு வெட்கப் பட்டிருப்பர்!

நீ இருக்குமிடம் தேடி நான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா வெளியீடு
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.